தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்

சிறு தொடர் எண். 2

# இயேசுவில் நிலைத்திருங்கள்

இயேசு கிறிஸ்து :

*“என்னில் நிலைத்திருங்கள், அப்போது நானும் உங்களில் நிலைத்திருப்பேன்.”*

*HELMUT HAUBEIL*

*பதிப்பகத்தார்:*

*TOP LIFE Wegweiser- Verlag, Wien*
*Austrian Publishing House*
*முதல் பதிப்பு ஆங்கிலத்தில், அக்டோபர் 2016*
*இரண்டாவது பதிப்பு ஆங்கிலத்தில், ஜனவரி 2019*
*மூன்றாவது பதிப்பு - ஆய்வு உதவிகளுடன் திருத்தப்பட்டது, ஆகஸ்ட் 2019*

*தயாரிப்பாளர்:*

*Konrad Print & Medien, www.Konrad-medien.de*

*கருத்துருவம்:*

*Simon Eitzenberger, agentur@desim.de*

பிற மொழிகளில் பெற தொடர்புக்கு:

*Helmut Haubeil*
*Rosenheimer Str.49*
*D-83043Bad Aibling/Oberbayern-Germany*
*மின்னஞ்சல்: helmut@haubeil.net*
*தொலைபேசி: +49(0)8061 4900712*
*மொழிகள்: ஜெர்மன் மற்றும் ஆங்கிலம்*

மொழிபெயர்ப்புகள்:

*மூல மொழி ஜெர்மன். பிற மொழிகள்: பல்கேரிய, டேனிஷ், டச்சு, குரோஷியன், செக், ஆங்கிலம், பிரஞ்சு, ஹங்கேரியன், இந்தோனேசியா, கிருண்டி, ருமேனிய-வீடியோ, ரஷ்யன், செர்பியன், ஸ்லோவேனியன்-வீடியோ, ஸ்பானிஷ், டலாக்-பிலிப்பைன்ஸ், உக்ரேனியன், உருது-பாகிஸ்தான். தயாரிப்பில்: அம்ஹாரிக்-எத்தியோப்பியா, போலந்து, போர்த்துகீசியம், ருமேனிய, ஸ்பானிஷ், சுவாஹிலி.*
*பிற மொழிகளில் மொழிபெயர்ப்புகள் விரும்பப்படுகின்றன. தயவுசெய்து H. Haubeilவுடன் தொடர்பு கொள்ளுங்கள், இதற்காக அவர் உதவ முடியும்.*

**www.steps-to-personal-revival.info**

*"இயேசுவில் நிலைத்திருங்கள்" மற்றும் "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்."*
*மொழிபெயர்க்கப்பட்ட இந்தப் புத்தகங்களை இலவசமாகப் படிக்கலாம் அல்லது பதிவிறக்கம் செய்து ஒரு நண்பருக்கு அனுப்பலாம்.*
*இணையதளத்தில்: சுமார் 150 "சாட்சிகளைக் " காணலாம்.*
*ஆர்வத்தை உருவாக்குவது எப்படி? பரிசுத்த ஆவியானவர் பற்றிய மேற்கோள்கள், "முன்னேற்றம்" "தலைமைத்துவம்," இவற்றைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம். இவற்றைப் பகிர்வதற்கும் மற்றும் தொடர்பு கொள்ளவதற்கும் வலைத்தளம் ஜெர்மன் மொழியில்.*

*புத்தகங்கள் வாங்க:*

*விவரங்களுக்கு, பக்கம் 2ஐ பார்க்கவும்*

வேதாகமம்:

*The Holy Bible, New King James Version, Copyright c 1982 by Thomas Nelson, Inc. All rights reserved.*

# புத்தகங்களை வாங்குவதற்கான முகவரி

*USA*
***Remnant Publications***
***649 E. Chicago Rd***
***Coldwater Ml, 49036***
**தொலைபேசி:** ***800-423-1319***
***(அ) 517-279-13043***
[***www.remnantpublications.com***](http://www.remnantpublications.com)
**அவெண்டிஸ்ட் புத்தக மையங்களில் கிடைக்கிறது**

***CANADA***
***Lucas Jurek***
***118 G First Avenue North***
***Williams Lake, BC***
***V2G IY8***
**மின்னஞ்சல்:** ***lucasjurek@gmail.com***
**தொலைபேசி:** ***250 983-2650***

***AUSTRALIA***
***Colin Home***
**ஆங்கிலத்தில் சிறு புத்தகங்கள்**
**மின்னஞ்சல்:** ***colin.hone@murrayhone.com.au***

***GREAT BRITAIN***
***Advent Press Limited***
***141 Cressex Road***
***High Wycombe***
***Buckinghamshire, HP12 4PZ***
**தொலைபேசி:** ***+44***
***7545 23 00 83***
**மின்னஞ்சல்:** ***info@adventpress.eu***

***PHILIPPINES***
***Allan D. Faina***
**மின்னஞ்சல்:** ***berevived7.14@gmail.com***
***SDA church***
***Fidela Herrera Subd***
***Bgy. Santol, Tanza, Cavite-4108***
**தொலைபேசி:** ***+63 997 6003397***

***RUSSIA***
***Source of Life Publishing House***
***Vostochanya St.9, Zaoksky 301000***
***Tula Region, Russia***
***www.lifesource.ru***
**தொலைபேசி:** ***+7873420101***

***Europe – Russian-language literature***
***Christa Medien GmbH***
***Pulverweg 6***
***D-21337 Lüneburg (Germany)***
**தொலைபேசி:** ***+49(0)41319835-580***
***www.christa-medien.eu***
***www.christa-shop.eu***
**மின்னஞ்சல்:** ***info@christa-medien.eu***

***GERMANY AND ABROAD***
***Wertvoll leben***
***Ziegeleistr.23, D-73635 Rudersberg***
***www.wertvollleben.com***
**மின்னஞ்சல்:** ***info@wertvollleben.com***
**தொலைபேசி:** ***+49(0)71833071332***

***AUSTRIA***
***Top life Wegweiser-Verlag***
***Prager Str. 287, A-1210 Wien/Vienna***
***www.toplife-center.com***
**மின்னஞ்சல்:** ***info@wegweiser-verlag.at***
**தொலைபேசி:** ***+43(0)1 2294000***

***AUSTRIA AND GERMANY***
***Adventist Book Centre***
***Bogenhofen, A-4963 St. Peter/Hart***
**www.adventistbookcenter.at**
**தொலைபேசி:** ***+43(0)2294000***

***SWITZERLAND***
***Advent-Verlag***
***Leissigenstr,17, CH-3704 Krattigen***
***www.av-buchshop.ch***
**மின்னஞ்சல்:** ***info@adventverlag.ch***
**தொலைபேசி:** ***+41 33 654 1065***

***SPAIN***
***Safeliz Publishing House***
***Pradillo, Poligono Industrial 'LaMina'***
***28770 Colmenar Viejo-Madrid***
**தொலைபேசி:** ***+34(91)845-9877***
**மின்னஞ்சல்:** ***adm@safeliz.com***
***www.publicacionesadventistas.com***

## கருத்தரங்கு கூட்டங்களுக்கான பேச்சாளர்

**அமெரிக்கா மற்றும் பல நாடுகள்:** ***www.Spiritbaptism.org*** **- வலைப்பக்கத்தை உருட்டவும்.**

**ஜெர்மனி, ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து, ஐரோப்பிய நாடுகள்:**
***www.steps-to-personal-revival.info*** **- தொடர்பு கொள்ள-**
**ஜெர்மன் பதிப்பைக் கிளிக் செய்க- வலைப்பக்கத்தை உருட்டவும்.**

***PHILIPPINES :***
**மின்னஞ்சல்:** ***allan@lightingtheworld.org***
***Allan D. Faina***
***SDA Church : Fidela Herrera Subd, Bgy, Santol, Tanza, Cavite-4108,***
**தொலைபேசி:** ***(63) 926 054 1175***

***சிறு தொடர் எண். 2***

# இயேசுவில் நிலைத்திருங்கள்

***இயேசு கிறிஸ்து:***

***“என்னில் நிலைத்திருங்கள், அப்போது நானும் உங்களில் நிலைத்திருப்பேன்.”***

***Helmut Haubeil - ஹெல்முத் ஹோபாயில்***

***தமிழாக்கம்: சகோதரி. ஜூலியட் லாசரஸ்***

# கனி நிறைந்த வாழ்க்கை

## இயேசு: "ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்" யோவான் 15:5

### நான் இயேசுவில் எவ்வாறு நிலைத்திருக்க முடியும்?

*"நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்" (மத்தேயு 11:28) என இயேசு நம்மை அழைக்கிறார்.*
*இயேசுவிடம் வரும் எவரும் அவரில் நிலைத்திருக்கும்படி அழைக்கப்படுகிறார். (யோவான் 15 : 4)*

### இது எவ்வாறு செயல்படுகிறது?

*"என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்."*
*"கிறிஸ்துவில் நிலைத்திருத்தல்" என்பதன் பொருள்:*
*-அவருடைய ஆவியைத் தொடர்ந்து பெறுதல்*
*-முற்றுமாக வாழ்க்கையை அவரின் சேவைக்கு ஒப்புக்கொடுத்தல். (யுகங்களின் வாஞ்சை 676.2)*

*உண்மையில் இந்த விளக்கம் என் கண்களைத் திறந்து, கர்த்தருடன் நான் நடப்பதற்கு தெளிவு அளித்தது. என்னைப் பொறுத்தவரை ஒரு மகிழ்ச்சியான கிறிஸ்தவ வாழ்க்கைக்கான இரகசியம் இதுதான், (யோவான் 15:11). இது பலருக்கு மகிழ்ச்சி நிரம்பிய நிறைவான வாழ்க்கையைப் பெற வழிகாட்ட வேண்டும் என்பதே எனது ஜெபமும் விசேஷமான விருப்பமும் கூட. "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" என்ற நூலின் மற்ற மூன்று சிறு தொடர்களின் அடித்தளமாக இந்த வார்த்தைகள் உள்ளன.*

### "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" என்ற புத்தகத்தின் மற்ற மூன்று சிறு தொடர்களின் இடையில் என்ன தொடர்புள்ளது?

*எண்: 1. தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்*
*பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்*
*இதை நீங்கள் எவ்வாறு அனுபவிக்க முடியும்?*
*இது அவருடைய ஆவியானவரை தொடர்ந்து கேட்பது மற்றும் பெறுவது பற்றியது.*

*எண்: 2. இயேசுவில் நிலைத்திருங்கள்*
*இது எவ்வாறு செயல்படுகிறது ?*
*இது இயேசு கிறிஸ்துவிடம் முழுமையாக ஒப்புக்கொடுத்த ஒரு வாழ்க்கையைப் பற்றியது.*

*எண்: 3. இயேசுவோடு ஆவியில் நிறைந்த சக ஊழியர்கள்*
*ஆவியில் நிறைந்த சக ஊழியராக நீங்கள் எவ்வாறு மாற முடியும்?*
*இது இயேசு கிறிஸ்துவின் சேவைக்கு முழுமையாக ஒப்புவித்தலும் மற்றும்*
*அற்புதமான அதன்பின் விளைவுகள் பற்றியதும் ஆகும் (2019 முதல் கிடைக்கிறது).*

## உங்களை ஊக்குவிக்க

*இந்த விலைமதிப்பற்ற உண்மைகளைப் படிப்பவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதை குறிப்பாக அனுபவம் காட்டுகிறது. தனிப்பட்ட தியானத்திற்குப் பின், பொதுவான தியானம் தினம் இரண்டு நபர்களால் ஒன்றாகச் சேர்ந்து செய்யப்படுகிறது. தம்பதிகளுக்கு இதில் இரட்டை ஆசீர்வாதம் இருக்கிறது ! (மற்றவர்களுடன் தொலைபேசி அல்லது ஸ்கைப்பில் கூட இது சாத்தியமாகும்). மேலும் ஒரு குழுவில், ஜெபம் மற்றும் உரையாடலுக்குத் தினசரி அல்லது வாராந்திர நேரத்தை ஒதுக்குவது மிகவும் ஊக்கமளிக்கிறது.*

# பொருளடக்கம்


## *அத்தியாயம் 1* இயேசுவின் விலைமதிப்பற்ற பரிசு ................................*7*

*பகுதி 1 இயேசுவின் மிக வல்லமை வாய்ந்த செய்தியை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா ?*
*பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகள் என்ன ?*
*பகுதி 2 நம்முடைய குணத்தை எவ்வாறு மாற்ற முடியும் ?*
*பரிசுத்த ஆவி மற்றும் புளித்த மாவைப் பற்றிய இயேசுவின் உவமை*

## *அத்தியாயம் 2* இயேசுவிடம் ஒப்புக்கொடுத்தல்..................................*27*

*பகுதி 1 நான் என் சுய விருப்பத்தை இழக்கிறேனா அல்லது பலமடைகிறேனா?*
*பகுதி 2 நான் என்னையே இயேசுவுக்கு ஒப்புக்கொடுப்பதை எது தடுக்க முடியும் ?*
*ஆண்டவரிடம் ஒப்புக்கொடுப்பது நம் சுய விருப்பத்தைக் கைவிடல் என்பதாகுமா ?*

## *அத்தியாயம் 3* இயேசு உங்களில் நிலைத்திருக்கிறார்............................*...45*

*பகுதி 1 என் வாழ்க்கையில் "எனக்குள் கிறிஸ்து" என்ன விளைவுகளை ஏற்படுத்துகிறது? முயற்சியின் முடிவு : தேவனால் முழுமையாக நிரப்பப்படுதல்...*
*பகுதி 2 "உங்களில் கிறிஸ்து" ஏற்படுத்தும் விளைவுகள்.*
*பாவத்தின் வல்லமையிலிருந்து நாம் எவ்வாறு விடுதலையைப் பெறுகிறோம்?*
*பாவம் செய்வதன் மூலம் நாம் மீண்டும் இம்மைக்குரியவர்களாக மாறுவோமா?*

## *அத்தியாயம் 4* இயேசுவின் மூலமாகக் கீழ்ப்படிதல்......................................*71*

*பகுதி 1 நான் எவ்வாறு மகிழ்ச்சியுடன் கீழ்ப்படிந்து வாழ முடியும்? அது மகிழ்ச்சியாகுமா ?*
*பகுதி 2 "என்னில் இயேசு" இருக்கும்போது கீழ்ப்படிதல் எவ்வாறு செயல்படுகிறது?*
*கர்த்தர் உருவாக்கியுள்ளார் : ஆண்டவருக்கும் மனிதனுக்கும் இடையிலான ஒத்துழைப்பு.*

## *அத்தியாயம் 5* இயேசுவின் மூலம் ஈர்க்கும் விசுவாசம்........................*...97*

*பகுதி 1 விசுவாசிகளிடையே ஒற்றுமையை எவ்வாறு உருவாக்க முடியும்?*
*நம்முடைய விசுவாசம் எப்படி குடும்பத்தையும் உலகத்தையும் கவரக் கூடியதாக மாறுகிறது ?*
*நம்மில் என்ன மாற்றங்கள் நம்மைச் சாட்சிகளாக்குகின்றன?*
*பகுதி 2 எழுப்புதல் எவ்வாறு தேவப்பணியை தோற்றுவிக்கிறது?*

## பின் இணைப்பு..................................................................*119*

*மேலதிக ஆய்வுக்கான பரிந்துரைகள், தொடர்புகள்*

### *அத்தியாயம் 1- பகுதி 1*

# இயேசுவின் விலைமதிப்பற்ற பரிசு

***-பரிசுத்த ஆவியானவரைப் பற்றி இயேசு என்ன கற்பித்தார்?***

***-இயேசுவின் வல்லமை வாய்ந்த செய்தியை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?***

***-பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகள் என்ன?***

***-நம்முடைய குணத்தை எவ்வாறு மாற்ற முடியும்?***

## இயேசுவின் விசேஷ வேண்டுகோள்: பரிசுத்த ஆவியானவரைக் கேளுங்கள்

***பரிசுத்த ஆவியானவரைக் கேட்கும்படி, இயேசு ஒரு குறிப்பிட்ட வேத பகுதியில் உறுதியாகக் கட்டளையிடுகிறார். இயேசு மனதில் வைத்துக்கொள்ளும்படி மிகவும் அன்பாக வற்புறுத்திய இந்த வேத பகுதியைத் தவிர வேறு முக்கியமான பகுதி எனக்குத் தெரியாது. லூக்கா 11-ல் ஜெபம் குறித்து கற்பிக்கப்பட்ட பகுதியில் இந்த வசனங்கள் காணப்படுகின்றன. நாம் பரிசுத்த ஆவியானவரைக் கேட்க வேண்டும் என்று அங்கே பத்து முறை வலியுறுத்தியுள்ளார்:***

***“மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்டும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக்கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா? அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்!” (லூக்கா 11 :9-13). இந்தச் சில வசனங்களில், இயேசு “கேள்” என்ற வினைச்சொல்லை ஆறு முறை பயன்படுத்தியுள்ளார்; பின்னர் அவர் “கேள்” என்பதற்குப் பதிலாக இரண்டு முறை “தேடு” - என்ற ஒரு செயல் வினைச்சொல்லால் அதை வலியுறுத்தியுள்ளார்- மேலும் இரண்டு முறை “தட்டு” – என்ற செயல்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதற்கு நாம் முயற்சி எடுக்க வேண்டும் என்பதை அவர் இதன் மூலம் தெளிவாகக் காட்டவில்லையா?***

***கடைசியாகப் பயன்படுத்தப்பட்ட “கேள்” என்ற சொல் கிரேக்க மொழியில்***

*தொடர்வினையாகப் பயன்படுத்தப்படுகிறது. அதாவது, நாம் ஒரு முறை மட்டுமே கேட்கக் கூடாது, மாறாகத் தொடர்ந்து கேட்க வேண்டும். இங்கே இயேசு நம்மை அவசரத் தேவைக்கு மட்டுமல்லாமல், தொடர்ந்து கேட்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். பரிசுத்த ஆவியானவர் மீதான நம் வாஞ்சையை இந்த இதயப்பூர்வமான அழைப்பால் விழிப்பூட்டி எழுப்ப அவர் விரும்புகிறார். பரிசுத்த ஆவியின் பொழிவுக்காக நாம் தொடர்ந்து கேட்காவிட்டால், முக்கியமான ஒன்றை நாம் இழக்க நேரிடும் என்பது இந்தத் திடமான இயேசுவின் அவசர அழைப்பு நமக்குக் காட்டுகிறது. நமக்கு முற்றிலும் பரிசுத்த ஆவியானவர் தேவை, எனவே அவர் இந்த உண்மைக்கு நேராக நம் கவனத்தை ஈர்க்க விரும்புகிறார். இந்த வழிமுறையில், பரிசுத்த ஆவியின் வளமான ஆசீர்வாதங்களை நாம் தொடர்ந்து பெற வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.*

*எபேசியர் 5:8-ன் பிற்பகுதியைப் பற்றி ஜோகன்னஸ் மேகர் இந்த விதமாகக் கருத்து கூறுகிறார்: "ஒரு பாத்திரம் நிரப்பப்படுவது போல ஒரு கிறிஸ்தவன் ஒருமுறை மட்டும் நிரப்பப்படுவதில்லை, ஆனால் தொடர்ந்து நிரப்பப்பட வேண்டும். ஆகவே, [எபே 5:18] ம் இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கப்பட வேண்டும்." எப்போதும் தொடர்ச்சியாக உங்களை ஆவியால் நிரப்பிக் கொள்ள விட்டுக் கொடுங்கள். ஞானஸ்நானத்தில் நமக்குக் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியை, தக்க வைத்துக் கொள்ளாவிட்டால் அந்த அபரிமிதமான பரிசை இழக்கவும் நேரிடும். அதை இழந்துவிட்டால், பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தை மீண்டும் பெறவும் முடியும். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை அழிந்துப் போகாதபடி பரிசுத்த ஆவியானவர் நம் வாழ்வின் எல்லா பகுதிகளையும் நிரப்பக்கூடிய வகையில் நிரப்புதல் புதுப்பிக்கப்பட வேண்டும். ஆவியானவரால் நிரப்பப்படுவதென்றால், அளவுசார்ந்து அவரை மேலும் மேலும் பெறுகிறோம் என்பதில்லை, மாறாக ஆவியானவர் மேலும் மேலும் அதிகமாக நம்மை ஆட்கொள்கிறார் என்பதாகும். ஆகையால், பவுல் எல்லா விசுவாசிகளையும் [எபே 5:18-ல்] தொடர்ந்து ஆவியால் நிரப்பப்பட வேண்டும் எனக் கட்டளையிடுகிறார். ஒரு ஞானஸ்நானம் ஆனால் பல நிரப்புதல்கள்" 1- இது ஒரு கிறிஸ்தவரின் இயல்பான நிலை.*

*பரிசுத்த ஆவிக்காக ஜெபம் செய்வது பற்றிய இயேசுவின் செய்தி ஒரு தனித்தன்மை வாய்ந்தப் பகுதி ஆகும். தேவனின் மிகப் பெரிய பரிசு பரிசுத்த ஆவியானவர் - இந்தப் பரிசு மற்ற ஏனைய பரிசுகளையும் அதனுடன் கொண்டு வரும். இது இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கொடுத்த விலைமதிப்பற்ற பரிசு, மட்டுமல்லாமல் அவருடைய அன்பை வெளிப்படுத்தும் தெளிவான சான்றும் கூட. அத்தகைய மதிப்புமிக்க பரிசை ஒரு நபர்மீது திணிக்கக் கூடாது. பரிசைப் பெற விருப்பத்தை வெளிப்படுத்துபவர்களுக்கும் மதிப்பறிந்து பாராட்டுபவர்களுக்குமே இது வழங்கப்படுகிறது. ஆகவே, யோவான் 7:37-படி பரிசுத்த ஆவியானவரை தினமும் கேட்பது எனக்கு ஒரு பழக்கமாகிவிட்டது. "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்." இதன் பொருள் - அன்புள்ள ஆண்டவரே, என் இருதயத்தில் பரிசுத்த ஆவியானவருக்காக ஒரு வாஞ்சையைத் தாரும் என்பதாகும்.*

# பரிசுத்த ஆவியைக் கேட்கத் தொடங்கிய சிலரின் முதல் அறிக்கைகள்

*'ஆதி அன்புக்குத்' திரும்பியதைப் பற்றி ஒரு சகோதரி எனக்கு இவ்வாறு எழுதினார் : "நானும் எனது நண்பரும் தற்போது மூன்றாவது முறையாக 40 நாட்கள் என்ற புத்தகத்தையும், தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள் என்ற புத்தகத்தையும் மாறி மாறிப் படித்துக்கொண்டிருக்கிறோம். இந்தப் புத்தகங்களைக் கண்டுபிடிப்பதற்கு முன்பு எங்கள் விசுவாசமும், அனுபவமும், ஜெப வாழ்க்கையும் இப்போது இருப்பதைப் போல முன் ஒரு காலத்தில் இருந்தது இல்லை. எங்கள் 'ஆதி அன்பை' மீண்டும் கண்டுபிடிக்க நாங்கள் ஏங்கினோம். நாங்கள் அதைக் கண்டுபிடித்தோம்! எங்கள் முழு இருதயத்தோடு தேவனுக்கு நன்றி கூறுகிறோம்.*

[1] Johannes Mager, Auf den Spuren des heiligen Geistes (Lüneburg, Germany, Advent – Verlag, 1999), S. 101.

*நம்முடைய அன்பான தேவன் ஜெபங்களுக்கு எவ்வாறு பதிலளிக்கிறார் என்பது மிகவும் அற்புதமானது, மேலும் அவருடைய ஆவி எவ்வாறு செயல்படுகிறது என்பதை அவர் வெளிப்படுத்துகிறார் - நம் மீதும் நாம் ஜெபிக்கும் மக்கள் மீதும்." M. S.*

*இயேசு எங்கள் வாழ்வில் பிரவேசித்தார்: மற்றொருவர் இந்தப் புத்தகங்களைப் பற்றி இவ்வாறு எழுதினார்: "...அவைகள் என் வாழ்க்கையில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட ஒரு பெரிய மாற்றத்தையும் ஆசீர்வாதத்தையும் கொண்டு வந்து விட்டன. எங்கள் சபைச் சேர்ந்த ஒரு சகோதரியும் மற்றும் சபை அங்கத்தினர் பலரும் அனுபவித்ததைப் போன்ற அனுபவம் எங்களிடம் இல்லை, எங்கள் விசுவாச அனுபவத்தில் ஏதோ ஒன்று எப்போதும் குறைவுபட்டது. இயேசு எங்கள் வாழ்வில் பிரவேசித்து எங்களை மாற்றத் தொடங்கினார், இதை அனுபவிக்கும் பாக்கியம் இப்போது நாங்கள் பெற்றுள்ளோம். அவர் இன்னும் எங்களுக்குள் தொடர்ந்து கிரியை செய்து, படிப்படியாக எங்களை அவரிடம் நெருங்கிச் சேரவும் செய்கிறார்." S.K.*

# *நிறைவான வாழ்க்கையின் மூலகாரணர் பரிசுத்த ஆவியானவரே*

*இயேசுவின் கூற்றுப்படி, அவர் ஏன் இந்தப் பூமிக்கு வந்தார்? இயேசு அவர்களுடனே: "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்றுச் சொன்னார். (யோவான் 10:10) இந்தப் புதிய வாழ்க்கையை நாம் இப்போது அனுபவிக்க வேண்டும் என்றும், அவருடைய இரண்டாவது வருகைக்குப் பிறகு முற்றிலும் மாறுபட்ட கோணத்தில், அதாவது தேவனுடைய ராஜ்யத்தில் நித்திய ஜீவகாலமாக அது தொடர வேண்டும் என்றும் இயேசு விரும்புகிறார்.*

*நிறைவான வாழ்க்கையின் மூலகாரணரே பரிசுத்த ஆவியானவர் என்பதையும் அவர் நமக்குக் காட்டுகிறார்: "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார்." (யோவான் 7:37-39) "ஜீவத்தண்ணீருள்ள நதிகள்" -நிறைவான ஒரு வாழ்க்கையைச் சுட்டிக்காட்ட இது ஒரு நல்ல ஒப்பீடு அல்லவா?*

# *இயேசு பூமியில் வாழ்ந்த காலத்தில், இது தொடர்புடைய ஒரு உதாரணத்தை அவர் நமக்குக் கொடுத்தாரா?*

*மரியாள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று நாம் அறிவோம் (மத்தேயு 1:18). இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜெபம்பண்ணுகையில் "பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப் போல் அவர்மேல் இறங்கினார்" (லூக்கா 3 :22). இந்தச் சூழ்நிலையில் அனுதினமும் பரிசுத்த ஆவியைப் பெறுவது இயேசுவுக்கு அவசியமும் முக்கியமானதாகவும் இருந்ததா ? எலன் உவைட் கூறுகிறார், "ஒவ்வொரு காலைதோறும் அவர் பரலோகத்தில் உள்ள தனது பிதாவுடன் தொடர்பு கொண்டார், அனுதினமும் அவரிடமிருந்து புதிய பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றார்."* [2] *இயேசு நமக்கு இதில் ஒரு முன்மாதிரி. நாம் நம்மை நாமே*

---

[2] Ellen G. White, Signs of the Times, November 21, 1895.

*கேட்டுக்கொள்ள வேண்டும் : இயேசுவுக்கே தினமும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் தேவைப்பட்டால், உங்களுக்கும் எனக்கும் அது எவ்வளவு முக்கியமானது ?*

*இயேசு இதற்குக் கொடுத்த முக்கியத்துவத்தை அப்போஸ்தலன் பவுல் புரிந்துகொண்டார். எபேசுவில் உள்ள சபைக்கு அவர் எழுதிய கடிதத்தில், அவர்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்பட்டார்கள் என்பதை பவுல் உறுதிப்படுத்துகிறார். (எபேசியர் 1:13); எபேசியர் 3:16,17ல் அவருடைய ஆவியினாலே பலப்படும்படி அவர்களை ஊக்குவிக்கிறார்; 4:30ல் "பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தாதீர்கள்" என்று அவர் கூறுகிறார்; 5:18ல் ஒரு அங்கீகரிக்கப்பட்ட அப்போஸ்தலனாக அவர் எபேசியர்களையும், நம்மையும் "ஆவியினால் நிரப்பப்பட வேண்டும்" அல்லது வேறு வார்த்தைகளில் கூறுவதானால், "நீங்கள் தொடர்ந்து மீண்டும் மீண்டும் ஆவியினால் நிரப்பப்பட வேண்டும்" எனக் கூறுகிறார்.[3] ஒரு கிறிஸ்தவன் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்குப் பரிசுத்த ஆவியினால் நாள்தோறும் நிரப்பப்பட வேண்டியது ஒரு இன்றியமையாத அனுபவம் என்பதை நாம் காண்கிறோம்.*

*"ஒரு முறை கேளுங்கள் அப்போது நீங்கள் பெறுவீர்கள் என்று தேவன் சொல்லவில்லை. நாம் சோர்ந்து போகாமல் ஜெபத்தில் தொடர்ந்து உறுதியுடன் கேட்க வேண்டும் என்று அவர் கட்டளையிடுகிறார். தொடர்ந்து கேட்பதால், கேட்பவருக்கு மிகுந்த ஆர்வமுள்ள மனப்பாங்கை அதுகொண்டுவருகிறது, மேலும் அவர் விரும்புவதைப் பெறுவதற்கான அதிக வாஞ்சையும் அவருக்கு அளிக்கிறது."[4]*

*"பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் என்பது பரிசுத்த ஆவியின் ஆளுமையின் கீழ் முழுமையாக இருப்பதும்- அவரால் முழுமையாக நிரப்பப்படுவதாகும். இது ஒரு முறை அனுபவம் அல்ல, மாறாகத் தொடர்ந்து மீண்டும் மீண்டும் செய்ய வேண்டிய ஒன்று. எபேசியர் 5 :18ல் 'நிரப்பப்பட்டது' என்ற கிரேக்க வினைச்சொல்லுடன் பவுல் இதை விளக்குகிறார்."[5]*

# பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய இயேசுவின் இறுதி வார்த்தைகள்

*இயேசு பிரிந்துசெல்லும் முன் தம்முடைய சீடர்களுக்கு, மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் வழங்கும் விதமாக, பரிசுத்த ஆவியானவர் தம்முடைய இடத்தை நிரப்ப அவர்களிடம் வருவார் என்ற செய்தியை அவர்களுக்குத் தெரிவித்தார். அவர் யோவான் 16:7-14-ல் பரிசுத்த ஆவியானவரின் செயல்களைப் பற்றி எடுத்துரைத்தார்.*

*"நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன் ; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும் ; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும், நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார். இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில்*

---

[3] Pub. Werner E. Lange, Unser gröβtes Bedürfnis (Lüneburg, 2011), S. 42

[4] Ellen G. White, Christ's Lessons (Hagerstown, MD: Review and Herald Publishing Association, 2003), p. 145.3

[5] Adult Bible Study Guide, July 17, 2014

*எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்." யோவான் 16 :7-14*

# ஒரு புதிய சாதகமான தீர்வு

*இயேசு சீடர்களிடம் ஆச்சரியமான ஒன்றைச் சொன்னார்: "நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்." இந்தப் புதிய தீர்வின் பொருள்- பரிசுத்த ஆவியானவர் மூலமாக இயேசு நம்முடன் இருக்கிறார் என்பதாகும் - இயேசு நேரில் இருப்பதைக் காட்டிலும் இது மிகவும் சாதகமானது. இதன் மூலம், அவர் வரம்புக்குட்பட்டவர் என்று அர்த்தம் அல்ல, மாறாக அவர் தற்போது எங்கிருந்தாலும் ஒவ்வொரு நபரின் பக்கத்திலும் இருக்க முடியும்.*

# அவநம்பிக்கை மற்றும் சந்தேகத்திலிருந்து இயேசுவின் மீதான விசுவாசத்திற்கு உங்களை இட்டுச் செல்கிறது.

*உலக மக்களின் கண்களைத் திறக்கும் பணி பரிசுத்த ஆவியானவருக்கு உண்டு. சபைக்குள் உலகம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு உள்ளே நுழைந்திருக்கவில்லையா? பரிசுத்த ஆவியானவர் மட்டுமே லவோதிக்கேயா சபையின் கண்களைத் திறக்க முடியும். குளிருமல்லாமல் அனலுமல்லாமல் இருக்கிற கிறிஸ்தவர்கள் தேவன் மேல் வாஞ்சை கொள்ளவும், இலௌகீக மக்கள் இயேசுவோடு ஒரு நெருக்கமான உறவைக் கொண்டிருக்கவும் விழிப்பூட்டுகிறார். எல்லா பாவங்களுக்கும் காரணமான பாவத்தை அவர் நமக்குச் சுட்டிக் காட்டுகிறார்: "ஏனென்றால் அவர்கள் என்னை விசுவாசிக்கவில்லை." யோவான் 16 :9*

*நீங்கள் இயேசுவை நம்புகிறீர்களா? இயேசுவை நம்புவதே விசுவாசத்தின் அடிப்படை ஆகும். இயேசுவை உண்மையாக நம்பி விசுவாசிப்பதற்கான அடையாளம் என்னவென்றால், நம்மை முழுமையாக அவருக்கு ஒப்புக்கொடுப்பதாகும். இது முழுமையான அர்ப்பணிப்புக்கான விடயமும், எல்லாவற்றிலும் அவரைப் பின்பற்றுவதற்கான மனமுவந்த விருப்பமும் ஆகும். பரிசுத்த ஆவியானவர் இயேசுவை உயர்த்துகிறார். நாம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்போது, இயேசு நமக்கு மிகவும் விலைமதிப்பற்றவராகவும் மதிப்புமிக்கவராகவும் மாறுவார், இயேசுவை அதிகமாக மெச்சிப் போற்றுவதும் அப்பொழுது நம்மில் உருவாகும்.*

# விசுவாசத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டு நீதிமான்களாக்கப்படுகிறோம்

*இயேசுவின் நீதியைப் பார்ப்பதற்கு பரிசுத்த ஆவியானவர் நம் கண்களைத் திறக்கிறார். இயேசு பரலோகத்திற்கு ஏறிச் சென்றபோது, அவருடைய பலி பிதாவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு சாத்தியமற்றது சாத்தியமானது, அதாவது தேவன் அன்பைப் பிரயோகித்தார், அதே சமயம் நீதிச் செய்பவராகவும் இருக்கிறார். இந்த விலைமதிப்பற்ற பரிமாற்றத்தைக் காண பரிசுத்த ஆவியானவர் நம் கண்களைத் திறக்க விரும்புகிறார்: இயேசு எல்லா குற்றங்களையும் தம்மிடம் ஒப்படைத்தவர்களிடமிருந்து அதை எடுத்துக்கொண்டு, அவருடைய நீதியை அவர்களுக்கு அளிக்கிறார். இதுவே வேதாகமத்தின் மைய போதனை : இயேசுவை விசுவாசிப்பதன் மூலம் நீதி என்பதே.*

# பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தேவனின் வழி முறையைக் காட்டுகிறார்

*இந்த உலகத்தின் அதிபதி ஏற்கனவே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டுள்ளான் என்பதைக் காண பரிசுத்த ஆவியானவர் நம் கண்களைத் திறக்கிறார். சாத்தான் பரலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டான், அவனுடைய இறுதி முடிவு அண்மையில் நிகழப்போகிறது. நாம் கிறிஸ்துவில் இருக்கும்போது, அதன் அடிப்படையில் அவன் நமக்குத் தீங்கு செய்ய முடியாது, என்றாலும் நாம் மீண்டும் மீண்டும் சோதனையில் விழுந்து இந்தப் பூமியில் பலவீனமடையக்கூடும். 1யோவான் 5 : 18 கூறுகிறது, "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம் ; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்." ஆட்சியுரிமை மாற்றம் நம் வாழ்வில் நிகழ்ந்துள்ளது. பாவத்திலிருந்து நம்மைக் காப்பாற்றவும், சாத்தானின் தாக்குதல்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கவும் இயேசு விரும்புகிறார்.*[6]

*மேலும், நியாயத்தீர்ப்பு வரப்போகிறது என்ற உண்மையைப் பார்க்கப் பரிசுத்த ஆவியானவர் மக்களின் கண்களைத் திறக்க விரும்புகிறார். இயேசு கிறிஸ்துவிடம் முழுமையாகச் சரணடைந்து அவரில் நிலைத்திருந்து இரட்சிப்பின் பரிசை ஏற்றுக் கொள்ளாத யாரும் இந்த நியாயத்தீர்ப்பிலிருந்து தப்ப முடியாது. நியாயத்தீர்ப்பை சுட்டிக்காட்டி பயத்தின் மூலம் மக்களை நம்பும்படி செய்வது கடவுளின் நோக்கம் அல்ல. இருப்பினும், ஒரு நியாயத்தீர்ப்பு உண்டு என்ற அறிவு பலரின் மனந்திரும்புதலுக்கு ஒரு தூண்டுதலாக இருக்கும். வரவிருக்கும் பரமகாரியங்களை மக்களுக்குக் காட்டத் தவறினால் அது நியாயமற்றது. நாம் ஒரு முடிவு எடுக்க நியாயத்தீர்ப்பு உறுதுணை செய்யும்.*

# பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தைப் பற்றிய புரிதலை நமக்குத் தருகிறார்

*பரிசுத்த ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்துவார். அவர் நம்மைத் தவறான கண்ணோட்டம், பிழைகள் மற்றும் தவறான கவர்ச்சிகளிலிருந்தும் விடுவிப்பார். நாம் யார் என்பதைப் புரிந்துகொள்ளும்படி அவர் நம்மை வழிநடத்துவார், இதனால் தேவையான சமயங்களில், தேவ உதவியுடன் நம்முடைய வாழ்க்கை முறையைச் சரிசெய்ய முடியும். "தேற்றரவாளன், 'சத்திய ஆவியானவர்' என்றும் அழைக்கப்படுகிறார். சத்தியத்தை தெளிவுபடுத்தி நிலைநிறுத்துவதே அவரது பணி. அவர் முதலில் இதயத்தில் சத்திய ஆவியானவராக வாழ்கிறார், இப்படித்தான் அவர் தேற்றரவாளன் ஆகிறார். சத்தியத்தில் ஆறுதலும் அமைதியும் இருக்கிறது, ஆனால் உண்மையான அமைதியோ ஆறுதலோ பொய்மையில் காணப்படாது."* [7]

# பரிசுத்த ஆவியானவர் எதிர்காலத்தைப் பற்றிய புரிதலை நமக்குக் கொடுக்கிறார்

*வருங்காரியங்களை நமக்கு அறிவிக்கும் பணியும் பரிசுத்த ஆவியானவருக்கு உண்டு. மத்தேயு 24-ல் எதிர்காலத்தைப் பற்றித் தெளிவாக இயேசு பேசியுள்ளார், மேலும் எதிர்காலத்தைப் பற்றி இன்னும்*

---

[6] This important topic is dealt with in chapter 4 of Dennis Smith's book, 40 Days: Prayers and Devotions to Revive Your Experience with God, book 2 (Hagerstown, MD: Review and Herald Publishing Association, 2011).
[7] Ellen G. White, The Desire of Ages (Nampa, ID: Pacific Press Publishing Association, 2002), p.671.

*அதிகமாக வெளிச்சம் தரும் பணியைப் பரிசுத்த ஆவியானவர் செய்கிறார். நாம் அவருக்கு இடம் கொடுக்கும்போது, அவர் நமக்குத் தீர்க்கதரிசனத்தையும் அருள முடியும்.*

*வெளிப்படுத்துதல் 2 மற்றும் 3-ல் உள்ள ஏழு கடிதங்களும் ஒரே வகையான சவாலுடன் முடிவடைவது ஆச்சரியமல்லவா? "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்." (வெளி 2 : 7) நாம் ஆவியானவரின் சத்தத்துக்குச் செவிகொடுக்கும்படி, இயேசு கடைசிக் கால சபையில் இருக்கும் நமக்கு இந்த அழைப்புச் செய்தியை விடுக்கிறார். நாம் அதைச் செய்ய விருப்பத்துடன் தயாராக இருக்கிறோமா?*

# *பரிசுத்த ஆவியின் மூலம் வல்லமை*

*இயேசு பிரிந்து செல்லும் முன் தனது இறுதி உரையில் பரிசுத்த ஆவியின் செயலைப் பற்றிக் குறிப்பிட்டார்: "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்." (அப்போஸ்தலர் 1 :8) பரிசுத்த ஆவியின் மற்றொரு முக்கியமான பணி, நமக்கு வல்லமையையும் திறனையும் கொடுத்து நாம் அவருக்குச் சாட்சிகளாக இருக்கும்படி. செய்வதாகும்.*

*"நமது பாவச் செயல்களையும், பிறவி தீய பண்புகளையும் வென்று, அதன் மூலம் சபையான நம்மீது அவருடைய சொந்த குணத்தை முத்திரையாகப் பதிய வைத்துக் கொள்ளவும், கிறிஸ்து தம்முடைய ஆவியைத் தெய்விகவல்லமையாக நமக்குக் கொடுத்திருக்கிறார்."[8] ஆரோக்கியமாக வாழ ஆவியின் வல்லமை அவசியம். வீமர் நிறுவனத்தின் சுகாதார சுவிசேஷ தலைமைத்துவத்தின் பயிற்சி இயக்குனர் டான் மெக்கின்டோஷ் கூறுகிறார்: "நமக்குத் தேவை ஆரோக்கியம் பற்றிய தகவல்கள், அதை நடைமுறையில் கொண்டுவருவதற்கு ஆவியின் வல்லமைத் தேவை. இது நம்மை மாற்றும் வல்லமையுடன் தொடர்புடையது."[9] இங்கே அது சுவிசேஷத்தின் வல்லமையுடன், இன்னும் துல்லியமாகப் பரிசுத்த ஆவியின் வல்லமையுடன் தொடர்புடையது. அவரே மாற்றத்தைக் கொண்டு வருகிறார், நாம் அந்தப் பாதை வழியாகப் பயணிக்கும்போது மட்டுமே மற்றவர்களுக்குச் சிறந்த ஆரோக்கியத்திற்கான வழியைக் காட்ட முடியும். ஒன்று நிச்சயம்: தேவனின் அபரிமிதமான ஆசீர்வாதம் நமக்காகக் காத்திருக்கிறது.*

# *ஒரு எழுப்புதலுக்கான அடிப்படைக் கூறுகளை நடைமுறைபடுத்துதல்*

*நாங்கள் சபையாக ஏற்கனவே எழுப்புதலுக்காக ஜெபம் செய்து வருகிறோம். எழுப்புதலுக்காக ஜெபம் செய்வது முக்கியம், ஆனால் மார்க் பின்லே சொல்வது போல், "வேதத்தில் உள்ள எழுப்புதலுக்கான அடிப்படைக் கூறுகளை நாம் நடைமுறைக்குக் கொண்டு வருவதும் முக்கியம்."[10] சபையில் ஒரு எழுப்புதல் என்பது ஒவ்வொரு தனி நபரின் எழுப்புதலையும் சார்ந்துள்ளது. உங்கள் தனிப்பட்ட எழுப்புதலுக்கான முயற்சிகளை எடுக்குமாறு நான் உங்களிடம் வேண்டுகோள் விடுக்கலாமா? இது உங்களை மிகவும் வல்லமை நிறைந்த முழுமையான வாழ்க்கைக்கும், உண்மையான மகிழ்ச்சி நிறைந்த விசுவாச வாழ்வுக்கும் இது உங்களை வழிநடத்துகிறது.*

---

8 Ibid.

9 Dave Fiedler, D'Sozo : Reversing the Worst Evil (Coldwater, MI : Remnant, 2000), « Foreword. »

10 Mark Finley, Revive Us Again (Nampa, ID : Pacific Press Publishing Association, 2010), p. 26.

# ஏன் ஒரு புதிய இருதயம் அவசியம்?

*புத்தியில்லாத கன்னிகைகளிடம் இயேசு, "உங்களை அறியேன்" என்றார். (மத் 25:12). அதனால்தான் அவர்கள் திருமணத்திற்கு அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்குள் வராதவர்களைக் குறிக்கிறார்கள். காரணம் எண்ணெய் பற்றாக்குறை, அதாவது நமக்குப் பரிசுத்த ஆவியின் அனுபவமின்மை, இது ஒருவரின் ஆன்மீக வாழ்க்கையின் குறைபாட்டைக் காட்டுகிறது. "புத்தியில்லாத கன்னிகைகள்" என்ற பதம் பரிசுத்த ஆவியின் கிரியைமூலம் இதயத்தில் உண்மையான மாற்றத்தை அனுபவிக்காத மக்களின் குணநலத்தை விவரிக்கிறது.*

*நமக்குப் பாவ இயல்பு இருக்கிறது, நாம் அனைவரும் தன்னலவாதிகள், இதனால் இந்தச் சுயநல இயல்பால் நாம் பாதிக்கப்படுகிறோம். எந்தச் சுயநலவாதியும் தேவனுடைய ராஜ்யத்தில் நுழையமாட்டார்கள் என்பதால், குணமாற்றம் முற்றிலும் அவசியம். இயேசுவிடம் எல்லோரும் உள்ளபடியே வரலாம் என்று தேவனுடைய வார்த்தை நமக்குக் காட்டுகிறது. ஆனால் வந்தபிறகு, எவரும் அப்படியே இருக்க மாட்டார்கள் என்பதும் நமக்குத் தெரியும்.*

*புத்தியில்லாத கன்னிகைகள் தேவனை அறியவில்லை என்பதைக் கவனியுங்கள், ஏனென்றால் அவர்கள் தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்காகவும் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலுக்காகவும் முழுமையாக அர்ப்பணிக்கவில்லை. "நம்முடைய இரட்சிப்பு நாம் அறிந்துள்ளதைப் பொறுத்தது அல்ல, மாறாக நாம் யாரை அறிந்து இருக்கிறோம் என்பதைப் பொறுத்தது. (யோவான் 17: 3) நாம் அறிந்தவைகள் முக்கியம்தான், ஆனால் இயேசுவுடனான தனிப்பட்ட உறவைக் காப்பாற்றாமல் விட்டால், நாம் சோதிக்கப்படுகிறோம், இறுதியில் காணாமல் போகிறோம். கடவுளைப் பற்றியறிந்து இருப்பது ஒரு நெருக்கமான, இதயப்பூர்வமான பரிச்சயத்திற்கு சமமானதல்ல."* [11] *பரிசுத்த ஆவியானவரை தொடர்ந்து கேட்கும்படி இயேசு அவசரமாக அழைப்பதற்கு இது ஒரு முக்கிய காரணம். நீங்கள் முழுமையாகச் சரணடைந்து தினமும் ஜெபிக்கிறீர்களா, பரிசுத்த ஆவி ஊற்றப்பட விசுவாசமாகக் கேட்கிறீர்களா?*

[11] Dennis Smith, 40 Days, book no.2, p. 112.

***தேவ ஆவியின் கிரியைகளை***
***செயல்படுத்த முன் வரும் ஒரு தனி மனிதனின்***
***சக்தியை ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதீர்கள்.***

***எஸ்தரை அழைத்த கடவுள் உங்களையும் இது***
***போன்ற ஒரு சூழ்நிலையில் அழைக்கக்கூடும்.***

*(தயவுசெய்து படிக்கவும்: எஸ்தர் 4: 14-16)*

# ***தனிப்பட்ட சிந்தனைகள் மற்றும் கலந்துரையாடலூக்கான வழிகாட்டி***

1. *பரிசுத்த ஆவியானவரைப் பற்றி இயேசு, உங்கள் இதயத்தில் ஆழமாகவும் தீவிரமாகவும் என்ன பதியச் செய்கிறார் ?*

2. *இயேசு எவ்வாறு நமக்கு ஒரு முன்மாதிரியாகப் பரிசுத்த ஆவியைக் கேட்பதில் இருந்தார்?*

3. *இயேச சீஷருக்கும் நமக்கும் வாக்களித்த தேற்றரவாளனிடம் என்ன பல்வேறுவகைப்பட்ட செயல்பாடுகள் உள்ளன?*

4. *பரிசுத்த ஆவியானவர் எதை நம்மில் நிறைவேற்றி முடிக்கிறார் ?*

# ***நம் ஜெப நேரம்***

*உங்கள் ஜெப பங்காளரைத் தொடர்புக் கொண்டு தலைப்பைப் பற்றி விவாதிக்கவும்.*
*உங்கள் ஜெப பங்காளருடன் ஜெபியுங்கள்:*

*விழிப்புடன் பரிசுத்த ஆவியானவரை தினமும் கேட்டு;*
*விசுவாசத்தினால் அவரைப் பெற்று;*
*வாக்குத்தத்தங்களை உரிமை கோரிக் கொள்ளவும் ஜெபியுங்கள்.*

*மேலும் பரிசுத்த ஆவியானவர் நம்மை :*

1. *அவநம்பிக்கை மற்றும் பலவீனமான விசுவாசத்திலிருந்தும் நம்மைப் பிரித்து வழி நடத்த ஜெபியுங்கள்;*
2. *விசுவாசத்தினாலே நீதி என்பதின் அர்த்தம் என்ன என்பதை நமக்கு மேலும் தெளிவுபடுத்த ஜெபியுங்கள்;*
3. *தவறான கருத்துகள், குற்றங்கள் மற்றும் சோதனையிலிருந்தும் நம்மை விடுவிக்க ஜெபியுங்கள்.*
4. *நிபந்தனையின்றி இயேசுவுக்கும் அவருடைய ஊழியத்திற்கும் ஒப்புக் கொடுக்க ஜெபியுங்கள்.*

# *அத்தியாயம் 1- பகுதி 2*

### *நம்முடைய குணநலன்களை எவ்வாறு மாற்ற முடியும்?*

# *பரிசுத்த ஆவி மற்றும் புளித்த மாவைப் பற்றிய இயேசுவின் உவமை*

*இயேசு புளித்தமா பற்றிய உவமையில், வாழ்க்கையை மாற்றும் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பற்றிப் பேசுகிறார். இந்த உவமையை நீங்கள் முதலில் படிக்கும்போது, அதற்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் தொடர்பு இருக்கும் என்று நீங்கள் நினைத்திருக்க மாட்டீர்கள் : மேலும் அவர், "தேவனுடைய ராஜ்யத்தை நான் எதற்கு ஒப்பிடுவேன் ? அது புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு ஸ்திரீ எடுத்து முழுவதும் புளிக்கும்வரைக்கும் மூன்றுபடிமாவிலே அடக்கிவைத்தாள் என்றார்." (லூக்கா 13 :20,21)*

*பல்வேறு வகையான ரொட்டிகளைச் சுட புளித்தமா அல்லது ஈஸ்ட் பயன்படுத்தப்படுகிறது. இது மாவுடன் சேர்க்கப்படும்போது, அது ஒரு நொதித்தல் செயல்முறையைத் தொடங்குகிறது, இது மாவை மென்மையாகவும் இலகுவாகவும் மாற்றி மிகவும் மகிழ்வுடன் சுவைத்து மனிதர் அனுபவிக்க வழி செய்கிறது.*

*இந்த உவமையின் மூலம் தேவ ராஜ்யத்தின் சில கொள்கைகளை நமக்குத் தெளிவுபடுத்த இயேசு விரும்புகிறார். புளித்தமா ஒரு அற்புதமான செயல்முறையை நம்மில் பிரதிபலிக்கிறது, இது மிகச் சிறியதாகத் தொடங்குகிறது, ஆனால் வியக்கத் தக்க முடிவைக் கொண்டுள்ளது, உவமை கூறுவது போல்: இயேசு நம்முடைய சுயநலத்திற்குப் பதிலாக அவருடைய தன்னலமற்ற அன்பை நம்மில் வளர்க்க விரும்புகிறார், ("இது முழுவதும் புளிக்கும்வரைக்கும்.").*

*ஒரு வகையில் இந்த உவமையின் மூலம், சுவிசேஷத்தின் செல்வாக்கை உலகுக்குகாட்ட இயேசு விரும்புகிறார். நற்செய்தி சிறியதாகத் தொடங்கினாலும், அது இறுதியில் முழு உலகத்தையும் ஊடுருவிச் செல்லும். மற்றொரு விதத்தில், நம் வாழ்க்கையை மாற்றும் கடவுளின் வல்லமை, பரிசுத்த ஆவியின் மூலம் நம்மில் எவ்வாறு செயல்படுகிறது என்பதை இயேசு நமக்குக் காட்டுகிறார். அவர் லூக்கா 17: 20,21-ல் கூறுகிறார், "தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது. இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது; இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார்."*

*முதல் நூற்றாண்டின் மக்களைப் பொறுத்தவரை, தேவனுடைய ராஜ்யம் இயேசுவின் மூலமாக அவர்களுக்கு நடுவே இருந்தது. ஆனால் இன்று தேவனுடைய ராஜ்யம், நாம் இயேசுவை இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ளும்போது நம் வாழ்வில் தொடங்குகிறது. நாம் அவரிலும், அவர் நம்மிலும் நிலைத்திருக்கும்போது, இயேசுவின் இரண்டாவது வருகையில் புலப்படக்கூடிய ராஜ்யம் இப்போதே நமக்குத் தொடங்கும். பரிசுத்த ஆவியின் மூலம்தான் அவர் நம்மில் வாழ முடியும். நம்மில் வசிக்கும் இயேசுவின் மூலம் தேவனுடைய ராஜ்யம் நமக்குள் வளர்வதைப் பற்றி இப்போது பார்ப்போம். உவமையின் முக்கியமான படிப்பினைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.*

# மாற்றும் வல்லமை அமைதியாக வேலை செய்கிறது

*"புளித்தமா பரலோகராஜ்யத்தை பிரதிநிதித்துவப்படுத்த பயன்படுத்தப்பட்டுள்ளது. இது விரைவுபடுத்தி, ஒருங்கிணைக்கும் தேவ கிருபையின் வல்லமையை விளக்குகிறது."* [12]*"பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே மாற்றத்தை ஏற்படுத்த முடியும்."* [13]*இங்கே இந்த உள்ளான வல்லமை எல்லாவற்றிற்கும் மேலானதும் மற்றும் நம்மை முற்றிலும் மாற்றும் ஒன்றாகும். இந்த வழியில், பரிசுத்த ஆவியின் மூலம் நம் குணத்தை தீர்மானமாக மாற்றத் தேவன் விரும்புகிறார்.*

*முதல் நூற்றாண்டில், அதாவது விவிலிய காலங்களில் பரிசுத்த ஆவியானவர் வெளிப்பட்ட சில சமயங்களில் அது கேட்கக்கூடியதாகவும் மற்றும் கண்களுக்குப் புலப்படும் அறிகுறிகளுடனும் இருந்ததாகவும் வேதாகமம் சொல்கிறது. ஆனால் நமக்குள் குண மாற்றம் அமைதியாக நிகழ்கிறது - நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருந்தால். பின்னர் ஒரு நேர்மறையான மாற்றம் நம்மில் நிகழ்ந்திருப்பதை திடீரென்று கண்டுபிடிப்போம்.*

*மாவில் மறைந்திருக்கும் புளிப்பு முழு மாவையும் அதன் புளிப்பு செயல்முறையின் கீழ் கொண்டுவர கண்ணுக்குத் தெரியாமல் செயல்படுகிறது; எனவே சத்தியம் எனப்படும் புளித்தமா ரகசியமாகவும், அமைதியாகவும், சீராகவும், ஆன்மாவை மாற்றுவதற்காகச் செயல்படுகிறது. இயற்கையான விருப்பங்கள் மென்மையாக்கப்பட்டு அடங்கிப்போகின்றன. புதிய எண்ணங்கள், புதிய உணர்வுகள், புதிய நோக்கங்கள் பதிக்கப்படுகிறது. ஒரு புதிய தரமான தன்மை அமைக்கப்படுகிறது- கிறிஸ்துவின் வாழ்க்கையைப் போல. மனம் மாறிவிடுகிறது; புதிய வழிகளில் திறமைகள் செயல்பட தூண்டப்படுகின்றன. மனிதனுக்கு புதிய திறமைகள் கொடுக்கப்படுவதில்லை, ஆனால் அவனிடம் உள்ள திறமைகள் பரிசுத்தமாக்கப்படுகின்றன. மனசாட்சி விழித்தெழுகிறது. "கடவுளுக்காகச் சேவையைச் செய்ய உதவும் குணாதிசயங்கள் நமக்குக் கொடுக்கப்படுகின்றது."*[14]

*விளைவுகளின் முடிவைக் காணும் வரை கடவுள் ஏன் நம்மை மிகவும் அமைதியாகவும், மறைமுகமாகவும் மாற்றுகிறார் ? குளிர்கால இறுதிக்குப் பின் இயற்கையானது புத்துயிர் பெற ஒரு அமைதியான நேரம் அவசியம். கருவாலி போன்ற வலுவான மரங்கள் மிக மெதுவாக வளர்கின்றன. பரிசுத்த ஆவியானவர் மீது நமக்கு உண்மையில் வாஞ்சை இருக்கிறதா என்று பார்க்கக் கடவுள் நம்மை இவ்வாறு சோதிக்கிறாரா? அவர் நம் விசுவாசத்தை சோதிக்கிறாரா? நான் அப்படிதான் நினைக்கிறேன். அவர் நமக்குக் கனி நிறைந்த வாழ்க்கையை கொடுக்க விரும்புகிறார். (யோவான் 15: 1-8; கலா 5: 22 ஐக் காண்க)*

# குணத்தை மாற்றும் வல்லமை வெளியிலிருந்து வருகிறது - அது நமக்குள் இல்லை

*"மனிதன் தன் விருப்பத்தின்படி தன்னை மாற்றிக் கொள்ள முடியாது என்பதை முதலில் நாம் உணர வேண்டும். இந்த மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய எந்த வல்லமையும் அவனிடம் இல்லை. புளித்த மாவு - முற்றிலும் இல்லாத ஏதோ ஒன்று - விரும்பிய மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு முன் உணவில் அது சேர்க்கப்பட வேண்டும்."*[15] *குண மாற்றத்திற்காக வெளியிலிருந்து வரும் ஒரு வல்லமை நமக்குத் தேவை என்பதை இயேசு இங்கே நமக்குக் காட்டுகிறார். அத்தகைய முக்கியமான விஷயத்தைப் பற்றிய இயேசுவின் வார்த்தைகளை நாம் கருத்தில் கொள்ள வேண்டாமா? "என்னை அல்லாமல்*

---

[12] Ellen G. White, Christ's Object Lessons, p. 96.
[13] Ibid. pp. 96, 97.
[14] Ibid. pp. 98, 99.
[15] Ibid., p. 96.

*உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது." (யோவான் 15: 5) "நமக்குக் கிறிஸ்துவின் நீதியைப் பெற வேண்டுமென்றால், தினமும் ஆவியின் வல்லமையால் நிரப்பப்பட்டு, தெய்வீக சுபாவத்தின் பங்காளியாக இருப்பது அவசியம். விருப்பத்தை அதிகரிப்பது, இதயத்தைப் பரிசுத்தமாக்குவது, முழு மனிதனையும் தகுதியாக்கி உயர்த்துவது பரிசுத்த ஆவியின் வேலை ஆகும்."* [16]

*இன்று வழக்கமாகக் கற்பிக்கப்படும் விஷயங்கள் இயேசுவின் முக்கியமான இந்த அறிவுரைக்கு முற்றிலும் எதிர்மாறாக உள்ளன. நம் வளர்ச்சிக்கான சக்தி நமக்குள் இருக்கிறது என்று மனிதநேயம், ஆன்மீகவாதம், மனித தத்துவம் மற்றும் வேறுசில போதனா முறைகளும் கற்பிக்கிறது. இந்த முறைகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது "சுய-உணர்தல்" முறையைப் பயன்படுத்துவதன் மூலம் மட்டுமே விழிப்பு உணர்வு அடைய முடியும் எனப் பெரும்பாலும் பேசப்படுகிறது. அப்போஸ்தலன் பவுல் தன்னைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்: "அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்." (ரோமர் 7:18) இது அனைவருக்கும் பொருந்தும். இந்த நிலையில், சுய உணர்தலின் விளைவு என்னவாக இருக்கும்? இதைப் பற்றி 2 தீமோத்தேயு 3: 1 ல் நாம் படிக்கலாம்: "மேலும், கடைசிநாட்களில் கொடியகாலங்கள் வருமென்று அறிவாயாக." ஆம் சுயநலம் ஆட்சி செய்யும், ஆனால் நம்மைப் பொறுத்தவரை இந்த சுய- உணர்தல் நம்மை மாற்ற முடியாது, மாறாகக் கிறிஸ்துவுக்குள் – உணர்ந்து செயல்பட வேண்டும். ஒருவர் என்னிடம் கூறினார்: "நான் கிறிஸ்துவில் என் சுய உணர்தலைக் கண்டேன்." முக்கிய விஷயம் என்னவென்றால், பரிசுத்த ஆவியானவர் நம்மில் வாழ்கிறார், நம்மை நேர்மறையாக மாற்றுகிறார் என்பதே.*

*நம் குணத்தை மாற்றும் வல்லமை நமக்குள் இல்லை, இது வெளியிலிருந்து வர வேண்டும். அதனால் தான், தொடர்ந்து பரிசுத்த ஆவியானவரைக் கேட்க வேண்டும் என்ற உண்மையை மிகத் தெளிவாக நம்முடைய கவனத்தை ஈர்க்கும் வகையில், லூக்கா 11 : 9-13-ல் இயேசு கூறுகிறார். இயேசு இந்தப் பூமியில் வாழ்ந்தபோது, அவர் தினமும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார். அப்படியானால் நமக்கு அது அதிக இன்றியமையாத தேவையாகும். பரிசுத்த ஆவியின் மூலம் தேவன் தினமும் நமக்கு என்ன கொடுக்க விரும்புகிறார் என்று நான் யோசித்து பார்த்தேன், திருமணமான தம்பதிகள் தினமும் காலையில் ஒருவரையொருவர் எப்படி அரவணைத்துக் கொள்கிறார்களோ அதுபோலவே தினமும் காலையில் நம்மை அணைத்துக் கொள்ள நம்முடைய அற்புதமான தேவன் விரும்புகிறார் என்று நினைக்கிறேன்.*

*இந்த உவமையைப் பற்றி எலன் உவைட் இவ்வாறு கூறுகிறார்: "உலகம் தரக்கூடிய கல்வியும் அனைத்து நாகரிக கலாச்சாரமும் பாவத்தில் சீரழிந்த ஒரு குழந்தையைப் பரலோகக் குழந்தையாக மாற்றுவதில் தோல்வியடையும். புதுப்பிக்கும் வல்லமை தேவனிடமிருந்து வர வேண்டும், அந்த மாற்றத்தைப் பரிசுத்த ஆவியினால் மட்டுமே கொண்டு வர முடியும். உயர்ந்தவர் அல்லது தாழ்ந்தவர், பணக்காரர் அல்லது ஏழைகள் அனைவருமே இந்த வல்லமையான செயல்பாட்டிற்கு அடிபணிய வேண்டும்."* [17]

*இரண்டாம் உலகப் போரின்போது இங்கிலாந்தின் பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சில் கூறியிருக்க வேண்டும்: எல்லாவற்றையும் நாங்கள் எங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளோம், ஆனாலும் ஒரு விதிவிலக்குடன்: மக்கள், மக்களைத் மனித வன்முறையால் மட்டுமே மாற்ற முடியாது. எனவே இது நிகழ, இந்த உலகில் இல்லாத ஒரு வெளி வல்லமை தேவை. இது தேவ வல்லமையுடன் தொடர்புடையது, இது பரிசுத்த ஆவியின் மூலமாக மட்டுமே நம்மில் திறம்பட செயல்பட முடியும். உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது என்று தேவனின் வார்த்தை கூறுகிறது (2 கொரி 4: 16). தினசரி காலையில் விசுவாசமாகப் பரிசுத்த ஆவியானவரை*

---

[16] Ellen G. White, Selected Message, bk. I (Hagerstown, MD: Review and Herald Publishing Association, 2007), p. 374.

[17] Ellen G. White, Christ's Object Lessons, pp. 96, 97.

*முதலில் கேட்பது சிறந்த விஷயம் – அது மிகவும் முக்கியமானதும் கூட.*

# *பரிசுத்த ஆவியானவர் தம்முடைய வேலையை நம் இருதயங்களில் ஆரம்பித்துப் பின்னர் வெளிப்புறமாகச் செயல்படுகிறார்*

*புளித்தமா பற்றிய உவமையில் இயேசு கற்பித்த அடுத்த முக்கியமான பாடம் என்னவென்றால், பரிசுத்த ஆவியின் மூலம் ஏற்படும் புளித்தமாவின் தாக்கத்தினால், நாம் உள்ளே இருந்து வெளியே வித்தியாசமாகக் காரியங்களைச் செய்யத் தொடங்குவோம். "புளித்த மாவின் நுரை, உணவோடு கலக்கும்போது, உள்ளே இருந்து வெளியே வேலை செய்யத் தொடங்குவதுபோல, கடவுளின் கிருபை இருதயத்தைப் புதுப்பித்து நம் வாழ்க்கையை மாற்றியமைக்கிறது. வெறும் வெளிப்புற மாற்றம் நம்மைக் கடவுளுடன் இணக்கமாகக் கொண்டு வரப் போதுமானது அல்ல. தவறான பழக்கங்களைச் சரிசெய்வதன் மூலம் தங்களை மாற்ற முயற்சிப்பவர்கள் பலர் உள்ளனர், இவர்கள் இந்த முறையில் கிறிஸ்தவர்களாக மாற முடியும் என்று நம்புகிறார்கள், ஆனால் அவர்கள் தவறான இடத்தில் தொடங்குகிறார்கள். புதுப்பிக்கும் பணி முதலில் இதயத்திலிருந்து தொடங்க வேண்டும்."*

*"விசுவாச அறிக்கையும் மற்றும் ஆத்மாவில் சத்தியத்தை பாதுகாத்து வைத்திருப்பதும், இரண்டு வெவ்வேறு விஷயங்கள். மேலும், சத்தியத்தைப் பற்றிய வெறும் அறிவு மட்டும் போதாது. இதை நாம் பெற்றிருக்கலாம், ஆனால் நம் சிந்தனைகளின் பொதுவான போக்கு மாற்றப்படாமல் போகலாம். இதயம் மாற்றப்பட்டு பரிசுத்தப்படுத்தப்பட வேண்டும்.*

*கடவுளின் கட்டளைகளை ஒரு கடமை உணர்வுடன் கடைப்பிடிக்க முயற்சிக்கும் மனிதன் - கீழ்ப்படிதலின் மகிழ்ச்சியில் ஒருபோதும் நுழையமாட்டான், ஏனெனில் அவன் கீழ்ப்படியவில்லை. கடவுளின் கொள்கைகள் மனித விருப்பத்திற்கு எதிராக இருப்பதால் அவை சுமையாகக் கருதப்படுகின்றன, அப்படியான வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்க்கை அல்ல என்பதை நாம் அறிவோம். உண்மையான கீழ்ப்படிதல் என்பது உள்ளே இருந்து வெளிப்புறம் செயல்படும் ஒரு கோட்பாடாகும்."* [18]

*நாம் எழுப்புதல் பெற்று முன்னேறும்போது, நமது செயல்கள், வார்த்தைகள் மற்றும் எண்ணங்கள் பரிசுத்த ஆவியின் உதவியால் வெளிவருகின்றன. நாம் எப்படி வாழ்கிறோம் என்பதில் உள்ள வித்தியாசத்தை மற்றவர்கள் பார்ப்பார்கள். ரால்ப் லூதர் கருத்துரைக்கிறார்: "விசுவாசத்தை வெறும் மனம் சார்ந்த மத அணுகுமுறை என்று ஒப்புக்கொள்வதை இயேசு கடுமையாக எதிர்த்தார், இது நடைமுறை வாழ்க்கையின் அடி வேரில் எந்த மாற்றமும் இல்லாமல் விட்டுவிடும்."* [19]

*யுகங்களின் வாஞ்சையில் நாம் வாசிக்கிறோம்: "பரிசுத்த ஆவியானவர் நமது ஆவிக்குரிய வாழ்க்கையின் சுவாசமாக இருக்கிறார். ஆவியானவர் பங்களிப்பு என்பது கிறிஸ்துவின் வாழ்க்கையை பகிர்ந்து கொடுப்பதாகும். இது பெறுநரை கிறிஸ்துவின் பண்புகளால் நிரப்பி ஊக்குவிக்கிறது. இப்படி கடவுளைப் பற்றிக் கற்பிக்கப்படுபவர்களும், ஆவியின் உள்ளான செயல்பாட்டைக் கொண்டவர்களும், கிறிஸ்துவை தங்கள் வாழ்வில் வெளிப்படுத்துகிறவர்களும் சபையின் சார்பாக ஊழியம் செய்யப் பிரதிநிதிகளாக நிற்க வேண்டும்."* [20]

*பரிசுத்த ஆவியானவரைப் பற்றி இயேசு சுருக்கமாகப் பின்வருமாறு கற்பித்தார்:*

---

[18] Ibid., p. 97.

[19] Ralph Luther, Neutesamentliches Worterbuch, S. 71, quoted in O.S. von Bibra, Der Name Jesus (Wuppertal, 1964), S.98.

[20] Ellen G. White, The Desire of Ages, p. 805.

- *வாழ்க்கையை மாற்றும் வல்லமையான பரிசுத்த ஆவி நம்மில் காணப்பட முடியாதபடி செயல்படுகிறது.*
- *வெறும் முடிவுகளை மட்டும் நாம் அடிக்கடி கவனிக்கிறோம்.*
- *நம் வாழ்க்கையை மாற்றும் வல்லமை நமக்கு வெளியிலிருந்து வர வேண்டும்.*
- *இந்த மாற்றும் வல்லமை நம் இதயத்தில் தொடங்கி பின்னர் வெளிப்புறமாகச் செயல்படுகிறது.*

*கிறிஸ்துவின் பொருட்பாடங்கள் என்ற புத்தகத்தில் புளித்தமா பற்றிய உவமையைக் கொண்ட அத்தியாயத்தைப் படிக்குமாறு நான் வலுவாகப் பரிந்துரைக்கிறேன்.*

# *இயேசுவின் கடைசி வார்த்தைகள்:*

# *பரிசுத்த ஆவியானவருக்குச் செவிகொடுங்கள்*

*இயேசு பரலோக மகிமையிலிருந்து கடைசிக்காலச் சபைக்குப் பேசிய கடைசி வார்த்தைகள் என்ன தெரியுமா? "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது என்றார்." (வெளி 3:22) பரிசுத்த ஆவியானவருக்குச் செவிகொடுக்கும்படி இயேசு நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறார், அதைத்தான் நாம் செய்ய விரும்புகிறோம்.*

# *என்னை மாற்ற முடியுமா?*

*இயேசு என்னை உண்மையிலேயே மாற்று முடியுமா? ஒரு அழகான ஓவியத்தை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். அதன் மதிப்பு பயன்படுத்தப்படும் பொருளின் தரத்திலிருந்து வரவில்லை. சில நேரங்களில் குறைந்த தரமுள்ள கொஞ்சம் வண்ணப்பூச்சு கூட, ஒரு நிபுணரின் கையில் ஒரு மதிப்புமிக்க ஓவியமாக மாற முடியும். அதேபோல், நம்மிடம் உள்ள பாவ இயல்பு, "குறைந்த தர" பொருள். இந்த "பொருள்" ஒரு சிறந்த கலைஞரால் உருவாக்கப்படுகிறது என்பது முக்கியமானது. இயேசு இதைச் செய்ய விரும்புகிறார், அவரால் அதைச் செய்ய முடியும். அவர் உங்களையும் என்னையும் அவருக்கு மேன்மை தரும் ஒரு பொருளாக உருவாக்க முடியும். தினமும் அவருடைய கைகளில் உங்களை முழுமையாக ஒப்புக் கொடுங்கள், பரிசுத்த ஆவியானவரை விசுவாசத்துடன் கேளுங்கள். உங்களுக்காகவும், உங்கள் மூலமாகவும் அவர் என்ன செய்ய முடியும் என்பதை நீங்கள் அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள்.*

*ஒரு முதியவர் லண்டன் பாலத்தில் அமர்ந்து தனது வயலினை வாசித்துக்கொண்டிருந்தார். அவரது தொப்பியில் ஒரு சில நாணயங்கள் மட்டுமே விழுந்து இருந்தன. ஒரு மனிதன் அவனைக் கடந்து சென்றான், ஆனால் திரும்பி வந்து அந்த மனிதனிடம்: "உன் வயலினை ஒரு கணம் எனக்குக் கொடு" என்று சொன்னான். அவன் மிகவும் அழகாக வாசிக்கத் தொடங்கினான், அதற்குப் பிறகு அதிகமான மக்கள் நின்று கேட்க ஆரம்பித்தனர். அதனால் போக்குவரத்து இடையூறு ஏற்பட்டது. அந்த நபரின் பெயர் நிக்கோலோ பகானினி, பிரபல வயலின் கலைஞர். உங்கள் வாழ்க்கையில் முதல் வயலின் கலைஞரைப் போல வாசிக்க விரும்புவதும் அல்லது உங்கள் வாழ்க்கையை தலைசிறந்த ஆசானின் கைகளில் வைக்க ஏங்குவதும் உங்கள் விருப்பம்.*

# *ஆசிரியர் மற்றும் அவரது மாணவர்களில் ஒருவரின் சொந்த சாட்சி*

*"ஒரு வருடத்திற்கு முன்பு எனது வாழ்விடத்தில் உள்ள ஆலயத்தில் தனிப்பட்ட எழுப்புதலுக்கான*

*படிகள் என்ற சிறுநூல் கையளிக்கப்பட்டபோது, நான் அதை மிக விரைவாகப் படித்தேன். அதைப் படிக்கும்போதே எனக்கு முன்பை விடக் கடவுளோடு அதிக அனுபவங்கள் ஏற்பட்டன. இது என்னைக் கவர்ந்தது மற்றும் ஊக்குவித்தது. சிறுநூலின் பின் இணைப்பில் நான் பின்வரும் பரிந்துரையைக் கண்டுபிடித்தேன்: 'ஒரு முக்கியமான தலைப்பை நாம் முழுமையாகப் புரிந்து கொள்ளும் வரை ஆறு முதல் பத்து முறை படிக்க அல்லது கேட்க வேண்டியது அவசியம் என்று கல்வியியல் ஆராய்ச்சி காட்டுகிறது. குறைந்தபட்சம் ஒரு முறையாவது முயற்சிக்கவும். இதன் விளைவு நீங்கள் அதை நம்பும்படி வைக்கும்.' இந்த ஊக்கமளிக்கும் வார்த்தைகள் என் கவனத்தை ஈர்த்தன.*

*நான் அதை அனுபவிக்க விரும்பினேன், ஏற்கனவே மூன்றாவது வாசிப்பில் அது என்னை வென்றது, என் மீட்பர் மீது எனக்கு மிகுந்த அன்பு ஏற்பட்டது, இது என் வாழ்நாள் முழுவதும் இருக்க நான் ஏங்கினேன். இரண்டு மாதங்களுக்குள் நான் அதை ஆறு முறை வாசித்தேன், இதன் விளைவாக அது மதிப்புக்குரியதானது. இயேசு நம்மிடம் நெருங்கி வரும்போது அவருடைய தூய்மையான, கனிவான, அன்பான கண்களை நாம் பார்க்கும் போதும் அது எப்படி இருக்கும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. அப்போதிருந்து, என் இரட்சகரால் கிடைக்கும் இந்த மகிழ்ச்சி இல்லாமல் இருக்க நான் விரும்பவில்லை.*

*நான் காலையில் எழுந்தவுடன், கடவுளுடனான உறவை மீண்டும் அனுபவிப்பதற்காக என் காலை வழிபாட்டு நேரத்தை எதிர்பார்த்து ஏங்க ஆரம்பித்தேன். உரையாடல்களின்போதும், கற்பிக்கும் போதும் மற்றும் தொடர்பு கொள்ளும்போதும் நான் ஒரு எடுத்துக்காட்டாக இருக்க, என் எண்ணங்கள் வழியாகப் பரிசுத்த ஆவியானவர் எனக்கு உதவி செய்யும்படி, அமைதியாகப் பகல் நேரங்களில் ஜெபித்தேன்.*

*ஒரு குழந்தை என் கவனத்தை ஈர்க்க, அதற்கேற்ப செயல்பட்டபோது, அதைச் சமாளிக்க கடவுள் எனக்கு உறுதியையும் ஞானத்தையும் கொடுத்தார். அப்போதிருந்து எனது வேலை நாட்கள் கடவுளின் பிரசன்னத்தால் நிரம்பியுள்ளன. என் அன்றாட வாழ்க்கையில் அவர் உண்மையில் எனக்கு உதவுகிறார். அன்று முதல் நான் பரிசுத்த ஆவி ஊற்றப்படுவதற்காகக் காலையிலும் இடைப்பட்ட நேரங்களிலும் ஜெபம் செய்கிறேன். அது நான் பரலோகத்திற்கு அருகில் இருப்பது போல் உள்ளது, அங்கே எப்படி இருக்கும் என்பதை அதற்கு முன்பே இங்கே சுவைத்து பார்க்கிறேன்.*

*இந்தக் கையேட்டைப் படிக்கும்போது, பள்ளியில் உள்ள எனது மாணவர்களும் இந்த அனுபவத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எனக்கு வந்தது. ஆஸ்திரியாவின் வோராரல்பெர்க்கில் உள்ள எங்கள் எலியா அட்வெண்டிஸ்ட் பள்ளியில் பத்து முதல் பதினைந்து வயது குழந்தைகளுக்கு நான் கற்பிக்கிறேன். ஆகவே, எனக்கு வாய்ப்புகளைத் தரும்படி கடவுளிடம் வேண்டினேன். மிக விரைவில், இளைஞர்களின் இதயத்தில் பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு செயல்பட முடியும் என்பதற்கான மிக அற்புதமான அனுபவங்களில் ஒன்றும் எனக்குக் கிடைத்தது."*

# *பரிசுத்த ஆவியானவரும் மற்றும் 13 வயது ரஃபியனும்*

*பரிசுத்த ஆவியானவர் பற்றிய ஒரு சிறு புத்தகத்தைப் படிப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன் இந்த அனுபவம் தொடங்கியது. ஒரு புதிய மாணவர் எங்கள் பள்ளிக்கு வந்தார், சில நாட்களில் எங்கள் அமைதியான சோலை ஒரு கடினமான மற்றும் குழப்பமான அறையாக மாற்றப்பட்டது. அப்போது அந்தப் பையனுக்குப் பதின்மூன்று வயது. அவன் மற்ற எல்லா சிறுவர்களைவிட மிக உயரமானவன், அதற்கேற்ப வலிமையானவனும் கூட. பள்ளி ஆண்டில் கற்றுக்கொண்ட பாடங்கள், அவை கொடுத்த அற்புதமான நல்ல முடிவுகள் ஒரு கணத்தில் மறைந்துவிடும் போலிருந்தது.*

*அவன் தன்னைப் பற்றித் தனது சொந்த வார்த்தைகளில் பகிர்ந்து கொள்வதைக் கேளுங்கள் :*

*'நான் எனது தற்போதைய பள்ளிக்கு வந்தபோது, எனக்கு என்ன காத்திருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. பள்ளிக்குச் சென்ற இரண்டாவது நாளில் நான் எனக்குள் கோபமடைந்தேன், அதனால் ஒடி என் வகுப்பு தோழர்களில் ஒருவருடன் சண்டையிட ஆரம்பித்தேன். அவன் என்னைவிடப் பலவீனமாக இருந்தபோதிலும், அவனை அடித்துத் துன்புறுத்தினேன், அவனை மீண்டும் பார்க்க விருப்பமில்லை. ஆனாலும் முன்பு எப்போதும் எப்படி நடந்து கொண்டேனோ அதுபோல இப்போதும் எனது தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்டேன். அதன் பிறகு நான் தலைமை ஆசிரியருடன் உரையாடினேன். அடுத்து வந்த மாதங்களில் என்னில் ஒரு நடைமுறை மாற்றம் தொடங்கியது. நான் ஒரு போதகரின் மகனாக இருந்தாலும் இதற்கு முன்பு இது போன்று நடந்ததில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது! நான் இயேசுவோடு அதிக நேரம் செலவிட ஆரம்பித்தேன்.*

*இந்த இளம் மாணவர்க்கு கூடுதல் சிறப்பு கவனம் தேவை என்று நான் நினைத்தேன். அவன் இந்தத் தன் தோல்விகுறித்து அறிந்திருந்தான், வருந்தினான், மீண்டும் முயன்றான், ஆனால் அவன் நீண்டகால வெற்றியைத் தனது சொந்த வலிமையில் பெற முடியவில்லை. முதலில், ஒரு நாள் கூட அவன் சண்டை இல்லாமல் அந்த நாளை முடிக்கமாட்டான், ஆனால் படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டது. ஆறு மாதங்களுக்குப் பிறகு, தான் கடவுளிடம் நெருங்கி வர ஜெபங்கள்தான் காரணம் என்று அவன் சொன்னான். இதற்கிடையில், அவன் காலையில் வல்லமைக்காக ஜெபிக்கத் தொடங்கினான். அவனது ஆத்திரம் மற்றும் சண்டைகள் குறையத் தொடங்கியது.*

*அவன் எங்கள் பள்ளிக்கு வந்து பதினொரு மாதங்கள் கடந்துவிட்டன, இன்னும் பல முன்னேற்றங்களைக் காண முடிந்தது. இருப்பினும், அவனது கோபம், சூளுரை, திடீர் எழுச்சி மற்றும் அவனது குத்துச்சண்டைகள் நிரந்தரமாகக் கட்டுப்பாட்டில் இல்லை. அவன் தனது சொந்த பலத்திலும் ஞானத்திலும் வெற்றி பெற முயற்சித்தது இயல்பானது. இது சில நேரங்களில் வேலை செய்தது, மற்ற நேரங்களில் இல்லை. எங்கள் ஜெபங்கள் சில சாதனைகளைச் செய்திருந்தன, ஆனால் அவனுடைய மனநிலை இன்னும் சரியாக இல்லை, மேலும் ஆவியின் புதுப்பிக்கும் வல்லமை குறைபட்டது.*

*ஒருவன் தன் தவறுகளைக் கண்டு, தன் கோபத்தைக் கட்டுப்படுத்த முயன்று, அடுத்த நொடியில் அவன் மீண்டும் தோல்வியுற்றால், அதனால் என்ன நன்மை ? நான் இறுதியில் குழப்பமடைந்து இருப்பதை உணர்ந்த நேரத்தில், மேலே குறிப்பிட்டுள்ள கையேட்டைப் பெற்றேன். இது சரியான நேரத்தில் கிடைத்தது. நாங்கள் எதில் குறைபட்டு நிற்கிறோம் என்பதை அப்போது நான் உணர்ந்தேன். அது பரிசுத்த ஆவியின் வல்லமையே. எங்களுக்கு உதவும்படி கூட நாங்கள் அவரிடம் கேட்கவில்லை!*

*தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள் என்ற புத்தகத்தில் இருந்த செய்தி என்னைத் தொட்டதால், சிறுவன் பரிசுத்த ஆவியானவருக்காக எப்போதாவது ஜெபித்தானா என்று கேட்க எனக்குத் தைரியம் எழுந்தது. அவன் இல்லை, ஒருபோதும் இல்லை என்று சொன்னான். பின்னர் நான் இந்தப் புத்தகத்தின் மீதான ஆர்வத்தை அவனில் எழுப்ப முயற்சித்தேன். எனினும் நான் அதை அவனிடம் கொடுக்கவில்லை. அவன் உண்மையிலேயே அதை விரும்பிக் கேட்க வேண்டும் என்று நான் நினைத்தேன். மிக விரைவில் அவன் அந்தக் கையேட்டைக் கேட்டான்.*

*மீண்டும், தனது சொந்த வார்த்தைகளில் கூறுகிறான்: “நவம்பர் 2012 ல், எனது ஆசிரியர் தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள் என்ற சிறு புத்தகத்தை எனக்குக் கொடுத்தார். நான் அதை ஆவலுடன் படிக்கத் தொடங்கினேன். அந்த நேரத்தில் நான் பரிசுத்த ஆவியானவரின் கிரியைப் பற்றி நன்கு அறிந்திருக்கவில்லை.”*

*முதல் நாளுக்குள் அவன் ஏற்கனவே கிட்டத்தட்ட இரண்டு அத்தியாயங்களை முடித்துவிட்டான், பின்னர், நீங்கள் புத்தகத்தை எத்தனை முறை படித்தீர்கள் என்று என்னிடம் கேட்டான். அதற்குப் பிறகு அவன் உடனடியாக மீண்டும் அத்தியாயங்களைப் படிக்கத் தொடங்கினான், மேலும் கையேடு ஆறு முதல் பத்து முறை படிக்க வேண்டும் என்று பரிந்துரைத்தபடி*

*அவன் சரியாகச் செய்ய விரும்பினான்.*

*அப்போதிருந்து நிலைமை மாறிவிட்டது. டிசம்பர் 2012 முதல் கோபம், சண்டைகள் அல்லது சூளுரைகள் என்று எதுவும் இல்லை- என்னால் அதை நம்பமுடியவில்லை. அவனால் தினமும் அடிபடும் சிறுவர்கள் அவனது நண்பர்களாகிவிட்டனர், மேலும் அவர்கள் இணக்கமாகப் பழகுகிறார்கள். அவன் முற்றிலுமாக மாறிவிட்டான்- அவன் கண்ணியமாகவும், உதவிச்செய்கிறவனாகவும் மாறியுள்ளது மட்டுமல்ல, அவனது ஆக்ரோஷமான தன்மை மாறி அமைதியான தன்மை நிறைந்துள்ளது. கடவுள் கிரியை செய்தார் என்பதை அவனுடைய வகுப்புத் தோழர்கள் உறுதிப்படுத்துகிறார்கள். கடவுள் தினமும் அவனுக்குள் வேலை செய்ய அனுமதிக்கிறான், நீங்கள் அந்தக் கனிகளைக் காணலாம். கடவுளின் மகிமைக்காகச் சிறுவன் 2013 ஜூன் மாதம் ஞானஸ்நானம் பெற முடிவு செய்ததை குறிப்பிட விரும்புகிறேன். அது பரிசுத்த ஆவியானவரால் இல்லையென்றால்…*

*“நான் ஒரு குழந்தையை எப்போதுமே சமாளிக்கவும் அவர்களுக்கு, தகுதியான காரணத்தைக் காட்டவும் முடியும் என்றும் நினைத்தேன். பொறுமை, கவனம் மற்றும் நிறைய உரையாடல்கள்மூலம் அதைச் செய்ய முடியும் என்றும் நினைத்தேன், ஆனால் அது இந்தப் பையனுடன் நீண்ட காலம் செயற்படவில்லை. கடவுள் குறுக்கிட்டு, ஆவியானவர் சாத்தியமற்றதை சாத்தியமாக்குகிறார் என்று எனக்குக் கற்று கொடுத்தார். ஒரு நாள் இந்தச் சிறுவன் பரலோகத்தில் இருப்பான், கடவுள் மட்டுமே அதைச் செய்ய முடியும் என்பதை நான் அறிவேன். நான் என் ஞானத்தினால், அவனை வழிநடத்த முடியாது என்று புரிந்து கொண்டபோது, கடவுள் அவனில் தீவிரமாக வேலை செய்யத் தொடங்கினார். கடவுளுக்குச் சாத்தியமற்ற காரியங்கள் இல்லை என்பதைக் காணும்போது இது என்னை ஊக்குவிக்கிறது” - C.P.*

# ஜெபம்

*பரலோகத்தில் உள்ள பிதாவே, விலைமதிப்பற்ற பரிசான பரிசுத்த ஆவிக்காக நன்றி. பரிசுத்த ஆவியானவரை புறக்கணித்ததற்காக என்னை மன்னிக்கவும். இனிமேல் அதிக மரியாதை கொடுக்க எனக்கு உதவுங்கள். எனது அன்றாட வாழ்க்கையை ஒரு புதிய நிலைக்கு உயர்த்தும்படி கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து என்னில் கிரியை செய்யுங்கள், அதனால் நான் தினமும் பரிசுத்த ஆவியானவரைக் கேட்க முடியும். இயேசு தினமும் பரிசுத்த ஆவியானவரை கேட்டார். அவருடைய முன்மாதிரியைப் பின்பற்ற எனக்கு உதவுங்கள்*

***அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக.***

*கொலோசெயர் 4:6*

# தனியொருவரின் எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலூக்கான வழிகாட்டி

1. *பரிசுத்த ஆவியானவர் ஊழியத்தைப் பற்றி என்ன போதனைகளை நாம் புளித்தமா உவமையிலிருந்து கற்றுக்கொள்ளலாம்? நம் குண மாற்றம் எவ்வாறு நிகழ்கிறது?*

2. *நம்முடைய தனிப்பட்ட குண மாற்றம்பற்றிய இயேசுவின் கூற்றில் "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது" என்பதன் அர்த்தம் என்ன ?*

3. *நம்முடைய குண மாற்றத்தில் பரிசுத்த ஆவியானவர் செயல்படும் விதம்குறித்து நாம் என்ன புரிந்துகொள்கிறோம் ?*

4. *இயேசு ஒரு கலைஞர், நாம் அவருடைய ஓவியம். இந்தச் சிந்தனைப்பொருள் மூலம் நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?*

# நம் ஜெப நேரம்

*உங்கள் ஜெப பங்காளரைத் தொடர்புக் கொண்டு தலைப்பைப் பற்றி விவாதிக்கவும்.*
*உங்கள் ஜெப பங்காளருடன் ஜெபியுங்கள்:*

1. *கடவுளின் எல்லையில்லா கிருபையால் நாம் நிலையான வளர்ச்சியை அனுபவிக்க ஜெபியுங்கள்.*
2. *நாம் எவ்வளவு வலிமையானவர்களாக இருந்தாலும் சரி, நம்மை மாற்றும் வல்லமை நம்மிடமிருந்து அல்ல எப்போதும் நமக்கு வெளியிலிருந்து வருகிறது என்பதை நாம் புரிந்துகொள்ள ஜெபியுங்கள்.*
3. *நம்மை மாற்றுவதற்கான பரிசுத்த ஆவியின் வல்லமை நம் வாழ்வில் முறையே பெருகி வெளிப்பட ஜெபியுங்கள்.*
4. *மற்றவர்களை மாற்றும் கடவுளின் வல்லமையை நாம் உணர்வுபூர்வமாகப் புரிந்துகொள்ள ஜெபியுங்கள்.*
5. *கடவுள் நம்மை ஒரு உதவி கரமாகப் பயன்படுத்த விரும்பும்போது, நாம் முன்வந்து மக்களுக்கு உதவ ஜெபியுங்கள்.*

## *அத்தியாயம் 2 - பகுதி 1*

# இயேசுவிடம் ஒப்புக்கொடுத்தல்

### *-நான் என் சுய விருப்பத்தை இழக்கிறேனா அல்லது பலமடைகிறேனா?*

### *-ஆண்டவரிடம் ஒப்புக்கொடுப்பது நம் சுய விருப்பத்தைக் கைவிடல் என்பதாகுமா?*

### *-நான் என்னையே இயேசுவுக்கு ஒப்புக்கொடுப்பதை எது தடுக்க முடியும்?*

*நாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறோம் என்ற இந்த ஊக்கமளிக்கும் செய்தியை நாம் போதுமான அளவு வற்புறுத்திக் கூற முடியாது. (யோவான் 3:16; அப்போஸ்தலர் 16:31, இன்னும் பல) விவிலிய விசுவாசத்தின் முதன்மையான சிறப்புக் குணம் நம்பிக்கை. இயேசுவை நம்புபவர்கள் எவரும் தங்களையே அவரிடம் ஒப்படைப்பார், இப்படி நாம் அவரிடம் நம்மை ஒப்படைப்பதால் நாம் இயேசு கிறிஸ்துவின் மூலம் இரட்சிக்கப்படுகிறோம் என்பதே இதன் பொருள். நம் முழுமையான ஒப்புக்கொடுத்தல் உண்மை விசுவாசத்தை புலப்படுத்தும் ஒரு தெளிவான அறிகுறியாகும். இரட்சிப்பு, மறுபிறப்பு, பாவம் மற்றும் சோதனையின் மீதான வெற்றி மற்றும் பரிசுத்த ஆவியின் முழுமை ஆகிய இவை அனைத்தையும் அடைவதற்கான திறவுகோல் முழுமையான ஒப்புக்கொடுத்தலே ஆகும்.*[21]

*"கிறிஸ்துவை அவருடைய வார்த்தையின்படி ஏற்றுக்கொண்டு, அவருடைய பாதுகாப்பிற்கு தங்கள் ஆத்துமாவையும், அவருடைய வழிநடத்துதலுக்குத் தங்கள் வாழ்க்கையையும் ஒப்படைப்பவர்கள், அமைதியையும் சமாதானத்தையும் காண்பார்கள். இயேசு தம்முடைய பிரசன்னத்தால் அவர்களை மகிழ்விக்கும்போது உலகில் எதுவுமே அவர்களுக்கு வருத்தத்தை அளிக்க முடியாது. பூரண இணக்கத்தில் பூரண அமைதி உள்ளது."* [22] *இயேசுவால் தம்முடைய சீஷர்களுக்கு கொடுக்கப்பட்ட மிகப் பெரிய பரிசு பரிசுத்த ஆவியானவர். இதைவிட அதிகமான ஒன்றைக் கடவுள் கொடுத்திருக்க முடியாது. பரிசுத்த ஆவியானவர் என்னும் பரிசு, மற்ற அனைத்து பரிசுகளையும் தன்னுடன் சேர்த்து கொண்டு வருகிறார். மற்ற எல்லா வாக்குத்தத்தங்களையும் போலவே, இதுவும் நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்து நம்பி கோருவதாகக் கூறும் பலர் இருக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவையும் மற்றும் பரிசுத்த ஆவியையும் பற்றிப் பேசுகிறார்கள், ஆனாலும் அவர்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. தெய்வீக வல்லமையால் வழிநடத்தப்படுவதற்கும் ஆட்கொள்ளப்படுவதற்கும் அவர்கள் தங்களின் ஆத்துமாவை ஒப்படைப்பதில்லை."* [23]

*இந்தப் பரிசைப் பெறுவது நிபந்தனைகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது. நாம் பெரும்பாலும் கிறிஸ்துவைப் பற்றியும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றியும் பேசுகிறோம், ஆனாலும் இன்னும் நாம் எந்த ஆசீர்வாதத்தையும் பெறவில்லை. ஏன்? நாம் அவரிடம் முழுமையாக ஒப்புக்கொடுக்கவில்லை, இதனால் தலைவராக அவர் நமக்கு முன் செல்வதில்லை அல்லது வழிநடத்தப்படுவதில்லை. பலர் தங்களை கடவுளிடம் ஒப்புக்கொடுக்கவில்லை - பெரும்பாலும் அறியாமையால்- மாறாகத் தங்கள்*

[21] Garrie F. Williams, How to be filled with the Holy Spirit and know it, German version (Lüneburg, 2007), p. 78.
[22] Ellen G. White, The Desire of Ages, p. 331.
[23] Ibid., p. 78.

*வாழ்க்கையை தங்கள் கைகளில் எடுத்துள்ளனர். பரிசுத்த ஆவியின் குறைபாட்டிற்கு இது காரணமாக இருக்கலாம். சான்றாக, "சிறிய விஷயங்களில் உண்மையுள்ளவர் அதிக பொறுப்புகள் பெற தகுதியானவர் என்பதை அனைவரும் உறுதியாக நம்பலாம். "... [இது செய்யப்படாதபோது] கிருபை, வல்லமை, உறுதியான குணம் ஆகியவற்றைப் பெறுவதில் தோல்வியுறுவர், ஏனெனில் இது முழுமையான ஒப்புக்கொடுத்தல் மூலமே பெறப்படுகிறது."* [24]

# ஒப்புக்கொடுத்தல் நோக்கிய எனது பயணம்

*நான் ஒரு தொழிலதிபராக இருந்தேன், வயது முப்பத்தாறு, அப்பொழுது போதகராக இருந்த ஒரு நண்பர் திடீரெனக் காலமானார். இது என் மனதில் கேள்வியைக் கொண்டுவந்தது: கடவுள் என்னை ஒரு போதகர் ஆவதற்கு அழைத்தால் என்ன நடக்கும்? இதை நான் சிறிதும் விரும்பவில்லை, இந்நிலையில் ஒரு வாரம் முழுவதும் கசப்பான எண்ணங்களோடுப் போராடினேன். நான் காலையிலும், மதியத்திலும், மாலையிலும் கடவுளுடன் ஒப்பந்த பேச்சுவார்த்தை நடத்தினேன். ஒவ்வொரு முறையும் நான் ஏன் ஒரு போதகராக விரும்பவில்லை, அதற்குப் பதிலாக நான் என்ன பணி செய்ய முடியும் என்று அவருக்கு விளக்கினேன். ஒரு வாரத்திற்குப் பிறகு, கடவுள் என் ஆட்சேபனைகளைக் கேட்கவில்லை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டியிருந்தது. நான் என் படுக்கையின் அருகில் மண்டியிட்டுக் கொண்டிருந்தபோது, மேலும் வாதங்கள் எதுவும் இல்லாத நிலையில், ஒரு அமைதியான எண்ணம் என் நினைவுக்கு வந்தது: "கடவுள் உன்னை நேசிக்கிறார்!" நான் இப்படி நினைத்தேன்: ஆம், இதை நான் நம்புகிறேன்.*

*சில நிமிடங்களுக்குப் பிறகு, தேவ அன்பின் மீதான நம்பிக்கை என்னை முழுமையாகக் கடவுளிடம் ஒப்படைக்க வழிவகுத்தது, அதன் பிறகு நான் மிகுந்த அமைதியுடன் இருந்தேன். உண்மையில், ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகுதான் தேவன் என்னைப் போதகப் பணிக்கு அழைத்தார், அதற்காக இன்றும் நான் அவருக்கு மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். என் சிந்தனையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு வித்தியாசமான வழியை அவருடைய முடிவில்லாத அன்பும், ஞானமும் எனக்குக் காட்டியது. பின்னோக்கிப் பார்க்கிறேன், இந்த ஒப்புக் கொடுத்தல் என் வாழ்க்கையில் பெரும் ஆசீர்வாதங்களை கொண்டு வந்தது என்பதை நான் தெளிவாகக் காண்கிறேன். கடவுள் என் வாழ்க்கையின் பாதையில் என்னைச் சிறந்த முறையில் வழிநடத்தியுள்ளார்.*

# ஏன் ஒப்புக்கொடுக்க வேண்டும்?

*கடவுளிடத்திற்கு வழி என்ற புத்தகத்தில் ஒப்புக்கொடுத்தல் என்ற சொல் பொருத்தமாக விளக்கப்பட்டுள்ளது : "கடவுள் நம்மைக் குணப்படுத்தவும், நம்மை விடுவிக்கவும் விரும்புகிறார். ஆனால் இதற்கு ஒரு முழு மாற்றம் தேவைப்படுகிறது, நம்முடைய முழு குணாதிசயமும் புதுப்பிக்கப்பட வேண்டும், அவரிடம் முழுமையாக நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும் ... மிக உயர்ந்த ஆசீர்வாதத்தை நம் முன் வைத்தபின் அவர் தனது கிருபையின் மூலம் அங்கே நம்மைக் கொண்டுவர விரும்புகிறார். அவர் தம்முடைய சித்தத்தை நம்மில் நிறைவேற்றுவதற்காக, நம்மை அவருக்குக் ஒப்புக்கொடுக்கும்படி அழைக்கிறார். பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நாம் விடுவிக்கப்படுவதா அல்லது தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பகிர்ந்துகொள்வதா என்பதைத் தேர்ந்தெடுப்பது நம்முடைய பங்காய் இருக்கிறது."25*

*கடவுளிடம் நம்மை ஒப்புக்கொடுப்பது மகத்தான ஆசீர்வாதத்தை கொண்டு வருகிறது. அவரிடம் ஒப்புக்கொடுக்கும்படி நம்மை அழைக்கிறார், ஏனெனில் அவர் நம்மைக் குணமாக்கி*

---

[24] Ellen G. White, Prophets,
and Kings (Nampa, ID: Pacific Press Publishing Association, 2002), pp. 218, 219.
[25] Ellen G. White, Steps to Christ (Nampa, ID : Pacific Press Publishing Association, 1999), pp. 43, 44.

*நம்மை விடுவிக்க விரும்புவதால். கடவுளுக்குத் தன்னை அர்ப்பணிக்க மறுக்கும் ஒவ்வொரு ஆத்மாவும் வேறொரு வல்லமையின் கட்டுப்பாட்டில் உள்ளது, அவன் தன்னுடைய சொந்தமல்ல. அவன் சுதந்திரத்தைப் பற்றிப் பேசலாம், ஆனால் அவன் கொடூரமான அடிமைத்தனத்தில் இருக்கிறான், அவன் சத்தியத்தின் அழகைக் காண அனுமதிக்கப்படவில்லை, ஏனென்றால் அவனுடைய மனம் சாத்தானின் கட்டுப்பாட்டில் உள்ளது. அவன் தனது சொந்த தீர்ப்பைப் பின்பற்றுவதாகத் தன்னைப் புகழ்ந்தாலும், உண்மையில் அந்தகாரத்தின் அதிபதியின் விருப்பத்திற்கே அவன் கீழ்ப்படிகிறான். ஆத்மாவின் பாவ-அடிமைத்தன விலங்குகளை உடைக்கவே கிறிஸ்து வந்தார். "ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்." "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே." (ரோமர் 8: 2) 26*

*"ஆவியின் பிரமாணம் ஜீவனும் வல்லமையும் அருளும் பரிசுத்த ஆவியாகும்.... ஆவி ஜீவனையும் விடுதலையும் கொண்டு வருகிறது, மாறாகப் பாவ பிரமாணமோ மரணத்தையும் ஆக்கினைத்தீர்ப்பையும் மட்டுமே கொண்டு வருகிறது." 27 இயேசு நம்முடைய வாழ்க்கையை வழிநடத்த அனுமதிக்கப்படும்போது, நம்முடைய சுயம் என்னும் கொடூரத்திலிருந்து (பொறாமை, மனக்கசப்பு, சண்டை, பேராசை, அடிமையாதல், கோபம், பெருமை, கர்வம், அதைரியம், தாழ்வு மனப்பான்மை மற்றும் பலவற்றிலிருந்து) நம்மை விடுவிக்க முடியும். "ஆத்துமாவை கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுக்கும்போது ஏற்படும் மாற்றத்தில்தான், மிகப்பெரிய விடுதலை உணர்வு இருக்கிறது." 28 நினைவில் கொள்ளுங்கள்: ஒவ்வொரு மனிதனும் அவனோ அல்லது அவளோ, அவர்களே பிரச்சனைக்குக் காரணம், உங்கள் பெரிய பிரச்சனை நீங்கள் தான். உண்மையான விடுதலைக்கு நேராக நம்மை இட்டுச்செல்லும் திறன் கடவுளிடம் மட்டுமே உள்ளது.*

*ஆனால் ஒரு குயவன் தன் கைகளில் களிமண் இருந்தால் மட்டுமே வேலை செய்ய முடியும். அதனால்தான் நாம் கடவுளிடம் சரணடைகிறோம். இப்படித்தான் பாவத்தின் வல்லமையிலிருந்து நம்மை விடுவித்து, தெய்வீக வழிகாட்டுதலையும் பாதுகாப்பையும் கொடுக்கக் கடவுள் விரும்புகிறார். "கடவுள் நம்மைக் குணமாக்கவும், விடுவிக்கவும் விரும்புகிறார். ஆனால் இதற்கு ஒரு முழு மாற்றம் தேவைப்படுவதால், நம்முடைய முழு இயல்பையும் புதுப்பித்து, முழுவதுமாக அவருக்கு நாம் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும்." 29 "நம்முடைய எல்லா சக்திகளையும் கடவுளிடம் ஒப்படைத்தால், அது நம் வாழ்வின் அனைத்து பிரச்சனைகளையும் எளிதாக்கும். இது இதயத்தில் எழும் ஆயிரக்கணக்கான போராட்டங்களையும் உணர்ச்சிகளையும் குறைத்து மற்றும் வலுகுன்றச் செய்கிறது." 30*

# ஒப்புக்கொடுத்தல் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது?

*"நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்." (ரோமர் 6 :13) இந்த வசனத்தின்படி, ஒப்புக்கொடுத்தல் என்பது கடவுளிடம் சரணடைதல், மற்றும் அவரது வசம் உங்களை விட்டுக் கொடுப்பது என்பதாகும். இந்த உரையைப் பற்றி ஒரு கிறிஸ்தவ எழுத்தாளரான ஹன்னா டபிள்யூ, ஸ்மித் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "ஒப்புக்கொடுத்தல் என்றால், உரிமையாளரிடம் அல்லது வேறொரு நிர்வாகத்திடம் எதையாவது ஒப்படைப்பது. தேவனிடம்*

[26] Ellen G. White, The Desire of Ages, p. 466.
[27] Seventh - Day Adventist Bible Commentary, Vol. 6, p. 560 to Rom. 8,2
[28] Ellen G. White, The Desire of Ages, p. 466.
[29]Ellen G. White, Steps to Christ, p. 43.
[30] Ellen G. White, My Life Today (Hagerstown, MD: Review and Herald Publishing Association, 1999), p. 6.

*நம்மை ஒப்புக்கொடுத்தல் என்பது அதே போன்ற விஷயமே. அதன்பிறகு, தேவனுக்கு நம்மைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் உடைமையுரிமையும் உண்டு. இதன் பொருள் நம்மைத் துறந்து, நம்முடைய சுயத்தை சரணடையச் செய்வதாகும்." 31*

*"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன் ; இதுவே நீங்கள் செய்யத் தக்க புத்தியுள்ள ஆராதனை." (ரோமர் 12 :1) நம் வாழ்க்கையை கடவுளிடம் ஒப்புக்கொடுப்பதற்கு இந்த வேதவாக்கியம் என்ன காரணம் கூறுகிறது ? "தேவனுடைய இரக்கங்கள்." கடவுளிடம் ஒப்புக்கொடுத்தலே இரக்கமும், அன்பும் உள்ள கடவுளுக்கு நாம் அளிக்கும் பதிலாக இருக்கும்.*

*ஒப்புக்கொடுத்தல் என்பது கடவுளின் கைகளில் நம்மை முழுமையாக வைப்பது, அவருடைய வசம் இருப்பது, நம் வாழ்க்கையே அவருக்கு ஒரு பலியாகக் கொடுப்பது, ஆனால் எரிக்கப்பட்ட ஒரு பழைய ஏற்பாட்டு பலியாக அல்ல, மாறாக ஒரு உயிருள்ள பலியாக, ஒப்புக்கொடுத்த தருணத்திலிருந்து அவருக்காக வாழுவது. நான் என் வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும்போது, ஒப்புக்கொடுப்பதற்கு முன்பு ஒப்புக்கொடுத்தல் ஒரு தியாகம் என்று எனக்குத் தோன்றியது என்று என்னால் கூற முடியும். பின்னர், அது ஒரு தியாகம் அல்ல மாறாக அது எண்ணற்ற ஆசீர்வாதம் என்பதை உணர்ந்தேன்.*

*ஜோகன்னஸ் மேகர் கருத்துரைக்கிறார்: "ஒப்புக்கொடுத்தல், கைவிடுதல், அர்ப்பணிப்பு, முற்றிலும் கடவுளின் வசம் இருப்பது- இவை கருத்தாழமுடையவை, ஆனால் ஆக்கம் கொடுக்கும் சொற்கள். ஒப்புக்கொடுத்தல் என்பது உணர்ச்சிகளுடனோ அல்லது மனநிலையுடனோ தொடர்புக் கொண்டவை இல்லை. இதன் பொருள் நாம் விரும்பும் ஒருவருக்கு நம்மையே கொடுப்பதாகும்." 32 ஒப்புக்கொடுத்தலின் விளைவு என்ன என்று 2 கொரிந்தியர் 5 :15 கூறுகிறது : "பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்." ஒப்புக்கொடுத்தல் என்றால் இயேசுவுக்காக வாழ்வது.*

*இயேசுவுக்காக வாழ்வது என்பது அவருக்கு முழுநேர சேவை செய்வதைக் குறிக்காது, மாறாக: "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்." (கொலோ 3:17) சார்லஸ் டி. ஸ்டட் கூறினார், "இயேசு கிறிஸ்து ஒரு கடவுள், மற்றும் எனக்காக மரித்தார் என்றால், அதைவிட எந்தப் பெரிய ஒரு பலியையும் அவரிடம் கொண்டு வர எனக்கு முடியாது." 33 இந்த மனிதர் அவர் சொன்னதைப் பின்பற்றினார். அவர் இங்கிலாந்தில் ஒரு சிறந்த விளையாட்டு வீரராக இருந்தார். அவர் ஒரு கிறிஸ்தவராக ஆனபோது, அவர் தனது வேலையை விட்டுவிட்டு, தனது மில்லியன்களை ஒரு மிஷனரி சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கினார், மேலும் சீனாவுக்கு ஒரு மிஷனரியாகவும், பின்னர் இந்தியாவுக்கும், இறுதியாக ஆப்பிரிக்காவுக்கும் சென்றார். அவர் நிறுவிய மிஷனரி சங்கம் உலகளவில் 1,800 மிஷனரிகளுடன் இன்னும் செயல்படுகிறது. அவர் தனது வாழ்க்கையை இயேசுவிடம் ஒப்படைத்தார்.*

## இயேசு தன்னையே நமக்காகக் கொடுத்தார்

*இந்த முக்கியமான உண்மையைப் புறக்கணிக்கக் கூடாது. ஒப்புக்கொடுத்தல் என்பது ஒருதலைப்பட்ச விவகாரம் அல்ல. அளிக்கப்படக்கூடிய அனைத்தையும் தேவன் நமக்கு அளித்தார், மேலும் நாம் கொடுக்கக்கூடிய அனைத்தையும் கொடுக்கும்படி அவர் நம்மை அழைக்கிறார். இவை*

[31] Hanna W. Smith, Christsein täglich (To Be a Christian Daily) (Asslar, 1994), p. 38.
[32] Johannes Mager, Unser größtes Bedürfnis (Our Greatest Need) (Lüneburg, 2011), S. 47, 48.
[33] Norman B. Grubb, Charles Studd, KeinOpferzugroß (No Sacrifice Is Too Great), "Introduction".

*இரண்டிற்கும் வித்தியாசம் உள்ளது : கடவுள் மனிதனுக்கு 'எல்லாவற்றையும்' கொடுக்கிறார்; மனிதன் கடவுளுக்கு 'எல்லாவற்றையும்' கொடுக்கிறான். ஆனால் கடவுளைவிட அதிகமாக மனிதனால் கொடுக்க முடியாது.*

1. *ஒப்புக்கொடுத்தல் மூலம் இயேசுவுடனும் பிதாவுடனும் அற்புதமான ஒரு உறவைப் பெற வழிநடத்தப்படுகிறோம். (நீங்கள் அவரில் நிலைத்திருப்பீர்கள்-யோவான் 14:23; இயேசு தம்மை உங்களுக்கு வெளிப்படுத்துவார்-யோவான் 14:21.)*

2. *ஒப்புக்கொடுத்தல் மூலம் நாம் சத்தியத்தைப் பற்றிய அறிவு பெறுகிறோம். (யோவான் 7:17- கடவுளுடைய சித்தத்தைச் செய்வதே ஒரு மனிதனின் விருப்பம் என்றால், அவனுக்குத் தெரியும் ... ESV)*

3. *ஒப்புக்கொடுத்தல் மூலம் நாம் ஜெபத்தில் பெரும் வல்லமையைப் பெறுகிறோம். (1 யோவான் 3: 22- நாம் எதைக் கேட்டாலும் அதைப் பெறுவோம்.)*

4. *ஒப்புக்கொடுத்தல் பூரணமான மகிழ்ச்சியை பெறுவதற்கான வழி. (யோவான் 15: 11- உங்கள் சந்தோஷம் நிறைவாய் இருக்கும்.)*

5. *ஒப்புக்கொடுத்தல் ஒரு வளமான வாழ்க்கைக்கு திறவுகோல் ஆகும். (யோவான் 10:10; எபே 3:19.)*

6. *ஒப்புக்கொடுத்தல் என்பது அஸ்திவாரம், அதன் மூலம் கடவுள் என் வாழ்க்கையில் செயல்பட முடியும். (யோவான் 7: 38- ஜீவத்தண்ணீருள்ள நதிகள்; யோவான் 14: 12- பெரிய கிரியைகள்; யோவான் 15: 4,5- மிகுந்த கனிகள்.)*

*கடவுளிடம் ஒப்புக்கொடுத்தவர்களை சாத்தான் தொடுவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. (1யோவான் 5 :18- கடவுளின் பிரத்யேகமான அனுமதியின்படி தவிர துன்மார்க்கன் அவனைத் தொடமாட்டான், யோபுவின் விஷயத்தில் போல. தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது மேலும் நாம் தாங்கக்கூடியதை விட ஒருபோதும் அதிகமான சுமைகளைக் கடவுள் நமக்குத் தருவதில்லை.)*

# *ஒப்புக்கொடுத்தலில் ஐந்து நிலைகள்*

*ஒரு ஆசிரியர் ஒப்புக்கொடுத்தலில் உள்ள ஐந்து நிலைகளைப் பற்றிப் பேசுகிறார்:*

1. *ஒப்புக்கொடுத்தலில் மிகக் குறைந்த நிலை பணம் கொடுப்பதாகும்.*
2. *அடுத்தது நேரத்தை ஒப்புக்கொடுத்தல்.*
3. *அடுத்தபடியாக ஒப்புக்கொடுத்தலில் வருவது நம் ஆற்றல், திறன்கள், மற்றும் சேவை.*
4. *அதன்பிறகு, முன்னர் மேலே குறிப்பிட்ட அனைத்தையும் உள்ளடக்கியது, அதாவது நமது அச்சங்கள் மற்றும் நம்பிக்கைகள் அனைத்தையும் ஒப்புக்கொடுத்தல்.*
5. *நமது முழு வாழ்க்கையும் ஒப்புக்கொடுத்தல், அதாவது நம்முடைய சுயத்தையும் வாழ்க்கையையும் இயேசுவிடம் முழுமையாக ஒப்படைப்பது.*[34] *இந்தக் கடைசி வாக்கியம் உண்மையான ஒப்புக்கொடுத்தல் பற்றித் தெளிவாக விளக்குகிறது.*

*நம்முடைய பரலோகத் தகப்பனின் அன்பை நம்பி நம்மை ஒப்புக்கொடுப்பது அற்புதமானது. இயேசுவின் உவமையில் கெட்டகுமாரன் செய்ததைப் போன்ற விஷயங்களை நடக்க விடாதீர்கள். அவன் தனது வாழ்க்கையில் அடி மட்டத்துக்குச் சென்றபோதுதான் ஒப்புக்கொடுத்தான், வீட்டிற்கு திரும்பிச் செல்ல முடிவு செய்தான், தனது பெற்றோரின் வீட்டிற்கு அருகில் அவன் வந்தபோது,*

[34] Dean M. Kelley, “How Adventism Can Stop Growing,” Ministry, February 1983, p. 4.

*அவனது தந்தை அவனைச் சந்திக்க வந்து அவனைத் தழுவிக் கொண்டார். அவர் அவனை மகனாக முழுமையாக ஏற்றுக்கொண்டார், அப்போதுதான் மகன் தன் தந்தையின் அன்பை தெளிவாகப் புரிந்து கொண்டான். இது அவனது கட்டுப்பாடுகள் கொண்ட ஒப்புக்கொடுத்தலை அன்பின் ஒப்புக்கொடுத்தலாக மாற்றியது.*

# ஒரு சோகமான சம்பவம்

*பிரான்சில் நிகழ்ந்த பின்வரும் சம்பவம் இதை விளக்க உதவுகிறது: ஒரு பணக்கார பிரெஞ்சுக்காரரின் மனைவி மற்றொரு நபருடன் இந்த ரகசியத்தைப் பகிர்ந்து கொண்டாள். அவள் கையில் ஒரு சிறிய விஷ பாட்டில், திருமண வாழ்க்கையில் எதிர்கொண்ட சிரமங்களால் தன் வாழ்க்கையை முடிக்கத் திட்டமிட்டிருந்தாள். அவள் சொன்னது, "நேற்று தான் நான் என் கணவரிடம் முறையீடு செய்தேன், ஆனால் அவர் திகைத்தவராய் கலக்கத்துடன் பதிலளித்தார்: 'உனக்கு இன்னும் என்ன வேண்டும்? உன்னிடம் எனது காசோலை புத்தகம் உள்ளது (அதாவது அவருடைய பணத்தை அவள்வசம் வைத்திருந்தாள் என்று அர்த்தம்)' நீ என் வீட்டின் உரிமையாளர், என் மேஜையில் சாப்பிடுகிறாய், செழிப்பு, அந்தஸ்து மற்றும் அனைத்தும் உனக்குச் சொந்தமானது, ஆனாலும், இன்னும் நீ குறை கூறிக் கொண்டிருக்கிராய் ?' என்றார். அதற்கு நான் அவரிடம் தொடர்ந்து, எனக்கு உங்கள் இதயம் வேண்டும், நீங்கள் என்னை நேசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்றேன்." அவர் வியந்துரைத்தார்: 'அது சாத்தியமற்றது, என் இதயம் வேறொரு பெண்ணுக்குச் சொந்தமானது என்பது உனக்குத் தெரியும். எனக்குச் சொந்தமான அனைத்தும் உன்னுடையது, ஆனால் என் இருதயத்தையும், என் அன்பையும் என்னிடமிருந்து நீ கோருவது சாத்தியமில்லை என்றார்."[35] நீங்கள் விரும்பும் ஒரு நபரின் இத்தகைய பதில் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தராது. கணவருக்கு எவ்வளவு சொத்து உள்ளது என்று அந்தப் பெண் கவலைப்படவில்லை, ஆனால் அவளுக்கு முக்கியம் அவள் கணவன் மட்டுமே.*

*"நம்முடைய மகா பெரிய கர்த்தரானவருக்கு என்னிடமிருந்து எதுவும் தேவையில்லை. இயேசுவுக்கு நான் தேவை, என் நேரத்தின் ஒரு பகுதி அல்லது எனது சொத்துக்களின் ஒரு பகுதி அல்லது எனது தனித்திறமைகள், அல்லது செயல்திறன்கள் என்று எதுவும் அவருக்குத் தேவையில்லை." 36 அவருக்கு நான் தேவை, ஏனென்றால் அவர் என்னை நேசிக்கிறார், என்னை மகிழ்ச்சியடைய செய்ய விரும்புகிறார். நாம் இருக்கிற வண்ணமாக நம்மை ஒப்படைக்க வேண்டும், நம்மிடம் உள்ள அனைத்தையும் தேவனின் பராமரிப்பு, தலைமை, வழிநடத்துதல் மற்றும் சித்தத்திற்கு நாம் ஒப்புக்கொடுக்க வேண்டும். நாம் செய்யத் தக்க புத்தியுள்ள ஆராதனை இதுவேயென ரோமர் 12 : 1 கூறுகிறது.*

*முழுமையான ஒப்புக்கொடுத்தல் பற்றிக் கர்த்தருடைய வார்த்தை, "(இதுவே) நீங்கள் செய்யத் தக்க புத்தியுள்ள ஆராதனையெனக்" கூறும்போது, ஆண்டவரிடம் ஒப்புக்கொடுப்பதே நாம் செய்யக்கூடிய புத்தியுள்ள காரியம் என்று மட்டுமே பொருள் கொள்ளலாம். நாம் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது, ஒரு திறமையான மருத்துவரின் கைகளில் வைப்பதை விடப் புத்தியுள்ள முடிவு எதுவாக இருக்கும்? நாம் தொலைந்து போகும்போது, ஒரு அனுபவமிக்க வழிகாட்டியை நம்புவதை விடப் புத்தியுள்ள காரியம் எது?*

*முழுமையான ஒப்புக்கொடுத்தல் ஒரு இழப்பு அல்ல, மாறாக ஒரு பெரிய ஆஸ்தியாகும். கடவுளுடன் ஒப்பிடும்போது, நான் ஏழை, முட்டாள், மற்றும் உதவியற்றவன். அப்படியானால் என்னைக் கடவுளின் கைகளில் வைப்பது விவேகமானதல்லவா? என்னை உருவாக்கியவர், நான் வாழ்வதைக் காண விரும்புகிறவர், என்னை நேசிப்பவர் மற்றும் என் எல்லா தேவைகளையும் கவனித்துக்கொள்ளக்கூடிய அவரை நான் நம்ப வேண்டும். ஒப்புக்கொடுத்தலின் மூலம், தேவனின் எல்லையற்ற அன்பும், வல்லமையும் நம் பக்கம் உள்ளன. இது தேவனால் வழிநடத்தப்படும்*

---

[35] Oswald Smith, The Man God Uses (New York: The Christian Alliance Publishing Company, 1925), p. 26.
[36] Johannes Mager, Unser größtes Bedürfnis (Our Greatest Need) (Lüneburg, Werner E, Lange, 2011), S. 48.

*வாழ்க்கையில் நுழைவதற்கான ஒரு வழியாகும்.*

*நமது முழுமையான ஒப்புக்கொடுத்தல் இயேசு நமக்குக் கொடுக்க விரும்பும் ஒரு அதி பரிபூரண வாழ்வின் தொடக்கமாகும். (யோவான் 10:10). இந்த ஒப்புக்கொடுத்தல் தீமைக்கு எதிரான வெற்றியைக் கொண்டுவருகிறது, வெளிப்படுத்துதல் 12:11 இதை உறுதிப்படுத்துகிறது: "மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்." பாவத்தையும் சாத்தானையும் வெல்ல முழுமையான ஒப்புக்கொடுத்தல் அவசியம் என்பதையும், இது நாம் செய்யக்கூடிய மிகச்சிறந்த ஒன்று என்பதையும் காட்டுகிறது.*

*கிறிஸ்துவின் பொருட்பாடங்கள் புத்தகத்தில், நாம் பின்வருவனவற்றைப் படிக்கிறோம்: "என் குணத்தின் குறைபாடுகளை என்னால் சரிசெய்ய முடியாது என்று யாரும் சொல்ல வேண்டாம். நீங்கள் இந்த முடிவுக்கு வந்தால், நிச்சயமாகவே நித்திய ஜீவனைப் பெறுவதில் தோல்வியடைவீர்கள். சாத்தியமற்றதாக மாறுவது உங்கள் சொந்த விருப்பத்திலேயே உள்ளது, நீங்கள் முடியாது என நினைத்தால், பின்னர் நீங்கள் வெல்லவே முடியாது. உண்மையான சிரமம் எழுவதற்கு காரணம் சுத்திகரிக்கப்படாத இதயமும், தேவனின் கட்டுப்பாட்டிற்கு அடிபணிய விருப்பமின்மையிலிருந்தும் எழுகிறது."[37] "இழந்த மனிதகுலத்தின் இரட்சிப்புக்காகத் தன்னை வெறுமையாக்கிக் கொண்ட இயேசுவுக்கு, பரிசுத்த ஆவியானவர் அளவீடு இல்லாமல் வழங்கப்பட்டார். ஆகவே, கிறிஸ்து வாசம் செய்ய முழு இதயத்துடன் ஒப்புக்கொடுத்து அவரைப் பின்பற்றுபவருக்கும் அது வழங்கப்படும்."[38]*

*பரிசுத்த ஆவியானவரைப் பற்றி நாம் இங்கே பார்க்கலாம் :*

1. *பரிசுத்த ஆவியானவர் இயேசுவில் அளவீடு இல்லாமல் அவருக்குள் வாழ்ந்தார்.*
2. *பரிசுத்த ஆவியானவர் நம்மிடம் அதே அளவிற்கு வாழக்கூடிய வகையில் முழுமையாக ஒப்புக்கொடுத்து வாழ வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.*
3. *இந்தக் காரணத்திற்காக, "ஆவியினால் நிரப்பப்பட்டிருங்கள்" என்ற கட்டளையை இயேசு கொடுத்தார். மூல கிரேக்க உரையில், இதன் பொருள்: "மீண்டும், மீண்டும் உங்களைப் பரிசுத்த ஆவியானவரால் தொடர்ச்சியாக நிரப்பப்பட இடம் கொடுங்கள்." (எபே 5:18 ஐக் காண்க)*
4. *நமக்குச் சம்பூரணமான வாழ்வைக் கொடுப்பதே அவருடைய நோக்கம். (யோவான் 10:10; கொலோ 2: 10 ஐக் காண்க)*

---

[37] Ellen G. White, Christ's Object Lessons, p. 331.
[38] Ellen G. White, Thoughts from the Mount of Blessing (Nampa, ID: Pacific Press Publishing Association, 1999), p. 20.

# தனியொருவரின் எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. *பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதற்கான தெய்வீக நிபந்தனை என்ன?*

2. *முழுமையான ஒப்புக்கொடுத்தல் என்றால் என்ன, அது என்ன விளைவை ஏற்படுத்தும்?*

3. *முழு ஒப்புக்கொடுத்தல் ஒரு திறவுகோலா? இதன் மூலம் மட்டுமே நான் என்ன ஆசீர்வாதங்களைப் பெற முடியும்?*

4. *ஒப்புக்கொடுத்தலில் உள்ள ஐந்து நிலைகள் யாவை ? ஒப்புக்கொடுத்தலில் ஒரே ஒரு நிலை மட்டுமே உண்மையானது. அது என்ன? உங்கள் ஒப்புக்கொடுத்தலைப் பற்றிச் சிந்தியுங்கள்.*

# நம் ஜெப நேரம்

*உங்கள் ஜெப பங்காளரைத் தொடர்புக் கொண்டு தலைப்பைப் பற்றி விவாதிக்கவும்.*
*உங்கள் ஜெப பங்காளருடன் ஜெபியுங்கள்:*

1. *விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுவதன் அர்த்தம் என்ன என்பதை நன்கு புரிந்துகொள்ள ஜெபியுங்கள்.*
2. *நீங்கள் ஏற்கனவே அனுபவித்த ஒப்புக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களுக்காகக் கடவுளுக்கு நன்றி கூறி ஜெபியுங்கள்.*
3. *பரிசுத்த ஆவியானவர் உங்கள் வாழ்க்கைப் பாதையிலும், உங்கள் வாழ்க்கையின் எல்லா முடிவுகளிலும் உங்களை வழிநடத்த ஜெபியுங்கள்.*

# *அத்தியாயம் 2 - பகுதி 2*

## *-ஆண்டவரிடம் ஒப்புக்கொடுப்பது நம் சுய விருப்பத்தைக் கைவிடல் என்பதாகுமா?*

## *-நான் என்னையே இயேசுவுக்கு ஒப்புக்கொடுப்பதை எது தடுக்க முடியும்?*

*எட்வின் ஓர் என்பவர் பல்வேறு வித்தியாசமான தடைகளை இளமையில் எதிர்கொண்டார், அவருக்கு அதைப் பற்றிய தெளிவானப் புரிதல் இருந்தது, எனவே அவர் இவ்வாறு கூறுகிறார் : கடவுள் என்னுடன் பேசுகிறார் என்பதை என் வாழ்க்கையில் முதல்முறையாக உணர்ந்தேன், பரிசுத்த ஆவியானவர் என் இதயத்துடன் பேசினார் எனவே நான் முழுமையாக ஆண்டவரிடம் சரணடைய வேண்டியிருந்தது... எல்லாவற்றையும் ஒப்படைக்க நான் முற்றிலும் தயாராக இருப்பதாகக் கடவுளிடம் சொன்னேன். அப்போது இதயத்திலிருந்து ஒரு குரல் என்னிடம் கேட்டது : "உனக்குப் பிடித்த பாவங்களைப் பற்றிய காரியம் என்ன ?" நான் அவற்றை ஒப்புக்கொண்டேன், அவற்றை ஒருபோதும் மீண்டும் செய்யமாட்டேன் என்று உறுதியளித்தேன். எனக்குள் இருந்த குரல் தொடர்ந்தது: "உன் சுய சித்தம் பற்றிய காரியம் என்ன?" இது எனக்கு ஒரு பெரிய ஆச்சரியமாக இருந்தது. ஆகவே நான் ஆண்டவரிடம்: நான் எங்குச் செல்ல வேண்டுமோ அங்குச் செல்ல, அல்லது வீட்டிலேயே இருக்க வேண்டுமென்றால் நான் அதற்கும் தயாராக இருக்கிறேன் என்றுச் சொன்னேன். பின்னர், என் வாழ்க்கையில் நான் நேசித்த ஒரு விக்கிரகம்பற்றி ஆவியானவர் என்னிடம் பேசினார். இது நான் மிகவும் நேசித்த ஒரு பெண்ணைப் பற்றியது, இந்தப் பெண்ணை நான் விட்டுக்கொடுக்கத் தயாரா என்று ஆண்டவர் என்னிடம் கேட்டார். திடீரென்று, இந்தக் கட்டத்தில் எனது சுய சித்தம் ஒரு தடுப்பை அமைப்பதை நான் உணர்ந்தேன், அத்தகைய தியாகத்தை நான் செய்ய விரும்பவில்லை.*

*இந்தக் கட்டத்தில் பரிசுத்த ஆவியானவர் என்னுடன் பேசுவதை நிறுத்தினார். திடீரென்று, என் இதயம் ஆபத்தான வெற்றிடமாக மாறிவிட்டதை நான் விரைவில் உணர்ந்தேன், பின்னர் ஆவியால் நிரப்பப்பட வேண்டும் என்ற ஏக்கத்தை மீண்டும் உணர்ந்தேன். இந்த முறை நான் என் வாழ்க்கையின் இந்தப் பகுதியைக் கூட முழுமையாக ஆண்டவரிடம் ஒப்புக்கொடுக்க நான் தயாராக இருந்தேன். விவரிக்க முடியாத அன்பு, மகிழ்ச்சி மற்றும் வலிமை ஆகியவற்றால் என் இதயம் நிரம்பியது. என் ஆண்டவரையும் மீட்பரையும் நான் அறிந்திருப்பதை என் வாழ்க்கையில் முதல்முறையாக உணர்ந்தேன். கிறிஸ்தவம் ஒரு கோட்பாடு அல்லது தத்துவத்தைவிட விஞ்சினதாக இருந்தது.39 எட்வின் ஓரின் வாழ்க்கையின் மூலம் கடவுள் பெரிய காரியங்களை நிறைவேற்றி முடித்தார்.*

*என்னைப் பொறுத்தவரை, ஒப்புக்கொடுப்பதற்குத் தடையாக இருந்தது எனது வேலையைப் பற்றிய கவலையாகும். துல்லியமாகச் சொல்வதானால், நான் ஒப்புக்கொடுத்த பிறகு, கடவுள் என்னை ஒரு போதகராக அழைப்பார் என்று நான் கவலைப்பட்டேன். என் விஷயத்தில், தடையாக இருந்தது என் வேலை, எட்வின் ஓரின் விஷயத்தில் தடையாக இருந்தது ஒரு பெண். உங்களுக்கு அது எதுவாக இருந்தாலும், நீங்கள் இன்னும் முழுமையாக ஆண்டவரிடம் ஒப்புக்கொடுக்கவில்லை என்றால், உங்களையும் உங்கள் பிரச்சினையையும் அவருடைய கைகளில் வைக்கவும். கர்த்தர் உங்களை அபரிமிதமாக ஆசீர்வதிப்பார்.*

[39] J. Edwin Orr, Volle Hingabe (Full Surrender) (Kassel, 1965), S. 108ff., shortened.

# கர்த்தர் நம்முடைய தீர்மானங்களை மதிக்கிறார்

*கடவுள் வழிநடத்த விரும்பும் பாதையை நீங்கள் அனைவரும் அறிந்திருந்தால் அதே பாதையை நீங்களும் தேர்வு செய்வீர்கள். எல்லையற்ற அன்புள்ள கடவுளிடம் நாம் முழுமையாகச் சரணடையும்போது ஒவ்வொரு பயத்தையும், கூச்சமுள்ள குணத்தையும் நாம் கைவிடலாம். ஒரு மனிதனின் சுய விருப்பத்திற்கு எதிராகக் கடவுள் ஒருபோதும் செயல்பட மாட்டார், நம் அற்புதமான கடவுள் நம்முடைய தனித்தன்மையை மதிக்கிறார். கடவுள் நமக்கு அளித்த மிக அருமையான பரிசுகளில் ஒன்று சுதந்திரம், அதனால்தான் கடவுள் நம் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறார், நாம் அவரிடம் கேட்கும்போது மட்டுமே செயல்படுகிறார். சுதந்திரம் என்பது ஒரு தெய்வீக முன்நிபந்தனை, அதனால் சுதந்திரத்தின் கீழ் மட்டுமே அன்பு உருவாக முடியும்.*

# ஆண்டவரிடம் ஒப்புக்கொடுப்பது என்பது நம்முடைய சுய விருப்பத்தை நாம் கைவிட வேண்டும் என்பதாகுமா?

*நாம் ஆண்டவரிடம் ஒப்புக்கொடுக்கும்போது நம்முடைய விருப்பத்தை நாம் முழுமையாக இழக்கிறோமா? கடவுளின் கைப்பாவையாக அவரே நம் சரங்களை இழுக்கிறாரா? இல்லை! ஏன் இல்லை? ஏனென்றால், நம்மை முழுமையாகக் கடவுளுக்குக் கொடுப்பதன் மூலம், நம்முடைய மதியீனம், தவறாக நெறிப் படுத்துதல், அறியாமை, முதிர்ச்சியற்ற விருப்பம் இவை அனைத்தையும் கடவுளின் பரிபூரண, அற்புதமான, மற்றும் ஞானமான விருப்பப்படி மாற்றுவோம். இவ்வாறு நாம் கடவுளின் தெய்வீக வழி நடத்துதலின் கீழ் நம்மை வைக்கிறோம். நாம் நம் மன விருப்பத்தை விட்டுவிடக் கூடாது, மாறாக நாம் அதைத் தவறாகப் பயன்படுத்துவதை விட்டுவிட வேண்டும். கைவிடப்பட வேண்டிய விருப்பம் கடவுளின் விருப்பத்திலிருந்து வேறுபடுகிறது, இது நமது பிடிவாதத்தின் செயல்பாட்டால் ஏற்படுகிறது.*

*எலன் உவைட் எழுதுகிறார், “என் சொந்த வழியில் செல்ல முடியாதா, சுயமாகச் செயல்பட முடியாதா?” என்று ஒருவர் சொல்லும்போது- இல்லை, நீங்கள் உங்கள் வழியில் போனால், பரலோக ராஜ்யத்தில் நுழைய முடியாது. ‘என் வழி’ அங்கே இருக்காது. பரலோக ராஜ்யத்தில் எந்த மனித வழிகளும் இடம் பெறாது. நமது வழிகள் கடவுளுடைய வழிகளிலிருந்து அகற்றப்பட வேண்டும்."[40] (ஏசா 53:6யும் பார்க்கவும்.)*

*கடவுளாலும் அவருடைய வார்த்தையினாலும் வழிநடத்தப்படுவதை மறுக்கும் எவரும் “தெய்வீக வழி நடத்துதலை” சார்ந்து இருப்பதற்குப் பதிலாகத் தனது சொந்த மனதின் வரையறுக்கப்பட்ட எண்ணங்களின் அடிப்படையில் வாழ்கிறார். “நம்முடைய சித்தம் ஆண்டவருடைய சித்தத்திற்கு இசைவாக இருக்கும்போது, அது பாதுகாப்பாகவே இருக்கிறது ; உண்மையில் அதைக் கைவிடுவது தவறு”.[41]*

*“மனிதனின் விருப்பம் கடவுளின் விருப்பத்துடன் ஒத்துழைப்பதால், அது சர்வ வல்லமையுள்ளதாகிறது. அவருடைய கட்டளைப்படி எதைச் செய்ய வேண்டுமோ, அது அவருடைய பலத்தினால் நிறைவேற்றப்படலாம். அவருடைய எல்லா கட்டளைகளும் செயல்படுத்தப்படுகின்றன”.[42] "பரிசுத்த ஆவியானவர் நமக்கு வழிகாட்ட அனுமதிக்கும்போது, நாம்*

[40] Ellen G. White, The Review and Herald, February 23, 1892.
[41] H. W. Smith, Christsein täglich (Being a Christian Daily), S. 73.
[42] Ellen G. White, Christian Service (Hagerstown, MD: Review and Herald Publishing Association, 1999), p. 258.

*தடுமாறவோ அல்லது மட்டுப்படுத்தப்பட்டவர்களாகவோ இருக்க முடியாது. மாறாக, நாம் அதிகபட்ச சுதந்திரத்துடன் வாழ்வோம். 2கொரிந்தியர் 3: 17 ல் நாம் வாசிக்கிறோம்: "கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையும் உண்டு."* [43]

# நம் ஒப்புக்கொடுத்தலினால் வரும் பிற ஆசீர்வாதங்கள்

*தன்னை முழுமையாகக் கடவுளுக்குக் கொடுப்பவர் தெய்வீகக் கரத்தால் வழிநடத்தப்படுவார். அவர் தாழ்ந்தவராகவும் மேலும் வெளிப்படையாகத் தகுதியற்றவராகவும் இருக்கலாம்; ஆனாலும் அன்பான இதயத்துடனும், நம்பிக்கையுடனும் அவர் கடவுளுடைய சித்தத்தின்படி ஒவ்வொரு தூதுக்கும் கீழ்ப்படிந்தால், அவருடைய ஆற்றல் சுத்திகரிக்கப்பட்டு உயர்தகுதியுடையதாக்கப்பட்டும், ஊக்குவிக்கப்பட்டும், அவருடைய திறமைகள் அதிகரிக்கும். தெய்வீக ஞானத்தின் படிப்பினைகளை அவர் பொக்கிஷமாகக் கருதும்போது, ஒரு புனிதமான பணி அவரிடம் ஒப்படைக்கப்படும்; அவர் தனது வாழ்க்கையை கடவுளுக்கு மகிமையாகவும், உலகிற்கு ஒரு ஆசீர்வாதமாகவும் மாற இயக்கப்படுவார். "உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்" சங்கீதம் 119 : 130.*

*எபேசுவில் இருந்த விசுவாசிகளைப் போலவே, இன்றும் பரிசுத்த ஆவி இதயத்தில் கிரியை செய்கிறதை பலர் அறியாது இருக்கிறார்கள்; ஆயினும் வேறு எந்தச் சத்தியமும் தேவனுடைய வார்த்தையில் இதைவிட தெளிவாகப் போதிக்கப்படவில்லை."* [44]

# தெய்வீக வழி நடத்தலின் கீழ் வாழ்க்கை

*நீதிமொழிகள் 3:5,6 கூறுகிறது, "உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்."*

*பலர் தங்கள் மனதைத் வேறு வழியில் திசைத் திருப்ப வேண்டும் அல்லது தங்கள் பகுத்தறிவு சக்திகளை நிராகரிக்க வேண்டும் என்று பலர் நினைக்கிறார்கள். இதைவிட வேறு எதுவும் தவறாக இருக்க முடியாது. நம்முடைய பகுத்தறிவு சக்திகளை நாம் பயன்படுத்த வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார். நம்முடைய பகுத்தறிவை அவருடைய எல்லையற்ற பகுத்தறிவுடன் இணைக்க அவர் நம்மை அழைக்கிறார்.*

*முழு இருதயத்துடன் சிறிய காரியங்களிலும் பெரிய காரியங்களிலும் கீழ்ப்படிந்த தானியேலுக்கும் அவருடைய நண்பர்களுக்கும், கடவுள் பத்து மடங்கு அதிகமான புத்திசாலித்தனத்தைக் கொடுக்கவில்லையா ? நம் மனதின் முழு திறனையும் நாம் அதிகரிக்க வேண்டும் என்றும் அதே நேரத்தில் அவருடைய எல்லையற்ற ஞானத்துடன் இணைக்க வேண்டும் என்றும் விரும்புகிறார்.*

*இது வழிகாணுதவி (GPS) சாதனத்துடன் காரை ஓட்டுவது போன்றது. வாகனம் ஓட்ட எனது முழு பகுத்தறிவையும் நான் பயன்படுத்த வேண்டும், ஆனால் திருப்பங்கள், வேக வரம்புகள், போக்குவரத்து நெரிசல்கள், மாற்றுப்பாதைகள், இலக்கை அடைய சிறந்த பாதை அல்லது இலக்கை அடையும் நேரம்குறித்த விஷயங்களுக்கு ஜி.பி. எஸ்ஸை (GPS) நம்புவது நல்லது என நான் நன்கு அறிவுறுத்தப்பட்டேன். முனிச்சில் உள்ள அறிமுகமில்லாத பகுதியில் ஒரு இறுதி சடங்கில் கலந்து*

---

[43] David Wolkwitz, Der Weg zu einer Kraftvollen Erweckung, (NRW- Vereinigung), S. 25.
[44] Ellen G. White, The Acts of the Apostles (Nampa, ID : Pacific Press Publishing Association, 2002), pp. 283,284.

*கொள்ள சென்றபோது, ஒரு வழிகாணுதவி சாதனத்தை நான் கடனாக வாங்கியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஜி.பி. எஸ் அதன் வேலையைச் செய்தது, எந்தப் பிரச்சனையும் இல்லாமல் என் பயண இலக்கை அடைய முடிந்தது. தேவனைச் சார்ந்து இருங்கள், அவரது போதனைகள், அவருடைய நியமங்கள், அவரது ஆலோசனைகள் மற்றும் அவருடைய தெய்வீக வழி நடத்தலின்படிச் செல்லுங்கள்.*

## கருவிகளைப் பற்றிய சந்தேகம்

*இரண்டாம் உலகப் போரின்போது, ஒரு பிரிட்டிஷ் விமானம் சிசிலியிலிருந்து புறப்பட்டு வட ஆபிரிக்காவுக்குச் சென்றது. அனைத்து விமான நிலையங்களிலும் இருட்டடிப்பு (black-out) இருப்பதால், விமானிகள் தங்கள் கருவிகளை முழுமையாக நம்ப வேண்டியிருந்தது. பறக்கக் கணக்கிடப்பட்ட நேரத்தை அவர்கள் இதுவரை பறக்கவில்லை என்றாலும், தங்கள் இலக்கை அடைந்துவிட்டதைக் கருவிகள் காட்டுகின்றன. இது சாத்தியமற்றது என்று அவர்கள் நினைத்தார்கள், இதனால் விமானிகள் பறந்து கொண்டே இருந்தார்கள்.*

*வெகுதொலைவில், சஹாரா மேலே பறக்கும் வரை அவர்கள் தங்கள் தவறை உணரவில்லை. அவர்களுக்கு எரிபொருள் தீர்ந்து போனதால் பாலைவனத்தில் அவசர அவசரமாகத் தரையிறங்க வேண்டியிருந்தது. அவர்கள் விமானத்தில் போதுமான தண்ணீர் இல்லாததால், முழு குழுவினரும் தாகத்தால் இறந்து போனார்கள். பின்னர், விமானம் கண்டுபிடிக்கப்பட்டபோது அனைத்து கருவிகளும் சரியாகச் செயல்படுவதை மீட்பு குழு கண்டறிந்தது. விமானம் வேகமான வான்காற்று வழிப் பாதையில் இருந்ததால், வழக்கத்தைவிட விரைவாக அதன் இலக்கை அடைந்தது. இருப்பினும், விமானிகள் கருவிகளைக் காட்டிலும் தங்கள் சொந்த கணக்கீடுகளை நம்பினர், இது இறுதியில் அவர்களுக்கு ஆபத்தாக மாறினது. அவர்கள் தங்கள் சொந்த முடிவை எடுத்தார்கள், ஆனால் அது தவறான முடிவு.[45] நாம் கடவுளின் தலைமையை நம்பலாம், நம்முடைய சொந்த அனுமானங்களை விடக் கடவுளுடைய வார்த்தையைச் சார்ந்து இருப்பது நல்லது.*

## அஞ்சாநெஞ்சுடைய மக்கள்

*இயேசு கிறிஸ்துவிடம் ஒப்புவிப்பதன் மூலம், நாம் பலவீனமான மனோபலம் உள்ளவர்களாக மாறாமல், அஞ்சாநெஞ்சுடைய மக்களாக இருப்போம். ஞானத்துடனும் பணிவுடனும் தங்கள் நிலைப்பாட்டைப் பாதுகாக்கும் முதுகெலும்பு உள்ளவர்களாக மாறுவோம்.*

*தானியேல் மற்றும் அவரது நண்பர்களைப் பற்றிச் சிந்தியுங்கள்: இளைஞர்களாக இருந்தபோது, அவர்கள் தாங்கள் உறுதியானவர்கள் என்பதை நிரூபித்தார்கள்; மேலும் தானியேல் 1 ஆம் அத்தியாயத்தில் காணப்படும் உணவுபற்றிய சோதனையின்போது கடவுளுக்கு விசுவாசமாக இருப்பதாகவும் நிரூபித்தனர்; மேலும் 3 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளபடி அவர்கள் நடுத்தர வயதினராக இருந்தபோது, எரிகிற அக்கினிச்சூளையின் முன்னால் எடுத்த அவர்களின் தனித்துவமான முடிவைப் பற்றிச் சிந்தியுங்கள்; அல்லது 6 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளபடி வயதானவராக இருந்தபோது, சிங்கங்களின் கெபியின் முன்னால் தானியேலின் அணுகுமுறை எப்படி இருந்தது எனச் சிந்தியுங்கள்.*

[45] Aller Diener (Bern. Euro- África División, 1983) II/III, S. 142.

# கிறிஸ்துவின் மூலம்

# சுயமரியாதை அல்லது கண்ணியம்

*கிறிஸ்துவிடம் தங்களை ஒப்புவிப்பவர் எவரும் தங்கள் சுயமரியாதையைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை, ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவின் மூலம் மிக அதிகமான மதிப்பைப் பெற்றுள்ளனர்.*

*சுகப்படுத்தும் ஊழியம் என்ற புத்தகத்தில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்: "சிறந்த வேலையைச் செய்யத் தகுதியுள்ள பலர் சிறிதளவே சாதிக்கிறார்கள், ஏனெனில் அவர்கள் சிறிதளவே முயற்சி செய்கிறார்கள். ஆயிரக்கணக்கானோர் வாழ்வதற்கு எந்தப் பெரிய நோக்கமும் இல்லாமல், உயர்தரத்தை அடையும் சிந்தனையும் இல்லாமல் வாழ்க்கையை கடந்து செல்கிறார்கள். இதற்கு ஒரு காரணம் அவர்கள் தங்கள் மீது வைத்திருக்கும் குறைந்த மதிப்பீடு காரணமாகும். கிறிஸ்து நமக்காக எல்லையற்ற விலையைச் செலுத்தினார், செலுத்தப்பட்ட விலையின்படி அவர் நம்மை நாமே மதிக்க விரும்புகிறார்." [46] பரிசுத்த ஆவியைப் பெற்று வாழ ஆரம்பித்தபின் ஒரு சகோதரி என்னுடன் பகிர்ந்து கொண்டார்: "நான் கிறிஸ்துவில் என் சுயமரியாதையைக் கண்டேன்."*

# ஒப்புக்கொடுத்தலில் உள்ள சிக்கல்கள்

# குறித்த சில ஆலோசனைகள்

*ஒரு இளைஞன் ஒரு போதகருடன் தொடர்ச்சியான ஆலோசனையைப் பெற முயன்றார், ஏனென்றால் அவர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட விரும்பினார், அதற்காகப் போராடிக் கொண்டிருந்தார்.*

*இதோ போதகருக்கும் இளைஞனுக்கும் இடையே நடந்த உரையாடல் :*
*ஊழியர் : உங்கள் விருப்பத்தை நீங்கள் கடவுளிடம் முழுமையாக ஒப்படைத்திருக்கிறீர்களா ?*
*இளைஞன் : முழுமையாக இல்லை, நான் பயப்படுகிறேன்.*
*ஊழியர் : நல்லது, உங்கள் விருப்பத்தைக் கடவுளிடம் முழுமையாக ஒப்படைப்பதற்கு முன்பு பரிசுத்த ஆவியானவருக்காக ஜெபிப்பது பயனற்றது. அதை இப்போதே இறைவனிடம் ஒப்படைக்க உங்களுக்கு விரும்பவில்லையா?*
*இளைஞன் : என்னால் முடியாது.*
*ஊழியர் : கடவுள் அதை உங்களுக்காகச் செய்ய நீங்கள் தயாராக இருக்கிறீர்களா ?*
*இளைஞன் : ஆம்.*
*ஊழியர் : அப்படியானால் இப்போது இறைவனிடம் கேளுங்கள்.*
*இளைஞன்: (ஜெபம்) ஆ! ஆண்டவரே, என் சுய விருப்பத்தை என்னிடமிருந்து அகற்றி என்னை வெறுமையாக்கும். உமது சித்தத்திற்கு என்னை முழுமையாக ஒப்படைக்க உதவிச் செய்யும். என் சித்தத்தைக் கீழே வைக்க எனக்கு உதவும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.*
*ஊழியர் : அது நடந்ததா?*
*இளைஞன் : கண்டிப்பாக நடந்திருக்க வேண்டும், நான் கடவுளுடைய சித்தத்தின்படி ஒன்று கேட்டேன், என் ஜெபம் கேட்கப்பட்டது என்பதையும், நான் கேட்டதை பெற்றுள்ளேன் என்பதையும் நான் அறிவேன் (1 யோவான் 5 :14,15). ஆம், அது நடந்தது, என் சுய விருப்பம் போய்விட்டது.* [47]

*பின்னர் அவர் பரிசுத்த ஆவியானவருக்காக ஜெபித்து அவரைப் பெற்றார். நம்முடைய*

[46] Ellen G. White, The Ministry of Healing (Nampa, ID; Pacific Publishing Association, 2003), p. 498.

[47] R. A. Torrey, Der Heilige Geist- Sein Wesen und Wirken (Frankfurt: 1966), S. 151; (The Holy Spirit- His Nature and Ministry).

*அன்பான பிதா, நாம் அவரிடம் கேட்கும்போது நம்மை முன்நிபந்தனைகளிலிருந்து கூட விடுவிக்க மற்றும் உருவாக்கத் தயாராக இருப்பது அற்புதமானது.*

*இந்த மனிதனின் ஜெபத்திலிருந்து நாம் இரண்டு விஷயங்களைக் கற்றுக்கொள்ளலாம். முதலாவதாக, அந்த இளைஞன் ஏற்கனவே வாக்குத்தத்தங்களுடன் ஜெபிப்பதை அறிந்திருந்தார். தனது ஜெபத்தில், வாக்குத்தத்தங்களை சார்ந்து கடவுளுடைய சித்தத்தின்படி ஜெபிக்கப்பட்ட ஜெபங்கள் பேசப்படும் தருணத்திலேயே பதிலளிக்கப்படுகின்றன என அவர் நம்பினார். இரண்டாவதாக, அந்த இளைஞன் தன்னை ஒப்புக்கொடுக்க கடவுளின் உதவியை ஏற்க முடிவு செய்தான்.*

# நம் வாழ்க்கையின் தீர்மானங்களை திருப்பும் சுக்கான்

*சுதந்திரமான தீர்மானங்களை எடுக்கும் திறன்தான் நம் வாழ்க்கையை வழிநடத்தும் அதிகாரம் கொண்டது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இந்தத் திறனின் முழு அர்த்தத்தையும் சிறப்பாக விளக்குவதற்கு நான் உங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு கொடுக்க விரும்புகிறேன்.*

*ராணி எலிசபெத் என்ற பயணிகள் நீராவிக்கப்பலின் உடற்பகுதி சுக்கானை விட 1,300 மடங்கு எடை அதிகம். சுக்கான் தன்னை விட 1,300 மடங்கு அதிக எடை கொண்ட பெரிய கப்பலையும் வழிநடத்த முடியும் என்பதே இதன் பொருள். நம் வாழ்க்கையில் சுக்கான் என்பது தீர்மானங்களை எடுக்கும் திறனைச் சுட்டிக்காட்டுகிறது. கடவுளுடைய சித்தத்திற்கு நாம் நம்மை ஒப்புக்கொடுக்க முடிவு செய்தால், தேவையான அனைத்து உதவிகளையும் அவர் நம் வசம் வைக்கிறார்.*

# சவால்கள்

*கிறிஸ்துவுக்கு நம்மை ஒப்புக்கொடுக்க முடிவெடுக்கும் விஷயத்தில், நாம் நமக்காக வாழ்வதா அல்லது கடவுளுக்காக வாழ்வதா என்பது தான் நாம் எதிர்கொள்ளும் முடிவுத் தீர்மானம். ஒவ்வொரு நபரும், குறிப்பாக இளைஞர், ஆணவம் தங்கள் வாழ்க்கையை கட்டுப்படுத்த வேண்டுமா அல்லது கடவுளுக்குச் சேவை செய்ய விரும்புகிறார்களா என்று தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டும். உலகப் பொருட்கள் மற்றும் சிற்றின்ப இன்பங்கள் மகிழ்ச்சியின் மாயையை மட்டும் அளிக்கும், ஆனால் உண்மையான திருப்தியைக் கொண்டுவருவதில்லை, காரணம் நாம் எப்போதும் அதிகமாக விரும்புகிறோம். ஒரு மனிதனுக்கு போதுமான அளவு இருந்தாலும், அவன் இன்னும் அதிகமாக விரும்புகிறான், குறை சொல்வதை நிறுத்தமாட்டான் என்கிறது ஒரு பிரபலமான ஜெர்மன் பழமொழி. இந்தக் குணங்கள் நம்மை ஆக்கிரமித்துள்ளன என்பதை நாம் இறுதியில் உணர்கிறோம் .*

*நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய இன்னொரு சவால் என்னவென்றால், நம் வாழ்வின் மீது ஒரு குறிப்பிட்ட அளவு அதிகாரம் கொண்டவர்கள், எடுத்துக்காட்டாக, நமது குடும்ப உறுப்பினர்கள், பள்ளி, நிறுவனம் அல்லது சமூகத்தில் உள்ளவர்கள் நாம் கடவுளின் எதிர்பார்ப்புகளுக்கு எதிராக முரண்பட நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். நாம் நம் வாழ்க்கையை இயேசுவிடம் ஒப்படைக்கும்போது, கடவுளின் எதிர்பார்ப்புகளுக்கு மிக உயர்ந்த முன்னுரிமையை வழங்குவதற்கான சக்தியும் தைரியமும் நமக்கு இருக்கும், மேலும் நம்முடைய நிலைப்பாட்டை ஞானத்துடனும் கண்ணியத்துடனும் பாதுகாக்க முடியும் (தயவுசெய்து தானியேல் 1: 8 ஐப் படியுங்கள்; தானியேலின் தீர்மானங்கள்; ஆண்டவரின் பல உதவிகள். வசனம் 9,14,15, 17, 20)*

# *என் வாழ்க்கையை ஒரு முறை*
# *கடவுளிடம் ஒப்படைத்தால் போதுமா?*

*நாம் மனமாற்றத்தின்போது இயேசுவிடம் அற்பணிப்பதை ஒரு அடித்தளத்திலிருந்து தொடங்குகிறோம். இந்த அற்பணிப்பானது ஜெபம், சரியான வேதாகம போதனை, உறுதியான நம்பிக்கை ஆகியவற்றிகுப் பிறகு, ஞானஸ்நானத்தினால் முத்திரையிடப்பட்டு, நித்தியமாகச் செல்லுபடியாகும்படி உறுதிப்படுத்தப்படுகிறது. கடவுளுடைய வார்த்தை இந்த அடிப்படை அற்பணிப்பை கடவுளுடனான நமது உடன்படிக்கை என்று அழைக்கிறது.*

*தினசரி ஒப்புக்கொடுத்தல் என்பது மிகவும் வித்தியாசமானது. இது பெரும்பாலும் அர்ப்பணிப்பு, மனமாற்றம் அல்லது பிரதிஷ்டை என்றும் அழைக்கப்படுகிறது. இந்தக் கருத்து சில குழப்பங்களை ஏற்படுத்தக்கூடும். விஷயங்களைத் தெளிவுபடுத்துவதற்காக, நான் அதைப் பிரதிஷ்டை என்று கூறுவேன். தினசரி பிரதிஷ்டை (அல்லது ஒப்புக்கொடுத்தல் அல்லது மனமாற்றம்) என்பது இன்று நான் கடவுளோடு செய்த அடிப்படை உடன்படிக்கைபடி வாழ விரும்புகிறேன்; நான் இன்று இந்த உடன்படிக்கைக்காக நிற்க விரும்புகிறேன் என்பதாகும். அதனால்தான் இது போன்று தினமும் ஜெபிப்பது விலைமதிப்பற்றதாகிறது: "ஆண்டவரே, என்னையும் என்னிடம் உள்ள அனைத்தையும் இன்று நான் உங்களிடம் ஒப்டைக்கிறேன்."*

*கிறிஸ்துவுடனான நமது உடன்படிக்கையை வேதாகமம் ஒரு திருமணத்துடன் ஒப்பிடுகிறது. நான் இந்த உடன்படிக்கையில் உறுதியாக இருந்தால், பின்னர் நான் எதைப் பற்றியும் கவலைப்பட தேவையில்லை. கடவுள் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அனைத்தையும் பாதுகாக்க முடியும். அவர் எப்போதும் தனது வார்த்தையை நிறைவேற்றுகிறார், விவாகரத்துக்கு தாக்கல் செய்யமாட்டார்.*

*மோரிஸ் வெண்டன் இவ்வாறு கருத்து தெரிவிக்கிறார் : "உங்கள் திருமண வாழ்க்கையை பாதுகாக்க நீங்கள் திட்டமிடவில்லை என்றால் நீங்கள் திருமணம் செய்துகொள்வதில் எந்த அர்த்தமும் இருக்காது. திருமணம் செய்து கொள்ளாவிட்டால் நீங்கள் ஒருபோதும் திருமண வாழ்க்கை வாழ முடியாது."* [48]

*நமது அடிப்படை ஒப்புக்கொடுத்தலின் நேர்மறையான விளைவுகளைத் தக்க வைத்துக் கொள்ள, இயேசுவில் நிலைத்திருக்க வேண்டியது அவசியம். அதனால்தான், யோவானில் ஒன்பது தடவைகள் "நிலைத்திருப்பது" பற்றி இயேசு பேசுகிறார், உதாரணமாக, 5 மற்றும் 15 வசனங்கள் உட்பட. "ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் ; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது." நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்."*

*நிறைவான வாழ்க்கை இயேசுவில் நிலைத்திருப்பதால் வருகிறது. அவருடனான ஐக்கியம் மூலம், நாம் ஒரு பயனுள்ள வாழ்க்கையை- மகிழ்ச்சி, வலிமை மற்றும் வெற்றியுள்ள வாழ்க்கையை வாழ முடிகிறது. கடவுள் நம் வாழ்வில் பெரிய காரியங்களைச் செய்ய வல்லவர். இந்த உண்மையால் நாம் கவரப்படும்போது, அது நம் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும்.*

---

[48] Morris Venden, 95 Theses on Righteousness by Faith (Nampa, ID: Pacific Press Publishing Association, 2003), p. 133.

# சுடர் ஏற்றப்பட்டது

*ஒரு அட்வென்டிஸ்ட் பின்னணியிலிருந்து வந்த நான் எப்போதும் ஆன்மீகம் தொடர்புடைய விஷயங்களில் மூழ்கி இருந்தேன். 13 வயதில், நான் ஞானஸ்நானம் பெற முடிவு செய்தேன், இருப்பினும், என் ஆன்மீக வாழ்க்கை அலுப்பான, சலிப்பூட்டுகிற ஒன்றாக இருந்தது, எந்த ஆர்வ சுடரும் என்னில் பிரகாசிக்கவில்லை. ஒரு வருடம் அமெரிக்கா செல்லக் கடவுள் எனக்கு வாய்ப்பு அளித்தார். நான் ஆங்கிலம் கற்கவும் உல்லாசமாக இருக்கவும் மட்டுமே அங்குச் சென்றேன். ஆனால் ஒரு மாலை, பரிசுத்த ஆவியானவர் என்னை அழைத்து, "மாயில், நீ சரியான இடத்தில் இருக்கிறாய் என்பதில் உறுதியாக இருக்கிறாயா என்று கேட்டார்?"*

*அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்தபிறகு, நான் ஸ்வீடன் செல்ல விரும்பினேன், ஆனால் கதவுகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தது. என் வாழ்க்கையில் என்ன செய்வது என்று தெரியாமல் நான் மலையின் அடிப்பகுதியில் இருப்பது போல் உணர்ந்தேன், அப்போது ஒரு நாள் நெருங்கிய நண்பர் ஒருவர் ஹெல்முத் ஹோபாயின் "இயேசுவில் நிலைத்திருங்கள்" என்ற புத்தகத்தை எனக்குக் கொடுத்தார். மாலையில் முதல் முறையாகப் புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தேன், அதன் பிறகு என்னால் படிப்பதை நிறுத்த முடியவில்லை. அந்தப் பிரபலமான குரல் மீண்டும் கேட்டது. ஒவ்வொரு மாலையும் தவறாமல் நான் படித்தபோது, இறுதியாகச் சுடர் எரிய ஆரம்பித்தது. நான் மேலும் மேலும் படிக்கத் தொடங்கியபோது, நான் செய்யும் தவறை பற்றி அதிகமாகப் புரிந்துகொள்ள ஆரம்பித்தேன்- பரிசுத்த ஆவியின் பற்றாக்குறை! பல முறை புத்தகத்தைப் படித்தபிறகும், மாற்றம் எப்படி நடக்கும் என்று எனக்குப் புரியவில்லை.*

*கடவுள் இதற்கான பதிலை அறிந்திருந்தார். இதை நான் உணர்வதற்கு முன்பே, என் பேச்சு, எனது கருத்துக்கள் மற்றும் எனது அணுகுமுறை ஆகியவை மாற்றப்பட்டன. இவை அனைத்தும் பரிசுத்த ஆவியின் வேலைமூலம் மட்டுமே எனக்குள் பிரதிபலித்தது. திடீரென்று பிரான்சில் ஒரு தொழில்துறை மட்டத்தில் கதவுகள் திறக்கப்பட்டன. என்னைப் பொறுத்தவரை இது கடவுளின் வேலை, ஆனால் ஸ்வீடனுக்குச் செல்ல முடியாத ஏமாற்றம் எப்போதும் என்னுள் இருந்தது. சுடர் எரிந்து கொண்டிருந்தது, ஆனால் அது முழுமையாகப் பிரகாசிக்கவில்லை. ஹெல்முட் ஹூபாயில் பாரிஸில் உள்ள தம்மாரிக்கு வந்தார். நான் வெள்ளிக்கிழமை மாலை, சனிக்கிழமை காலை மற்றும் பிற்பகல் அங்குச் சென்றேன். ஆனால் கடவுளிடமிருந்து இன்னும் பதில் இல்லை. சுடரை மீண்டும் ஒளிரச்செய்வது எப்படி?*

*ஞாயிற்றுக்கிழமைதான் கடைசி நாள் கூட்டம், அன்று காலைப் பதில் கிடைத்தது. என் பிரச்சினை ஆண்டவருடைய சித்தத்திற்கு முற்றிலும் அடிபணியவில்லை என்பதே. பரிசுத்த ஆவியின் அழைப்பு தொடர்ந்து அனுப்பப்படுவதை நான் புரிந்துகொண்டேன், ஆனால் அதைப் பெற்ற பிறகு, அவருடைய சித்தத்திற்கு அடிபணிந்து சுயத்தை கைவிடுவது அவசியம். இந்த முழு ஒப்புக்கொடுத்தல் இல்லாமல், மத்தேயு 6:33 கூறுவது போல் கர்த்தரானவர் நம் மூலமாகச் செயல்பட முடியாது. கடவுளுடனான நமது உறவில் இந்த ஒப்புக்கொடுத்தல் அவசியம் என்பதை நான் அன்றிலிருந்து புரிந்துகொண்டேன். அப்போதுதான் சுடர் பிரகாசிக்க முடியும். MaëL (L. R.)*

# ஜெபம்

*பிதாவே, ஆசீர்வாதங்களை பெறும்படி, எங்களை உமக்கு ஒப்புக்கொடுக்கச் சொன்னீர் அதற்கு நாங்கள் உமக்கு மிகவும் நன்றி செலுத்துகிறோம். எங்கள் வாழ்க்கையை எளிமைப்படுத்தவும், புதிய படைப்புகளாக எங்களை உருவாக்க உம்மை அனுமதிக்கும் வகையில் வாழவும் எங்களுக்கு உதவி செய்யும். தயவுசெய்து அனுதினமும் எந்தவொரு தடையுமின்றி ஒப்புக்கொடுக்கவும், மற்றும் எங்கள் வாழ்க்கையில் உம் பலத்துடன் எல்லாவற்றிலும் உம்மைப் பின்பற்றவும் உதவி செய்யும். ஆமென்.*

# பரிசுத்த ஆவியின் மூலம் மகிழ்ச்சி

*"கர்த்தராகிய இயேசு பரிசுத்த ஆவியானவர் மூலமாகச் செயல்படுகிறார் ; ஏனென்றால் அவர் அவருடைய பிரதிநிதி. அவர்மூலம் ஆன்மீக வாழ்க்கையை ஆத்மாவுக்குள் ஊட்டுகிறார்... கடவுளின் ஆவியால் உருவாக்கப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படும் வரை மனித இதயம் மகிழ்ச்சியை ஒருபோதும் அறியாது." எலன் உவைட்" RH ஆகஸ்ட் 25, 1896, பத்தி.6*

# இளைஞர்களும் பரிசுத்த ஆவியும்

## கான்பெரன்ஸ் பகுதியில் உள்ள ஒரு வாலிபர் இலாகா

*நான் தெற்கு குயின்ஸ்லாந்து கான்பெரன்ஸ் பகுதியில் உள்ள வாலிபர் இலாகாவின் (12,200 உறுப்பினர்கள்) செயலாளர். ஒரு இளம் பெண் எனக்குத் தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள் என்ற புத்தகத்தை வழங்கினார். அந்தப் புத்தகத்தின் உள்ளடக்கம் என்னை அசைத்தது மற்றும் என்னால் நிறைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடியும், இந்தக் கையேட்டால் நாங்கள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டோம். எங்கள் மாநாட்டின் வாலிபர் இலாகா தலைவர்கள் கூட்டத்தில் 300 புத்தகங்களை வாலிபர் இலாகா தலைவர்களுக்கு அனுப்பினோம். இதன் விளைவு முற்றிலும் நம்பமுடியாத அளவிற்கு பெரியதாக இருந்தது. A.V.R சுருக்கப்பட்டது, # 138*

## 14 வயது சிறுவன் போதை பழக்கத்தை வெல்லுகிறான்

*எனது 14 வயது மகன் பரிசுத்த ஆவியானவருக்காக ஜெபிக்க ஆரம்பித்துவிட்டான். அவன் முற்றிலும் மாறிவிட்டான், மேலும் இப்போது தனது போதை பழக்கங்களை வென்று, வெற்றிகரமான வாழ்க்கை வாழ்கிறான். எனது மகனின் வாழ்க்கையில் தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள் என்ற இந்தச் சிறிய புத்தகத்தை இறைவன் பயன்படுத்தியதால் நாங்கள் கடவுளுக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். பாஸ்டர் A., #77*

## பிரச்சனைகள் தீர்க்கப்பட்டன – ஞானஸ்நானம்

*அவரது இளைய மகனுக்கு ஆலயத்துடன் பல பிரச்சினைகள் இருந்தன. எனவே, ஒரு ஜெபக் கூட்டாளியுடன் 40- நாள் ஜெபத் தொடரில் அவருக்காக ஜெபம் செய்தார். இதன் விளைவாக, அவரது மகன் தனது வாழ்க்கையை மாற்றிக்கொண்டு ஞானஸ்நானத்திற்குத் தயாரானான். I.G., # 77*

## 18 வயது இளைஞனின் வாழ்க்கை மாற்றப்பட்டது

*எங்கள் மாநாட்டுத் தலைவர்களில் ஒருவர் தனது 18 வயது மகனுக்கு இந்தப் புத்தகத்தைக் கொடுத்தார். இது அவனது வாழ்க்கையை மாற்றியது. எனவே, தந்தை உயர்நிலைப் பள்ளியில் உள்ள தனது மகனின் வகுப்புத் தோழர்களுக்கு 200 க்கும் மேற்பட்ட பிரதிகள் விநியோகித்தார். C.H., # 133*

# எழும்பிப் பிரகாசி; உன் ஒளிவந்தது.

# ஏசாயா 60:1

# தனியொருவரின் எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலூக்கான வழிகாட்டி

1. *நான் என் வாழ்க்கையை தெய்வீக அழைப்புக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்றால், அதற்குப் பின்னால் என்ன சவால் இருக்கிறது* ?

2. *ஒருவர் ஒப்புக்கொடுப்பதற்கு தடையாக என்ன இருக்க முடியும்? அது உங்களுக்கு என்னவாக இருக்கும் ?*

3. *தெய்வீக வழிகாட்டுதலின் கீழ் செல்கிற ஒரு நபரின் வாழ்க்கையில் என்ன நன்மைகள் நடக்கும்*?

4. *கிறிஸ்துவுடனான எனது உறவைப் பழுதுபடாமல் மற்றும் நெருக்கமாக வைத்திருக்க, எது முக்கியமானது* ?

5. *நம் வாழ்க்கையை கட்டுப்படுத்தும் முக்கிய காரணி என்ன?*

# நம் ஜெப நேரம்

*உங்கள் ஜெப பங்காளரைத் தொடர்புக் கொண்டு தலைப்பைப் பற்றி விவாதிக்கவும்.*
*உங்கள் ஜெப பங்காளருடன் ஜெபியுங்கள்:*

1. *நம்முடைய முழுமையான ஒப்புக்கொடுத்தலுக்குத் தடையாக இருக்கும் விஷயங்களைக் கடவுள் நமக்குக் காண்பிக்க ஜெபியுங்கள்.*
2. *நம் விருப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தக் கடவுள் ஞானத்தையும் பலத்தையும் தரவும், அதற்கு நம் வாழ்வில் சரியான முன்னுரிமை கொடுக்கவும் ஜெபியுங்கள்.*
3. *தேவன் நமக்கு ஆழ்ந்த அறிவுவைக் கொடுக்கவும், மேலும் நம்முடைய சொந்த விருப்பம் அதற்கு ஒரு தடையாக வழியில் இல்லாமல் இருக்கவும் ஜெபியுங்கள்.*
4. *சோதனைகள் மற்றும் பாவத்தின் மீதும் கடவுள் நமக்கு வெற்றியைத் தர ஜெபியுங்கள்.*

## *அத்தியாயம் 3 - பகுதி 1*

# இயேசு உங்களில் நிலைத்திருக்கிறார்

***-என் வாழ்க்கையில் "எனக்குள் கிறிஸ்து" என்ன விளைவுகளை ஏற்படுத்துகிறது?***

***-முயற்சியின் இறுதி பலன்: தேவனால் முழுமையாக நிரப்பப்படுதல்.***

## *கிறிஸ்துவில் நிலைத்திருங்கள்*

*"கிறிஸ்தவம் என்றால் கிறிஸ்து இருதயத்தில் நிலைத்திருப்பதாகும்." 49 "ஆவியானவர் மூலமாகவே கிறிஸ்து நம்மில் வசிக்கிறார் ; விசுவாசத்தினாலே இருதயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேவனுடைய ஆவி, நித்திய ஜீவனின் ஆரம்பம் ஆகும்." 50*
*பின்வருவதைக் கவனியுங்கள்:*
*பரிசுத்த ஆவியின் மூலம், கிறிஸ்து நம்மில் வாழ்கிறார்;*
*விசுவாசத்தினால் பரிசுத்த ஆவியானவரைப் பெறுகிறோம்;*
*இது நித்திய ஜீவனின் ஆரம்பம்.*

*பரிசுத்த ஆவியின் மூலம் இயேசு என்னில் வாழ விரும்புகிறார் என்ற அறிவு, நான் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும்போது உண்மையில் நிகழ்கிறது, இது எனக்கு மிகவும் விலையேறப்பெற்றது. இந்த அறிவு ஒரு அற்புதமான வேதாகம உண்மை.*

*பரிசுத்த ஆவியானவர் மூலமாக நமக்குள் இயேசு வாழ்வதனால், நம்முடன் நெருங்கிய கூட்டுறவை மட்டுமல்ல, நிலைத்த, நெருக்கமான உறவையும் விரும்புகிறார். அவர், "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்" (யோவான் 15: 4) என்று கூறுகிறார். இது ஒரு அற்புதமான அழைப்பு மற்றும் அதே நேரத்தில், இது ஒரு கட்டளையும் கூட. கடவுளின் வல்லமையின் மூலம் ஒரு உறுதியான கிறிஸ்தவ வாழ்க்கை சாத்தியமாகும் என்பதே இதன் பொருள்.*

*யோவான் 15:1-17-ல் நிலைத்திருங்கள் என்ற சொல்லைப் பதினொரு முறை இயேசு வலியுறுத்துகிறார். நாம் அவருடன் நீடித்த உறவைக் கொண்டிருக்க வேண்டும் என்று அவர்*

---

49 Ellen G. White, The Review and Herald, May 24, 1892, Par. 4.
50 Ellen G. White, The Desire of Ages. 388.

*விரும்புகிறார். அவர் வியக்கத் தக்க மற்றும் அற்புதமான வாக்குறுதிகளை இந்தக் கருத்துடன் இணைக்கிறார். "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்." (வசனம் 7) "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" என்கிறார். (வசனம் 11)*

*"என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்" என்ற இயேசுவின் வேண்டுகோளை எலன் உவைட் தெளிவுபடுத்துகிறார் : கிறிஸ்துவில் நிலைத்திருப்பது என்பது (முதலில்) அவருடைய ஆவியைத் தொடர்ந்து பெறுவது, (இரண்டாவதாக) அவருடைய சேவைக்கு முழுமையாக ஒப்புவித்து வாழ்வது" என்று அவர் கூறுகிறார்.[51] "ஒவ்வொரு கணமும் தேவ ராஜ்யத்துடன் ஒரு தொடர்பு நமது முன்னேற்றத்திற்கு அவசியம். பரிசுத்த ஆவியைக் கணிசமான அளவு நாம் கொண்டிருக்கலாம், ஆனால் ஜெபத்தினாலும் விசுவாசத்தினாலும் நாம் தொடர்ந்து பரிசுத்த ஆவியை அதிகம் தேட வேண்டும்."[52] மேலும், "அவர் (இயேசு) அவர்கள் மூலமாக வாழ்வார், அவருடைய பரிசுத்தப்படுத்தும் ஆவியின் வல்லமையை அவர்களுக்குக் கொடுத்து, ஆத்துமாவை தன்னைப் போல இருக்குமாறு மாற்றுவார்."[53] தாவீதின் ஜெபத்தை நமக்கு ஒரு வாக்குறுதியாக எடுத்துக்கொள்ளலாம்: "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்." (சங் 51 :10)*

# கடவுளிடமிருந்து வல்லமையைப் பெறுதல்

*எவ்வாறு கடவுளிடமிருந்து வல்லமையைப் பெறுவது என்பது பலருக்குத் தெரியாது. "ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளியிருக்கிறது." (2 பேதுரு 1: 3) ஆனால், அவர்கள் ஆன்மீக வறுமையில் வாழ்கிறார்கள்.*

*டெக்சாஸில் ஒரு பிரபலமான எண்ணெய் வயல் யேட்ஸ் பூல் என்று அழைக்கப்படுகிறது. யேட்ஸ் என்ற மனிதருக்கு ஆட்டு மந்தை இருந்தது, ஆனால் ஆடு வளர்ப்பால் போதுமான பணம் சம்பாதிக்க முடியவில்லை. அமெரிக்க பொருளாதார நெருக்கடியின்போது கடன்களைச் செலுத்த யேட்ஸ்க்கு இயலவில்லை. அந்த நேரத்தில் ஒரு எண்ணெய் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் வந்து, அவருடைய நிலத்தில் எண்ணெய் வைப்பு இருக்கலாம் என்று நினைப்பதாக அவருக்குத் தெரிவித்தனர். ஆய்வு நிறுவனம் சோதனை துளையிடுதலுக்கு விருப்பம் தெரிவித்தது, எனவே யேட்ஸ் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.*

*சுமார் 1,200 அடி ஆழத்தில், ஒரு பெரிய எண்ணெய் வைப்பு இருப்பதைக் கண்டார்கள். அது அனைத்தும் திரு யேட்ஸுக்கு சொந்தமானது! அவர் நிலத்தை வாங்கும்போது, அந்த நிலத்தில் எண்ணெய் அல்லது வேறு ஏதேனும் இயற்கை வளங்கள் இருப்பின் அதன் மீதும் உரிமையைப் பெற்றிருந்தார். அவர் வறுமையில் வாழும் ஒரு கோடீஸ்வரர் என்பதை அவர் உணரவில்லை. என்ன பிரச்சினை? அவரது நிலத்தில் எண்ணெய் இருப்பதைப் பற்றி அறிந்திருக்கவில்லை.54*

*2பேதுரு 1 :3,4ல் என்ன எழுதப்பட்டுள்ளது என்று உங்களுக்குத் தெரியுமா ? "ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளியிருக்கிறது." மீதமுள்ள வசனத்தை என் சொந்த வார்த்தைகளில் சொல்கிறேன்: இயேசுவுடன், ஒரு நெருக்கமான உறவில் நாம் வாழும்போது, "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களையும்" பயன்படுத்தி ஜெபிக்க முடியும்.*

---

[51] Ibid., 676

[52] Ellen G. White Ye Shall Receive Power (Hagerstown, MD: Review and Herald Publishing Association, 2012), October 24 p. 306.

[53] Ibid., October 23; p. 305.

[54] Dr. William R. Bright, Erfüllt mit dem Heiligen Geist-Wieer fährt man das? (Neuhausen, 1971), S. 27.

*கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், அதே நேரத்தில் நாம் கடவுளின் சுதந்தரருமாகவும் மாறுகிறோம், எனவே, அவருடைய அனைத்து வளங்களும் நம்முடையவையாக உள்ளன. கிறிஸ்துவுக்காகக் கனி கொடுக்கும் சாட்சிகளாக இருப்பதற்கு நமக்குத் தேவையான ஞானம், அன்பு, பலம் உள்ளிட்ட ஒவ்வொன்றும் நம் வசம் உள்ளன. இருப்பினும், பல கிறிஸ்தவர்கள் ஆன்மீக வறுமையில் வாழ்கிறார்கள், ஏனென்றால் கடவுள் அவர்களுக்கு ஏற்கனவே அளித்துள்ள ஆன்மீக செல்வத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்று அவர்களுக்குத் தெரியாது! திரு. யேட்ஸ் அவரது நிலத்தில் எண்ணெய் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு இருந்தது போலவே, இவர்கள் எல்லையற்ற உடைமைகள் இருப்பதைப் பற்றி அறியாமல் அறியாமையில் வாழ்கிறார்கள்.*

*அதன் அர்த்தம் என்ன? "இயேசுவோடு தொடர்பு இல்லாமல், எந்த மனிதனும் இரட்சிப்பைக் காண முடியாது. கிறிஸ்துவின் ஜீவன் நம்மில் இல்லாமல், சோதனையின் தாக்கங்களை நாம் தாங்க முடியாது. நம்முடைய நித்திய பாதுகாப்பு, கட்டிடத்தின் உறுதியான அஸ்திவாரத்தைப் பொறுத்தது. பல மக்கள் இன்று தங்கள் கட்டிடங்களைச் சோதனைக்கு உட்படுத்தப்படாத அஸ்திவாரங்களின் மீது உருவாக்கி வருகின்றனர். கடும் புயல் வீசி, மழை பெய்து, மற்றும் வெள்ளம் வரும்போது, அவர்களின் வீடு கீழே விழும், ஏனென்றால் நித்திய கன்மலை என்று அழைக்கப்படுகிற பிரதான மூலக்கல்லான கிறிஸ்து இயேசுவின் மேல் அது நிறுவப்படவில்லை." 55*

# *பரிசுத்த ஆவிக்காக ஜெபியுங்கள்*

*வேதாகமத்தில் ஒரு தனிச்சிறப்புள்ள பத்தி உள்ளது, அதில் நம்முடைய கர்த்தராகிய இயேசு பரிசுத்த ஆவியானவருக்காக ஜெபிக்கும்படி பத்து முறை கேட்டுக்கொள்கிறார். நம் கவனத்தை ஈர்த்து, கனிவான அவசரத்துடன், அவரில் (இயேசு) நிலைத்திருக்கும்படி நமக்கு அழைப்பு கொடுக்கிறது இந்த வசனங்கள். இது போன்ற வேறெந்தப் பத்தியும் இருக்குமா என்று எனக்குத் தெரியாது. இந்தப் பத்தியில் ஜெபம் குறித்த பாடம் உள்ளது. பரிசுத்த ஆவியானவருக்காக ஜெபிப்பதற்கான பத்தி லூக்கா 11: 9-13 உள்ளது. இந்த முக்கியமான கூற்றை நாங்கள் திரும்பத்திரும்ப சொல்ல விரும்புகிறோம், ஆனால் இந்த அத்தியாயத்தில் பின்வருவனவற்றில் குறிப்பாகக் கவனம் செலுத்த விரும்புகிறோம்: "அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்." (கொலோ 2 :10)*

*எலன் உவைட் கூறுகிறார்: "இயேசுவுக்கு பரிசுத்த ஆவியானவர் (தினசரி) அளவீடு இல்லாமல் வழங்கப்பட்டார். ஆகவே, கிறிஸ்து தங்குவதற்காக இருதயத்தை முழுமையாக ஒப்புவிக்கும்போது, அவரைப் பின்பற்றுபவர்கள் அனைவருக்கும் பரிசுத்த ஆவி கொடுக்கப்படும், (பரிசுத்த ஆவியானவரை தினமும் கேட்பவர்களுக்கு). 'ஆவியினால் நிறைந்து' என்ற கட்டளையை நம் ஆண்டவர் தாமே கொடுத்திருக்கிறார் (எபேசியர் 5 :18), இந்தக் கட்டளை அதனை நிறைவேற்றும் ஒரு வாக்குத்தத்தமே. "சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும்" மற்றும் "அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்." (கொலோசெயர் 1 :19, R.V. ; 2 :10, R.V.) [56] இது கிறிஸ்துவில் நிறைவேற வேண்டும் என்பது பிதாவின் சித்தமாக இருந்தது.*

*இங்கே நாம் கற்றுக்கொள்வது:*

1. *பரிசுத்த ஆவியானவர் இயேசுவில் நிறைவாய் இருந்தார்.*
2. *நாம் முற்றிலும் ஒப்புவித்து வாழ வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் நிறைவாய் அதே விதத்தில் நம்மில் வாழ முடியும்.*
3. *இந்தக் காரணத்திற்காகவே, இயேசு தாமே "ஆவியால் நிரப்பப்படுங்கள்" என்ற*

[55] Ellen G. White, The Desire of Ages, pp. 599, 600.
[56] Ellen. G. White, Thoughts from the Mount of Blessing, p. 21.

*கட்டளையைக் கொடுத்தார். (எபே 5:18)*

4. *அவருடைய நோக்கம் என்னவென்றால், இங்கே நாம் இன்னும் பரிபூரணமாக வாழ வேண்டும் (யோவான் 10:10; கோ2:10) மற்றும் நித்திய ஜீவன் (யோவான் 3:16) பெற வேண்டும் என்பதே. எனவே, இயேசுவில் நிலைத்திருக்க வேண்டும். இயேசு நம்முள்ளிருந்தால், பெரிய மற்றும் விலையேறப்பெற்ற விளைவுகள் உண்டு.*

# விசுவாசத்துடன் ஜெபம் செய்தல்

*விசுவாசத்தினாலே இந்த வசனங்களைப் பற்றிக்கொண்டு ஜெபம்பண்ணுகிறோம் : “ஆவியைக்குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று.” (கொலோசெயர் 3 :14) ; “விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்.” (எபிரெயர் 11 :6) ; “விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கிறார்.” (எபேசியர்3 :17) பரிசுத்த ஆவிக்காக ஜெபித்த பிறகு, நான் உண்மையில் அவரைப் பெற்றிருக்கிறேன் என்று அறிந்து கொள்வது அவசியம். நாம் எப்படி எளிதாக அவர்மீது நம்பிக்கை வைக்க முடியும் என்பதை நமது அற்புதமான கடவுள் நமக்குக் காட்டியுள்ளார். அது வாக்குத்தத்தங்களுடன் ஜெபம் செய்வதன் மூலம் மட்டுமே அடைய முடியும். (தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள் என்ற கையேட்டைப் பார்க்கவும், அதில் அத்தியாயம் 5, “நடைமுறை அனுபவத்திற்கான திறவுகோல்,” என்ற தலைப்பின் கீழ் இன்னும் விரிவாக விளக்கப்படுகிறது.)*

*எலன் உவைட் கூடக் கூறுகிறார், “பரிசுத்த ஆவியானவர் நமது விண்ணப்பத்திற்காகவும், நாம் அதைப் பெற்றுக் கொள்வதற்காகவும் காத்திருக்கிறார்.”* [57] *டேவிட் வோல்க்விட்ஸ் மேலும் கூறுகிறார்: பரிசுத்த ஆவியைச் சிறப்புப் பரிசாகக் கடவுளிடமிருந்து கோருவதை நீங்கள் கற்பனை செய்ய முடியுமா? அத்தகைய எண்ணம் என்னைப் பயத்தால் நடுங்க வைக்கிறது. இது போன்ற ஒரு விஷயத்தை நினைப்பது கூட அவமரியாதைக்குரியதாகவும், அவதூறாகவும் இருக்கிறது. இருப்பினும், இந்த வார்த்தையை அம்மையார் தனது எழுத்துக்களில் பல்வேறு பத்திகளில் பயன்படுத்துகிறார். அவர் என்ன சொல்ல முயற்சிக்கிறார்? முதலாவதாக, கடவுள் நமக்கு இந்தப் பரிசைக் கொடுக்க மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார் என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும், ஏனென்றால் அவர் நம்மை நேசிக்கிறார், மேலும் அந்த அன்பு நமக்கு மிகவும் தேவை. இரண்டாவதாக, இந்தப் பரிசு நமக்கு மிகவும் முக்கியமானது என்று அர்த்தம். இந்தப் பரிசு நாம் கேட்கும் வரை நமக்காக வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இயேசுவின் தொடர்ச்சியான பிரசன்னத்திற்காக நாம் ஏங்கும்போது, அவர் நமக்கு வழிகாட்டியாக நம்முடைய வாழ்க்கையில் இருக்க முடியும். எனவே முழுமையாக விசுவாசம் மற்றும் தன்னம்பிக்கையுடனும் நம் விண்ணப்பத்தைக் கடவுளிடம் ஒப்புக்கொடுக்கலாம் என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது. இதைப் பற்றி நாம் கவனமாகச் சிந்திக்க வேண்டும்.*[58]

*கோரிக்கை என்பது நமக்கு முற்றிலும் தேவைப்படும் அல்லது விரும்பும் விஷயத்தின் மீதுள்ள வலுவான ஆர்வத்தைக் குறிக்கிறது ; இது கேட்கும் நபரின் தீவிரத்தை அது காட்டுகிறது. “கோரிக்கை” வைப்பதற்கு முன் நாம் இதைத் தடுக்கும் அனைத்தையும் அகற்று வேண்டும். அவருடைய பெயரை மகிமைப்படுத்துவதற்காக மிக உயர்ந்த கோரிக்கைகளைக் கேட்கும்போது [கடவுள்] மகிழ்ச்சியடைகிறார்.”* [59] *ஒவ்வொரு நாளும் நம்முடைய முழு இருதயத்தோடு இயேசுவிடம் ஒப்புக்கொடுத்து, விசுவாசத்தினாலே கடவுளின் மகத்தான பரிசை- பரிசுத்த ஆவியானவரைப் பெறுகிறோம்.*

---

[57] Ellen G. White, *Christ's Object Lessons*, p. 121.

[58] David Wolkwitz, *Der Weg zu einer kraftvollen Erweckung* (The Way to a Powerful Revival) (NRW, Abt. Heimatmission), S. 205.

[59] Ellen G White, The Desire of Ages, p. 121.

# *பவுல் அப்போஸ்தலனின் அற்புதமானப் பரிந்து பேசும் ஜெபம்*

*இந்தத் தலைப்பைப் பற்றி அறிய, எபேசியர் 3 :14-21ல் உள்ள சம்பவத்தைப் பார்ப்போம், அதில் எபேசுவில் உள்ள ஆலயத்திற்காகப் பவுலின் அற்புதமானப் பரிந்து பேசும் ஒரு ஜெபத்தை நாம் அங்குக் காணலாம்.*

*முக்கியக்கூறுகள் பின்வருமாறு:*

1. *அவர் பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர்களுக்காகக் கேட்கிறார்*
2. *இதன் மூலம் கிறிஸ்து அவர்களின் இருதயங்களில் வாசமாயிருக்கவும்*
3. *அவருடைய அன்பின் முழு அளவையும் அவர்கள் அனுபவிக்கவும், இந்தத் தெய்வீக அன்பில் உறுதியாக வேரூன்றி நிற்கவும்*
4. *கடவுளின் முழுமையால் அவர்கள் நிரப்பப்பட வேண்டும் எனவும் கேட்கிறார்.*
5. *கடவுளின் வழியை நாம் இங்கே தெளிவாகக் காண்கிறோம்: பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதன் மூலம் கிறிஸ்து நம்மில் வாழ்கிறார், நம்முடைய குணத்தில் நேர்மறையான மாற்றத்தைக் காண்கிறோம் மற்றும் ஆவியின் கனிகளில் வளர்ச்சியை அனுபவிக்கிறோம்.*

*"இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு, நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம்பண்ண வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்." (எபே 3: 14–19)*

# *உள்ளான வல்லமையை எவ்வாறு பெறுவது?*

*நம்முடைய ஆன்மீக வாழ்க்கைக்கு அடித்தளம் ஆக எபேசியர் 3:16 காட்டப்பட்டுள்ளது: "அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்."*

*ஒவ்வொரு நாளும் நமக்கு வல்லமை தேவை, ஏனெனில் வல்லமை நிறைந்த வாழ்க்கை மகிழ்ச்சியைத் தருகிறது. நம்முடைய வாழ்க்கையில் நமக்கு ஏராளமான வல்லமை இருக்க வேண்டும் என்று நம் அற்புதமான ஆண்டவர் விரும்புகிறார். உள்ளான மனிதனுக்கு இந்த வல்லமை பரிசுத்த ஆவியினால் வழங்கப்படுகிறது. தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள், என்றச் சிறு புத்தகம், பக்கம் 60-ல், ஏன் நாம் நம்மைத் தினமும் இயேசுவுக்கு அர்ப்பணிக்க வேண்டும் மற்றும் பரிசுத்த ஆவியானவருக்காகத் தினமும் ஏன் ஜெபிக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. தினமும் வாக்குத்தத்தங்களைப் பயன்படுத்தி ஜெபிப்பதன் மூலம் நாம் கேட்டவுடன் பரிசுத்த ஆவியானவரைப் பெறுவோம். மீண்டும், இந்தப் புத்தகத்தைப் படிக்க நான் உங்களுக்கு பரிந்துரைக்கிறேன்- இது மிகவும் முக்கியமானது.*

# நமக்குள் கிறிஸ்து

*எபேசியர் 3 : 17ன் படி, "விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருப்பார்." இந்த அற்புதமான உண்மையை நாம் போதுமான அளவு அறிந்திருக்கிறோமா? நாம் பரிசுத்த ஆவியுடன் வாழும்போது, இயேசு நம் இருதயங்களில் வாழ்கிறார் என்பது உண்மை, இதை நாம் உணரவோ அல்லது அளவிடவோ முடியாது. நாம் அதை நம்ப வேண்டும், நீங்கள் இதை நம்பினால், இப்போதும் அவரிடம்: "கர்த்தராகிய இயேசுவே, என் இதயத்தில் வாழ்வதற்கு நன்றி," அல்லது "ஆண்டவரே, நீர் என்னுள் வாசம் செய்வதால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்" என்று சொல்லுங்கள்.*

*"ஆண்ட்ரூ முர்ரே கூறுகிறார் : "இயேசுவின் வாழ்க்கையைப் போலவே உங்கள் வாழ்க்கையும் மாற வேண்டும் என்ற நோக்கத்துடன், அவர் இந்த முறையில் உங்களுடன் ஐக்கியம் கொள்கிறார்."* [60] *எலன் உவைட் மேலும் கூறுகிறார்: "நாம் கிறிஸ்துவைப் போல வாழப் பரிசுத்த ஆவியானவர் உள்ளத்தில் செயல்படுகிறார்."* [61] *மேலும் "மனிதர்களில் தெய்வீக சாயலை மீட்டெடுக்கும் திட்டத்தில், பரிசுத்த ஆவியானவர் மனித மனதில் அசைவாடி, கிறிஸ்துவின் இடத்தை நிரப்பி, மனித குணத்தை வடிவமைக்கும் ஒரு பணி செய்ய நியமிக்கப்பட்டுள்ளார்."* [62] *மேலும், "ஆரோக்கியமான கிறிஸ்தவர் என்றால், மகிமையின் நம்பிக்கையான கிறிஸ்துவை தனக்குள்ளே வைத்திருப்பவர்." (கொலோ 1 :27)* [63]

*கிறிஸ்து விசுவாசத்தினாலே நம் இருதயங்களில் வாழ்கிறார் என்று உரை கூறுகிறது. நம்பிக்கையே விசுவாசத்தின் அடித்தளம். அது நம் முழு வாழ்க்கையையும் இயேசு கிறிஸ்துவிடம் ஒப்படைப்பதாகும் – அதாவது இது அடிப்படை ஒப்புக்கொடுத்தல் ஆகும், அதன் பின்னர் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் நாம் அவரிடம் ஒப்புக்கொடுக்க வேண்டும்.*

# விசுவாசத்திற்கும் உணர்வுகளுக்கும் என்ன தொடர்பு?

*தேவனுடைய வார்த்தை இவ்வாறு கூறுகிறது: "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி..." (எபே 3: 16,17) ஆகையால் நம்முடைய இதயங்கள் இயேசு கிறிஸ்துவின் வாசஸ்தலமாக இருப்பதற்காகப் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகிறோம், இது விசுவாசத்தின் மூலம் நடக்க வேண்டும்.*

*இயேசு: "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்றார்.(யோவான் 7 :38) நாம் எப்போதும் உன்னித்து இதற்குக் கவனம் செலுத்துவது அவசியம், ஏனெனில் விசுவாசத்தின் அடிப்படை நம்பிக்கை, ஆகையால் இயேசு சொன்னதை நான் நம்புகிறேன். இயேசு தனது பிதாவைப் பற்றிக் கூறுகிறார் : "உம்முடைய வசனமே சத்தியம்" என்று." (யோவான் 17 :17) எலன் உவைட் அம்மையாரும் : "விசுவாசம் கடவுளின் வாக்குத்தத்தங்கள் மீது தன் கால்களை வலுவாக ஊன்றிக் கொள்ளுகிறது, மேலும் கடவுள் அவர் சொன்னபடியே செய்வார் என்று வாக்குத்தத்தங்கள் நமக்கு உறுதியளிக்கின்றன எனக் கூறுகிறார்."*

---

[60] Andrew Murray, *Bleibe in Jesus* (Remain in Jesus) (Leun,2012), S. 149.

[61] Francis D. Nichol, ed., Seventh-day Adventist Bible Commentary, vol. 6 (Hagerstown, MD: Review and Herald Publishing Association, 2001), p.1112.

[62] Ellen G. White, *Ye Shall Receive Power*, February 8; p. 47.

[63] Ibid., February 4; p. 43.

*[64]கடவுளை நம்புவது என்றால் அவருடைய வார்த்தையைச் சார்ந்திருப்பது. நான் கடவுளுடைய வார்த்தையை நம்புகிறேன்.*

*என் உணர்வுகளைச் சார்ந்து நான் செயல்படும்போது என்ன நடக்கிறது? அதாவது எனக்குள் இருக்கும் ஏதோ ஒன்றை நான் நம்புகிறேன். சாத்தானின் சபையிலிருந்து கடவுளால் காப்பாற்றப்பட்ட ரோஜர் ஜே. மோர்னியோ இந்த விஷயத்தில் நம் கண்களைத் திறக்கிறார்: "அசுத்த ஆவிகள் கிறிஸ்துவின் வார்த்தைக்கும் மற்றும் அவருடைய தீர்க்கதரிசிகளின் வார்த்தைக்கும் பதிலாகத் தங்கள் உணர்வுகளைச் சார்ந்து செயல்பட மக்களை ஊக்குவிக்கும். தனிமனிதனுக்குத் தெளிவாகத் தெரியாதபோது, தீய சக்திகள் அவர்களின் வாழ்க்கையின் மேல் கட்டுப்பாட்டைப் பெற முடியாது."[65] நாம் ஒரு உணர்ச்சி அல்லது மாயமான அனுபவத்தைத் தேடக் கூடாது.*

*விசுவாசம் என்றால் கடவுள்மீதும் அவருடைய வார்த்தையின் மீதும் நம்பிக்கை வைப்பதும், வேதாகமம் உயர்த்தப்பட்டு நம் வாழ்வைக் கட்டுப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும், வெறுமனே ஒரு மூலப்பொருளாகவோ அல்லது ஒப்பனைப்பொருளாகவோ இருக்கக் கூடாது. நம்முடைய சொந்த பலத்தினால் நாம் கடவுளுடைய வார்த்தையைக் கடைப்பிடிக்க முடியாது என்று பலர் வாதிடுகிறார்கள். இது இம்மை வாழ்விற்குரிய கிறிஸ்தவர்கள் காரியத்தில் உண்மைதான். ஆனால் பரிசுத்த ஆவியோடு வாழ்கிற எவனும் இயேசுவை இருதயத்தில் வைத்திருக்கிறான், கடவுளுடைய வார்த்தையைக் கடைப்பிடிக்கத் தயாராக இருக்கிறான். ரோமர் 4: 8 கூறுகிறது: "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்." (இந்த விஷயத்தைப் பற்றி மேலும் அறிய : "இயேசுவின் மூலமாகக் கீழ்ப்படிதல்" அத்தியாயம் 4ஐப் பார்க்கவும்).*

*நம் வாழ்வில், நிறைவேறிய வாக்குத்தத்தங்கள் பற்றிய நமது அனுபவங்கள் மற்றும் கடவுள் மீதான நம் விசுவாசம் ஆகிய இவை அனைத்தும் நம் நம்பிக்கையைப் பலப்படுத்துகின்றன, மற்றும் அவர்மீதான நமது அன்பு ஆழமாக வேரூன்றி வளர உதவுகிறது. இறுதியில், கடவுளின் அன்பு இதயத்தின் ஏக்கங்களைப் பூர்த்தி செய்கிறது. இது தந்தையின் கைகளில் ஆறுதலையும் பாதுகாப்பையும் அனுபவிக்கிற ஒரு சிறு குழந்தையைப் போன்றது. இன்னும் குழந்தை முதிர்ச்சியடையாத காரணத்தால் அதன் உணர்வுகள் மாறக்கூடும், ஆனால் குழந்தையின் உணர்வுகள் மாறுவதால் தந்தையின் அன்பு மாறாது. கடவுளின் அன்பில் நாம் முதிர்ச்சியடையும்போது, கடவுளுடனான நமது உறவைப் பற்றிய உறுதிப்பாட்டை நம்முடைய நிலையற்ற உணர்வுகளால் நிர்ணயிக்க முடியாது என்பதை உணர்கிறோம். நம் உணர்வுகள் நம்பமுடியாதவை, ஏனெனில் அவை நிலையற்றவை. நாம் கடவுள்மீதும் அவருடைய நிலையான வார்த்தையின் மீதும் வைத்திருக்கும் நம்பிக்கையிலிருந்து தான் நம்முடைய உறுதி வருகிறது.*

*நமது உணர்வுகளை நம்பிக்கையிழந்துத் தேட அவசியமில்லை. பரிசுத்த ஆவியானவர் மூலமாகக் கிறிஸ்து நம்மில் வாழும்போது, ஆவியின் கனிகள் நம்மில் பெருகும். இந்தப் பலமான உணர்வுகள் பரிசுத்த ஆவியானவர் தரும் பரிசுகள், மகிழ்ச்சிக்கு அங்கே ஒரு முக்கியமான இடம் உண்டு. "கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்." (நெகேமியா 8 : 10) விசுவாசமுள்ள வாழ்க்கையில், மகிழ்ச்சி குறைவாக இருக்காது, மாறாக நாம் கடவுளுடன் வாழ்வதால் அது நம்மில் பலமாக இருக்கும்.*

*எதிர்காலத்தில், கடவுளை விசுவாசிப்பதன் மூலம் அவரைப் பின்பற்றும் சீடர்களையும், மறுபுறம் உணர்வுகளைச் சார்ந்தது கடவுளைப் பின்பற்றும் சீடர்களையும் வேறுபடுத்திப் பார்ப்பது நமக்குக் கடினமாக இருக்கும். பெரிய சோதனைக்காரன் இயேசுவைப் பற்றிக் கூட அற்புதமான வெளிப்பாடுகளைக் காண்பிப்பான், ஆனால் இந்த வெளிப்பாட்டிற்குப் பின்னால் உணர்வுகள் மற்றும் மாயக் கவர்ச்சி இருக்கும். இது, கடவுளின் வார்த்தைக்குப் பதிலாகத் தங்கள் சொந்த*

---

[64] Ellen G. White, *The Signs of the Times*, May 22, 1884, par.3.

[65] Roger J. Morneau, *A Trip into the Supernatural*, (Hagerstown, MD: Review and Herald Publishing Association, 1999), p. 43.

*உணர்வுகளை முழுமையாக நம்பி, அற்புதம்போல் தோன்றும் "விசுவாச அனுபவங்களை" சாரும் அளவிற்கு மக்களைக் கொண்டுச் செல்லும். தங்களது உணர்ச்சிகரமான அனுபவங்களின் மூலம் தங்களை ஆவியினால் வழிநடத்தப்பட்டவர்களாகக் கருதுவதால், அவர்களுக்குக் கடவுளுடைய வார்த்தை தேவையில்லை என்று கூட அவர்கள் நினைக்கலாம்.*

*இதற்கு எதிராக இயேசுவின் வார்த்தைகள் மத்தேயு 7 :21-23-ல் தெளிவாக இருக்கின்றன : "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே ! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்." இதை மட்டுமே நாம் சொல்ல முடியும் : நம்பி கீழ்ப்படியுங்கள், ஏனென்றால் இயேசுவில் சந்தோஷமாக இருக்க வேறு வழியில்லை, நம்பி கீழ்ப்படிவதைத் தவிர. (See Testimonies for the Church, vol. 5, chap. 21, "Looking Unto Jesus.")*

# *கடவுளிடம் தொடர்ந்து முழுமையாக ஒப்புக்கொடுப்பதேன் மிகவும் முக்கியமானது?*

*ரோமர் 12;1ல், அப்போஸ்தலன் பவுல் மூலம் கடவுள் பின்வரும் கோரிக்கையை வைக்கிறார்: "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத் தக்க புத்தியுள்ள ஆராதனை." மற்றும் நீதிமொழிகள் 23 : 26-ல் ஒரு அழைப்பு உள்ளது : "என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா." ஒப்புக்கொடுப்பதின் பொருள் ஆனது விரிவாக, "இயேசுவிடம் ஒப்புக்கொடுங்கள்" என்ற 2ஆம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது. "கிறிஸ்துவிடம் போகும் பாதை" புத்தகத்தில் (5வது அத்தியாயத்தில்) இது நன்கு விளக்கப்பட்டுள்ளது.*

*கடவுளின் அன்பிற்கு நம்மை ஒப்புக்கொடுப்பது பெரும் ஆசீர்வாதங்களைக் கொண்டுவருகிறது. நம்முடைய வாழ்க்கையை இயேசு வழிநடத்த அனுமதிக்கப்பட்டால், நம்முடைய தற்பெருமை என்னும் கொடுங்கோன்மையிலிருந்து (பொறாமை, கோபம், சர்ச்சை மற்றும் பலவற்றிலிருந்து) நம்மை விடுவிக்க அவரால் முடியும். எலன் உவைட் கூறுகிறார், "ஆவியின் பங்களிப்பு என்பது கிறிஸ்துவின் வாழ்க்கையை பகிர்ந்து கொடுப்பதாகும். கிறிஸ்துவின் பண்புகள், பெறுநரை ஊடுருவி இயக்குவிக்கிறது." 66 "நாம் வெற்றியை எண்களின் மூலம் அல்ல, ஆனால் இயேசுவிடம் முழுமையாக நம் ஆத்துமாவை ஒப்புக்கொடுத்தலின் மூலமே நாம் வெற்றி பெறுவோம்." 67*

[66] Ellen G. White, The Desire of Ages, p. 805.
[67] Ellen G. White, Sons and Daughters of God (Hagerstown, MD: Review and Herald Publishing Association, 2003), P. 279.

# வெளிப்படுத்தப்பட்ட இரகசியத்தைப் புரிந்துகொள்வது

*எபேசியர் 3 :18ல் உள்ள முதல் பகுதியைப் பார்ப்போம் : (நீங்கள்) "சகல பரிசுத்தவான்களோடுங்கூட இன்னதென்று உணர்ந்து." நாம் என்ன உணர்ந்துக் கொள்ள வேண்டும்? முந்தைய வசனம் விளக்கியது போலவே: கிறிஸ்து நம்மில் (பரிசுத்த ஆவியின் மூலமாக) வாழ்கிறார், அதன் மூலம் நம் வாழ்க்கை மாறுகிறது, ஏனென்றால் நாம் கடவுளின் அன்பில் வேரூன்றி, நிலைநிறுத்தப்படுகிறோம். இதன் பொருள் இயேசு கிறிஸ்து தம்முடைய குணத்தை நம்மில் வளர்க்கிறார் என்பது ஆகும். ஒரு சகோதரர் எழுதுகிறார்: "'கிறிஸ்துவுக்குள் இருப்பது' மற்றும் 'இயேசு நமக்குள் இருப்பது' பற்றிய உண்மை மிகவும் எளிமையானது, ஆனால் புரிந்துகொள்வது மிகவும் கடினம், பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அதை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை."* [68]

*பவுல் கொலோசெயர் 1:25,26-ல் கூறுகிறார்: "ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவவசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு, உங்கள்பொருட்டு தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன்." என்ன இரகசியம்? வசனம் 27 கூறுகிறது: "புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்தில் உள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்."*

*இயேசு பரிசுத்த ஆவியின் மூலம் நம்மில் வாழ விரும்புகிறார் என்ற இந்த இரகசியம் யுகங்களாக மறைக்கப்பட்டு, இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதுவே நம் மகிமையின் நம்பிக்கை என்று வசனம் கூறுகிறது. இதன் பொருள், கடவுள் நமக்கு இவ்வுலகில் ஒரு முழுமையான வாழ்க்கையை தர விரும்புகிறார், அதே நேரத்தில் நமக்கு நித்திய ஜீவனையும் வழங்க உத்தரவாதம் அளிக்கிறார் என்பதாகும்.*

*"உங்களில் கிறிஸ்து," என்னும் "மகிமையின் நம்பிக்கை" (கொலோசெயர் 1 :27) பற்றிய இரகசியத்தை எலன் உவைட் பின்வருமாறு விரிவுபடுத்துகிறார் : இந்த மறைபொருள் பற்றிய அறிவு ஒரு சிறந்த புரிதலுக்கான திறவுகோலை வழங்குகிறது. எல்லையற்ற வளர்ச்சிக்கான சாத்தியங்களை அடைவதற்கும், இது ஆத்துமாவுக்குச் சர்வலோகத்தின் பொக்கிஷங்களைத் திறக்கவும் வழி வகுக்கிறது."* [69] *திருமறை பெரும்பாலும் "உங்களில் கிறிஸ்து," போன்ற சொற்றொடரையும், மற்றும் "கிறிஸ்துவில், அவரில், கர்த்தரில், பிரியமானவரில்" போன்ற ஒத்த சொற்களையும் பயன்படுத்துகிறது. இந்தச் சொற்றொடர்கள் புதிய ஏற்பாட்டில் 170 முறை பயன்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, இந்தச் சொற்கள் பவுல் எபேசியருக்கு எழுதிய கடிதத்தில் ஒரு முக்கியமான சொல்லாக (திறவுகோல் போல) பயன்படுத்தப்படுகிறது. அவருடைய சாட்சியைப் பற்றிச் சிந்தியுங்கள் : "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்." (கலாத்தியர் 2 :20) அவர் எழுதுகிறார் : "கிறிஸ்துவானவர் என்னைக்கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை." (ரோமர் 15 :18)*

*மற்றும் பிற நன்கு அறியப்பட்ட வசனங்கள்: "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களுக்கு வெற்றியை ஏற்படுத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம்." (2கொரிந்தியர் 2 :14), "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்." (2 கொரிந்தியர் 5 :17). ஆவியின் கனியால் கொண்டுவரப்படும் குண மாற்றத்தில் இங்கே கவனம் செலுத்தப்படுகிறது: "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய*

---

[68] Dennis Smith, Spirit Baptism and Abiding in Christ (2010), p. 12.

[69] Ellen G. White, Education (Nampa, ID : Pacific Press Publishing Association, 2002), p. 172.

*செய்கையாயிருக்கிறோம்." (எபேசியர் 2 :10) ; "அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்." (1 தெசலோனிக்கேயர் 4 :16) ; "அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும் ; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்." (1 யோவான் 2 :5) ; "தேவனே தம்முடைய குமாரனை அனுப்பி, நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்." (ரோமர் 8 : 3,4) நாம் வேதகாம ஒத்திசைவு ஏட்டில் பார்த்தால், பல முக்கியமான உரைகளைக் காணலாம் அதில் "கிறிஸ்துவில், பிரியமானவரில், கர்த்தரில், அவரில்" (கிறிஸ்து) இது போன்ற முக்கியமான சொற்களை நாம் அங்கே பார்க்க முடியும்.*

# இரண்டிலொன்று "கிறிஸ்துவில்" அல்லது "கிறிஸ்துவுக்கு வெளியே"

*E. ஸ்டான்லி ஜோன்ஸ் கூறியதாவது, "பவுல் ... "கிறிஸ்துவில்" என்ற சொற்றொடரை மையமாகக் கொண்டு அதை 97 முறை தனது கடிதங்களில் பயன்படுத்துகிறார். "கிறிஸ்துவில்," "கிறிஸ்துவுக்கு வெளியே" என்ற இந்த இரண்டு சொற்களும் மனிதகுலத்தை இரண்டு குழுக்களாகப் பிரிக்கின்றன என்பதை உணர்ந்தார். கிறிஸ்துவில் உள்ளவர்கள் 'பிழைத்திருப்பவர்கள்,' கிறிஸ்துவுக்கு வெளியே இருப்பவர்கள் 'மரித்தவர்கள்'."*[70]

[70] E. Stanley Jones, In Christ (London: Hodder and Stoughton, 1961), p. 9: re- translated from German.

*ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.*

*ரோமர் 8 :1*

# தனியொருவரின் எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலூக்கான வழிகாட்டி

1. *எலன் ஜி உவைட் கருத்துப்படி, உண்மையான சத்தியம் என்றால் என்ன* ?
2. *இயேசுவை நம் இதயத்தில் அனுமதிப்பதைப் போல வேறு என்ன முக்கியமானது இருக்கிறது* ?
3. *பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதற்கு நம்முடைய நம்பிக்கை அல்லது கடவுள்மீதான விசுவாசம் என்ன பங்கு வகிக்கிறது?*
4. *இயேசுவுடனான நமது உறவு உணர்வுகளின் அடிப்படையில் இல்லாமல், அவர்மீதும் முக்கியமாக அவருடைய வார்த்தையின் அடிப்படையிலும் இருப்பதேன்?*
5. *கிறிஸ்து பரிசுத்த ஆவியின் மூலம் நம்மிடம் நிலைத்திருக்கும்போது, அவருடைய குணம் நம்மில் உருவாகிறது, இது ஆவியின் கனியாகும். இது உங்கள் வாழ்க்கையில் என்ன தாக்கங்களை ஏற்படுத்துகிறது?*

# நம் ஜெப நேரம்

*உங்கள் ஜெப பங்காளரைத் தொடர்புக் கொண்டு தலைப்பைப் பற்றி விவாதிக்கவும்.*
*உங்கள் ஜெப பங்காளருடன் ஜெபியுங்கள்:*

1. *இயேசு நம் இதயங்களில் விசுவாசத்தின் மூலம் வாழ்கிறார் - அதனால் உண்மையான சத்தியத்தைப் புரிந்து அனுபவமாகக் கொள்வதற்கு ஜெபியுங்கள்.*
2. *நம்முடைய இருதயங்களை இயேசுவிடம் ஒப்படைப்பதில் உறுதியுடன் இருக்க ஜெபியுங்கள்.*
3. *நம் வாழ்வில் பரிசுத்த ஆவியின் ஆழமான பிரசன்னத்தின் அனுபவத்திற்காக ஜெபியுங்கள்.*
4. *நம்முடைய உணர்வுகள்குறித்த சரியான முன்னுரிமை மற்றும் அவற்றை எவ்வாறு கையாள்வது என்பதற்காக ஜெபியுங்கள்.*
5. *கிறிஸ்து அளிக்கும் மகிழ்ச்சி- அது தொடர்ந்து வளர்ந்து மேலும் தெளிவாகக் காணப்பட ஜெபியுங்கள்.*

## *அத்தியாயம் 3 - பகுதி 2*

# "உங்களில் கிறிஸ்து" ஏற்படுத்தும் விளைவுகள்

***-பாவத்தின் வல்லமையிலிருந்து நாம் எவ்வாறு விடுதலையைப் பெறுகிறோம்?***

***-பாவம் செய்வதன் மூலம் நாம் மீண்டும் இம்மைக்குரியவர்களாக மாறுவோமா?***

## *"உங்களில் கிறிஸ்து" பற்றி எலன் உவைட்*

***"தேவனுடைய மக்கள் ஒன்றாகச் சேர்ந்து ஆவியில் ஒற்றுமையாக வாழும்போது, யூத தேசத்தின் பாவமாக இருந்த எல்லா பரிசேயமும், சுயநீதியும் எல்லா இதயங்களிலிருந்தும் வெளியேற்றப்படும்... யுகங்களாக மறைக்கப்பட்டுள்ள இரகசியத்தை ஆண்டவர் தெரியப்படுத்துவார். "புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்தில் உள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார் ; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்." (கொலோசெயர் 1 :27) 71***

## யோசேப்பு, தானியேல் மற்றும் அவர் தோழர்கள்

***"இந்த மெச்சத் தகுந்த இளைஞர்களின் முன்மாதிரியைப் பின்பற்ற நீங்கள் தயாராக இருக்க வேண்டும். உங்கள் தனித்துவத்தைப் பற்றி ஒருபோதும் வெட்கப்பட வேண்டாம்; அவற்றை ஏற்றுக்கொண்டு மக்கள் மற்றும் தேவதூதர்களின் பார்வைக்கு முன் அவற்றை முன் வைக்க வேண்டும். தவறான பணிவு நயத்தாலும், தவறான விவேகத்தாலும் கட்டுப்படுத்தபட வேண்டாம். நீங்கள் தேர்ந்தெடுத்த சொற்களாலும், சீரான நடவடிக்கையினாலும், உங்கள் தனியுரிமையினாலும், உன்னத பக்தியினாலும், உங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்துங்கள், ஆலயமாகிய நமது ஆத்மாவில் கிறிஸ்து அவரது சிங்காசனத்தை வைப்பார் என்று உறுதியாக இருங்கள்; தடை இல்லாமல் அவரது சேவையில் பணியாற்றுவதற்காக உங்கள் திறமைகளை அவருடைய பாதபடியில் வையுங்கள்."*** [72]

[71] Ellen White, Selected Messages, book 1, p.386.

[72] Ellen G. White, Messages to Young People (Hagerstown, MD: Review and Herald Publishing Association, 2003), p. 28

# குடும்ப வாழ்க்கை

*ஒவ்வொரு இதயத்திலும் கிறிஸ்து ஒற்றுமையைக் கொண்டுவருவார் - "கடவுளுடைய சித்தத்தை நிறைவேற்றினால், அப்பொழுது கணவன்-மனைவி ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்துவார்கள், அன்பையும் நம்பிக்கையையும் வளர்ப்பார்கள். குடும்பத்தின் அமைதியையும் ஒற்றுமையையும் சீர்குலைக்கும் எதையும் உறுதியாகத் தடை செய்ய வேண்டும், இரக்கமும் அன்பும் போற்றி வளர்க்கப்பட வேண்டும். கனிவு, சகிப்புத்தன்மை மற்றும் அன்பின் உணர்வை வெளிப்படுத்துபவரிடத்தில் கடவுளின் ஆவி பிரதிபலிப்பதைக் காண்பார். கடவுளின் ஆவி ஆளுகை செய்யும் இடத்தில், திருமண உறவில் பொருத்தமற்றது பற்றி எதுவும் பேசப்படமாட்டாது. மகிமையின் நம்பிக்கையான கிறிஸ்து உண்மையில் உள்ளே இருந்தால், வீட்டில் ஒற்றுமையும் அன்பும் இருக்கும். மனைவியின் இதயத்தில் நிலைத்திருக்கும் கிறிஸ்து கணவனின் இதயத்தில் நிலைத்திருக்கும் கிறிஸ்துவுடன் ஒத்துப்போவார். தம்மை நேசிக்கிறவர்களுக்காகக் கிறிஸ்து ஆயத்தப்படுத்தும் வசஸ்தலங்களுக்காக அவர்கள் ஒன்றாக ஆயத்தப்படுவார்கள்." 73*

*"உங்கள் வீடுகள் ஆபிரகாமின் வீட்டைப் போல இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். அவன் தனக்குப் பின் தன் குடும்பத்தினர், கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி அவர்களுக்குக் கற்பித்தான். தாய்மார்களே, நீங்கள் பொறுமையாக உங்கள் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டிய பாடங்கள் இவை. இன்றைய நாகரிகங்களைப் படிப்பதில் நீங்கள் நேரத்தைச் செலவிட கூடாது. பிள்ளைககள் கிறிஸ்துவின் சொத்து என்று அவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள். அவர்களின் குணநலன்களை இப்போதே உருவாக்கி வடிவமைக்க வேண்டும். இளைஞர்களே, இளம் பெண்களே, உங்கள் எதிர்காலத்தை இன்று நீங்கள் தீர்மானிக்க வேண்டும். கிறிஸ்து உங்களுக்குள் வர அனுமதியுங்கள், அப்பொழுது அவர் உங்களைச் சோதனையிலிருந்து காப்பாற்றுவார்." 74*

# வெற்றி பெறுவது

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான் ; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின." (2 கொரிந்தியர் 5 : 17) ஆண்களும் பெண்களும் பாவ பழக்கத்தின் சங்கிலிகளைக் கிறிஸ்துவின் பலத்தால் உடைத்துள்ளனர். அவர்கள் சுயநலத்தை கைவிட்டுள்ளனர். தெய்வ நிந்தனை செய்தவர் பயபக்தியுடனும், குடிப்பழக்கமுள்ளவர் குடி மயக்கமற்று நிதானமுடனும், தீயொழுக்கமுடையவர் தூய்மையானவர்களாகவும் மாறிவிட்டார்கள். சாத்தானின் சாயலைப் பெற்ற ஆத்மாக்கள் கடவுளின் சாயலாக மாற்றப்பட்டுள்ளனர். இந்த மாற்றம் அதிசயத்தில் அதிசயமே, இது வார்த்தையால் வந்த மாற்றம் என்று மட்டுமே நாம் நம்ப முடியும், இது வேதத்தின் ஆழமான மறைபொருள்களில் ஒன்றாகும். அதை நாம் புரிந்து கொள்ள முடியாது; வேதவசனங்களால் அறிவிக்கப்பட்டபடி, 'கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.' (கொலோசெயர் 1 :27)" 75*

# இயேசுவின் கடிதங்கள்

*"உலகில் உள்ள அவருடைய எல்லா பிள்ளைகளுக்கும், இயேசு ஒரு கடிதத்தை அனுப்புகிறார். நீங்கள் கிறிஸ்துவின் சீஷராக இருந்தால், உங்கள் மூலமாக அவர் உங்கள் குடும்பத்திற்கும், கிராமத்திற்கும், நீங்கள் வசிக்கும் தெருவுக்கும் கடிதத்தை அனுப்புகிறார். உங்களிடத்தில் வசிக்கும்*

[73] Ellen G. White, The Adventist Home (Hagerstown, MD: Review and Herald Publishing Association, 2002), p. 120.
[74] Ellen G. White, Temperance (Nampa, ID: Pacific Press Publishing Association, 2004), pp. 290, 291.
[75] Ellen G. White, The Acts of the Apostles, p.476.

*இயேசு, அவரைப் பற்றி அறிமுகமில்லாதவர்களின் இதயங்களுடன் பேச விரும்புகிறார். ஒருவேளை அவர்கள் பரிசுத்த வேதாகமத்தைப் படிக்கவில்லை, அல்லது அதன் பக்கங்களில் அவர்களுடன் பேசும் அவர் குரலைக் கேட்கவில்லை; மேலும் அவருடைய படைப்புகளின் வழியாக அவர்கள் கடவுளின் அன்பைக் காண முடியாமலும் இருக்கலாம். ஆனால் நீங்கள் இயேசுவின் உண்மையான பிரதிநிதியாக இருந்தால், உங்கள் மூலமாக அவருடைய நன்மைகளில் ஏதேனும் ஒன்றைப் புரிந்துகொள்வதற்கும், அவரை நேசிக்கவும், சேவை செய்யவும் வழிநடத்தப்படுவார்கள்."* [76]

# தேவனின் அகபக்கம் - அன்பு

*கிறிஸ்து, பரிசுத்த ஆவியின் மூலம் நம்முடன் நெருக்கமான ஒரு உறவைப் பெற விரும்புகிறார். இங்கே, கடவுள் தனது மகத்தான அன்பை ஒரு விசேஷமான விதத்தில் நமக்குக் காட்ட முயற்சிக்கிறார், இது கடவுளின் குணாதிசயங்களில் ஒன்றாகும். கிறிஸ்து என்னில் வாழ்கிறார் என்பது புரிந்துகொள்ள முடியாத ஒன்று, ஆனால் அவருடைய வார்த்தை இதை நமக்கு உறுதிப்படுத்துகிறது, எனவே இது உண்மையாகிறது.*

*ஒருமுறை ஒரு தந்தை தனது மகனுடன் கடல் பயணம் செய்துகொண்டிருந்தார், அப்பொழுது கடவுளின் அன்பைப் பற்றித் தனது மகனுக்கு விளக்க விரும்பினார். எனவே தந்தை மகனிடம், "கப்பலின் முன்னால் உள்ள வில்வளைவு அதைப் பார், அடுத்து கப்பலின் பின்புறத்தைப் பார் - இதுவே கடவுளின் அன்பின் நீளம். இப்போதும் இடது மற்றும் வலது புறம் பார்- இதுவே கடவுளின் அன்பின் அகலம். இப்போது வானத்தை நோக்கிப் பார் - இது கடவுளின் அன்பின் உயரம். இப்போது தண்ணீரைப் பார், கடல் நமக்குக் கீழ் ஆழமாக இருக்கிறது - அதுவே கடவுளின் அன்பின் ஆழம் என்றார்." இந்த விளக்கத்தைப் பற்றி அந்த இளைஞன் ஒரு கணம் யோசித்து, பின்னர் பிரகாசிக்கும் முகத்துடன் உணர்ச்சி மீதூரக் கூச்சலிட்டான்: "அப்பா, இதில் சிறந்த பகுதி என்ன தெரியுமா? நாம் அதன் நடுவே இருக்கிறோம் என்றான்." தனது வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட ஒவ்வொருவரும் கடவுளின் அன்பின் வட்டத்திற்குள் இருக்கிறார்கள். நாம் வாழ இதைவிட சிறந்த இடம் எதுவுமில்லை. என் அற்புதமான தந்தை என்னை இந்த வட்டத்திற்குள் வைத்திருக்க நான் தினமும் காலையில் ஜெபிக்கிறேன்.*

# இறுதியான முடிவு - பரிபூரணமான வாழ்க்கை

*இயேசு நம்மீது வைத்திருக்கும் அன்பை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று பவுல் விரும்புகிறார், ஏனெனில் இந்த அன்பின் மூலம் நாம் முழுமையாக நிரப்பப்படுகிறோம். இந்த வசனம் இவ்வாறு கூறுகிறது: "அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்." (எபேசியர் 3 :19)*

*கிறிஸ்து நம்மில் வாழ்ந்தால் என்ன ஆகும் என்று உங்களுக்குத் தெரியுமா? கடவுளின் முழுமையைப் பெறுவதற்கான ஒரே வழி இது. யோவான் 10:10 ல், கிறிஸ்து, "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்கிறார். கொலோசெயர் 2 : 9,10 கூறுகிறது, "ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக, அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்." கடவுளின் பரிபூரணம் உங்களிடம் இருக்கிறதா? கடவுள் அதை உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறார். தேவையான செயல்களைச் செய்யுங்கள்!*

[76] Ellen G. White, Steps to Christ, p. 115.

# நாம் வேண்டுவதற்கும் மேலான பதில்கள்

*எபேசியர் 3: 20-ல் கொடுத்துள்ள வாக்குத்தத்தின்படி கர்த்தர் நம்முடைய ஜெபங்களுக்கு பதிலளிக்கும்படி நாம் ஜெபிக்கலாம்: "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவர்." இந்த வாக்குத்தத்தின் அடிப்படையில், நம்முடைய அற்புதமான இரட்சகர் நாம் கேட்டபடி நம்முடைய ஜெபங்களுக்கு பதிலளிப்பது மட்டுமல்லாமல், நம்முடைய வேண்டுகோளுக்கும், புரிதலுக்கும் அப்பாற்பட்டு, அவருடைய மகிமை மற்றும் வல்லமையின் ஐசுவரியத்தின்படி ஏராளமாக ஆசீர்வதிக்கிறார். இதற்கு மேலே, எரேமியா 33: 3ல் உள்ளபடியும் ஜெபிக்கலாம், கடவுள் நம்முடைய ஜெபத்திற்கு பதிலளிப்பார், பெரிய மற்றும் உயர்வான விஷயங்களை நமக்கு வெளிப்படுத்துவார்: "என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்."*

# இயேசுவின் வாழ்க்கை என்னில் என்ன விளைவுகளை ஏற்படுத்துகிறது?

*"அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்." (1கொரிந்தியர் 1 :30) ; "முத்துக்களைப் பார்க்கிலும் ஞானமே நல்லது ; இச்சிக்கப்படத்தக்கவைகளெல்லாம் அதற்கு நிகரல்ல." (நீதிமொழிகள் 8 :11) ; "இருளைப் பார்க்கிலும் வெளிச்சம் எவ்வளவு உத்தமமோ, அவ்வளவாய் மதியீனத்தைப் பார்க்கிலும் ஞானம் உத்தமமென்று கண்டேன்." (பிரசங்கி 2 :13) ; "நகரத்தில் உள்ள பத்து அதிபதிகளைப் பார்க்கிலும், ஞானம் ஞானியை அதிக பெலவானாக்கும்." (பிரசங்கி 7 :19) கிறிஸ்து நமது ஞானக் கன்மலை. கிறிஸ்து நம்மில் இருக்கும்போது நாம் ஞானமாகச் செயல்பட முடியும். கிறிஸ்துவில் இல்லாமல், நாம் மிகவும் ஞானமாக இருக்கவும் முடியும், ஆனால் நாம் அதே நேரத்தில் மிகவும் முட்டாள்தனமாகவும் இருக்க முடியும். ஆதாம் மற்றும் ஏவாளை நினைவில் கொள்வோம், அவர்கள் மிகவும் புத்திசாலிகள் மற்றும் கடவுளை நம்புவதற்கு பதிலாகச் சுயமாகச் செயல்பட்டதால் மிகவும் முட்டாள்தனமாகச் செயல்பட்டனர். நான் அறிவாளியா ஞானியா என்பது 'கிறிஸ்துவில்' இருப்பதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறது.*

*இது ஒரு அருமையான வசனம். "அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப்... அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்." (ரோமர் 8 :3,4) கிறிஸ்து நமக்கு நீதியாக இருக்கிறார். இதன் பொருள் மனிதகுலத்தின் வீழ்ச்சியில் இழந்த நீதியை அவர் மூலமாக மீண்டும் பெற முடியும். ஆவியினால் நடப்பவர்களுக்கு, இயேசு மூலமாக நீதி நிறைவேறும் என்று வசனம் கூறுகிறது என்பதை நினைவில் கொள்க. இவ்வாறு கிறிஸ்து நம்மில் வாழ்கிறார்.*

*டென்னிஸ் ஸ்மித் எழுதுகிறார்: "விசுவாசத்தின் மூலம் நீதியானது ஒரு மனிதனை நீதிமான் ஆக்கி மேலும் பரிசுத்தப்படுத்தும் தன்மைக் கொண்டுள்ளது. நீதியின் அர்த்தம் கடவுள் விசுவாசியைப் பாவத்திலிருந்தும், தண்டனையிலிருந்தும் விடுவித்து, மனந்திரும்பிய பாவியைக் கிறிஸ்து தன் நீதியால் போர்த்துகிறார் (முழுமையான கீழ்ப்படிதல்) என்பதாகும்." 77 இவ்வாறு மிகவும் அற்புதமான ஒரு பரிமாற்றம் நடைபெறுகிறது: கிறிஸ்து என் பாவபழியை எடுத்துக்கொண்டு அவருடைய நீதியை எனக்குத் தருகிறார். இந்தப் பரிமாற்றத்தின் மூலம் நாம்*

---

[77] Dennis Smith, 40 Days: Prayers and Devotions to Revive Your Experience with God, book 2, p. 18.

*ஒருபோதும் பாவம் செய்யாதது போல் பிதாவின் முன் நிற்கிறோம். "மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்." (சங்கீதம் 103 : 12) கடவுளின் கிருபையால் நாம் பாவசுமையின்றி வாழ்க்கையில் நடக்க முடியும்.*

*கிறிஸ்து நமக்காகப் பரிசுத்தமாக்கப்பட்டார். பரிசுத்தமாகுதல் என்றால் என்ன? "உண்மையான பரிசுத்தமாகுதல் என்பது பரிபூரண அன்பு, பூரண கீழ்ப்படிதல், தேவ சித்தத்துடன் முழுமையான இணக்கம்" என்று பொருள்.78 கிறிஸ்து நம்மில் வாழ்வதன் முக்கியத்துவம் என்னவென்றால், மகிழ்ச்சியான கீழ்ப்படிதலை நாம் கொண்டிருக்க வேண்டும், மேலும் இது "இயேசு மூலமாகக் கீழ்ப்படிதல்" (4 ஆம் அத்தியாயத்தில்) மேலும் விரிவாக விவாதிக்கப்படும். கிறிஸ்து நமது இரட்சிப்பு ஆனார், அதாவது நமது எல்லா குற்றங்களுக்கும் மன்னிப்பு, பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை மற்றும் மகிமையான தேவ ராஜ்யத்தில் நித்திய ஜீவனையும் பெற முடியும். இயேசு தம்மையே பலியாக்கியதின் மூலம் மீட்கும் தொகையைச் செலுத்தினார்.*

*ஆப்பிரிக்காவில் அடிமை வாணிகத்தின்போது, கைதிகள் கழுத்தில் இரும்புக் கழுத்தணி வளையம் பூட்டப்பட்டிருந்தனர், மேலும் மற்ற கைதிகளுடன் ஒரு சங்கிலியுடன் இணைக்கப்பட்டனர். எப்போதாவது இந்த ஏழை மக்களில் ஒருவர் மீட்கப்பட்டார், மீட்கும் தொகை வழங்கப்பட்டவுடன், கைதி தனது இரும்புக் கழுத்தணி வளையத்திலிருந்து விடுவிக்கப்பட்டார். அதேபோல் இயேசு நம்மை மீட்டுக்கொண்டார்- அவர் நமக்கு விலை கொடுத்தார்.*

*"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது." (பிலிப்பியர் 2 : 5) நாம் இதை ஜெபத்தில் உரிமை கோரும்போது இயேசுவின் சிந்தை நம்மில் படிப்படியாக வளரும், மேலும் நாம் கிறிஸ்துவை உள்ளே அனுமதிக்கும்போது, அவருடைய சிந்தனை மற்றும் செயல் நம்மில் வெளிவர அனுமதிப்பார். அவர் நேசிப்பதை நாம் நேசிப்போம், அவர் விரும்பாத விஷயங்களிலிருந்து நாம் விலகி இருப்போம்.*

# இயேசு என் மூலமாக நற்கிரியைகளை நிறைவேற்றுகிறார்

*கடவுளுடைய வார்த்தை எபேசியர் 2: 10 ல் இவ்வாறு கூறுகிறது: "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்." கடவுள் உங்களுக்காகவும் எனக்காகவும் நற்கிரியைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார் - நாம் "கிறிஸ்துவில்" இருந்தால் - அதை நாம் நிறைவேற்ற முடியும். இந்தப் பணியை நிறைவேற்றுவதன் மூலம் நம்முடைய கர்த்தர் ஒரு தனித்துவமான வழியைத் திட்டமிட்டுள்ளார். இந்த வேலையில் அவருக்காகவும் மற்றவர்களுக்காகவும் பணியாற்றுவதன் மூலம், மூன்று விஷயங்கள் செயல்படுகின்றன:*

1. *நான் மற்றவர்களுக்காக வேலை செய்யும்போது என் அகங்காரம் தொடர்ந்து குணப்படும்.*
2. *மற்றவர்கள் என்மூலம் ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள்.*
3. *கர்த்தர் எனக்குப் பெரிய ஆசீர்வாதங்களை திருப்பி அனுப்புகிறார்.*[79]

*விசுவாசத்தின் மூலம் நாம் அதில் வளருவோம்; நம் செயல்முறை, மனம் மற்றும் ஆவிக்குரிய திறன்கள் வளரும், நம்முடைய மகிழ்ச்சியும் பலமும் அதிகரிக்கும், மேலும் இந்தச் செயல்முறையின்*

---

[78] Ellen G. White, The Acts of the Apostles, p. 565.

[79] Book 3 in miniseries *Steps to Personal Revival entitled* "Spirit- Filled Co-Workers of Jesus- How Can I Become That?" (2019).

*மூலம், நாம் தேவனுடைய ராஜ்யத்திற்காக உழைக்கிறோம். இந்தப் பணி கடவுளுடைய ராஜ்யத்திற்கு நம்மைத் தயார்படுத்தும். இதில் இன்னொரு பெரிய கேள்வி உள்ளது: நான் என் மனித பலத்தில் கடவுளுக்காக உழைக்கிறேனா அல்லது நம்முடைய ஆண்டவர் அவருடைய தெய்வீக வல்லமையால் என் வழியாகச் செயல்பட முடியுமா?*[80]

# *நான் அவருடைய சாட்சியாக இருக்க உதவுகிறார்*

*"இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்." (லு◌ூக்கா 19 :10) ; "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்." (அப்போஸ் 1 :8) அவர் இயல்பாக என் மூலமாக மக்களை இரட்சிப்பிற்கு அழைத்துச் செல்வார். "உங்களில் வசிக்கும் இயேசு, அவரைப் பற்றி அறிமுகமில்லாதவர்களின் இதயங்களுடன் பேச விரும்புகிறார்."*[81] *"இயேசுவின் மூலம் ஈ.ர்க்கும் விசுவாசம்" என்ற இந்த 5 ஆம் அத்தியாயத்தின் கீழ் மேலும் இதைப் பற்றி அறிந்து கொள்வோம்.*

*"நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்" என்று நமக்கு உறுதியளிக்கிறார். (யோவான் 14 :13) ; கடவுள் நம்மை "பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ண" (யூதா 1 :20ல்) வலியுறுத்துகிறார். கிறிஸ்து பரிசுத்த ஆவியின் மூலமாக நம்மில் வாழும்போது, நாம் பரிசுத்த ஆவியோடும் இயேசுவின் பெயராலும் ஜெபிக்க முடியும். மேலும், "நாம் கிறிஸ்துவின் நாமத்தில் மட்டுமல்ல, பரிசுத்த ஆவியின் தூண்டுதலால் ஜெபிக்க வேண்டும்" 82 என்று நமக்குத் தெளிவாகக் கூறப்படுகிறது.*

*இயேசுவின் பெயரால் ஜெபிப்பதன் அர்த்தம் என்ன? "இயேசுவின் பெயரால் ஜெபிப்பது என்பது ஜெபத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் அந்தப் பெயரைக் குறிப்பிடுவது மட்டுமல்ல, அதைவிட அதிகமாகும். இயேசுவின் சிந்தனையுடனும் ஆவியுடனும் ஜெபிக்க வேண்டும், அதே சமயம் அவருடைய வாக்குத்தத்தங்களை நம்பி, அவருடைய கிருபையைச் சார்ந்து, அவருடைய வேலையைச் செய்ய வேண்டும்." 83 இவ்வாறு, கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிப்பது நான்கு அம்சங்களைக் கொண்டுள்ளது:*

1. *இயேசுவின் ஆவியுடன் ஜெபிப்பது என்பது பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதாகும்.*
2. *அவருடைய வாக்குத்தத்தங்களை நம்புவது என்பது நாம் ஜெபிக்கும்போது அவற்றைக் கோருவதாகும்.*
3. *விசுவாசத்தோடு அவருடைய கிருபையை நம்பியிருப்பது என்பது கடவுளுடன் அற்புதமான பரஸ்பர நம்பிக்கை உறவைக் கொண்டிருப்பதாகும். அவருடைய செயல்களைச் செய்வது என்பது எடுத்துக்காட்டாக, அவருடைய ஆவியின் மூலமாக, எல்லாவற்றிலும் கீழ்ப்படிவதாகும்.*

*நாம் கிறிஸ்துவில் இருக்கும்போது, இந்த முன்நிபந்தனைகள் அனைத்தும் அவருடைய கிருபையால் நிறைவேறும். ஆகவே, இயேசுவின் நாமத்தில் ஜெபம் செய்வது என்பது அவருடைய வல்லமையால் ஜெபிப்பதாகும். நம்முடைய ஜெபங்களுக்கு பதிலளிப்பதாக அவர் வாக்குறுதி அளித்துள்ளார். இயேசு தம்மிடம் நிலைத்திருப்பவர்கள் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருப்பதை இது காட்டுகிறது. நம்மில் உள்ள கிறிஸ்துவின் மூலம் எல்லா வாக்குத்தத்தங்களையும் நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்.*[84] *"தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே." (2 கொரிந்தியர் 1 :20) ; "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும்*

---

[80] For more particulars, see: www.steps-to-personal-revival.infounder "Development".
[81] Ellen G. White, Steps to Christ, p, 115.
[82] Ellen G. White, *Christ's Object Lessons*, p. 147.
[83] Ellen G. White, *Steps to Christ*, pp. 100, 101.
[84] Claiming promises in prayer is dealt with in more detail in *Steps to Personal Revival* by H. Haubeil, Chapter 5: "The Key to Practical Experience".

*தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, [இது இயேசு கிறிஸ்துவுடன் ஒரு நெருக்கமான உறவைக் குறிக்கிறது] இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது." (2 பேதுரு 1 : 3,4) கடவுளின் அற்புதமான வழியைக் கவனியுங்கள் : தேவபக்தியுள்ள வாழ்க்கை முறை வாழ்வதற்கு நமக்குத் தேவையானதை அவர் ஏற்கனவே நமக்குக் கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவுடனான நெருக்கமான உறவின் மூலம் இந்த ஈவுகளை நாம் பெறுகிறோம். ஜெபத்தில் வாக்குத்தத்தங்களைக் கோருவதன் மூலம், இந்தக் காரியங்கள் நமக்கு அருளப்படுகின்றன, அதாவது, விசுவாச ஜெபங்கள் மூலம் நாம் தெய்வீக இயல்பில் பங்கெடுக்கிறோம்.*

# *பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலை*

*"ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. [அதுவே வாழ்வு அளிக்கும் -பரிசுத்த ஆவியின் வல்லமை] கிறிஸ்து இயேசுவினாலே ஜீவ ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே." (ரோமர் 8 :1,2)*

*கிறிஸ்து இயேசுவில் நிலைத்திருப்பவர்களுக்கு ஏன் ஆக்கினை இல்லை? ஏனெனில் முதலாவதாக, என் பாவபழியை கிறிஸ்து தன்மீது எடுத்துக்கொண்டதால். இரண்டாவதாக, அவர் நம்மில் இருக்கும்போது, நம் மீதான பாவத்தின் அடிமைத்தனம் உடைக்கப்படுகிறது; நாம் பாவ பிரமாணத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளோம். இதன் பொருள் நாம் இனி பாவம் செய்ய வேண்டியதில்லை, ஆனால் நாம் இன்னும் பாவம் செய்ய முடியும். பாவத்தின் வல்லமையிலிருந்து விடுபடுவதைப் பற்றிக் கலாத்தியர் 5: 16 கூறுகிறது: "ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், [பொருள்: தொடர்ந்து பரிசுத்த ஆவியுடன் வாழ்வது] அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்."*

*கலாத்தியர் 5: 17, 18 வசனங்கள், வாழ்க்கை பரிசுத்த ஆவியுடன் இணைக்கப்பட வேண்டும் என்று விளக்குகிறது; 19-21 வசனங்கள் மாம்சத்தின் செயல்களைப் பட்டியலிடுகின்றன, அதனால் நாம் பரிசுத்த ஆவியோடு வாழும்போது இனி பாவம் செய்ய வேண்டியதில்லை. நம்மில் உள்ள கிறிஸ்து பாவத்திலிருந்தும், வீழ்ந்த தேவதூதர்களின் செயல்களிலிருந்தும் நம்மைப் பாதுகாக்கிறார் என்பதை 1யோவான் 5:18 உறுதிப்படுத்துகிறது: "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்." கிறிஸ்து நம்முடைய இருதயங்களை பரிசுத்த ஆவியினால் நிரப்புகிறார், இதனால் தீமைக்கு இடமில்லை. இருப்பினும், இந்தக் கட்டத்தில், இதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும், "உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது." (2 கொரி 4:16)*

# *நம்மில் உள்ள கிறிஸ்து நம்மை பாவம் செய்யாதபடி ஊக்குவிக்கிறார்*

*பாவத்தைப் பற்றிய பின்வரும் தெய்வீக வார்த்தைகளை வேதத்தில் படிக்கிறோம்: "அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை. பிள்ளைகளே நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள் ; நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோலத் தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான். பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான் ; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே*

*தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது ; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்." (1யோவான் 3 : 6-9)*

*பாவம்பற்றிச் சுட்டிக்காட்டப்பட்ட இந்தச் சொற்கள் வழக்கமான பாவத்தைக் குறிப்பதாகப் பண்டைய கிரேக்க வல்லுநர்கள் சொல்கிறார்கள். அசல் கிரேக்க உரையின்படி, "அவர் தொடர்ந்து பாவம் செய்யமாட்டார், அதாவது, [எப்போதாவது அவர் பாவத்தில் விழக்கூடும்]. கடவுளின் பிள்ளைகளாகிய நாம் சரியானதைச் செய்கிறோம் மேலும் கடவுளுடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்கிறோம்." 85 இதன் பொருள் என்னவென்றால் கிறிஸ்து நம்மிலும் மற்றும் நம்முடனும் இருக்கும்போது, நம்முடைய பாவமான பழக்கங்களை நாம் கைவிட முடிகிறது. நம்முடைய வாழ்க்கை "கிறிஸ்துவில் இருக்கும்போது" பாவங்களைச் செயங்கொள்ள அது உதவுகிறது.*

# *பாவம் செய்வதன் மூலம் நாம் மீண்டும் இம்மைக்குரிய மக்களாக ஆகிவிடுவோமா?*

*இந்த அற்புதமான மாற்றத்தின் மூலம் நாம் பாவமற்ற நிலையை அடையவில்லை என்பதை நினைவில் கொள்வோம். நாம் பலவீனம், துணிகரம், அல்லது அறியாமை ஆகியவற்றின் மூலம் பாவத்தில் விழலாம். அத்தகைய நிலை ஏற்பட்டால், நமக்குள் "ஆவி புதுப்பிக்கப்பட" வேண்டும். இதன் பொருள் நம்முடைய பாவத்தை ஒப்புக்கொள்வது, மன்னிப்பை ஏற்றுக்கொள்வது, மீண்டும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டும் என்று கேட்பதும் ஆகும். புதுப்பிக்கப்பட்ட ஆவியை நாம் பெறும் வரை, நாம் ஆன்மீக கிறிஸ்தவர்களாகவே இருப்போம், இம்மைக்குரிய மக்களாக மாறமாட்டோம். கடவுளுடனான நமது ஆன்மீக உறவைப் பாவம் துண்டிக்காது; இருப்பினும், இது நாம் எதிர்கொள்ள வேண்டிய ஒரு இடையூறு ஆகும்.*

*நம்பிக்கையின்மை வேரூன்ற அனுமதிக்கும்போதும், மற்றும் "ஆன்மீக ரீதியில் புதுப்பிக்கப்படுவதை" விட்டுவிடும்போதும் நாம் மீண்டும் இம்மைக்குரிய மக்களாக ஆகிவிடுவோம். கிறிஸ்துவின் இரண்டாவது வருகைவரை நம்முடைய பாவ இயல்பு நம்முடன் இருக்கும். எந்த அப்போஸ்தலரும் தங்களை இதுவரை பாவமற்றவர்கள் என்று உரிமை கோரவில்லை. எவ்வாறாயினும், "நமக்குள் கிறிஸ்து" என்பது பாவத்துடனான நமது உறவில் ஒரு உறுதியான மாற்றத்தை ஏற்படுத்துகிறது.*

# *நடைமுறைத் தீர்வு*

*அப்போஸ்தலன் யோவான் எழுதுகிறார்: "நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்." (1 யோவான் 2 :1) கிறிஸ்துவில் நாம் பாவமில்லாத வாழ்க்கையை நடத்த வேண்டுமெனக் கடவுள் விரும்புகிறார், ஆனால் நாம் பாவம் செய்தால், நமக்காகப் பரிந்து பேசுகிறவரிடம் மன்னிப்பு கேட்டு அதைப் பெறலாம். எலன் உவைட் கூறுகிறார், "பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் மூலமாக மட்டுமே பாவத்தை எதிர்த்து ஜெயிக்க முடியும்., அவர் எந்த மாற்றியமைக்கப்பட்ட ஆற்றலுடனும் வரமாட்டார், ஆனால் தெய்வீக வல்லமையின் முழுமையுடன் வருவார்." [86] கிறிஸ்து பரிசுத்த ஆவியின் மூலம் நம்மில் வாழ்கிறார், நம்மீது இருந்த பாவத்தின் வல்லமை உடைந்துவிட்டது, மேலும் அது நாம் அடிக்கடி பாவம் செய்யும் நிலையைக் குறைக்கும்.*

---

[85] Werner E. Lange, Hrgb., Unser gröβtes Bedürfnis (Lüneburg: 2011), S. 31.
[86] Ellen G. White, Ye Shall Receive Power, January 5, p. 13.

# நல் ஆரோக்கியம்

*நம்மில் உள்ள கிறிஸ்து நம் ஆரோக்கியத்தை கவனித்துக்கொள்ள ஊக்குவிப்பார்: "பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்." (3 யோவான் 1 :1) ; "சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக, உங்கள் ஆவி ஆத்துமா சரீரம்முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்." (1 தெசலோனிக்கேயர் 5 :23,24)*

*டாக்டர் சாங் லீ என்ற மரபியலாளர் ஆற்றிய ஒரு சொற்பொழிவில், கிறிஸ்துவுடன் ஒரு நம்பிக்கையான நல்ல உறவு இருக்கும்போது நமது மரபணுக்கள் சிறப்பாகச் செயல்பட்டு ஆரோக்கியமான சுரப்புநீரை (ஹார்மோன்) உருவாக்குகின்றன என்பதை அவர் வலியுறுத்தினார்.*

*விசுவாசத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் உள்ள தொடர்பைப் பற்றிய தகவல் உலகிற்கு இப்போது தேவைப்படும் ஒரு அவசரச் செய்தியாகும். இந்தச் செய்தியை இயேசுவின் சீடர்களால் மட்டுமே கொண்டு செல்ல முடியும், ஏனெனில் அவர்கள் தங்களையும் தங்களிடம் உள்ள அனைத்தையும் தினமும் அர்ப்பணிக்கிறார்கள், அவர்கள் தினமும் பரிசுத்த ஆவியானவரைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளுகிறார்கள், மற்றும் தனிப்பட்ட முறையில் அவர்கள் சுகாதார சீர்திருத்த ஆலோசனையின்படி வாழ்கின்றனர்.*

*பேராசிரியர் க்ரோசார்ட்-மாட்செக்கின் மேற்பார்வையின் கீழ் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக 35,000 பேர்மீது மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பின்வருமாறு: கடவுளுடன் ஒரு இயல்பான, உள்ளார்ந்த அன்பின் உறவுதான் நல்ல ஆரோக்கியத்திற்கான பலமான காரணம் என்பதைக் காட்டினார். இந்த உறவு இருக்கும்போது, ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி மற்றும் நல்வாழ்வு போன்ற பிற சுகாதார காரணிகள் பல மடங்கு வலுவாகின்றன.[87] இது பின்வரும் வேதாகம வசனத்தின் அர்த்தத்தைத் தெளிவாகக் காட்டுகிறது: "சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது." (1 தீமோத்தேயு 4 :8) 40 நாட்கள் என்னும் தொடரின் 3வது புத்தகத்தில் : "கடவுளின் சுகாதாரக் கோட்பாடுகள் கடைசி கால மக்களுக்காக" (40வது நாள் தலைப்பு), என்பதில் டென்னிஸ் ஸ்மித், இங்கே அவர் நாம் பொதுவாக அறிந்திருப்பதை விட ஆரோக்கியத்திற்கு முற்றிலும் மாறுபட்ட அணுகுமுறையைக் காட்டுகிறார். பரிசுத்த ஆவியின் வல்லமை எவ்வாறு வாழ்க்கை முறைகளை மாற்றத் தூண்டுகிறது மற்றும் செயல்படுகிறது என்பதை அவர் பகிர்ந்து கொள்கிறார். எனவே, ஆரோக்கியமான உணர்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் உண்டு.*

*ஸ்மித் இவ்வாறு குறிப்பிடுகிறார்: "இந்த 40-நாட்கள் தியானம், முழுமையான உடல், உணர்வு மற்றும் ஆன்மீக புதுப்பித்தலைப் பெறுவதற்கு நாம் கடவுளுடன் எவ்வாறு ஒத்துழைக்க முடியும் என்பதை நமக்குக் காண்பிக்கும், இதை நாம் அனுபவிக்க வேண்டும் என்று அவர் மேலும் விரும்புகிறார்."[88]*

*ஒரு தொழிலதிபர் எழுதினார்: "நான் தினமும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதன் மூலம் சுகாதார செய்தியை ஏற்றுக்கொண்டேன். இதற்கு முன்பு, ஒரு சுகாதார கருத்தரங்கு கூட என்னைப் பாதிக்கவில்லை. நான் இறைச்சியை விரும்பினேன், நான் என்ன வகையான இறைச்சி உணவைச் சாப்பிடுகிறேன் என்று கவலைப்படவில்லை; மேலும், நான் காபி மற்றும் தேநீர் அருந்தினேன், இதை நான் ஒரு பிரச்சினையாக நினைக்கவில்லை, அவ்வப்போது நான் பீர் குடித்தேன். 2009 முதல் நான் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டும் என்று தினமும் ஜெபித்துக் கொண்டிருந்தேன்.*

[87] According to Medical Wellness mit Newstart-Plus, by Drs. Heide (Leipzig: 2014), pp. 333, 334.
[88] Dennis Smith, 40 Days: God's Health Principles for His Last-Day People, book 3 (Hagerstown, MD: Review and Herald Publishing Association, 2012), Day1.

*இறைச்சி, காபி, தேநீர், பீர் ஆகியவற்றை உட்கொள்வதைத் விட்டொழிக்க அவர் என்னைத் தெளிவுப்படுத்தினார், நான் சைவம் ஆனேன். இச்சையடக்கம் மற்றும் வாழ்க்கை முறை உட்பட எல்லாவற்றிலும் வெற்றிக்கான அடித்தளம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட ஒரு வாழ்க்கை மட்டுமே என்பதை நான் உணர்ந்தேன்." [89]*

*ஒரு சகோதரி, "முழுமையான சரணடைதல் என் வாழ்க்கையை மாற்றியது" என்ற தலைப்பில் எழுதினார்: [நாங்கள் இங்கே சுகாதார அம்சங்களை மட்டுமே பகிர்ந்து கொள்கிறோம்] "நான் தினமும் பரிசுத்த ஆவியானவரை என் இதயத்தில் வாழவும் செயல்படவும் அழைக்கிறேன். இப்போது நான் முன் போல் பல முறை சாப்பிடுவதில்லை. என் சொந்த சக்தியில் அது சாத்தியமற்றது. நான் தினசரி தேவைகளை மிகவும் அமைதியாகப் பூர்த்தி செய்ய முடியும், மேலும் மன அழுத்தம் என் வயிற்றுக்கு அதிக சிக்கல் கொடுக்கவில்லை. காபி குடிப்பதை நிறுத்துவதற்கான பலத்தையும் கடவுள் எனக்குக் கொடுத்தார். முன்னதாக, இது நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்திருக்கும், ஏனென்றால் நான் காபி குடிப்பதை விட்டபோது ஐந்து நாட்களுக்குப் பயங்கரமான தலைவலி இருந்தது. இவை பின்வாங்குதற்கான கடுமையான அறிகுறிகள். ஆனால் இந்த முறை நான் எதிர்கொள்ள வேண்டிய விளைவுகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. இனி நான் அதைச் செய்ய விரும்பவில்லை என்று மட்டுமே எனக்குத் தெரியும். இன்று, அதற்கான விருப்பம் எனக்கு இல்லை. இறைச்சி விஷயத்தில் எனக்கு இதே அனுபவம் இருந்தது. நானும் எனது குடும்பத்தினரும் ஒருபோதும் இறைச்சி உண்பதைத் தவிர்க்க விரும்பியதில்லை. இன்று அது எனக்கு எளிதானது- எனக்கு அதில் விருப்பமில்லை." [90] நம்முடைய முன்னணி சுகாதார நிபுணர்களில் ஒருவர் இவ்வாறு எழுதினார்: "நம் காலத்தின் உண்மையான தேவை வெறும் சுகாதாரக் கல்வி அல்ல- நம்மிடம் சிறந்த தகவல்கள் உள்ளன. தேவை என்னவென்றால் சுகாதார தகவல்களை நடைமுறைக்குக் கொண்டுவரும் வல்லமையுடன் உள்ள ஒரு தொடர்பு. இது மாற்றும் வல்லமையைப் பற்றியது ஆகும்".[91] ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் மூலமாகக் கிறிஸ்து நம்மில் இருப்பதால், மாறும் வல்லமையை நமக்குச் சுவிசேஷம் அளிக்கிறது.*

# ஹட்சன் டெய்லரின் வாழ்க்கையில் ஏற்பட்ட பெரும் மாற்றம்

*சீனா-உள்நாட்டு மிஷனுக்கு ஹட்சன் டெய்லர் பொறுப்பு வகித்தப்போது, அவர் தனது மிஷனரி சகாவான மெக்கார்த்தியிடமிருந்து ஒரு கடிதத்தைப் பெற்றார்., "நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறோம், அவர் நம்மில் நிலைத்திருக்கிறார்" என்று அதில் குறிப்பிடப்பட்டு இருந்த அற்புதமான உண்மையை ஹட்சன் கண்கள் காண்பதற்கு கடவுள் இந்தக் கடிதத்தைப் பயன்படுத்தினார். விசுவாசிக்கும் கிறிஸ்துவுக்கும் இடையிலான ஐக்கியத்தின் ரகசியத்தைப் பற்றிய உண்மையை இது வெளிப்படுத்தியது. அந்த நாளிலிருந்து, கடவுளுடனான டெய்லரின் வாழ்க்கை பாதை, சமாதானம், இளைப்பாறுதல், மற்றும் வெற்றி நிரம்பிய பாதையாக இருந்தது. இந்த அற்புதமான மாற்றத்தை அவரது சக மிஷனரி பணியாளர்கள் கவனித்தனர். டெய்லர் ஒரு புதிய உலகில் ஒரு புதிய மனிதனாக ஒரு புதிய பாதையை எவ்வாறு கண்டுக்கொண்டார் என்றும் ஆண்டவர் அவருக்கு என்ன செய்தார் என்பதற்கான சாட்சியையும், தங்கள் கருத்துக்களையும் அவரது சக மிஷனரிகள் பகிர்ந்து கொண்டனர்.*

*டெய்லர் இங்கிலாந்தில் உள்ள தனது சகோதரிக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில், அவர் கண்டுபிடித்த இந்த அற்புதமான உண்மையையும், கடவுளிடமிருந்து அவர் பெற்ற தனது*

---

[89] E-mails from a businessman on March 3 and March 21, 2013, shortened and adapted.
[90] The complete testimony can be read in German at www.missionsbrief.de-Archiv-Missionsbrief Nr. 42, S. 17, Völlige Hingabe Veränderte mein Leben.
[91] Don Macintosh, Director NewstartGlobal, Weimar, USA, in D'Sozo, (Remnant USA), Foreword.

*அற்புதமான அனுபவத்தையும் விளக்க முயன்றார். அவர் இப்படி எழுதினார்: “இன்று எனது பணி, முன்பு இருந்தது போல் மிகவும் விரிவானதாகவும், பொறுப்பு, மற்றும் சிரமங்கள் நிறைந்ததாகவும் இல்லை, மேலும் இப்போது நிர்ப்பந்தம் மற்றும் மனவுளைச்சல் முழுமையாக மறைந்துவிட்டது. என் வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியான மாதம் கடந்த மாதமாக இருக்கலாம். கர்த்தர் எனக்காக என்ன செய்திருக்கிறார் என்பதை சிறிதளவு சொல்ல ஏங்குகிறேன். நான் அதைத் தெளிவுபடுத்துவதில் வல்லவரா என்று எனக்குத் தெரியவில்லை, ஏனென்றால் உண்மையில் புதிய அல்லது விசித்திரமான அல்லது அற்புதமான ஒன்று என எதுவும் இல்லை, ஆனால் எல்லாம் புதியது! சுருக்கமாகச் சொன்னால்: ‘நான் பார்வையற்றவனாக இருந்தேன், ஆனால் இப்போது என்னால் பார்க்க முடிகிறது!’ என் சுமை மிகப்பெரியதாக இருந்தபோது, மெக்கார்த்தியின் கடிதத்திலிருந்து கடவுள் ஒரு வாக்கியத்தைப் பயன்படுத்தி என் கண்களிலிருந்து செதில்கள் விழும்படி செய்தார். இயேசுவுடனான என் ஒற்றுமைபற்றிய உண்மையைக் கடவுளின் ஆவியானவர் எனக்கு வெளிப்படுத்தினார், அதை நான் இதற்கு முன்பு அறிந்திருக்கவில்லை.”*

*“இயேசு திராட்சைக் கொடி மற்றும் விசுவாசிகள் திராட்சைக் கொடியின் கிளைகள்,” என்ற கிறிஸ்துவின் இந்த வார்த்தைகளை எவ்வாறு தான் புரிந்துகொள்ள ஆண்டவர் உதவினார் என்று டெய்லர் தனது கடிதத்தில் தொடர்ந்து விவரிக்கிறார். அவர் எழுதுகிறார் : "ஓ ! இந்த உண்மையைப் பார்த்ததில் மகிழ்ச்சி." “இனிமையான பகுதி- ஒரு பகுதி இன்னொரு பகுதியைவிட இனிமையானது, நான் இனி எதைப் பற்றியும் கவலைப்பட போவதில்லை. இதை நான் சிந்திக்கும்போது எனக்குப் புரிந்தது, அவர் தம்முடைய சித்தத்தை என்னில் நிறைவேற்ற முடியும், அவருடைய விருப்பமே என்னுடையது. அவர் என்னை எங்கு வைத்தாலும், எப்படி இருந்தாலும் அது முக்கியமல்ல. எல்லாவற்றையும் விட அவர் சித்தம் மிகவும் அவசியமானதாக அவர் கருதுகிறார். எளிதான சூழ்நிலைகளில் அவர் எனக்கு அவருடைய அருளைக் கொடுப்பார், மிகவும் கடினமான காலத்தில் அவருடைய கிருபை போதுமானது.”*

*டெய்லரின் அனுபவத்தைப் பற்றி டென்னிஸ் ஸ்மித் பின்வருமாறு கூறுகிறார்: “ஹட்சன் டெய்லர் கடவுளுடனான தனது பாதையில் வெற்றியின் ரகசியத்தைக் கண்டுபிடித்தார். கிறிஸ்துவுக்காக அவர் செய்த சேவையில், ஒவ்வொரு சூழ்நிலையிலும் எவ்வாறு மிகுந்த அமைதியைப் பெற முடியும் என்பதை அவர் கண்டுபிடித்தார். கடவுள் தனது எல்லா பிள்ளைகளுக்கும் அதே வெற்றியையும் அதே அமைதியையும் அளிக்கிறார். அத்தகைய வெற்றி மற்றும் அமைதிக்காக நீங்கள் ஏங்குகிறீர்களா? கிறிஸ்துவில் இந்த வெற்றியையும், சமாதானத்தையும், முன்பு முடியாததாகத் தோன்றிய இந்த மகிழ்ச்சியையும் எல்லோரும் துல்லியமாகக் காண வேண்டும் என்பதே எனது ஜெபம்.” 92*

*இந்த ஜெப கோரிக்கையில் நான் இணைந்து, பரிசுத்த ஆவியின் மூலம் கிறிஸ்துவில் வாழும் அனைவரையும் கிறிஸ்துவுக்குள் நிரம்பி வழியும் பலனளிக்கும் வாழ்க்கை வாழ வாழ்த்துகிறேன், இது இயற்கைக்கு அப்பாற்பட்ட பரிசுத்த ஆவியின் வல்லமையாக வகைப்படுத்தப்படுகிறது. “ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்.” (யோவான் 15 :5) இயேசு தன்னைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்: “என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார்.” (யோவான் 14 :10) இயேசு நம்மில் வாழ்ந்து அதன் மூலம் தம்முடைய பணியை நிறைவேற்ற வேண்டும் என்ற பெரும் விருப்பம் கொண்டவர் என்று நீங்களும் நானும் சொல்லலாம். என்னுள் வாழும் இயேசு கிறிஸ்து, அவருடைய கிரியைகளை என்னில் நிறைவேற்றுகிறார். “இதயத்தில் கிறிஸ்து, வாழ்க்கையில் கிறிஸ்து, இதுதான்- நம் பாதுகாப்பு.” 93*

---

[92] Dennis Smith, *Spirit Baptism and Abiding in Christ*, p. 10, 11. Recommended further reading: Dennis Smith, 40 Days: Prayers and Devotions to prepare for the Second Coming, book1 (Hagerstown, MD: Review and Herald Publishing Association, 2009), especially Day4: « Christ in You, » p. 18, as well as the fourth part of the book, Spirit Baptism and Abiding in Christ, pp. 81-102.

[93] Ellen G. White, The Ministry of Healing, p. 511.

# ஜெபம்

*கர்த்தராகிய இயேசுவே, நீர் என் வாழ்க்கையில் பிரவேசிக்க விரும்புவது என்னை வியக்க வைக்கிறது. நான் என் வாழ்க்கையை உமக்குக் கொடுக்கும்போது, நீர் என்னைப் பரிசுத்த ஆவியினால் நிரப்புகிறீர். கடவுளின் கிருபையின் மூலம் நீர் எனக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்பும் ஆகிவிட்டீர் என்பதற்காக நான் உம்மைத் துதித்து நன்றி சொல்ல விரும்புகிறேன் (1 கொரிந்தியர் 1 : 30). பரிசுத்த ஆவியின் மூலம் உங்களுடன் தோழமை கொள்வதன் மூலம் எனக்கு மகிழ்ச்சியான மற்றும் காணக்கூடிய வளர்ச்சியைக் கொடுங்கள். ஆமென்."*

# பரிசுத்த ஆவிக்காக நாம் ஏங்க வேண்டும் என்று கடவுள் காத்திருக்கிறார்.

*"கடவுளின் வல்லமை நம் கோரிக்கைக்காகவும் அங்கீகாரத்துக்காகவும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. விசுவாசத்தால் உரிமை கோரப்படும்போது இந்த வாக்குறுதியளிக்கப்பட்ட ஆசீர்வாதம் மற்ற எல்லா ஆசீர்வாதங்களையும் அதனுடன் சேர்த்து கொண்டு வரும். இது கிருபையின் ஐசுவரியத்தின்படி வழங்கப்படுகிறது." DA 672.1 #13*

# தம்பதிகளும் மற்றும் பரிசுத்த ஆவியானவரும்

## திருமணமான தம்பதிகளிடையே அதிக நெருக்கம்

*தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள் புத்தகத்தைப் படித்தபோது, என் கணவரும் நானும் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டோம். நாங்கள் அதை மூன்றாவது முறையாக ஒன்றாகப் படிக்கிறோம்! இது வாழ்க்கை அனுபவங்களை வார்த்தைகளாக மாற்றி நம் வாழ்க்கையின் சிக்கல்களை தீர்க்க தக்க முடிவுகளைக் காட்டுகிறது. நாங்கள் இணைந்து இதை ஒன்றாகப் படித்து ஜெபித்தபோது, இதற்கு முன் ஒருபோதும் அனுபவிக்காத நெருக்கம் மற்றும் ஒற்றுமைக்கு எங்களை இது இட்டுச் சென்றது ! ஒரு குழுவாக இருப்பது மிகவும் அற்புதம் ! மற்றவர்களுக்கு வேலை செய்வது, ஜெபிப்பது, கற்பிப்பது மற்றும் பணி செய்வது இவை அனைத்தும் அத்தகைய மகிழ்ச்சியைத் தருகின்றன! இந்தப் புத்தகங்களை அதிக அளவில் நாம் எங்கே வாங்கலாம்? A.C. reduced, # 119*

## அற்புதமான அனுபவங்கள்

*40 நாட்கள் என்ற புத்தகம் எங்களுக்கு அற்புதமான அனுபவங்களை அளித்தது. முதலில் தனிப்பட்ட எழுப்புதல் வந்தது. ஒன்றாகப் படிப்பதன் மூலமும், காலையில் எண்ணங்களைப் பரிமாறிக்கொள்வதன் மூலமும், நாங்கள் ஒரு தம்பதிகளாக ஆன்மீக ரீதியில் நெருக்கமாக வளர்ந்தோம். ஒன்றாக ஜெபித்தபின், அன்றாட சூழ்நிலைகளில் கூடக் கடவுளின் கை எங்களை வழிநடத்தியதை நாங்கள் உணர்ந்தோம். ஒவ்வொரு நாளையும் கடக்க நாங்கள் எவ்வளவு வலிமையைப் பெற்றோம் என்பது விவரிக்க முடியாதது. C. a. K. R. (abbreviated). #3*

## எனது திருமண வாழ்க்கையில் போராடினேன்

*தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள் புத்தகத்தைப் படித்ததிலிருந்து ஆன்மீக ரீதியில் கடவுள் என் கண்களைத் திறந்ததற்காகத் துதிக்கிறேன். நான் ஒரு அட்வெந்து கிறிஸ்தவர், அதனால் அனுபவம்*

***வாய்ந்தவர் என்று நினைத்தேன், ஆனால் உள்ளே ஆழமாக ஏதோ குறைபாடு இருப்பதை நான் உணர்ந்தேன். என் திருமண வாழ்க்கையில் கணவருடன் ஒரு நல்ல உறவை விரும்பி அதற்காகப் போராடினேன், அவர் சபை உறுப்பினராகவும் இருப்பவர். இப்போது நாங்கள் ஒன்றாக ஜெபிக்கிறோம், ஆலயத்தில் கலந்துகொள்ள ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்துகிறோம். நான் இப்போது அதே பழைய கிறிஸ்தவள் அல்ல. # 120***

## இந்தப் புத்தகம் தம்பதியினருக்கும் உதவுகிறது

***நான் அட்வெந்து புத்தக கடைக்குச் சென்றேன். அங்குத் தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள் என்ற புத்தகம் எனக்கு வழங்கப்பட்டது. நான் அதைப் பெற விரும்பவில்லை. விற்பனையாளர் என்னைக் கட்டாயப்படுத்தி, "இந்தப் புத்தகம் தம்பதியினருக்கும் உதவுகிறது. என் உடன் பிறந்தவரின் மகளும் அவரது கணவரும் பிரிந்தனர். இந்தப் புத்தகம் அவர்களை மீண்டும் ஒன்றிணைத்தது. இப்போது அவர்கள் ஒன்றாக ஜெபிக்கிறார்கள், ஒன்றாகத் தேவாலயத்திற்கு செல்கிறார்கள் என்றார்." எனவே நான் அந்தப் புத்தகத்தை வாங்கினேன், அதை ஒரு விலைமதிப்பற்ற புதையலாக அனுபவித்தேன். #120 a***

# தனியொருவரின் எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. *கிறிஸ்துவுடன் ஒன்றாக இருப்பதன் பல்வேறு விளைவுகள் என்ன ?*

2. *இயேசுவின் ஆவியுடன் ஜெபிப்பதன் அர்த்தம் என்ன ?*

3. *பாவத்தைப் பொறுத்தவரை கிறிஸ்து நம்மில் என்ன செய்து முடிக்கிறார் ?*

4. *கிறிஸ்துவின் மூலமாக நாம் பாவமற்ற நிலையை அடைகிறோமா ?*

5. *விசுவாசத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் என்ன தொடர்பு ?*

# நம் ஜெப நேரம்

*உங்கள் ஜெப பங்காளரைத் தொடர்புக் கொண்டு தலைப்பைப் பற்றி விவாதிக்கவும்.*
*உங்கள் ஜெப பங்காளருடன் ஜெபியுங்கள்:*

1. *நம்மில் உள்ள கிறிஸ்து நம் அன்றாட வாழ்வில் தெளிவாகக் காணக்கூடிய விளைவுகளை ஏற்படுத்த ஜெபியுங்கள்.*
2. *இயேசுவின் ஆவியுடன் ஜெபிப்பதற்கான திறனுக்கும் புரிதலுக்காகவும் ஜெபியுங்கள்.*
3. *பாவப் பழக்கங்களிலிருந்து வெல்லும் விடுதலை அனுபவத்திற்காக ஜெபியுங்கள்.*
4. *அவர் நம்மை ஆன்மீகப் பெருமையிலிருந்துப் பாதுகாத்து, நிதானமாக இருக்க உதவி வேண்டி ஜெபியுங்கள்.*

## *அத்தியாயம் 4– பகுதி 1*

# இயேசுவின் மூலமாகக் கீழ்ப்படிதல்

***-நான் எவ்வாறு மகிழ்ச்சியுடன் கீழ்ப்படிந்து வாழ முடியும்? அது மகிழ்ச்சியாகுமா ?***

***-கீழ்ப்படிதல் என் சொந்த நலனுக்காகவா?***

***- "என்னில் இயேசு" இருக்கும்போது கீழ்ப்படிதல் எவ்வாறு செயல்படுகிறது?***

***-விசுவாசத்தால் கீழ்ப்படிதல் என்பது கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையிலான ஒத்துழைப்பா?***

***- இதில் கடவுளின் பங்கு என்ன? மனிதனின் பங்கு என்ன?***

## பரிசுத்த வேதாகமும் மற்றும் ஒரு இரயில் பயண கால அட்டவணையும்

***பிராங்பேர்ட்டில் (ஜெர்மனி) நடைபெற்ற மாநாட்டில், இறையியல் மாணவர்கள் வயதான மிஷனரி ஹட்சன் டெய்லரிடம், "வேதாகமத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் எப்படி நம்ப முடியும்?" என்று கேட்டார்கள்.***

***அவரது பதில், "நீங்கள் நாளை உங்கள் வீட்டிற்குப் பயணிக்க விரும்பினால், நீங்கள் ரயில்வே பயண கால அட்டவணையைத் திறந்து புறப்படும் நேரங்களைச் சரிபார்ப்பீர்கள். காலை 7:00 மணிக்கு ஒரு இரயில் புறப்படுவதை நீங்கள் அறிந்தால், நீங்கள் மேலும் கேள்விகளைக் கேட்கமாட்டீர்கள், ஆனால் மறுநாள் நீங்கள் இரயில் நிலையத்திற்குச் சென்று உங்கள் இரயில் புறப்படுவதற்குத் தயாராக இருப்பதைக் காண்பீர்கள். நீங்கள் இரயில்வே கால அட்டவணையைப் பயன்படுத்துவதைப் போலவே, கடந்த 50 ஆண்டுகளாகப் பரிசுத்த வேதாகமத்தையும் அதன் கட்டளைகளையும் வாக்குறுதிகளையும் நான் பயன்படுத்தினேன். அதன் அறிவுறுத்தல்கள் எனது நீண்ட வாழ்க்கையிலும் நூற்றுக்கணக்கான கொடிய அபாயங்களுக்கிடையிலும் உண்மையாக இருப்பதை நான் கண்டேன். உதாரணமாக, பரிசுத்த வேதாகமம் இவ்வாறு சொல்கிறது: 'முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.' (மத்தேயு 6 :33) நான் இந்த வழிமுறைகளைப் பின்பற்றினேன்,***

*எந்தவொரு நெருக்கடியான சூழ்நிலையிலும் ஒருபோதும் ஏமாற்றமடையவில்லை. நீங்கள் அவ்வாறே செய்தால், உங்களுக்கு இதே போன்ற அனுபவங்கள் இருக்கும்." 94*

*கிறிஸ்துவின் மூலம் கீழ்ப்படிதலைப் பற்றிச் சிந்திப்பது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரும். நாங்கள் இப்போது அதைச் செய்ய விரும்புகிறோம். இந்தக் கீழ்ப்படிதலுக்கு ஒரு சிறப்புப் பெயர் உண்டு: விசுவாச கீழ்ப்படிதல்.*

# கடவுள் எந்த நோக்கத்திற்காக ஊழியர்களை அழைக்கிறார்?

*ஒரு நற்செய்தி ஊழியனான நான் ரோமர் 1 : 6,7-ல் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சிறந்த வழிகாட்டுதலை கண்டேன் : "அவர் சகல ஜாதிகளையும், அவர்களுக்குள் இயேசுகிறிஸ்துவினால் அழைக்கப்பட்டவர்களாகிய உங்களையும், தமது நாமத்தினிமித்தம் விசுவாசத்துக்குக் கீழ்ப்படியப்பண்ணும்பொருட்டு, எங்களுக்குக் கிருபையையும் அப்போஸ்தல ஊழியத்தையும் அருளிச்செய்திருக்கிறார்."*

*விசுவாசத்தின் மூலம் கீழ்ப்படிதலுக்குள் மற்றவர்களை வழிநடத்துவதற்காகக் கடவுள் தம்முடைய ஊழியத்திற்கு மக்களை அழைக்கிறார் என்பதே இதன் பொருள். இந்த விஷயத்தை நான் நன்கு புரிந்து கொள்ள வேண்டும், கடவுளின் உதவியுடன் நான் ஒரு நல்ல முன்மாதிரியாக இருக்க வேண்டும். நான் இதைச் செய்யும்போது, நான் அவருடைய பெயரில் செயல்படுகிறேன், அதாவது இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தில்.*

# விசுவாசத்தின் மூலம் கீழ்ப்படிதல் எவ்வாறு உருவாகிறது?

*பவுலின் இறுதி வார்த்தைகள் மற்றொரு சிந்தனையை ரோமர்களுக்கு எழுதிய நிருபத்தில் சேர்க்கிறது : விசுவாசத்தின் மூலம் கீழ்ப்படிதலை கடவுள் எவ்வாறு நிறைவேற்ற விரும்புகிறார் என்பதே. "ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்து, இப்பொழுது தீர்க்கதரிசன ஆகமங்களினாலே அநாதி தேவனுடைய கட்டளையின்படி வெளியரங்கமாக்கப்பட்டதும், சகலஜாதிகளும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியும்படிக்கு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுமாயிருக்கிற இரகசியத்தை வெளிப்படுத்துகிறதான, இயேசுகிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கமாகிய என் சுவிசேஷத்தின்படியே உங்களை ஸ்திரப்படுத்த வல்லவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாயிருக்கிற தேவனுக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாய் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்." (ரோமர் 16 :25-27)*

*இந்தப் பரம இரகசியம் ஒரு திட்டவட்டமான நோக்கத்திற்காக வெளிப்படுத்தப்பட்டது என்பதை இந்த வசனங்கள் விளக்குகிறது - விசுவாசத்தின் மூலம் கீழ்ப்படிதலை உருவாக்குவதற்காக. அந்த இரகசியம் என்ன என்பதை அவர் விளக்கவில்லை, என்றாலும் கொலோசெயர் 1: 27 ல் விளக்கத்தைக் காண்கிறோம்: "புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்தில் உள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்."*

---

[94] Report by Prof. Dr. Karl Heim in a devotional, which I currently do not have on hand.

*விசுவாசத்தின் மூலம் கீழ்ப்படிதல் கிறிஸ்துவுக்குள் நிறைவேறும்போது என்ன பலன் கிடைக்கும் ? கிறிஸ்து நம்மில் இருக்கிறார், இதுதான் ரகசியம். நம்மில் இருக்கும் கிறிஸ்துவுடன் ஒரு புதிய வாழ்க்கை ஆரம்பமாகிறது. "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான் ; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின." (2 கொரிந்தியர் 5 :17) மற்றொரு வசனம் இந்தப் புதிய வாழ்க்கையை பின்வருமாறு விவரிக்கிறது : "தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்பட வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்." (எபேசியர் 3 :19)*

## *விசுவாசத்தின் மூலம் கீழ்ப்படியும் வாழ்க்கையை நாம் எவ்வாறு புரிந்து கொள்ளுகிறோம்?*

*அவருடைய கட்டளைகளைப் பற்றிய நம் அணுகுமுறை மாறுகிறது. ஏனெனில், "அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல." (1 யோவான் 5 :3) ; "என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்." (மத்தேயு 11 :30) ; "நான் பிரியப்படுகிற உமது கற்பனைகளின் பேரில் மனமகிழ்ச்சியாயிருப்பேன்." (சங்கீதம் 119 :47) ; ஏனென்றால் அவை "அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்." (வசனம் 72) ; "என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்." (வசனம் 103) ; மற்றும் "நான் உமது வார்த்தையின் பேரில் மகிழுகிறேன்." (வசனம் 162) ; அது எனக்கு "மிகுந்த சமாதானம்" தருகிறது. (வசனம் 165) விசுவாசத்தின் மூலம் கீழ்ப்படிதல் என்பது ஒரு இனிமையான விஷயம்.*

## *நம் வாழ்க்கைக்கு உறுதியான அடித்தளம் தேவை*

*ஜெர்மன் கவிஞர் மத்தியாஸ் கிளாடியஸ் இவ்வாறு எழுதுகிறார் : "மனிதனுக்கு ஒரு உறுதியான நங்கூரம் தேவை, தன்னைச் சார்ந்து இருக்கும் ஒன்று அல்ல, மாறாக வேறு ஒன்றைச் சார்ந்து இருக்கக்கூடியது."95 இப்போதெல்லாம் பலர் மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள், ஏனெனில் அவர்களுக்கு விசுவாசமின்மை காரணமாக உறுதியான அடித்தளம் இல்லை. அவருடனான நெருங்கிய உறவின் மூலம், கடவுள் தம்முடைய வார்த்தையின் அடிப்படையில் ஒரு உறுதியான அடித்தளத்தைக் கொடுக்க விரும்புகிறார்.*

*நம் வாழ்வில் உறுதியான அடித்தளமும் நம்பகமான கட்டுப்பாடும் தேவை என்பதை நமக்கு இந்தக் கிறிஸ்தவக் கவிஞர் காட்டுகிறார். உறுதியான அடித்தளத்தை நாம் எங்கே காணலாம்? கடவுள் இந்த அஸ்திவாரத்தை நீண்ட காலத்திற்கு முன்பு அமைத்திருந்தார். அவருடைய பெயர் இயேசு கிறிஸ்து. "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது." (1 கொரிந்தியர் 3 :11) நம்முடைய வாழ்க்கைக்கு உறுதியான அடித்தளத்தை ஏற்படுத்தக்கூடியவர் இயேசு மட்டுமே.*

## *சிறந்த வாழ்க்கைத் தரத்தை எங்கே காணலாம்?*

*வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கத் தகுதியானவர் யார் ? எது சரி என்பதை யார் தீர்மானிக்க முடியும்? சங்கீதம் 99: 4-ல் பரிசுத்த வேதாகமம் தெளிவான பதிலை அளிக்கிறது: "தேவரீர் நியாயத்தை நிலைநிறுத்துகிறீர்." சங்கீதம் 111: 7,8 மேலும் கூறுகிறது: "அவருடைய கரத்தின் கிரியைகள்*

---

95 Matthias Claudius (Edition Steinkopf, 1982), S. 10.

*சத்தியமும் நியாயமுமானவைகள்; அவருடைய கட்டளைகளெல்லாம் உண்மையானவைகள். அவைகள் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களுக்கும் உறுதியானவைகள், அவைகள் உண்மையும் செம்மையுமாய்ச் செய்யப்பட்டவைகள்." (cf சங் 148: 6)*

*சிருஷ்டிகரான கடவுள், எது சரி என்பதை தீர்மானித்துள்ளார். கடவுளைத் தவிர வேறு யாருக்கும் வாழ்க்கைத் தரத்தையும் அல்லது விதிமுறைகளையும் அமைக்க உரிமை இல்லை. எல்லாவற்றையும் உருவாக்கியவர், மகா பெரியவர் மற்றும் அவரே உரிமையாளர், அவருக்கு மட்டுமே இந்த உரிமை உண்டு. வேறு யாருக்கும் தெளிவான கண்ணோட்டம் இருக்காது; கடவுள் எல்லாம் அறிந்தவர், எல்லா சர்வ ஞானமும் பெற்றவர்.*

*இந்த வாழ்க்கை விதிமுறைகளை உருவாக்குகிற கடவுளின் குணம் அதி முக்கியத்துவம் கொண்டது. பரிசுத்த வேதாகமம் தேவன் அன்பானவர் என்று நமக்குக் காட்டுகிறது; அவர் அன்பு, சத்தியம், சந்தோஷம் மற்றும் நீதிக்கான பிறப்பிடமாக இருக்கிறார். அவருடைய அற்புதமான குணம், அவரின் எல்லையற்ற திறன் மற்றும் சர்வ ஞானம் ஆகியவற்றின் காரணமாக, தேவதூதர்கள், பிற உலகங்களில் வசிப்பவர்கள், மனிதகுலம் மற்றும் விலங்குகள் ஆகியவற்றிக்கான உகந்த விதிகளைக் கடவுளால் உருவாக்க முடிந்தது. உலகத்தை அன்பாய் உருவாக்கியவர், வாழ்க்கைக்கு மிகவும் சாதகமான நிலைமைகளை உருவாக்கினார்.*

*அவர் இயற்கை வாழ்வியில் விதியில் மட்டுமல்ல, எடுத்துக்காட்டாக, இந்தப் பூமியில் உள்ள மாறிலிகள்- சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தூரம், பூமியின் அச்சின் நோக்குநிலை மற்றும் பலவற்றுக்கான சட்டங்களை வகுத்திருக்கிறார் - ஆனால் மனிதகுலத்தின் மகிழ்ச்சிக்காக அவர் நெறிமுறை மற்றும் ஒழுக்கநெறி சட்டங்களையும் வகுத்தார் (cf. எரே 7: 23). நம் அன்பான பரம பிதா நமக்கு அற்புதமான விதிமுறைகளை ஏற்படுத்தியிருக்கிறார். இறுதிக்காலத்தில் நடக்கப்போகும் ஒரு விசித்திரமான நிகழ்வைப் பற்றி விவாதிக்கும்போது (கடவுளின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிவது தொடர்பாக வரப் போகிற பெரும் குழப்பம்) இந்த எண்ணத்தை மனதில் வைத்துக் வைத்துக்கொள்வோம்.*

# கடவுளின் கொள்கைகளுக்குக் கீழ்ப்படிவது தொடர்பான குழப்பம்

*பவுல் 2கொரிந்தியர் 4 :3,4-ல் இவ்வாறு கூறுகிறார், "எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப்போகிறவர்களுக்கு அது மறைபொருளாயிருக்கும். தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்."*

*சாத்தான் மாறுவேடமிட்டு மக்களைக் குருடாக்குகிறான். குருட்டுத்தனமான மனம் இரண்டு விஷயங்களைக் குறிப்பாக உணர்த்தும்: முதலாவதாக, சில விஷயங்களைப் பார்க்கக் கூட முடியாது, காரணம் சில விஷயங்கள் மாறுவேடத்தில் இருக்கலாம் அல்லது மறைக்கப்பட்டு இருக்கலாம். இரண்டாவதாக, இது "வசீகரமான" ஒரு மனதைக் குறிக்கலாம், அது தவறான எண்ணங்களைச் சரியானதாகக் கருதுகிறது. இந்தக் கருத்துக்கள் நம்மீது எவ்வளவு சாதுரியமாகத் திணிக்கப்படுகின்றன என்பதை நாம் உணரவில்லை. இந்த மாறுவேடமும் கண்மூடித்தனமும் சரியான கோணத்தில் நாம் பார்ப்பதைத் தடுக்கிறது.*

*இது விசுவாசிகள் அல்லாதவர்களுக்கு நடக்கும் என்று உரைப் பகுதி கூறுகிறது. ஆனால் சிற்றின்ப நாட்டம் கொண்ட கிறிஸ்தவர்களுக்கும் இதேதான் நடக்கிறது என்ற அதிர்ச்சியூட்டும் கண்டுபிடிப்பைக் காண்கிறோம். அவர்கள் இயேசுவை வெளிப்படையாக அறிவிக்கிறார்கள், ஆனால் தங்களை முழுமையாக அவரிடம் ஒப்படைக்கவில்லை. அதனால்தான் "இந்த உலகத்தின்*

*அதிபதி" அவர்களைக் குருடாக்க முடியும்.*

*ஆன்மீக கிறிஸ்தவர்களிடமும் இந்தக் கண்மூடித்தனத்தை சாத்தான் முயற்சிக்கிறான் என்று நான் நம்புகிறேன். இயேசு மத்தேயு 24:24ல் கூறுகிறார்: "கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிப்பார்கள்." ஜெர்மன் லூதர் பதிப்பில் 1 யோவான் 5 :18 இவ்வாறு கூறுகிறது: "தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான் தீமை அவனைத் தொடாது." "சாத்தான் உலகை சிறைபிடிக்க வழிநடத்துவது மட்டுமல்லாமல், அவனுடைய வஞ்சகம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆலயங்களிலும் புளித்தமாவைப் போலப் பெருகியிருக்கின்றன."[96] லவோதிக்கேயர்களுக்கு கொடுக்கப்பட்ட செய்தியில் இந்தச் செயற்பாடுபற்றி வெளிப்படுத்துதல் 3 : 17 ல் தெளிவாக இயேசு விவரிக்கிறார்.*

*இயேசு தனது பிரசங்கத்தில் மத்தேயு 24 மற்றும் 25ல், கடைசிக் கால நிகழ்வுகளைப் பற்றிக் கூறும்போது ஒரு குறிப்பிட்ட அடையாளத்தை நான்கு முறை குறிப்பிடுகிறார் : வஞ்சகம். வஞ்சகம் ஏற்கனவே மிகவும் வலுவாக உள்ளது, ஆனால் அது இன்னும் அதிகரிக்கும். கண்மூடித்தனமாக இருப்பவர்கள் அதை அரிதாகவே கவனிக்கிறார்கள். நாம் ஒவ்வொருவரும் தன்னைத்தானே சோதனையிடல் வேண்டும் என்று நினைக்கிறேன். சத்தியத்தையும் வஞ்சகத்தையும் பகுத்துணரவும் நம் கண்களைத் திறக்கவும் பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே முடியும் என்பதை நாம் உணர வேண்டும். இந்த மிகுந்த வஞ்சகத்தின் ஒரு பகுதி கடவுளுடைய சித்தத்திற்கும், கடவுளுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதுடனும் மற்றும் கடவுளுடைய சட்டங்களுடனும், தொடர்புடையது. கடவுள் எந்த வகையான கீழ்ப்படிதலை விரும்புகிறார், கீழ்ப்படிதலுடன் இருப்பது எப்படி சாத்தியம் என்பது பற்றிப் பலருக்கு தெளிவான யோசனை இல்லை. இது விசுவாசத்தின் மூலம் கீழ்ப்படிதல் - ஒரு சிறப்பு வகையான கீழ்ப்படிதல்.*

# விசுவாசித்து கீழ்ப்படிவது என்றால் என்ன?

*அப்போஸ்தலன் பவுல் உருவாக்கிய இந்தப் புதிய வார்த்தையை வரையறுக்கப் பல சாத்தியங்கள் உள்ளன. இது கண்டிப்பாக ஒரு மீட்புக்கான கடவுளின் திட்டத்தைப் பின்பற்றும் கீழ்ப்படிதல் ஆகும். அது பரிசுத்த ஆவியின் மூலம் இயேசுவோடு உண்மையான நம்பிக்கை உறவில் பிரவேசிப்பதோடு தொடர்புடையது. இதன் விளைவு கிறிஸ்துவின் தியாகத்தின் மூலம் நான் இரட்சிக்கப்படுகிறேன். பரிசுத்த ஆவியின் வல்லமையின் மூலம் இயேசுவின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பது என் ஒப்புக்கொடுத்தல் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இது என் சொந்த முயற்சியால் வந்த கீழ்ப்படிதல் அல்ல.*

*பவுல் பரிசேய சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதற்கு எதிரான நிலைப்பாட்டை வேண்டுமென்றே எடுத்தார், இதன் பொருள் கடவுளின் ராஜ்யத்திற்குச் செல்வதற்கான வழி கடவுளின் கட்டளைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பதன் மூலம் மட்டுமே என்பதாகும். உண்மையான சீஷத்துவத்திற்குக் கீழ்ப்படிதல் அவசியம் என்பதை அவர் தெளிவுபடுத்துகிறார், ஆனால் இந்தக் கீழ்ப்படிதல் பரிசேயர்களின் கீழ்ப்படிதலிருந்து வேறுபடுகிறது. இது இயேசு கிறிஸ்துவின் மூலம் மகிழ்ச்சியுடன் இரட்சிப்பை ஏற்றுக்கொள்வதில் தொடங்குகிறது. இது இயேசுவின் சீடராகும் ஒருவரின் வாழ்க்கையில் கீழ்ப்படிதல் செயல்களை உருவாக்குகிறது. இந்தக் கீழ்ப்படிதல் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது, இது இதயத்திலிருந்து வருகிறது. டென்னிஸ் ஸ்மித் எழுதுகிறார் : "ஒருவர் பரிசுத்த ஆவியின் மூலம் கடவுளுடன் நெருங்கிய உறவில் வாழும்போது, கீழ்ப்படிதல் இயற்கையாக இதயத்திலிருந்து வரும், எளிதாக யோசிக்காமலே அது வரும்."[97] இந்தக் கீழ்ப்படிதல் தெய்வீக-மனித ஒத்துழைப்பால் சாத்தியமாகிறது.*

---

[96] Ellen G. White, Christ's Object Lessons, p. 414.

[97] Dennis Smith, *40Days: Prayers and Devotions to Prepare for the Second Coming*, book 1, pp. 21, 22.

# *கடவுள் ஒரு இரகசியத்தை வெளியரங்கமாக்கியுள்ளார்*

***ரோமர் 16 : 25,27 ஐ இப்படி சுருக்கமாகக் கூறலாம் : அநாதி தேவனுடைய கட்டளையின்படி, விசுவாசத்தின் மூலம் கீழ்ப்படியும்படிக்கு வெளியரங்கமாக்கப்பட்டது. கடவுளின் கட்டளைப்படி, விசுவாசத்தின் மூலம் கீழ்ப்படிதல் என்னும் இந்த இரகசியம் நம்மில் உள்ள கிறிஸ்து மூலம் நிறைவேறுகிறது. விசுவாசத்தின் மூலம் கீழ்ப்படிதல் என்பது நம்பிக்கை, விசுவாசம் மற்றும் அன்பின் அடிப்படை சார்ந்த ஒரு மனமார்ந்த கீழ்ப்படிதல் ஆகும். கடவுளுடன் நம்பிக்கை உறவில் நாம் நுழையும்போது, விசுவாசத்தின் அடிப்படையிலும், அவருடைய சட்டங்கள் நமது நலனுக்காகவே இருக்கின்றன என்ற புரிதலின் அடிப்படையிலும், நாம் கீழ்ப்படிவதற்கு முடிவு செய்கிறோம்.***

***"மனிதனை கீழ்ப்படிவதிலிருந்து விடுவிப்பதற்கு பதிலாக, விசுவாசம் மற்றும் விசுவாசம் மட்டுமே நம்மைக் கிறிஸ்துவில் கிருபையின் பங்காளிகளாக ஆக்குகிறது, அது கீழ்ப்படிதலுடன் இருக்க நமக்கு உதவுகிறது."*** [98]

# *இந்த மறைபொருள் எதை உள்ளடக்கியுள்ளது?*

***"ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவவசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு, உங்கள்பொருட்டு தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன். புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்தில் உள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார் ; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" என்று கொலோசெயர் 1 : 25-27 இல் பவுல் நமக்குக் காட்டுகிறார்.***

***மறைக்கப்பட்ட மற்றும் இப்போது வெளிப்படுத்தப்பட்ட இந்த இரகசியம், அதாவது இயேசு தாமே பரிசுத்த ஆவியின் மூலம் நம்மில் வாழ விரும்புகிறார் என்பதாகும். இதை நமக்கு மகிமையின் நம்பிக்கை என்று இந்த வேதவாக்கியம் கூறுகிறது, மேலும் கடவுள் இப்போது கொடுக்க விரும்பும் நிறைவான வாழ்க்கையையும், மகிமையில் நித்திய ஜீவனையும் நாம் அடைய முடியும் என்ற உத்தரவாதம் அளிக்கிறது. பரிசுத்த ஆவியின் மூலம் நாம் பெற வேண்டும் என்று கிறிஸ்து விரும்பும் இந்த நெருக்கமான உறவு, கடவுளின் அன்பை முற்றிலும் வித்தியாசமான முறையில் காட்டுகிறது. "நம்மில் கிறிஸ்து" இதுதான் இந்த இரகசியத்தின் மையம் ; பரந்த நோக்கில் அது நற்செய்தி அல்லது மீட்பின் திட்டமாகும். இந்த இரகசியத்தில், விசுவாசத்தின் மூலம் கீழ்ப்படிதல் நிறுவப்பட்டது அல்லது நிறைவேற்றப்படுகிறது என்று நமக்கு ரோமர் 16 : 25,26 சொல்கிறது. இதன் பொருள் கிறிஸ்துவின் மூலம் நாம் கீழ்ப்படிய முடிகிறது, நாமும் அதைச் செய்ய விரும்புகிறோம் என்பதே.***

# *கிறிஸ்து நமக்குள் எப்படி வாசம் செய்கிறார்?*

***கிறிஸ்து நமக்குள் எப்படி வாழ முடியும் ? எபேசியர் 3 : 16, 17, 19 ல் நாம் வாசிக்கிறோம் : "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி,***

[98] Ellen G. White, *Steps to Christ*, pp. 60, 61.

*நிலைபெற்றவர்களாகி, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்."*

*நமக்கு இவ்வாறு கூறப்பட்டுள்ளது :*

1. *பரிசுத்த ஆவியின் மூலம் நாம் நம் உள்ளான மனுஷனில் ஏராளமான வல்லமையைப் பெறுகிறோம்.*
2. *விசுவாசத்தினால் பரிசுத்த ஆவியானவர் மூலம் கிறிஸ்து நம்மில் வாழ்கிறார்.*
3. *இதனால், நாம் அன்பில் வேரூன்றி ஆழமான அடித்தளமிட்டு இருப்போம். இயேசு கிறிஸ்து நம்மில் வாழும்போது, அவர் அன்பின் தன்மையை நம்மில் உருவாக்குகிறார். பரிசுத்த வேதாகமம் இதை "ஆவியின் கனி" என்றும் அழைக்கிறது. (கலா 5 :22)*
4. *இது « கடவுளின் சகல பரிபூரணத்தாலும் நிரப்பப்பட்ட வாழ்க்கைக்கு » நம்மை இட்டுச் செல்கிறது. (பார்க்கவும் யோவான் 10 : 10 ; கொலோசெயர் 1 : 9, 10)*

*"நம்மில் கிறிஸ்து" என்றால் நம் கீழ்ப்படிதல் இப்போது சாத்தியமே, ஏனென்றால் அது இயேசுவால் நமக்குள் கொண்டு வரப்பட்டது. எலன் உவைட் கூறுகிறார் : "ஒரு ஆத்மா கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது, அவர் கிறிஸ்துவின் வாழ்க்கையை வாழ வல்லமைப் பெறுகிறார்."* [99]

*நாம் அவரை முழுமையாக நம்பும்போது, அதாவது நாம் அவரிடம் நம்மை முழுமையாக அர்ப்பணிக்கும்போது இயேசு நம்மில் வாழ்கிறார். இந்தக் கீழ்ப்படிதலின் விளைவு விசுவாச கீழ்ப்படிதல் ஆகும். கிறிஸ்து தனது வெற்றிகரமான வாழ்க்கையை நம்மில் வாழ விரும்புகிறார்.*

*மேலும் ஒரு விலையேறப்பெற்ற சிந்தனை கலாத்தியர் 4 :19 இல் காணப்படுகிறது. பவுல் அங்குக் கூறுகிறார் ; "என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்." கிறிஸ்து விசுவாசிகளில் வாழ வேண்டும் என்று பவுல் மிகவும் ஆர்வமாக உள்ளார். அவர் கூறுகிறார், "கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும்." ஒரு நபர் முழுமையாக வளர எவ்வளவு காலம் ஆகும் ? குறைந்தது பதினாறு அல்லது பதினேழு வருடங்கள் ஆகும். பவுல் இங்கே ஒரு வளர்ச்சி செயல்முறையைக் குறிப்பிடுகிறார் என்று நான் நம்புகிறேன். நாம் தினமும் நம் வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்து, விசுவாசத்தில் பரிசுத்த ஆவியைக் கேட்கும்போது, கிறிஸ்து நம்மில் இருக்கிறார், ஆனால் இந்த உறவில் வளர்ச்சி செயல்முறை உள்ளது.*

# தெளிவின்மைகள்

*கீழ்ப்படிதல் குறித்த பல கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் தெளிவற்று இருக்கிறது. முதலில், நம்முடைய விசுவாச வாழ்க்கையைப் பற்றி இயேசு குறிப்பிட்ட முக்கியமான கருத்துக்களைப் பார்ப்போம் : "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது." (யோவான் 15 : 5) இந்த முக்கியமான பகுதி கீழ்ப்படிதல் குறித்த விஷயத்திலும் பொருந்தும்.*

*இரண்டாவதாக, கீழ்ப்படிதல் தொடர்பான அடிப்படைக் கொள்கைகளை விளக்கும் எலன் ஜி. உவைட்டின் பொருத்தமான வாசகம் ஒன்றைப் பார்ப்போம் : "தனது சொந்த முயற்சியால், கட்டளைகளைப் பின்பற்றுவதன் மூலம், பரலோகத்தை அடைய முயற்சிக்கும் ஒருவர் சாத்தியமற்றதை முயற்சி செய்கிறார். கீழ்ப்படிதல் இல்லாமல் மனிதன் இரட்சிக்கப்பட முடியாது, ஆனால் அவனது முயற்சிகள் அவனுடையதாக இருக்கக் கூடாது ; கிறிஸ்து அவருடைய சித்தத்திற்கும் விருப்பத்திற்கும் ஏற்ப அவனில் கிரியை செய்ய வேண்டும்."* [100]

---

[99] Ellen G. White, *Christ's Object Lessons*, p. 314.
[100] Ellen G. White, *The Review and Herald*, July 1, 1890, par. 11.

*மூன்று முக்கியமான விஷயங்கள் கூறப்பட்டுள்ளன :*

1. *எனது சொந்த முயற்சியால் பரலோகத்தை அடைவது சாத்தியமில்லை. கடவுளிடமிருந்து எதையாவது பெற விரும்புவது (சொந்த செயல்களால் நீதியைப் பெற முயற்சிப்பது போன்றவை) ஒரு பிழை என்பது இதன் பொருள்.*
2. *இயேசுவின் சீடர்கள் கடவுளின் சித்தம் படி வாழ அழைக்கப்பட்டிருப்பதால், கீழ்ப்படிதல் என்பது ஒரு இன்றியமையாத பகுதியாகும்.*
3. *கீழ்ப்படிதல் என்பது நம்முடைய சொந்த முயற்சியாக இருக்கக் கூடாது, நம்முடைய சொந்த பலத்தினால் அல்ல, மாறாக விருப்பமும் செயலும் நம்மில் கிறிஸ்துவின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும்.*

*இப்போது, இது எப்படி சாத்தியம் என்பதை நாம் இன்னும் கூர்ந்து கவனிப்போம். பரலோகத்தை முழுமையாக அல்லது பகுதியாகப் பெற முயற்சி செய்ய வேண்டும் என்று நம்புகிற பலர் உள்ளனர். கடவுள் தங்களுக்கு வழங்கிய அற்புதமான முறையை அவர்கள் அறியாததால் அவர்கள் இந்தத் தவறான போக்கைப் பின்பற்ற நினைக்கிறார்கள். அவர்கள் முடியாத ஒன்றை அடைய முயற்சி செய்கிறார்கள். பரிசுத்த ஆவியின் மூலம் இயேசு அவர்களுடன் வாழாதபோது, சாத்தியமற்ற ஒன்றுக்காக முயற்சிக்கிறார்கள், அவர்களின் கீழ்ப்படிதல் பட்டியல் எவ்வளவு நீளமானது அல்லது குறுகியது என்பது இங்கே முக்கியமல்ல.*

*நம்முடைய சொந்த கிரியைகளால் நாம் இரட்சிக்கப்பட முடியாது (நியாயப்பிரமாணத்தின் படி செயல்பட்டால்), மாறாகத் தேவன் மீதான விசுவாசத்தினால் மட்டுமே என்று வேதம் போதிக்கிறது. ரோமர் 3 : 28 கூறுகிறது : "ஆதலால் மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் இல்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்." இது ஆர்வத்துடன், மீண்டும் மீண்டும், அனைத்து மனிதர்களின் மனதிலும் உறுதியாக நிலைநிறுத்தப்பட வேண்டிய விஷயம். ஏனெனில், வீழ்ந்த மனிதன் தனது சிறந்த நற்செயல்களால் எதையும் பெற முடியாது. வீழ்ச்சியடைந்த மனிதனின் சிறந்த நல்ல செயல்கள் எதுவும் தகுதி பெறாது. இரட்சிப்பு என்பது இயேசு கிறிஸ்துவின் மீதான நம்பிக்கையின் மூலம் மட்டுமே." [101]*

# கீழ்ப்படிதல் இன்றியமையாதது

*இயேசு கீழ்ப்படிதலை வலியுறுத்துகிறார். அவருடைய கடைசி வார்த்தைகள் : « நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு (உபதேசம்) பண்ணுங்கள். » (மத்தேயு 28 :20) இங்கே அவர் கீழ்ப்படிதலைப் பற்றித் தெளிவாகப் பேசுகிறார். இயேசு கிறிஸ்து தனது சொந்த விரலால் எழுதி, சீனாயில் மோசேவுக்குக் கொடுத்த கட்டளைகளைப் பின்பற்றக் கீழ்ப்படிதல் தேவைப்படுகிறது. வேதாகமம் உறுதிப்படுத்தும் கடவுளின் இந்த எதிர்பார்ப்பு பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளது : "அவருடைய அனைத்து ஈவுகளும் கீழ்ப்படிதல் என்ற ஒரே நிபந்தனையின் கீழ் வாக்குறுதியளிக்கப்படுகிறது." [102]*

*கிறிஸ்துவின் பொருட்பாடங்களில், நாம் இதை வாசிக்கிறோம் : "கடவுளின் நியாயப்பிரமாண சட்டத்தில் அவருடைய குணம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது ; நீங்கள் கடவுளுடன் இசைவாக இருக்கும் பொருட்டு, உங்கள் ஒவ்வொரு செயலுக்கும் ஆதாரமாக அவருடைய நியாயப்பிரமாண சட்டத்தின் கொள்கைகள் பின்னால் இருக்க வேண்டும். "கிறிஸ்து நியாயப்பிரமாண சட்டத்தின் கோரிக்கைகளைக் குறைக்கவில்லை. நித்திய ஜீவனுக்கான நிபந்தனை*

---

[101] Ellen G. White, Faith, and Works (Hagerstown, MD: Review and Herald Publishing Association, 1999), p18.
[102] Ellen G. White, Christ's Object Lessons, p. 145.

*கீழ்ப்படிதல் மட்டுமே என்று அவர் ஒரு தெளிவான மொழியில் முன்வைக்கிறார்.”* [103]

*நாம் கடவுளை அறிந்திருக்கிறோமா இல்லையா என்பதை கீழ்ப்படிதல் சுட்டிக்காட்டுகிறது என்பதை அப்போஸ்தலன் யோவான் நமக்குக் காட்டுகிறார் : “அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்.” (1யோவான் 2 :3,4) “அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்.” (1 யோவான் 3 :24)*

*கீழ்ப்படிதல் என்பது நாம் கடவுளை நேசிக்கிறோம் என்பதற்கான ஒரு அறிகுறியாகும் : “நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம் ; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல.” (1யோவான் 5 :3) கீழ்ப்படிதல் என்பது இறுதி கால சபையின் அடையாளம் என்று வேதாகமம் நமக்குக் காட்டுகிறது, அவர்களைப் பற்றிப் பேசுகையில் “தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும்” (வெளி 12 :17) ; “தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்கள்” (வெளி 14 :12) என்றும் கூறுகிறது.*

*நம் காலத்தின் மிக வெற்றிகரமான எழுப்புதல் பிரசங்கியான சார்லஸ் ஃபின்னி இவ்வாறு கூறினார் : “கடவுளுக்குக் கீழ்ப்படிவதற்கான ஒரு புதிய ஆரம்பம் தான் எழுப்புதல்.”* [104] *நாங்கள் ஆகஸ்ட் 31, 2011 வேதாகம விளக்கவுரை வழிகாட்டியிலிருந்து மேற்கோள் காட்ட விரும்புகிறோம் : “கீழ்ப்படிதல் என்பது இரட்சிப்புக்கான வழி அல்ல, மாறாக மீட்கப்பட்டவர்களின் வாழ்க்கையில் இரட்சிப்பின் விளைவுகள் மற்றும் ஆசீர்வாதங்களை வெளிப்படுத்தும் ஒரு வழிமுறையாகும்.”*

# கிறிஸ்துவின் மூலம் கீழ்ப்படிதல்

*நம்மில் வாழும் கிறிஸ்துவின் மூலம் மட்டுமே நாம் கீழ்ப்படிதலுடன் இருக்க முடியும். அவரால் மட்டுமே இதை நிறைவேற்ற முடியும். ஒரு மனிதனாக, கிறிஸ்து நமக்குக் கீழ்ப்படிதலின் ஒரு முன் மாதிரியாக இருந்தார். “அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு.” (எபி 5 :8) ; “தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி.” (வசனம் 9)*

*அப்போஸ்தலர் 5 :32 இதை உறுதிப்படுத்துகிறது : கடவுள் தனக்குக் கீழ்ப்படிபவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுக்கிறார். கடவுளின் கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிவது நம் மீட்பிற்கான ஒரு நிபந்தனை என்று இது அர்த்தப்படுத்துகிறதா ? இல்லவே இல்லை ! மீட்புக்கான பாதை விசுவாசத்தால் மட்டுமே என்பதை பவுல் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறார், இந்தப் பாதையில் நாம் கடவுளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். பின்னர் அவர் பரிசுத்த ஆவியின் மூலம் ஒரு அற்புதமான வழியில் செயல்படுவார், அதனால் கடவுள் சித்தப்படி நாம் முழு மனதுடன் இசைந்து வாழ்வோம்.*

*ரோமர் 8 : 3,4 இல் பவுல் இதைத்தான் எழுதுகிறார் : “அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.” “உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன்” என்று தேவன் சொன்னார். (எசேக்கியேல் 36 : 27)*

---

[103] Ibid., p. 391.
[104] Cited in Unser gröβtesBedürfnis (Our Greatest Need), Lüneburg: Werner E. Lange, 2011, S. 103.

# பரிசுத்த அவியானவருக்குள் தொடர்ந்து வாழ்வது

*“ஆவியில் நடப்பது” என்பது பரிசுத்த ஆவியிக்குள் தொடர்ச்சியாக வாழ்வதாகும். பரிசுத்த ஆவியானவர் நம்மில் வசிக்கும்போது, தேவையான கீழ்ப்படிதல் கிறிஸ்துவின் மூலம் நிறைவேறுகிறது என்பதை இந்த உரை நமக்குக் காட்டுகிறது. தேவன் தனது குமாரனை அனுப்பினார், அதனால் நாம் நியாப்பிரமாணத்தின் மூலம் பெற்ற நீதி மறைந்து, அவர்மூலம் நீதி நம்மில் நிறைவேறுகிறது. தயவுசெய்து கவனியுங்கள், நீதி நம் மூலமாக நிறைவேறுகிறது என்று உரை கூறவில்லை, மாறாக நம்மில்தான் நிறைவேறுகிறது.*

*கலாத்தியர் 2 :20 இல் பவுல் தனது வாழ்க்கையைப் பற்றி என்ன சொல்கிறார் ? “ஆயினும், பிழைத்திருக்கிறேன் ; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்.” கிறிஸ்துவே தனது வாழ்க்கையை வழிநடத்துகிறார் என்பதை பவுல் தெளிவுபடுத்துகிறார். எசேக்கியேல் 36 :27 ல், “உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன்” என்று கர்த்தர் கூறுகிறார். இந்த உரையின் அர்த்தம் தெளிவாக இருக்கிறதா ? கடவுள் தம் ஆவியால் நம்மை நிரப்ப விரும்புகிறார், இதன் மூலம் அவர் தம் கட்டளைகளைக் கடைப்பிடிக்கும் மக்களாக நம்மை ஆக்குவார். பரிசுத்த ஆவியின் மூலம் கடவுள் நம் கீழ்ப்படிதலுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வார் என்பதே இதன் பொருள்.*

*கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதல் பரிசுத்த ஆவியின் மூலம் நடைபெறுகிறது என்பதை இங்கே நாம் தெளிவாகக் காண்கிறோம். இது ஒரு இதயப்பூர்வமான கீழ்ப்படிதல். இந்தக் கூட்டுறவு இல்லாமல் நாம் குறையான வெளிப்புற கீழ்ப்படிதலை மட்டுமே காண்பிக்க முடியும். “கிறிஸ்துவின் புதுப்பிக்கும் வல்லமை இல்லாமலே ஒரு வெளிப்புற சரியான தோற்றம் இருக்கலாம் என்பது உண்மைதான். அதிகாரம்மீதான பற்றும், மற்றவர்கள் கொடுக்கிற மதிப்பிற்கான ஆசையும் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்க்கையை உருவாக்கலாம். சுய மரியாதை வஞ்சகத் தோற்றத்தை மறைக்க உதவும். ஒரு சுயநல இதயம் தாராளமான செயல்களைச் செய்யக்கூடும்.”[105] நாம் கடவுளின் கட்டளைகளை, கடமை உணர்வால் அல்லது அது நம்மிடம் எதிர்பார்க்கப்படுவதால் கூடக் கடைபிடிக்கலாம். கடவுளின் கட்டளைகளைக் கடமை உணர்வோடு பின்பற்ற முயற்சிக்கும் மனிதன் (அவ்வாறு செய்வதற்கு அவர் எதிர்பார்க்கப்படுவதால்) அவர் கீழ்ப்படிதலின் மகிழ்ச்சியில் ஒருபோதும் நுழையமாட்டார். அவர் கீழ்ப்படியவில்லை. கடவுளின் எதிர்பார்ப்புகள் ஒரு சுமையாகக் கருதப்படும்போது, அவை மனித வீழ்ச்சியைக் கொண்டுவருகிறது, எனவே இந்த வாழ்க்கை ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை அல்ல என்பதை நாம் அறிவோம். உண்மையான கீழ்ப்படிதல் என்பது இதயத்தின் உள்ளே இருந்து செயல்படுவதாகும்.”[106]*

# கிறிஸ்து எப்படி நம்மில் வாழ முடியும்?

*இயேசுவுடனான உறவு அவரிடம் முழுமையாக ஒப்புக்கொடுப்பதில் தொடங்குகிறது. இந்த உறவின் காரணமாக அவர் நமக்கு ஆவியின் மறுபிறப்பைக் கொடுக்கிறார், (பார்க்க யோவான் 3 : 1-21). கடவுளால் நமக்குக் கொடுக்கப்பட்ட இந்தப் புதிய வாழ்க்கை, நாள்தோறும் புதுப்பிக்கப்படுவதன் மூலம் கிறிஸ்துவுடனான நமது உறவு பாதுகாக்கப்படுகிறது. நமது தினசரி அர்ப்பணிப்பு மற்றும் நமது அன்றாட விண்ணப்பம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட வேண்டும் - அது ஆவியானவரால் புதுப்பிக்கப்பட வேண்டும். இதன் மூலம் இயேசு நம்மில் வாழ்கிறார். “நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும்.” (எபேசியர் 3 : 16, 17)*

[105] Ellen G. White, Steps to Christ, p. 58
[106] Ellen G. White, Christ’s Object Lessons, p. 97.

# கிறிஸ்து உங்களில் வாழ்கிறாரா என உங்களை ஆராய்ந்து பாருங்கள்

*கிறிஸ்து நம்மில் வாழ்கிறாரா என்பதை ஆராய வேதம் நம்மை அழைக்கிறது. "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள் ; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறிகிறீர்களா ? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்." (2 கொரிந்தியர் 13 : 5)*

*நாம் எப்போது தகுதியற்றவராக அல்லது பொருத்தமற்றவராக ஆகிறோம் ? கடவுள் இந்த நம் ஆன்மீக நிலையைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும்போது, நமக்குள் இருக்கும் கிறிஸ்துவின் மூலம் நாம் தகுதிபெறுகிறோம், தகுதியற்றவராக இருப்பது என்பது பரிசுத்த ஆவியால் நிரப்பப்படாத ஒரு வாழ்க்கை. வேதாகமம் இதை மாம்ச சிந்தனை என்று கூறுகிறது.*

*நம் கார் எப்போது "தகுதியற்றது" ஆகிறது ? அது இனி இயங்காத நிலையில் இருக்கும்போது. அல்லது அதற்கு எரிபொருள் இல்லாவிட்டால், நாம் என்ன செய்ய முடியும் ? நாம் அதைத் தள்ள அல்லது எரிபொருள் வாங்க முயற்சி செய்யலாம். நிச்சயமாக, நாம் காரை எரிபொருளால் நிரப்புவோம். பரிசுத்த ஆவியின் மூலம் நம் இதயத்தில் இயேசு இல்லாமல் இருந்தால், நம் கீழ்ப்படிதல் எரிபொருள் இல்லாத ஒரு காரைத் தள்ள யாரோ ஒருவர் முயற்சிப்பதை ஒத்திருக்கிறது.*

*நம்முடைய விசுவாசத்திற்கும் வாழ்க்கைக்கும் இயேசு எவ்வளவு முக்கியமானவர் என்பது உங்களுக்குத் தெளிவாகத் தெரிகிறதா ? இயேசு ஈடுசெய்ய முடியாதவர். "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்." (1 யோவான் 5 :12) ; "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் ; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்." (யோவான் 14 :6) நமக்கு இயேசு தேவை, அவர் இல்லாமல் நாம் இரட்சிக்கப்பட முடியாது, நாம் இங்கு நிறைவான வாழ்க்கையை பெறவோ அல்லது நித்திய வாழ்க்கையை அடையவோ முடியாது.*

*கீழ்ப்படிதல் எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது என்பதை நீங்கள் நன்கு புரிந்து கொண்டீர்களா ? நம் அன்றாட ஒப்புக்கொடுத்தல் மற்றும் பரிசுத்த ஆவிக்காகத் தினசரி வேண்டுவது மூலம் நாம் இயேசுவிடம் நம் விருப்பத்தைக் காட்டுகிறோம், அதன் மூலம் அவர் நம்மில் கீழ்ப்படிதலை நிறைவேற்றுவார். இதை நாம் 1 கொரிந்தியர் 1 :30 ஐ வாசிக்கும்போது மிக நன்றாகப் புரிந்துகொள்ளலாம் : "அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள் அவரே தேவனால் - நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்."*

# நாம் எப்போது இரட்சிக்கப்படுகிறோம்?

*ஏன் இந்தக் கேள்விக்கான பதில் மிகவும் முக்கியமானது ? நான் இரட்சிக்கப்பட்டவுடன் அப்போதே என் இரட்சிப்பின் விளைவாகக் கீழ்ப்படிதல் வருகிறது என்பது தெளிவாகிறது. என் இரட்சிப்புக்கு இது ஒரு முன்நிபந்தனை அல்ல. நான் முழுமையாக இயேசு கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுத்த தருணத்தில் இரட்சிக்கப்பட்டேன். "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் ; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு ; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல." (எபே 2 :8,9).*

*அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியர்களுக்கு எழுதியபோது, அவர்கள் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டதை அவர்களுக்குத் தெரிவித்தார். இருப்பினும், ரோமர் 8 :24 ல், அவர் எழுதுகிறார், "அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்." கடவுளோடு வாழ்வதா இல்லையா*

*என்ற சுதந்திரம் நமக்கு இருக்கிறது.*

*நமது இரட்சிப்புக்குப் பிறகு (நம்பிக்கைமூலம்) நம் வாழ்வின் இறுதிவரை அல்லது அவருடைய இரண்டாம் வருகைவரை கிறிஸ்துவில் நிலைத்திருப்பதே நமது முக்கிய குறிக்கோள். நாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டோம் (எபேசியர் 2 :8), அதன் பிறகு, விசுவாசத்தில் நிலைத்திருப்பது அவசியம். "ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு." (கொலோ 2 :6) இதன் கருத்து ஒப்புக்கொடுப்பதன் மூலம் கிறிஸ்துவில் நிலைத்திருப்பது தான். கிறிஸ்துவில் நிலைத்திருப்பதைப் பற்றி டென்னிஸ் ஸ்மித் பின்வருமாறு எழுதுகிறார் : "அவரில் நிலைத்திருப்பது, நம் இரட்சிப்புக்கு ஒரு முன்நிபந்தனையாக நாம் செய்ய வேண்டிய ஒரு வேலை அல்ல. மாறாக, அவருடன் உடன்பட்டு, அவர் நமக்காகவும், நம்மிலும், நம் மூலமாகவும் எல்லாவற்றையும் செய்ய அனுமதிப்பது ஆகும்."* [107]

# *முழுமையாக ஒப்புக்கொடுத்தல் நமக்கேன் அவசியம்? அதனால் என்ன பயன்?*

*முழுமையான ஒப்புக்கொடுத்தல் என்பது நமது ஆணவத்தின் பிடியிலிருந்து விடுபடுவதுடன் தொடர்புள்ளது. நமது ஆணவமே நமது பிரச்சனைகளுக்குக் காரணம். ஒரு பழமொழி இவ்வாறு கூறுகிறது : ஒவ்வொரு நபரின் மிகப்பெரிய பிரச்சனை அவர்களே. நமது சுயம் புண்படுகிறது, காயப்படுகிறது மற்றும் வருத்தமடைகிறது ; அதன் அதிகாரத்தை நிலைநாட்ட விரும்புகிறது ; பொறாமை அடைகிறது, மற்றும் பல.*

*"கடவுள் நம்மைக் குணப்படுத்தவும், நம்மை விடுவிக்கவும் விரும்புகிறார். ஆனால் இதற்கு முழு மாற்றமும், நமது முழு இயல்பையும் புதுப்பித்தலும் தேவைப்படுவதால், நாம் முழுவதுமாக அவருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். ஏராளமான ஆசீர்வாதங்களை அவர் நமக்கு முன் வைக்கிறார், மேலும் அவருடைய கிருபையின் மூலம் நம்மை அங்கே கொண்டு வர விரும்புகிறார். அவர் தம்முடைய சித்தத்தை நம்மில் நிறைவேற்றும்படி, நம்மையே அவருக்குக் கொடுக்க அவர் நம்மை அழைக்கிறார். பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு, தேவ பிள்ளைகளுக்குச் சொந்தமான மகிமையான சுதந்திரத்தைத் தேர்ந்தெடுப்பது நம் கையில் உள்ளது."* [108]

*நமது அகங்காரத்தின் கீழ் வாழும் வாழ்க்கை பாவத்திற்கு அடிமையான வாழ்க்கை. கிறிஸ்துவுக்குள் வாழ்வது என்பது கடவுளின் பிள்ளைகளுக்கு மகிமையான சுதந்திர வாழ்க்கை. குயவன் கையில் களிமண் இருக்கும்போதுதான் வடிவம் கொடுக்க முடியும். எனவே நமது ஒப்புக்கொடுத்தல் மிகவும் முக்கியமானது. நாம் ஒப்புக்கொடுத்த பிறகு கிறிஸ்து நம்மில் நிலைத்திருப்பது நடக்கிறது. நாம் அவரில் நிலைத்திருக்கும்போது, இரட்சிப்பு நித்தியம் முழுவதும் தொடரும். இருப்பினும், இயேசுவின் இரண்டாம் வருகைக்குப் பிறகு அது முற்றிலும் புதிய பரிமாணத்தில் இருக்கும்.*

# வேதாகமம் சார்ந்த கீழ்ப்படிதல்

*வேதாகமக் கீழ்ப்படிதல் என்பது தகுதிகள் அல்லது கிரியைகள்மூலம் கூடிய நீதியுடன் தொடர்புடையது அல்ல. இது கடவுள்மீதான விசுவாசம், ஒப்புக்கொடுத்தல், இரட்சிப்பு மற்றும் கிறிஸ்துவுடனான எனது உறவு ஆகியவற்றின் நேர்மையான விளைவு ஆகும். வேதாகமக்*

---

[107] Dennis Smith, *40 Days: Prayer and Devotions to Revive your Experience with God*, book 2 (Hagerstown, MD: Review and Herald Publishing Association, 2011), p. 35.
[108] Ellen G. White, *Steps to Christ*, pp. 43, 44.

*கீழ்ப்படிதல் என்பது, மீண்டும் பிறந்த ஒரு கிறிஸ்தவர் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட பின்னர் அவரிடம், கடவுளின் அன்பைத் தவிர அவர் செயல்களில் வேறு எதுவும் வெளிப்படுவதில்லை என்பதாகும்.*

*பரிசுத்த ஆவியின் வல்லமையின் மூலம் கீழ்ப்படிதல் களிப்பையும் அதிக மகிழ்ச்சியையும் தருகிறது : "அனைத்து உண்மையான கீழ்ப்படிதலும் இதயத்திலிருந்து வருகிறது. கிறிஸ்து நம் இருதயத்தில் செயல்படுகிறார். நாம் சம்மதித்தால், நம் எண்ணங்கள் மற்றும் நோக்கங்களுடன் அவர் தன்னை அடையாளப்படுத்துவார். அவருடைய சித்தத்திற்கு இணங்க நம் இதயங்களையும் மனதையும் ஒருங்கிணைக்கும் வகையில், அவருக்குக் கீழ்ப்படியும்போது நாம் நம்முடைய சொந்த உள்ளத் தூண்டுதல்களைச் செயல்படுத்துவோம். விருப்பம் சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, அவருடைய சேவையைச் செய்வதில் மிக உயர்ந்த மகிழ்ச்சியைக் காணும்."* [109]

*நம் சொந்த முயற்சியால் நாம் கீழ்ப்படிந்து நடக்க முடியாது என்பது நமக்குத் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். இஸ்ரவேல் மக்களைப் பற்றிக் கர்த்தர் நமக்குச் சொல்கிறார் : "தேவனின் பரிசுத்தத்தைப் பற்றியும், தங்கள் சொந்த இதயங்களின் அளவுகடந்த பாவத்தைப் பற்றியும், மற்றும் தங்களுக்குள் இருக்கிற அவர்களின் முழு இயலாமை பற்றியும், கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிவது பற்றியும், அவர்களுக்குச் சரியான கருத்து இல்லை."* [110]

*நம்முடைய சொந்த பலத்தில் கடவுளின் கட்டளைகளை நாம் கடைப்பிடிக்க முடியாது. கீழ்ப்படிதலின் இரகசியம் என்னவென்றால், பரிசுத்த ஆவியானவர் நம்மில் வாசம் செய்வதின் மூலம் இயேசு நம்மோடு இருக்கிறார். நாம் உண்மையிலேயே இயேசுவை நேசித்து விசுவாசித்தால், பரிசுத்த ஆவியின் மூலம் அவர் நம்மில் வாழ்வார், அப்பொழுது கீழ்ப்படிதல் மிகுந்த மகிழ்ச்சியைத் தரும். இயேசு நம்மில் வாழும்போது, அவருடைய கட்டளைகள் நம் இதயங்களில் இருப்பதை அவர் உறுதிப்படுத்துவார். இந்தப் பிரமாணம் சுயாதீனப்பிரமாணம், அதாவது பத்து கட்டளைகள் (யாக் 2 :12).*

---

[109] Ellen G. White, The Desire of Ages, p. 668.
[110] Ellen G. White, Patriarchs and Prophets (Nampa, ID: Pacific Press Publishing Association, 2005), p. 371.

# தனியொருவரின் எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. உண்மையுள்ள கீழ்ப்படிதல் என்றால் என்ன, அது எப்படி புரிந்து கொள்ளப்படுகிறது ?

2. நான் எப்படி, எப்போது இரட்சிக்கப்படுகிறேன் ? இந்த இரட்சிப்பு மாற்ற முடியாத ஒன்றா ?

3. நாம் செய்யும் அல்லது செய்யாத செயல்களால் ஏற்படும் இயற்கையான விளைவுகளைப் பற்றி வேதம் என்ன சொல்கிறது ?

4. கடவுள் நம்மிடம் ஏதாவது எதிர்பார்க்கிறாரா ? இரட்சிப்பு தொடர்பாகக் கிரியைகள் என்ன பங்கு வகிக்கின்றன ?

# நம் ஜெப நேரம்

உங்கள் ஜெப பங்காளரைத் தொடர்புக் கொண்டு தலைப்பைப் பற்றி விவாதிக்கவும்.
உங்கள் ஜெப பங்காளருடன் ஜெபியுங்கள் :

1. இரட்சிப்பு மற்றும் கீழ்ப்படிதல் பற்றிய ஆழமான புரிதலுக்காக ஜெபியுங்கள்.
2. தேவன் உடனான நமது உறவிலிருந்து உருவாகும் மகிழ்ச்சிக்காக ஜெபியுங்கள்.
3. வேதாகமம் தரும் இரட்சிப்பின் உத்தரவாதத்துக்காக ஜெபியுங்கள்.
4. தேவன் மீது, நாம் கிரியைகள்மூலம் வெளிப்படுத்தும் அன்புக்காக ஜெபியுங்கள்.
5. கடவுளின் அன்பு மற்றும் பரிசுத்தம் பற்றிய சரியான புரிதலுக்காக ஜெபியுங்கள்.

# *அத்தியாயம் 4 – பகுதி 2*

### *- “எனக்குள் இயேசு” இருக்கும்போது கீழ்ப்படிதல் எவ்வாறு செயல்படுகிறது?*

### *-ஆண்டவருக்கும் மனிதனுக்கும் இடையிலான கூட்டுறவை கர்த்தர் திட்டமிட்டு உள்ளார்*

## திருமணத்தில் நடந்த கீழ்ப்படிதல் என்னும் அற்புதம்

*இயேசு தனது முதல் அற்புதத்தை நிகழ்த்திய கானா ஊர் திருமணத்தின் கதையை நாம் அனைவரும் அறிவோம். தண்ணீரை திராட்சரசமாக, புளிக்காத திராட்சரசமாக மாற்றினார். இதை நாம் திராட்சை சாறு என்று சொல்வோம். அங்கே என்ன நடந்தது ?*

*இயேசுவின் தாய் மரியாள், திராட்சரசம் இல்லை என்று கேள்விப்பட்டு இயேசுவுக்குத் தெரிவித்தார். ஆனால் அவள் எதிர்பார்த்தபடி இயேசு செயல்படவில்லை. ஆயினும்கூட, இந்தச் சூழ்நிலையில் இயேசு எப்படியாவது உதவுவார் என்று அவள் கருதினாள், ஏனென்றால் அவள் வேலைக்காரர்களிடம் : “அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள் என்றாள்.” (யோவான் 2 :5) இவ்வாறு, மரியாள் இயேசுவின் மீது கொண்டிருந்த நம்பிக்கையை வேலைக்காரர்கள் மத்தியில் வளர்த்தார். கடைசியாக இயேசு அவர்களிடம், “ஜாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்றார்,” அவர்களும் அவ்வாறே செய்ய முடிவு செய்தனர். பின்னர் அவர் அவர்களைப் பார்த்து : “நீங்கள் இப்பொழுது மொண்டு, பந்திவிசாரிப்புக்காரரிடத்தில் கொண்டுபோங்கள் என்றார்,” அவர்களும் அவ்வாறே செய்தார்கள். (வசனங்கள் 7,8,)*

*நாங்கள் பின்வருவனவற்றை வலியுறுத்த விரும்புகிறோம் : வேலைக்காரர்கள் இயேசுவின் மீது நம்பிக்கையைப் பெற்றிருந்ததால், அவர்கள் மனமுவந்து அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய முடிவு செய்தனர். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவர்களின் விருப்பமும் மேலும் அவர்களின் முடிவும் கீழ்ப்படிதலுக்கான தெளிவான செயல்கள் ஆகும். அவர்களுடைய கீழ்ப்படிதலின் மூலம், இயேசு தண்ணீரை சுவையான பானமாக மாற்றினார், மேலும் தனது முதல் அற்புதத்தையும் அங்கே அவர் நிகழ்த்தினார்.*

*வேலைக்காரர்களின் தனிப்பட்ட செயல்கள் என்னவாக இருந்தன ?*

1. *மரியாள் தன் அறிவுரைகளால் இயேசுவின் மீது ஊழியர்களின் நம்பிக்கையை வளர்த்தார்.*
2. *இயேசு சொன்னதைச் செய்வதன் மூலம் வேலைக்காரர்கள் தங்கள் நம்பிக்கையையும் விருப்பத்தையும் வெளிப்படுத்தினர்.*
3. *உண்மையில் தண்ணீரை திராட்சரசமாக மாற்றியதில் மரியாளுக்கோ அல்லது வேலையாட்களுக்கோ பங்கு இல்லை. இயேசு ஒருவரே இந்த அற்புதத்தைச் செய்தார்.*

*ஆனால் இந்த ஆயத்த நடவடிக்கைகள் இல்லாமல் இந்த அதிசயம் நடந்திருக்குமா ? நாம் இயேசுவை நம்புவது முக்கியம், ஆனாலும் நம்முடைய விருப்பத்தையும் தேர்ந்தெடுப்புகளையும் அவருடைய பாதப்படியில் வைத்து, இதைக் கீழ்ப்படிதலுக்கான செயல்களுடன் வெளிப்படுத்த*

*வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம், இயேசு - இயேசு மட்டுமே - இந்த அற்புதத்தைச் செய்வார். அவர் ஒருவரே நம்மில் கீழ்ப்படிதல் என்ற அற்புதத்தையும் செய்கிறார். விசுவாசத்தினால் கீழ்ப்படிதல் இப்படித்தான் செயல்படுகிறது. இயேசு நமக்கு ஞானமாகவும், நீதியாகவும், பரிசுத்தமாகவும், மீட்பாகவும் ஆக்கப்பட்டுள்ளார். (1கொரி 1 :30) அவருடைய சித்தத்தை ஏற்க நாம் எடுக்கும் முடிவும், அவருக்குக் கீழ்ப்படிய நாம் எடுக்கும் ஆயத்த நடவடிக்கைகளும், நம் வாழ்வில் கீழ்ப்படிதல் என்ற அற்புதத்தை இயேசு செய்வதற்கான திறவுகோலாகும்.*

# ஆண்டவருக்கும் மனிதனுக்கும் இடையிலான கூட்டுறவு

*தானியேலின் வாழ்க்கையில் கீழ்ப்படிதலுக்கான செயல்கள் எவ்வாறு செயல்பட்டன என்பதை எலன் உவையிட் விளக்குகிறார் : கடவுள் தானியேலிலும் அவருடைய தோழர்களிலும் "தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும்," (பிலிப்பியர் 2 :13) உண்டாக்கிக் கொண்டிருந்தபோது, அவர்கள் தங்கள் சொந்த இரட்சிப்புக்காக வேலை செய்துக் கொண்டிருந்தனர். தெய்வீக கூட்டுறவுக் கொள்கையின் வெளிப்பாட்டை இது வெளிப்படுத்துகிறது, இது இல்லாமல் உண்மையான வெற்றியை அடைய முடியாது. தெய்வீக வல்லமை இல்லாமல் மனித முயற்சி பயனளிக்காது ; மற்றும் மனித முயற்சி இல்லாமல், தெய்வீக முயற்சி பிரயோஜனமளிக்காது. கடவுளின் கிருபையை நம்முடையதாக ஆக்குவதற்கு, நாம் நமது பங்கைச் செய்ய வேண்டும். அவருடைய சித்தம் செய்வதற்கு நமக்குக் கிருபை கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆனால் நாம் செய்ய வேண்டிய முயற்சிக்கு ஈடாக அங்கு வேறு ஏதேனும் இருக்க முடியாது.*

*மேலும் அவருடைய ஆவியை அளிப்பதன்மூலம் அவர் ஒவ்வொரு உண்மையான நோக்கத்தையும், ஒவ்வொரு உன்னதமான தீர்மானத்தையும் பலப்படுத்துவார். கீழ்ப்படிதலின் பாதையில் நடப்பவர்கள் பல இடையூறுகளைச் சந்திப்பார்கள். அவருடைய பலத்தில் அவர்கள் ஒவ்வொரு சோதனையையும் வெற்றிகொள்ளுவார்கள், ஒவ்வொரு கஷ்டத்தையும் வெல்வார்கள்.[111] "தெய்வீக வல்லமை மனித முயற்சி உடன் ஒத்துழைக்க வேண்டும் என்று இறைவனால் திட்டமிடப்பட்டுள்ளது." [112] "கடவுளுடன் இணைந்து பணியாற்றுவது மிகுந்த மகிழ்ச்சியையும் நிறைவையும் தருகிறது," என மார்க் ஃபின்லே எழுதியிருக்கிறார்.*

# இந்த கூட்டுறவில் நம் பங்கு என்ன? இயேசுவின் பங்கு என்ன?

1. *இயேசுவின் மீது நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள முடிவு செய்கிறோம், அப்பொழுது அவர் நம்மில் அவருடைய சித்தத்தை செயல்படுத்துகிறார், மேலும் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிய, அதற்கான சூழ்நிலையை நம்மில் உருவாக்குகிறார். ஆனால் அவர் நாம் எடுக்கும் முடிவுக்காகக் காத்திருக்கிறார்.*
2. *கடவுளுடைய சித்தத்தைச் செய்ய முடிவெடுப்பது நம் கடமை. கடவுள் நம் ஆளுமை மற்றும் விருப்பத்தை முழுமையாக மதிப்பதால், நாம் முடிவெடுத்த பிறகு தான் அவர் தலையிட முடியும். அதற்காக அவர் காத்திருக்கிறார்.*
3. *நாம் இயேசுவை விசுவாசித்து எடுக்கும் முடிவைத் தெளிவான விதத்தில் வெளிப்படுத்துவது, கீழ்ப்படிதலின் படிகளில் நாம் செய்ய வேண்டிய ஒரு வேலையாகும். கீழ்ப்படிதலின் இந்தச் செயல்கள், அளவுகளில் பெரிதும் வேறுபடலாம்.*

---

[111] Ellen G. White, Prophets and Kings, pp. 486. 487.
[112] Ellen G. White, Ye Shall Receive Power, January 2, p. 10.

*4. கடவுள் முக்கியமான பங்கை மட்டும் செய்கிறார், மேலும் நம்பிக்கையையும் முன்னேற்பாடுகலையும் வளர்த்துக்கொள்ளவும் அவர் நமக்கு உதவுகிறார். ஆனால், நம்முடைய சொந்த பலத்தில் கீழ்ப்படிய முடிவெடுப்பதற்கும் அல்லது கடவுளுடைய பலத்தில் கீழ்ப்படிதலுக்கான செயல்கள் செய்வதற்கும் பெரிய வித்தியாசம் உள்ளது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பரிசுத்த ஆவியானவர் மூலமாக இயேசு நம்மில் வாழும்போது, தேவனுடைய பலத்தில் நம்முடைய பங்கு செய்யப்படுகிறது. சிறிய அல்லது பெரிய விஷயங்களில் இது கீழ்ப்படிதலை மகிழ்ச்சியாக ஆக்குகிறது.”* [113]

# கேள்விகள்

*கீழ்ப்படிதலை யாரால் சாத்தியமாக்க முடியும் என்பது குறித்து மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. கீழ்ப்படிதல் என்பது தெய்வீக - மனித ஒத்துழைப்பின் விளைவு என்று சிலர் கருதுகின்றனர். அதைக் கிறிஸ்து அல்லது கடவுள் மட்டுமே செய்கிறார் என்று மற்றவர்கள் கூறுகிறார்கள். ஆகவே அது எப்படி கிரியை செய்கிறது ? இயேசுவின் காலத்தில், சத்தியத்தை அறிந்தால் போதும் என்று பலர் நம்பினர். யுகங்களின் வாஞ்சை, என்ற புத்தகத்தில் நாம் வாசிக்கிறோம் : “கிறிஸ்துவின் நாட்களில் மனித மனங்களில் இருந்த மிகப் பெரிய வஞ்சனை என்னவென்றால், சத்தியத்தை ஏற்றுக்கொள்வது நீதியை உருவாக்கும் என்று நம்பினர்.”* [114]

*எதிர் செயலாற்ற முடியாத நிலையில் நாம் அவருடைய சித்தத்தை சகித்துக்கொள்ள வேண்டும் என்று கடவுள் எதிர்பார்க்கவில்லை, மாறாக நாம் செயலாற்ற வேண்டும், உறுதியான வினையாற்ற வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். கிறிஸ்து நம் இதயத்தில் இருக்கும்போது நாம் ஒரு தெளிவான முடிவை எடுத்து அதை நடைமுறையில் செயல்படுத்துகிறோம் என்பதே இதன் பொருள். “அவன் (மனிதன்) சர்வாயுதவர்க்கத்தை தரித்துக் கொள்வதற்கும், விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டவன். கடவுள் அவனது எல்லைக்குள் வைத்திருக்கும் வழிகளைப் பயன்படுத்த அவன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளான். அவன் தொடர்ந்து விசுவாசத்தில் இருக்க தேர்வு செய்யப்பட்டவன்.”* [115] *சோதனையை மேற்கொள்ளும் மகா பெரிய பணியில் மனிதனுக்கு சிறிதளவு பணி அல்லது எதுவும் இல்லை என்ற கருத்தை எந்த மனிதனும் முன்வைக்க வேண்டாம் ; கடவுள் மனிதனுக்கு அவனது ஒத்துழைப்பு இல்லாமல் எதுவும் செய்வதில்லை. மனிதன் முதலிலிருந்து கடைசி வரை கடவுளோடு சேர்ந்து உழைப்பவனாக இருக்க வேண்டும், கிறிஸ்துவோடு ஒத்துழைப்பது என்பதற்கு வெற்றி என்று பொருள்.*

*“மனிதன் தான் செய்வதற்கு சிறிதளவு பங்கு அல்லது செய்வதற்கு பங்கு ஒன்றுமில்லை என்ற எண்ணம் மனதில் இருக்கக் கூடாது ; மாறாக, கடவுளுடன் ஒத்துழைக்க மனிதனுக்குக் கற்றுக்கொடுங்கள், அதனால் அவன் வெற்றி பெறலாம் என்று.”* [116] *நமது தீர்மானம் மற்றும் ஆயத்த பணிகளின் பங்கை நாம் ஒப்புக் கொள்ளும்போது, இது ஒரு தெய்வீக - மனித ஒத்துழைப்பு என்பது தெளிவாகிறது, இருப்பினும் கிறிஸ்து பரிசுத்த ஆவியின் மூலம் நம்மில் இருக்கும்போது ஆயத்த பணிகள் கடவுளின் பலத்தில் எடுக்கப்படுகின்றன.*

*கடவுள் மனிதனை முழுவதுமாக மதிக்கிறார், அவனுடைய அனுமதியின்றி செயல்படமாட்டார், எனக்குத் தெரிந்தவரை இதுவே சரியான கருத்து. மனிதன் தனது கீழ்ப்படிதலின் செயல்கள்மூலம் தனது சம்மதத்தைக் காட்டுகிறான். கடவுள் முக்கியமான பங்கைச் செய்கிறார் என்பது தெளிவாகிறது. இத்தகைய செயல்முறையின் அனைத்து படிகளையும் நாம் பார்க்க வேண்டும், அதன் விளைவாகச் சம்பந்தப்பட்டவர்களை - கடவுளும் மனிதனும் - ஒன்றாகச்*

---

113 Mark Finley, Decisions: Persuading People for Christ (Silver Spring, MD: General Conference of Seventh-Day Adventists, 1984).

114 Ellen G. White, *The Desire of Ages*, p. 309.

115 Ellen G. White, *Testimonies to Ministers and Gospel Workers* (Nampa, ID: Pacific Press Publishing Association, 2003), p. 454.

116 Ellen G. White, *A New Life* (Revival and Beyond) (Payson, AZ: Leaves-of-Autumn Books, 1972), pp. 38, 39.

*செயல்படுவதைப் பார்க்க வேண்டும். தெய்வீக-மனித ஒத்துழைப்புக்கு ஒரு நல்ல உதாரணத்தைப், பாலைவனத்தில் இஸ்ரவேலர்களுக்கும் அமலேக்கியர்களுக்கும் இடையே நடந்த போரில் நாம் காண்கிறோம் (பார்க்க யாத்திராகமம் 17 :8-16). யோசுவா தனது படைகளுடன் போரிட்டார், ஆனால் ஆரோன் மற்றும் ஊரின் ஆதரவுடன் மோசே ஜெபித்ததால் அவர்கள் வெற்றி பெற்றார்கள்.*

# கீழ்ப்படிதலின் வெவ்வேறு அளவுகள்

## இயேசுவின் தாய், மரியாள்

*காபிரியேல் தூதன் மரியாளுக்கு இயேசுவின் பிறப்பை அறிவித்தபோது, அவள் கடவுளின் சித்தத்திற்கு தன் ஒப்புதலை மட்டுமே தெரிவித்தாள். அதற்கு மரியாள் : "இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்." (லூக்கா 1 :38) அதற்கு அப்பால், கடவுளின் தலையீட்டிற்காகக் காத்திருப்பதைத் தவிர அவளால் எதுவும் செய்ய முடியாது. அவளால் தன் சம்மதத்தை மட்டுமே அந்த நேரத்தில், கொடுக்க முடியும் அல்லது கொடுக்காமல் இருக்க முடியும். கடவுளின் இந்தச் சித்தத்தை ஏற்றுக்கொள்வது அவள் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்தது, மனித கண்ணோட்டத்தில், அது அதிக ஆபத்துகள் நிறைந்தது. நாம் பார்க்கிறபடி, மரியாள் முழுமையாக ஒப்புக் கொடுத்து வாழ்ந்தாள்.*

## பத்து தொழுநோயாளிகள்

*இயேசுவிடம் வந்த தொழுநோயாளிகள், "ஐயரே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள்." இயேசு அவர்களின் விசுவாசத்தைக் கண்டு, "நீங்கள்போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள்." (லூக்கா 17 :13,14)*

*இந்த மனிதர்கள் உடனடியாகச் சென்றதன் மூலம் தங்கள் விசுவாசத்தையும் தங்கள் முடிவையும் வெளிப்படுத்தினர். அவர்கள் சென்றதன் மூலம் குணமடைந்தார்களா ? நிச்சயமாக இல்லை ! அவர்களுடைய விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் காரணமாக இயேசு அவர்களைக் குணப்படுத்தியதால் அவர்கள் குணமடைந்தார்கள். அவர்கள் மீளப் பெற்ற சுக மீட்சியில் அவர்களுக்குப் பங்கு இல்லை. ஆயினும்கூட, அவர்களின் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் செயல்கள்மூலம் மட்டுமே, அவர்களுக்கு இயேசுவால் அற்புதம் செய்யக்கூடியதற்கான கதவுத் திறந்தது. இங்கு இயேசு மட்டுமே அற்புதம் செய்தார்.*

## நாகமானுக்கு கிடைத்த சுகம்

*தொழுநோயிலிருந்து நாகமான் எவ்வாறு குணமடைந்தார் என்பதை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களா ? எலிசா மூலம் கொடுக்கப்பட்ட கடவுளின் வழிமுறைகள் பின்வருமாறு : "நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு ; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச்சொன்னான்." (2இராஜாக்கள் 5 :10) இந்த உத்தரவால் நாகமான் கோபமடைந்தார். வேலையாட்கள் வற்புறுத்திய பின்னரே அதைச் செய்ய அவருக்குப் போதுமான நம்பிக்கை ஏற்பட்டது. யோர்தானுக்குச் செல்வதையும் தண்ணீரில் மூழ்குவதையும் கடவுள் தடுக்கவில்லை. நாகமான் ஏழாவது முறை தண்ணீரில் மூழ்கியபிறகு, அவர் தொழுநோயிலிருந்து குணமானார். ஏழு முறை மூழ்கியதால் அவர் குணமாக்கப்பட்டாரா ? இல்லை ! அவரது சிறிய விசுவாசத்தின் விளைவாகவும், அவருடைய கீழ்ப்படிதலின் செயல்கள் காரணமாகவும், கடவுளின் குணப்படுத்துதல் அருளப்பட்டது. கடவுள்மீதான சிறு நம்பிக்கையும், கீழ்ப்படிதலின் செயல்களும் கடவுளின் அற்புதத்தைப் பெற இட்டுச் சென்றதை மீண்டும் காண்கிறோம். இந்த அற்புதத்தில் நாகமானுக்கு எந்தப் பங்கும் இல்லை. ஆனால் அவரது ஆயத்த நடவடிக்கைகள் இல்லாமல் எதுவும் நடந்திருக்காது.*

## ரூடி மற்றும் மேரி அன்னா ஹிர்ஷ்மேன்

*இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, அட்வென்டிஸ்ட் ஆலயத்தில் ஞானஸ்நானம் பெற்ற ஒரு*

*இளம் தம்பதியினர் ஜெர்மனியின் ஏப்லிங் அருகே ஒரு சிறிய நகரத்தில் வசித்து வந்தனர். மேரி அன்னா தனது முதல் குழந்தையைப் பெற்றெடுக்கக் காத்திருந்தார், அப்பொழுது உடல்நலக் குறைவு காரணமாக ஆசிரியர் வேலையை விட்டுவிடுவது தவிர்க்க முடியாததாக இருந்தது.*

*வேலைக்கான தேடலில், ரூடி தினமும் முனிச்சிற்குச் சென்றார், இது பல வாரங்கள் நீடித்தது, ஆனால் அனைத்தும் தோல்வியில் முடிந்தது. மற்றும் அவர்களின் மீதமுள்ள சேமிப்பு கரைந்து, அவர்களிடம் ஆறு மார்கள் மட்டுமே இருந்தன. (அந்தக் கால ஜெர்மன் நாணயம்) இதுதவிர, அவர்கள் ஒரு உறையில் பணம் வைத்திருந்தனர், அதில் அவர்கள் ஒதுக்கிய கடவுளுக்குச் சொந்தமான தசமபாகம் இருந்தது. அவர்கள் இப்போது என்ன செய்ய முடியும் ?*

*மேரி கணவனை நோக்கி, « ரூடி, நம் எல்லாப் பணமும் முடிஞ்சதும், கடவுளுக்குச் சொந்தமான பணத்தை உபயோகிக்க தூண்டப்படுவோம். அதனால் அதை வீட்டில் வைக்காமல் இருப்பதே நல்லது. நீ நாளை முனிச்க்கு ரயிலில் செல்வதற்கு முன், உன்னுடன் பணத்தை எடுத்துக்கொண்டு சென்று அட்வென்டிஸ்ட் மாநாட்டின் பொருளாளரிடம் கொடு" என்று சொன்னாள்.*

*எனவே ரூடி செய்ததும் இதுதான். அவர் பணத்தைப் பொருளாளரிடம் கொண்டு வந்தார். அந்தப் பெண் பொருளாளர் ரூடியிடம் அவர்கள் நலன் விசாரித்தாள், ரூடி தன் நிலைமையை விளக்கினான். "கொஞ்சம் பொறுங்கள்" என்று சொல்லிவிட்டு தொலைபேசியில் பொருளாளர் யாரிடமோ பேசினாள். "அதற்குப் பிறகு அவள் சொன்னாள், "உங்களுக்கு ஒரு வேலையைக் கண்டுபிடித்துள்ளேன், இந்த முகவரியில் சென்று திரு. பாயரைக் கேளுங்கள் என்று சொன்னாள்."*

*பின்னர் ரூடி அரை மணி நேரத்திற்குள் பணியமர்த்தப்பட்டார். அவர்கள் நிதி ரீதியாக உடைந்திருந்தாலும், ரூடியின் குடும்பம் தசமபாகம் செலுத்தினர். அவர்கள் கீழ்ப்படிதலின் ஒரு அடியை எடுத்து வைத்துத் தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தினர், அந்த நேரத்தில் கடவுள் தலையிட்டார்.*[117]

## குவாம் தீவில் ஒரு சுற்றுலா நிறுவனம்

*குவாம் தீவில் ஒரு பெரிய சுற்றுலா நிறுவனத்தை வைத்திருந்த ஒரு தம்பதியினர் கிறிஸ்தவர்களாக மாறினர். மனைவி முதலில் ஞானஸ்நானம் பெற்றார், பின்னர் கணவர் ஜனவரி 2004ல் ஞானஸ்நானம் பெற்றார். தங்கள் நிறுவனத்தில் ஓய்வுநாளைக் கடைப்பிடிக்க அவர்கள் மிகவும் ஜெபத்துடன் தயாராகினர். அவர்கள் ஓய்வுநாள் அன்று, மற்ற விடுதிகளுடனான (Hotels) அனைத்து சேவைகளையும் ரத்து செய்தனர். தங்கள் நடவடிக்கைக்கான காரணங்களைப் பயண முகவர்கள், தங்கும் விடுதிகள் மற்றும் சுற்றுலா சேவைகளைப் பயன்படுத்திய மற்ற விற்பனை முகவர்களிடமும் கணவர் விளக்கினார். பல வாடிக்கையாளர்கள் அவர்களுடைய வணிகத்தை மற்ற நிறுவனங்களுக்கு, அதாவது மற்ற போட்டியாளர்களுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும் என்று பதிலளித்தனர். இதனால் வேலை இழக்க நேரிடும் என அவர்களுடைய ஊழியர்கள் அச்சமடைந்தனர். இந்த முடிவு நிறுவனத்திற்கு மரண தண்டனைபோல் தோன்றியது.*

*ஆனால் நம் சகோதரர் சொல்வதைக் கேளுங்கள் : "ஓய்வுநாளைக் கடைபிடிக்க முதல்முறையாகக் கம்பெனி மூடப்பட்டது எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. வெள்ளிக்கிழமை மாலை, முன்பதிவுகளுக்குப் பதில் அளிக்கும் இயந்திரத்தை அணைத்துவிட்டோம். முதல் சனிக்கிழமையன்று நாங்கள் எங்கள் நிறுவனத்தை மூடியபோது, வானிலை எதிர்பாராத விதமாக மாறியது, மேலும் நாள் முழுவதும் பலத்த மழை பெய்தது. மாலையில் பதில் அளிக்கும் இயந்திரம் ஞாயிற்றுக்கிழமைக்கான முன்பதிவுகளால் நிறைந்திருப்பதைக் கண்டோம். அடுத்த ஆறு மாதங்களுக்கு வானிலை ஒரே மாதிரியாக இருந்தது : வெள்ளிக்கிழமை அழகான வானிலையும், சனிக்கிழமையன்று மழையும் மற்றும் ஞாயிற்றுக்கிழமையன்று தெளிவாகவும் அமைதியாகவும்*

[117] Maria Ana Hirschmann, I Changed Gods (Nampa, ID: Pacific Press Publishing Association, 1968), p. 156.

*வானிலை இருந்தது. கடவுள் எங்களைக் பராமரித்துக்கொண்டார்." [118]*

*இந்த அற்புதத்தில் தம்பதியினரின் பங்குக் கடவுளை நம்பி ஆயத்தச் செயல்களைச் செய்தது மட்டுமே. அதன்பின் நடந்த அற்புதங்கள் ஆண்டவரால் மட்டுமே நிகழ்த்தப்பட்டிருக்க முடியும். இதை நினைவில் கொள்வோம் : "மனித சித்தம் கடவுளின் சித்தத்துடன் ஒத்துழைக்கும்போது, அது சர்வ வல்லமையடைகிறது. அவருடைய கட்டளைப்படி செய்ய வேண்டிய அனைத்தும் அவருடைய பலத்தில் நிறைவேற்றப்படலாம். அவருடைய அழைப்புகள் அனைத்தும் செயல்படுத்தப்படுகின்றன." [119] விசுவாசத்தில் கீழ்ப்படிந்து, நம்பிக்கையோடு, கடவுளிடம் ஒப்புக்கொடுத்து வாழும்போது கடவுள் நமக்குப் பெரும் ஆசீர்வாதங்களை அளிக்கிறார்.*

# *கீழ்ப்படிவதேன் நமக்கு நல்லது?*

*கடவுள் தம்முடைய திட்டத்தின்படி நமக்குக் கீழ்ப்படிதலை சிறந்த வழியாக அமைத்தார். எரேமியா 7 :23 கூறுகிறது, "என் வாக்குக்குச் செவிகொடுங்கள், அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்; நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும், நீங்கள் உங்களுக்கு நன்மை உண்டாகும்படிக்கு நடவுங்கள் என்கிற விசேஷத்தையே அவர்களுக்குச் சொல்லிக் கட்டளையிட்டேன்." ஒரு மருத்துவ தீர்வு முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மட்டுமே குணப்படுத்த முடியும் என்பதை எந்தவொரு மருத்துவரும் உறுதிப்படுத்துவார். அதாவது நாம் குணமடைய வேண்டுமானால் மருத்துவரின் அறிவுரைகளைப் பின்பற்ற வேண்டும். அவரது ஆலோசனைகள் சரியாகப் பின்பற்றப்படாவிட்டால் சிறந்த மருத்துவரால் கூட உதவ முடியாது. கீழ்ப்படிதல் என்பது நமது நம்பிக்கை மற்றும் ஒப்புக்கொடுப்பதின் நேர்மையான விளைவு, ஆனால் அது மட்டுமல்ல கீழ்ப்படிதல் நமது நலனுக்காகவும் உள்ளது, ஏனென்றால் கடவுளின் கட்டளைகள் அனைத்தும் நம் நன்மைக்காகக் கொடுக்கப்பட்டவை.*

*வனாந்தரத்தில் வெண்கல சர்ப்பத்துடன் என்ன நடந்தது ? (பார்க்க எண்ணாகமம் 21 :4-9) கடவுள் கட்டளையிட்டபடி மக்கள் சர்ப்பத்தைப் பார்த்தபோது, அவர்கள் குணமடைந்தனர். அவர்கள் தலையைப் பாம்பின் பக்கம் திருப்பியதால்தான் குணமாகிவிட்டதா ? இல்லை, நிச்சயமாக இல்லை. பாம்பைப் பார்த்து அல்ல, ஆனால் தங்கள் விசுவாசத்தை அவர்கள் கடவுள்மீது வைத்ததால் குணமடைந்தனர். தேவன் ஒருவரே அவர்களைக் குணப்படுத்தினார். கீழ்ப்படிதல் அவர்களின் சொந்த நலனுக்காக இருந்தது.*

*அவ்வாறே, "விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்." (எபி 11 :7) கடவுள்மீது நோவா வைத்திருந்த நம்பிக்கையின் விளைவாகப் பேழை கட்டப்பட்டது, மேலும் அவர் தனது விசுவாசம் உண்மையானது என்பதைக் காட்டினார். அவர் தனது செல்வங்களையும் நேரத்தையும் இந்தக் கட்டுமானத்தில் முதலீடு செய்தார், மேலும் அவர் அதைப் பற்றி நிச்சயமாக வருத்தப்படவில்லை. இந்தக் கீழ்ப்படிதல் அவருடைய சொந்த நலனுக்காக அல்லவா ? அவருக்கு முன்னமே தெரியாது, ஆனால் அவர் நம்பிக்கையுடன் வாழ்ந்தார். ஒன்று தெளிவாகிறது, இந்தக் கப்பலின் கட்டுமானம் கடவுளின் வழிகாட்டுதலாலும் வல்லமையாலும் செய்யப்பட்டது.*

---

[118] Steve Kasperbauer, Gottist treu (Braunau/ Austria: Copyright Brigitte Kinder, 2013), A full report about this experience is published in German in the MISSIONS BRIEF (mission letter) No. 40, March/April 2014.
[119] Ellen G. White, Christ's Object Lessons, p. 333.

# ஒருதலைப்பட்ச கருத்துக்கள்

*துரதிர்ஷ்டவசமாக, இன்று, கடவுளின் கற்பனைகள் மிகவும் சமநிலையற்ற வெளிச்சத்தில் பார்க்கப்படுகின்றன. கடவுளின் கற்பனைகள் கட்டுப்பாட்டுடன் கீழ்ப்படிய வேண்டியவை என்ற அடிப்படையில் மட்டுமே சிந்திக்கப்படுகிறது. இருப்பினும், கடவுளுடைய கற்பனைகள், முதன்மையானதும் எல்லாவற்றிற்கும் முற்பட்டதுமானவை, அவை நமக்கு வாக்குத்தத்தங்களும் ஆகும். நம்பிக்கையுடன் நாம் அன்பான உறவின் மூலம் அவருடன் இணைந்திருக்கும்போது, நம் வாழ்வில் அவர் என்ன செய்ய முடியும் என்பதை கடவுளின் கற்பனைகள் நமக்குக் காட்டுகின்றன.*

*கடவுளின் கற்பனைகள் நமக்கு ஆசீர்வாதமான கட்டளைகள் ஆகும். கீழ்ப்படிதல் மனதில் நிலைநிறுத்தப்பட வேண்டும், இதன் மூலம் நம் அன்றாட கவலைகளுக்குத் தெய்வீக ஞானத்தையும் சக்தியையும் பெற முடியும். இந்தக் கண்ணோட்டத்தில் கீழ்ப்படிதலைப் பார்க்கும்போது, நாம் பயத்தை தள்ளி, அதை மகிழ்ச்சியாகப் பார்க்கலாம்.*

# கீழ்ப்படிதல் என்பது கடவுள் தரும் பரிசு

*இயேசு நம்மில் கீழ்ப்படிதலை உண்டாக்கினால், கீழ்ப்படிதல் ஒரு பரிசு என்று அர்த்தம். கீழ்ப்படிதலை ஒரு பரிசாகக் கருதினால், இது இரண்டு ஆபத்துகளைத் தவிர்க்க உதவுகிறது : 1) "எளிதாகக் கிருபை கிடைக்கும்" என்ற தவறான சிந்தனை மற்றும் (2) சட்டப்படி கிடைக்க வேண்டும் என்று வாதம் செய்யத் தூண்டப்படுதல்.*

*"எளிதாகக் கிடைக்கும் கிருபை" என்றால், ஒரு நபர் இயேசுவை ஏற்றுக்கொண்டால் அவர் இரட்சிக்கப்படுகிறார் என்றும், மேலும் கீழ்ப்படிதல் அவசியமில்லை என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். கற்பனைகளைக் கடைப்பிடிக்க முடியாததால், அவை, ஒழிக்கப்பட்டு விட்டதாகச் சொல்கிறார்கள். இதைத்தான் இம்மை வாழ்விற்குரிய கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். ஆனால் நாம் கடவுளின் வல்லமையில் கீழ்ப்படிய விரும்புகிறோம், அதனால் கீழ்ப்படிய முடியும்.*

*மறுபுறம், கடவுளுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கும் எண்ணம் ஒரு கண்ணி மட்டுமல்ல, ஆனால் தீவிரமாக எடுத்துக் கொண்டால் - ஒரு பெரிய சுமையும் கூட. இது சட்டத்தின் பொறி. நம்முடைய தீர்மானம் மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் இயேசு கீழ்ப்படிதலை நமக்குள் உருவாக்கும்போது, கீழ்ப்படிதல் முக்கியமானது என்பதை நாம் காண்கிறோம், மேலும் அது நமக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டதால், அது தன்னுள் ஒரு பாராட்டுக்குரியத் தன்மையைக் கொண்டிருக்கவில்லை என்பதை உணர்வோம்.[120]*

*கீழ்ப்படிதல் அவசியம் ஆனால் அது ஒரு முன்நிபந்தனை அல்ல, மாறாகக் கடவுளுடனான நமது உறவின் பயனாகவும் மற்றும் நமது இரட்சிப்பின் விளைவாகவும் வெளிப்படுகிறது. ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, எந்த முன்நிபந்தனையும் இல்லாமல் அனைவரும் இயேசுவிடம் வரலாம். ஆனால் வந்தபிறகு யாராலும் எந்த மாற்றமும் இல்லாமல் அப்படியே இருக்க முடியாது. ஒரு திருடன் மனமாற்றம் அடைந்து - இரட்சிக்கப்பட்டால் - அவன் தொடர்ந்து மக்களைக் கொள்ளையடிக்க முடியும் என்று நாம் நினைப்போமா ?*

---

[120] See the Adult Bible Study Guide, March 31, 2011.

# நம்மையும் நம் கவலைகளையும் வல்லமையுள்ள கைகளில் சமர்ப்பித்தல்

*நம்முடைய கவலைகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு கடவுளின் வழிநடத்துதலுக்கு நம்மை ஒப்படைப்பது முக்கியம். வாழ்க்கையின் எந்த ஒரு நிலையிலும் நாம் நம்மை மிக முக்கியமானவர்களாகப் பார்க்கக் கூடாது. இது வாழ்க்கையின் அனைத்து நிலைக்கும் பொருந்தும். நாம் எதையும் விட்டுக் கொடுக்காமல் நமக்குள் வைத்துக் கொள்ளக் கூடாது. எல்லாவற்றையும் மிகவும் வல்லமையுள்ள கைகளில் - கடவுளின் கைகளில் வைக்க முடியும்போது, நான் ஏன் என்னுடன் எதையாவது வைத்துக் கொள்ள வேண்டும் ? அது புத்திசாலித்தனமாக இருக்குமா ?*

*ஆண்டவர் நம்மைப் பராமரித்து, நம் தேவைகளைப் பூர்த்தி செய்து, எதிரிகளிடமிருந்து நம்மைக் காத்து, சிறந்த வழியில் வழிநடத்த வேண்டுமென்றால், நாம் அவருடைய குரலைப் பின்பற்றி, அவர் நமக்குத் தேர்ந்தெடுக்கும் வழியில் செல்ல வேண்டும். "உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள் ; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்." (நீதிமொழிகள் 3 :5,6)*

*இந்த அறிவுரையை இக்காலத்தில் நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வாய்ப்பு உள்ளது. இன்று பல கார் ஓட்டுநர்கள் வழிதெரிமுறை (நேவிகேஷன்) முறையைப் பயன்படுத்துகின்றனர். கனணியின் துல்லியமான படங்களை நாம் சார்ந்துள்ளோம். அதனால் நமது பகுத்தறியும் சக்தி செயலிழந்து விட்டது என்று அர்த்தமில்லை. வாகனம் ஓட்டுவது இன்னும் தேவை, அதனால் பகுத்தறியும் சக்தி தேவைப்படுகிறது. சாலையில் நாம் ஒரு "நடத்துனருடன்" இணைக்கப்பட்டுள்ளோம், அவர் பலவற்றைச் சொல்லும் ஒரு பரந்த துல்லியமான பார்வை கொண்டவர். நாம் எங்குத் திரும்ப வேண்டும், அல்லது போக்குவரத்து நெரிசலால் மாற்றுப்பாதையில் செல்ல வேண்டுமா, அது தவிர மிக வேகமாக வாகனம் ஓட்டுகிறோமா என்று கூறி அவர் நம்மை வழிநடத்துகிறார். அதுபோலக் கடவுளின் கிருபையால் நாம் தெய்வீக "வழிதெரிமுறை (நேவிகேஷன்) அமைப்புடன்" வாழ்க்கையில் செல்ல முடியும். எனவே, நமக்குப் புரிந்துகொள்ளும் சக்தியைக் கொடுக்கும் அற்புதமான பரலோக வழிகாட்டிமீது நாம் முழு இருதயத்தோடு சார்ந்திருப்பது முக்கியம். அவர் நம்மைச் சரியாக வழிநடத்துவதாக உறுதியளிக்கிறார். அவர் தனது நாமத்தின் பெயரில் அதை உறுதிப்படுத்துகிறார். "அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்." (சங் 23 :3) இங்கே கீழ்ப்படிதல் என்பது முற்றிலும் நம் சொந்த நலனில் உள்ளது.*

*இயற்கையின் கட்டளைகள் அல்லது ஆன்மீக கட்டளைகள் எதுவாக இருந்தாலும், தெய்வீக கட்டளைகளைப் பின்பற்றுவதன் மூலம், அனைவருக்கும் சாதகமான முடிவுகள் உள்ளன. இந்தத் தெய்வீக கட்டளைகளைக் கடைப்பிடித்தால், விசுவாசிகள் அல்லாதவர்கள் கூட நேர்மறையான முடிவுகளை அனுபவிக்க முடியும். இதை இயற்கையான ஆசீர்வாதம் என்கிறேன். ஆனால் ஆன்மீக கட்டளைகளைப் பின்பற்றும்போது இன்னும் நிறைய அற்புதங்கள் நடக்கும். இதை நான் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆசீர்வாதம் என்கிறேன்.*

*விசுவாசமும் கீழ்ப்படிதலும் ஒன்றையொன்று பூரணப்படுத்துகின்றன. யாக்கோபு 2 :22ல், நாம் வாசிக்கிறோம் : "விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே." கடவுள் நம்பிக்கை கீழ்ப்படிதலை வளர்க்கிறது, மேலும் கீழ்ப்படிதல் கடவுள்மீதான நம் விசுவாசத்தை வளர்க்கிறது. டென்னிஸ் ஸ்மித்தின் ஒரு பொருத்தமான மேற்கோளை நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன் : "ஒருவர் பரிசுத்த ஆவியின் மூலம் கடவுளுடன் நெருங்கிய உறவில் வாழும்போது, வேறு*

*சிந்தனைக்கு வாய்ப்பு கொடுக்காதபோது, கீழ்ப்படிதல் இயல்பாகவும் இதயத்திலிருந்தும் வரும்."* [121]

*கீழ்ப்படிதலை நாம் சரியாகப் புரிந்து கொள்ளும்போது, சங்கீதங்களில் உள்ள அற்புதமான அறிக்கைகளில், குறிப்பாகச் சங் 19 மற்றும் 119ல் உள்ள ஆண்டவரின் கட்டளைகள்பற்றி நாம் நன்றாகப் புரிந்துகொள்வோம். இரட்சிப்பு, மீட்பு மற்றும் கற்பனைகள் ஆகியவை ஒன்றாக இருப்பதை அவை காட்டுகின்றன. இரட்சிக்கப்பட்ட ஒரு நபர் கடவுளின் கற்பனைகளை உயர்வாக மதிக்கிறார், இயேசு அவர்களுடைய இருதயங்களில் பரிசுத்த ஆவியானவர் மூலம் அவர்களுடைய வாழ்க்கையில் நிலைத்திருக்கும்போது, அவர்கள் மகிழ்ச்சியுடன் கீழ்ப்படிவார்கள். 119 ஆம் சங்கீதத்தில் உள்ள கூற்றுகளை ஒரு இம்மை வாழ்விற்குரிய கிறிஸ்தவரால் புரிந்து கொள்ள முடியாது என்று நான் நம்புகிறேன். அவர்கள் அவற்றை மிகைப்படுத்தப்பட்டதாக மறைமுகமாகக் கருதுவார்கள். மறுபுறம், ஒரு ஆன்மீக கிறிஸ்தவர் சங்கீதக்காரன் எழுதியவற்றை புரிந்து அனுதாபம் கொள்ள முடியும்.*

*கடவுள் ஏற்கனவே நமக்குச் சொல்லியிருக்கிறார் : "அவருடைய நிபந்தனைகள் அனைத்திற்கும் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்து, அவர் நமக்கு அனுப்பும் வெளிச்சத்தில் நாம் நாளுக்கு நாள் நடக்கும்போது, ஆண் மற்றும் பெண் எல்லோரும் கிறிஸ்து இயேசுவில் உள்ள முழுமையை அடையும் வரை அவர்களது அனுபவம் வளர்ந்து விரிவடையும்."* [122]

# *கடவுள் எந்த அளவு கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறார்?*

*இயேசு என்னில் எவ்வளவு கீழ்ப்படிதலை உருவாக்க விரும்புகிறார் ? கொஞ்சம், நிறைய, அல்லது முழுமையாக ? மோசேயின் வாழ்க்கையில் ஒரு தெளிவான உதாரணம் இருப்பதை யாத்திராகமம் 4 : 24-26ல் நாம் காணலாம். எகிப்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை வெளியே அழைத்துச் செல்லும்படி மீதியானின் பாலைவனத்தில் மோசே நியமிக்கப்பட்டார். "மீதியானிலிருந்து (எகிப்துக்கு) செல்லும் வழியில் மோசே, கடவுளின் அதிருப்தியைக் காட்டும் ஒரு திடுக்கிடும் மற்றும் பயங்கரமான எச்சரிக்கையைப் பெற்றார். ஒரு தேவதூதன் அவரை உடனடியாக அழித்துவிடுவாரென அச்சுறுத்தும் வகையில் அவருக்குத் தோன்றினார். விளக்கம் எதுவும் கொடுக்கப்படவில்லை ; ஆனால் மோசே கடவுளின் ஒழுங்குவிதிகளில் ஒன்றைப் புறக்கணித்ததை நினைவுகூர்ந்தார் ; அவரது மனைவியின் வற்புறுத்தலுக்கு இணங்கி, அவர் தங்கள் இளைய மகனுக்கு விருத்தசேதனம் செய்யும் சடங்கைச் செய்யாமல் புறக்கணித்து இருந்தார்." உடனே அந்தப் புத்திரனுக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது. "... அதன் பிறகு, மோசே தனது பயணத்தைத் தொடர தேவதூதன் அனுமதித்தார். மோசே, பார்வோனுக்கு முன்பாக நிற்க வேண்டிய இந்தப் பணியில் அவர் பெரும் ஆபத்தில் தள்ளப்பட்டார் ; பரிசுத்த தேவதூதர்களின் பாதுகாப்பால் மட்டுமே அவரது உயிர் காப்பாற்றப்பட முடியும். ஆனால் தெரிந்த கடமையைப் புறக்கணித்து வாழும்போது, அவர் பாதுகாப்பாக இருக்க முடியாது ; ஏனெனில் அவர் தேவதூதர்களால் பாதுகாக்கப்பட முடியாது."* [123]

*இச்சம்பவத்திலிருந்து பெறப்பட வேண்டிய பாடத்தை முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும் என்ற புத்தகத்தில் மேலும் காணலாம் : "கிறிஸ்துவின் வருகைக்குச் சற்று முன்பிருக்கும் உபத்திரவத்தின் காலத்தில், பரலோக தூதர்களின் ஊழியத்தின் மூலம் நீதிமான்கள் பாதுகாக்கப்படுவார்கள் ; ஆனால் கடவுளின் கட்டளைகளை மீறுபவருக்கு பாதுகாப்பு இருக்காது. தெய்வீக கட்டளைகளில் ஒன்றைப் புறக்கணிப்பவர்களை தேவதூதர்களால் பாதுகாக்க முடியாது."* [124]

*கடவுளின் அனைத்து கட்டளைகளையும் கடைப்பிடிப்பது என்பது நமது பாதுகாப்பிற்காகவும், நமது மகிழ்ச்சிக்காகவும், நல்வாழ்வுக்காகவுமே. ஆதாமும் ஏவாளும் ஒரே ஒரு*

---

[121] Dennis Smith, 40 Days- Prayers and Devotions to Prepare for the Second Coming (R&H 2009) pp. 21, 22.
[122] Ellen G. White, Messages to Young People, pp. 15, 16.
[123] Ellen G. White, Patriarchs and Prophets, pp. 255, 256.
[124] Ibid., p. 256.

*பாவத்தினால் ஏதேனை விட்டு வெளியேற வேண்டியிருந்தது என்பதை நாம் அறிவோம். கடவுள் எந்தளவுக்கு கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறார் என்ற கேள்விக்கு இது ஒரு தெளிவான பதில் என்று நினைக்கிறேன். இந்தக் கீழ்ப்படிதலை எல்லாவற்றிலும் ஆண்டவர் எதிர்பார்க்கிறார், இயேசு நம்மில் கீழ்ப்படிதலை உருவாக்குகிறார் என்பதை மனதில் வைத்துக்கொள்ளும்போது இது புரியும், மேலும் இது நமது நலன் சார்ந்தது. இயேசு இந்தப் பூமியில் ஒரு மனிதனாக இருந்தபோது கடவுளின் சித்தத்தை செய்தது போல், நம்மில் கடவுளின் சித்தத்தை நிறைவேற்ற விரும்புகிறார். ஒரு மனிதனாக அவரது மனப்பான்மை : "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன் ; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்." (சங்கீதம் 40 :8) அவர் தம் சீடர்களிடம் கூறினார், "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டதுபோல." (யோவான் 15 :10)*

*மேலும், முழுமையான கீழ்ப்படிதல் இங்கும் நித்தியத்திலும் முழுமையான மகிழ்ச்சியையும் நிறைவான வாழ்வையும் தருகிறது, அப்படியானால், கீழ்ப்படிதல் குறைந்தால் நாம் ஆசீர்வாதங்களை இழக்க நேரிடும் என்பது தெளிவாகிறது. தேவ ராஜ்யத்தில் எப்போதும் இருக்கப் போகிற அனைவரும் மகிழ்ச்சியுடன் கடவுளுக்குக் கீழ்ப்படிவார்கள். இது அன்பையும் நல்லிணக்கத்தையும் அனைவருக்கும் உறுதி செய்கிறது.*

# *இறுதி சிந்தனைகள்*

*இந்தத் தலைப்பு தொடர்பாகச் சுருக்கமாக எரேமியா 7 :23 இவ்வாறு கூறுகிறது. இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு வெளியேறும்போது கொடுக்கப்பட்ட வார்த்தைகள் இவை : "என் வாக்குக்குச் செவிகொடுங்கள், அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என்னுடைய ஜனமாயிருப்பீர்கள் ; நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும், நீங்கள் உங்களுக்கு நன்மை உண்டாகும்படிக்கு நடவுங்கள் என்கிற விசேஷத்தையே அவர்களுக்குச் சொல்லிக் கட்டளையிட்டேன்."*

*இங்குத் தேவன் நமக்கு ஒரு விலைமதிப்பற்ற வாக்குத்தத்தத்தை அளித்துள்ளார். நாம் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தால் என்ன கொடுப்பதாக அவர் வாக்குத்தத்தம் செய்கிறார் ? "நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்." ஆனால், நம் சொந்த நலனுக்காக இறுதிவரை கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறுகிறார். கீழ்ப்படிதலுள்ள இருதயத்திற்காக ஜெபிக்கும்போது, இந்த வசனத்தை ஒரு வாக்குறுதியாகப் பயன்படுத்தலாம்.*

# *அப்போஸ்தலன் யோவானுக்கு என்ன நடந்தது?*

*விசுவாசித்து கீழ்ப்படிவதன் மூலம் ஏற்படும் அற்புத விளைவை, நாம் இயேசுவின் சீடரான யோவானின் வாழ்க்கையில் காணலாம். கிறிஸ்துவிடம் போகும் பாதை, என்ற புத்தகத்தில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம் : "தன் எஜமானின் மீதான அன்பில் தன்னைப் பற்றிய சிந்தனையை இழக்கும் வரை தினமும் அவரது இதயம் கிறிஸ்துவை நோக்கி இழுக்கப்பட்டது. அவரது வெறுப்பு, லட்சிய குணம், இவை அனைத்தும் கிறிஸ்துவின் உருவாக்கும் வல்லமைக்கு அடிபணிந்தது. பரிசுத்த ஆவியின் புத்துயிர் தரும் ஆற்றல் அவரது இதயத்தைப் புதுப்பித்தது. கிறிஸ்துவின் அன்பின் வல்லமை ஒரு குண மாற்றத்தை ஏற்படுத்தியது. இது இயேசுவோடு உறுதியாக இணைந்ததன் விளைவு. கிறிஸ்து இதயத்தில் நிலைத்திருக்கும்போது, மனிதனின் முழு இயல்பும் மாறுகிறது. கிறிஸ்துவின் ஆவியும், அவருடைய அன்பும், இதயத்தை மென்மையாக்கி, ஆத்துமாவை கீழ்ப்படுத்துகிறது, மேலும் பரலோகத்தையும், கடவுளையும் நோக்கி, நம் எண்ணங்களையும் வஞ்சைகளையும் உயர்த்துகிறது."* [125]

---

[125] Ellen G. White, Steps to Christ, p. 73.

*"அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிற ஒவ்வொரு ஆத்துமாவும் அவருடைய மகிழ்ச்சியையும், சமாதானத்தையும், அதைக் காத்துக்கொள்ளும் வல்லமையையும் எப்போதும் தொடர்ந்து பெற கர்த்தர் தீர்மானித்திருக்கிறார்." [126]* **அனைத்து விசுவாசிகளும் விசுவாசத்தின் மூலம் கீழ்ப்படியும்போது கிடைக்கும் மிகுந்த மகிழ்ச்சியை அனுபவிக்க விடாமுயற்சியுடன் முயல வேண்டும் என்பதே எனது விருப்பமும் பிரார்த்தனையும் ஆகும். "விசுவாசத்தில் கீழ்ப்படிவதில் கடவுள் நமக்குப் பெரிய வெற்றிகளை, இயேசு கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியின் மூலம் தயைபுரிவாராக."** *(1யோவான் 2 :17 "கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும் … அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள் மேலேயே உள்ளது." (சங்கீதம் 103 :17,18)*

## பரிசுத்த ஆவியானவர் தப்பியோடிய குற்றவாளியைச் சிறைக்குத் திரும்பும்படி மனதில் உணர்த்துகிறார்.

***கீழ்ப்படிதலுக்கான ஒரு சிறந்த உதாரணம் : நான் ஒரு அட்வெந்து குடும்பத்தில் பிறந்தேன். 19 வயதில் நான் ஞானஸ்நானம் பெற்றேன். கொலைக் குற்றத்திற்காக எனக்கு 43 ஆண்டுகள் சிறைத்தண்டனை 2016ல் விதிக்கப்பட்டது. என் சிறை வாசத்தின் ஐந்தாவது வருடம் மார்ச் 2017ல் நான் சிறையிலிருந்து தப்பிக்க முடிந்தது. "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" என்ற புத்தகத்தை எனக்கு அறிமுகப்படுத்திய ஒரு பெண்ணை முதல் ஓய்வுநாளுக்குப் பிறகு நான் சந்தித்தேன். நான் அதை அட்வெந்து புத்தகக் கடையில் திங்களன்று வாங்கினேன். ஆச்சரியப்படும் விதமாக, நான் அதை ஒரே வாரத்தில் படித்தேன். என் வாழ்நாள் முழுவதும் பரிசுத்த ஆவியின்றி இருந்த என் உள்ளான வெறுமையை என்னால் உணர முடிந்தது. அதன் பிறகு என் முழு வாழ்க்கையையும் இயேசுவுக்கு அர்ப்பணித்தேன். அக்டோபர் 2018ல் நான் மீண்டும் சிறைக்குச் சென்றேன். நான் தப்பியோடிய நடவடிக்கைகாக, என்மீது குற்றம் சாட்டப்படவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக எனது விசாரணை இப்போது சர்வவல்லமையுள்ள கடவுளின் முன் நடைபெறுகிறது. நான் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளேன். இந்தப் புத்தகத்தைப் படித்தபிறகு நான் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டேன். நான் மிகவும் உறுதியாக நம்புகிறேன். "நம்பிக்கையில்லா நிலைமைகள் என்று எதுவும் கடவுளுக்கு இல்லை ! நான் இப்போது ஜெப ஊழியத்தின் தலைவராக இருக்கிறேன். இந்தப் புத்தகம் இங்குள்ள பரவாகி சிறையில் கைதிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. பல கைதிகள் இந்தப் புத்தகத்தைப் படித்தபிறகு தொடப்பட்டனர். நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவை என்னால் சேவிக்க முடிவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இது அன்றும் இன்றும் எங்களுக்கு ஒரு உண்மையான ஆசீர்வாதமே." [127]***

# ஜெபம்

***"தகப்பனே, உமது எல்லையற்ற ஞானத்தாலும், வல்லமையாலும், மகத்தான அன்பாலும், சிறந்த வாழ்வை அடைவதற்கான முழு வழிகாட்டுதலையும் வழங்கியதற்கு நன்றி. எங்கள் நலன் கருதி அனைத்தையும் உருவாக்கியுள்ளீர். நான் உம்மைத் துதித்து இதற்கு நன்றி சொல்ல விரும்புகிறேன். தயவு கூர்ந்து உமது வழிகளில் எனக்கு முழுமையான நம்பிக்கையை அளித்து, ஒப்புக்கொடுத்தலுடனும் கீழ்ப்படிதலுடனும் என் முழு இருதயத்தோடும் அனைத்து காரியங்களிலும் உம்மைப் பின்பற்ற எனக்கு உதவும்." ஆமென்.***

[126] Ellen G. White, In Heavenly Places (Nampa, ID: Pacific Press Publishing Association, 1999), P. 53.
[127] E. E. EE260419 Experience # 91 at www. Steps- to- personal- revival. Info – Experiences

# தனியொருவரின் எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. *நம்மில் நிறைவேறும் தெய்வீக வழிநடத்துதலில் நமது பங்கு என்ன, நாம் செய்யும் செயல்கள் உட்பட ?*

2. *விசுவாசத்திற்கும் மற்றும் சத்தியத்தை வெறும் ஒப்புக்கு ஏற்றுக் கொள்வதற்கும் என்ன வித்தியாசம் ?*

3. *நமது ஒப்புதல் எப்போது முக்கியம் ?*

4. *கீழ்ப்படிதல் ஏன் நமக்கு ஒரு பெரிய ஆசீர்வாதம் ?*

# நம் ஜெப நேரம்

*உங்கள் ஜெப பங்காளரைத் தொடர்புக் கொண்டு தலைப்பைப் பற்றி விவாதிக்கவும். உங்கள் ஜெப பங்காளருடன் ஜெபியுங்கள் :*

1. *தெய்வீக வழிநடத்துதல்களில் நமது பங்கைப் பற்றி அதிகம் அறிந்து கொள்ள ஜெபியுங்கள்.*

2. *நம் வாழ்வில் உண்மையான விசுவாசம் உள்ளதா அல்லது வெறும் ஒப்புதல் மட்டும் உள்ளதா என்பதை அறியும் நுண்ணறிவுக்காக ஜெபியுங்கள்.*

3. *உண்மையுள்ள கீழ்ப்படிதலுக்காகவும் அதைத் தொடர்ந்த வரும் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபியுங்கள்.*

4. *கடவுளின் வழிநடத்துதல் மற்றும் அவருடைய நீதி நெறிகளில் முழுமையான நம்பிக்கைக்காக ஜெபியுங்கள்.*

## *அத்தியாயம் 5 - பகுதி 1*

# இயேசுவின் மூலம் கவர்ந்திழுக்கும் விசுவாசம்

***-விசுவாசிகளிடையே ஒற்றுமையை எவ்வாறு அடைய முடியும்?***

***-நம்முடைய விசுவாசம் நம் குடும்பத்தையும் உலகத்தையும் கவரக் கூடியதாக ஆக்குவது எது?***

***-நம்மில் என்ன மாற்றங்கள் நம்மைச் சாட்சிகளாக்குகின்றன?***

***-எழுப்புதல் எவ்வாறு தேவப்பணியை தோற்றுவிக்கிறது?***

*என் ஜெப பங்காளர் (40 நாட்கள் தியான கூட்டம்) ஒருமுறை கூறினார் : "நான் ஒரு கவர்ந்திழுக்கும் விசுவாசத்திற்காக ஏங்குகிறேன் காரணம் எனது பிள்ளைகளும் கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காக." வேல்ஸைச் சேர்ந்த மேரி ஜோன்ஸ், வாரத்திற்கு ஒருமுறை வேதாகமத்தைப் படிக்க ஒரு தொலைதூரக் குடும்பத்தாரிடத்திற்குச் சென்றாள். இது பத்து முதல் பதினைந்து வயது வரை நடந்தது. அவள் முழு மனதுடன் வேதாகமத்தை நேசித்தாள். சொந்தமாக ஒரு வேதாகமத்தை வாங்க பணம் சம்பாதிப்பதற்காக அவள் அதிகமான வேலைகளைச் செய்தாள். ஆறு ஆண்டுகளாக அவள் சம்பாதித்த ஒவ்வொரு பைசாவையும் சேமித்தாள்.*

*மேரி கிட்டத்தட்ட பதினாறு வயதாக இருந்தபோது, ஒரு போதகரைச் சந்தித்து வேதாகமத்தை வாங்க விரும்பி இருபத்தைந்து மைல்கள் வெறுங்காலுடன் நடந்தாள். ஆனால் போதகர் தன்னிடம் இன்னும் இரண்டு வேதங்கள் இருப்பதாகவும், அவை ஏற்கனவே மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு வாக்குறுதியளிக்கப்பட்டதாகவும் கூறினார். மேரி கதறி அழ ஆரம்பித்தாள். அவள் ஏன் அழுகிறாள் என்று போதகர் கேட்டார். அதற்கு அவள், வேதாகமத்தை வாங்குவதற்காக ஆறு வருடங்களாக எப்படி பணம் சேமித்தாள் என்று அவரிடம் சொன்னாள். அதற்குப் பிறகு மறுக்கப் போதகருக்கு மனம் இல்லை, அதனால் அவள் ஒரு வேதாகமத்தை எடுத்துக்கொள்ள அனுமதித்தார். மிகுந்த மகிழ்ச்சியில் அவள் வீட்டிற்கு கிளம்பினாள்.*

*இது தற்செயலாக 1800 இல் நடந்தது. வேதாகமம் அவளுக்கு வசீகரமாக இருந்ததா ? இந்தப் பெண்ணின் விசுவாசம் மனதைத் தொடுகிறதாக இருந்ததா ? இந்த அனுபவம் போதகரை மிகவும் கவர்ந்தது, அதனால் அவர் உலகளாவிய முதல் வேதாகம சங்கமான பிரிட்டிஷ் மற்றும் வெளிநாட்டு வேதாகம சங்கத்தை உருவாக்க நடவடிக்கை எடுத்தார். பின்னர் வேறுபல வேதாகம சங்கங்கள் நிறுவப்பட்டன. இவை அனைத்தும், ஒரு இளம் பெண் வேதாகமத்தை மிகவும் நேசித்து, ஒன்றைப் பெறுவதற்கு தன் வாழ்க்கையை தியாகம் செய்த காரணத்தால் உருவானது. விசுவாசம் கவர்ந்திழுத்து*

*ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது.*[128]

# *"கவர்தல்" என்பதன் பொருள்*

*மனதைத் தொடுகிற, நேயமான, வசீகரமான, மற்றும் விரும்பத் தக்க என அகராதிகள் இதை விவரிக்கின்றன. அப்படியொரு விசுவாசம் பெறுவதற்கு யாருக்குத்தான் ஆசை இருக்காது ? இதைப் பற்றி உண்மையிலேயே சிந்திக்கும் எவரும் கவர்ந்திழுக்கக்கூடிய, வசீகரிக்கும் விசுவாசத்தைப் பெற விரும்புவார்கள் என்று நான் நம்புகிறேன்.*

## *அத்தகைய விசுவாசம் எப்படி இருக்க வேண்டும்? அத்தகைய விசுவாசத்தை நான் எவ்வாறு அடைவது?*

1. *இது வாழ்க்கைக்கு உறுதியான மற்றும் நம்பகமான அடித்தளத்தை வழங்க வேண்டும்.*
2. *இது சத்தியத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும், பிழைகள் அல்லது பொய்களின் அடிப்படையில் அல்ல.*
3. *நமது அன்பான மற்றும் சர்வ ஞானியான கடவுளின் வெளிப்பாட்டின் அடிப்படையில், மனித கோட்பாடுகளுடன் கலக்காமல் இருக்க வேண்டும், அப்போது அது நமது சிறந்த நலனுக்கு உதவும்.*
4. *இது முற்றிலும் உறுதியானதாகவும், மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாகவும் இருக்க வேண்டும்.*
5. *அது நம் சொந்த வாழ்க்கைக்கு திட்டவட்டமான நன்மைகளைக் கொண்டு வர வேண்டும்.*
6. *இக்கட்டான சூழ்நிலைகளில் - நோய், துன்பம், மரணம் போன்றவற்றில் அது என்னைத் தாங்கிக் கொள்ள வேண்டும்.*
7. *இது நித்தியத்திற்கான நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும்.*
8. *ஒரு வசீகரமான விசுவாசம் நம் அன்புக்குரியவர்களையும் மற்றவர்களையும் அதில் ஆர்வம் கொள்ளவும் அதை அடையவும் வழிவகுக்க வேண்டும்.*

*இந்தக் கருத்துக்கள் அனைத்தும் நமக்குள் என்ன நடக்கிறது என்பதைச் சார்ந்தது. ஆனால் கவர்ந்திழுக்கும் விசுவாசம் மேலும் அதிக விளைவுகளைக் கொண்டு இருக்க வேண்டும். என் ஜெப கூட்டாளி சொன்னது, "நான் ஒரு கவர்ந்திழுக்கும் விசுவாசத்திற்காக ஏங்குகிறேன் காரணம் எனது பிள்ளைகளும் கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காக."*

# *கவர்ந்திழுக்கும் விசுவாசம் என்றால் என்ன?*

*கவர்ந்திழுக்கும் விசுவாசம் என்பது ஆவிக்குரிய கிறிஸ்தவம் - பரிசுத்த ஆவியின் மூலம் இயேசு கிறிஸ்துவுடன் வாழ்வது. பின்வரும் வேத பகுதியை நாம் மனதில் கொள்ள வேண்டும் : "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி… தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும் வேண்டிக்கொள்ளுகிறேன்." (எபேசியர் 3 :16,17, 19)*

*தேவனுடைய ஆவியானவர் நம்மைப் பலப்படுத்துகிறார், அதனால் கிறிஸ்து நம்மில் வாழ்கிறார், இதன் மூலம் அவருடைய அன்பின் தன்மையை நம்மில் வெளிப்படுத்துவார் என்று இந்த வசனங்கள் கூறுகின்றன. இது நம்மை நமது அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கிறது. கடவுளின் பிள்ளைகள் என்ற மகிமையான சுதந்திரத்தை நாம் அனுபவிக்கிறோம்.*

*அதற்கு இயேசு : "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் ; என்னாலேயல்லாமல்*

---

[128] Taken from Wikipedia, « Mary Jones. »

*ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்." (யோவான் 14 :6) பரிசுத்த ஆவியின் மூலம் இயேசு என் உள்ளத்தில் இருக்கும்போது, அவர் எனக்குப் பிதாவினிடம் செல்லும் வழியாகவும், சத்தியத்தை அறிய அவர் எனக்கு வழிகாட்டியாகவும் இருக்கிறார். மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்கான வழி அவர்தான்.*

# கவர்ந்திழுக்கும் விசுவாசத்தைப் பற்றி இயேசு எவ்வாறு விவரிக்கிறார்?

*எவராலும் கொடுக்க முடியாத நிறைவைப் பற்றி இயேசு பேசினார். ஏனென்றால் அன்பு மற்றும் சமாதானத்தின் காரணரான கடவுள் இதயத்தில் வசிக்க அனுமதிக்கப்படுவதால், இது மிக ஆழமான உள் அமைதி மற்றும் உண்மையான மகிழ்ச்சி நிறைந்தது. இந்த நிலை வெளிப்புற சூழ்நிலைகளைச் சார்ந்தது அல்ல ; எனினும், கடவுளின் வல்லமையின் மூலம் அது குழந்தை போன்ற நம்பிக்கை மற்றும் விசுவாசத்தை சார்ந்துள்ளது. பவுல் இயேசுவைப் பின்பற்றுபவர்களுக்கு எழுதினார் : "தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்... வேண்டிக்கொள்ளுகிறேன்." (எபேசியர் 3 :19)*

*இயேசு நம் இதயங்களில் இருக்கிறார். இதுவே நமக்குத் தேவை "ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக, அவருக்குள் வாசமாயிருக்கிறது, மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்." (கொலோ 2 :9,10, GNT) இந்த வாழ்வில் நாம் அடையக்கூடிய மிக உயர்ந்த சிகரம் இது. தேவன் தம்முடைய மிகுந்த அன்பினால் நமக்குக் கொடுக்க விரும்புவது இதுதான்.*

*யாக்கோபின் கிணற்றயண்டையில் இருந்த பெண் இதை அனுபவித்தாள். இந்த ஏக்கத்தின் நிறைவேறுதலை விளக்குவதற்கு இயேசு அன்றாட வாழ்க்கையிலிருந்து ஒரு உதாரணத்தைப் பயன்படுத்தினார். அந்தக் காலத்தில், தண்ணீர் என்பது ஒரு நபருக்குத் தேவையான மிகவும் மதிப்புமிக்க மற்றும் முக்கியமான விஷயங்களில் ஒன்றாகும். இயேசுவின் மூலம் நாம் "நித்தியஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றுக்கு வருகிறோம்" (யோவான் 4 :14), அதாவது இந்த நீரூற்றிலிருந்து நாம் குடிக்கலாம், நம் ஏக்கம் நீங்கித் திருப்தி அடையலாம்.*

*எல்லா மக்களும் மகிழ்ச்சிக்காக ஏங்குகிறார்கள். உண்மையில் அது கடவுளுடனான தனிப்பட்ட உறவுக்கான ஏக்கம் என்பது அவர்களுக்குத் தெரியாது, ஏனென்றால் பிரசங்கி 3 :11 இன் படி, "நித்தியத்தையும் அவர்களுடைய உள்ளத்திலே வைத்திருக்கிறார்." ப்ளேஸ் பஸ்காலின் கூற்றுப்படி, கடவுளுடன் நெருங்கிய உறவைக் கொண்டிராதவர்களின் இதயங்களில் வெற்றிடம் உள்ளது. இதன் விளைவாக, மக்கள் மேலும் மேலும் தொடர்ச்சியாக ஏங்குகிறார்கள்.*

*தம்மில் விசுவாசம் வைத்து, அவரில் நம்பிக்கை கொள்ளும்படி இயேசு நம்மை அழைக்கிறார். இதைச் செய்பவரிடத்தில் வெளிப்படையான பலன்கள் காணப்படும், ஏனெனில் "அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7 :38) அவர்களுக்கு நிரம்பி வழியும் வாழ்க்கை இருக்கும், மற்றவர்களைக் கவர்ந்திழுத்து தாக்கத்தை ஏற்படுத்திப் பலப்படுத்துவார்கள். கவர்ந்திழுக்கும் விசுவாசம் இவ்வுலகில் நிறைவும், செழுமையும் நிரம்பியதும் மற்றும் நித்தியத்திலும் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு, இன்னும் உயர்ந்த வாழ்க்கைவுடையதும் ஆகும்.*

# என் விசுவாசம் மற்றவரைக் கவரும் என தேவ வார்த்தை காண்பிக்கிறது

*நாம் யோவான் 17 :20-23ல் உள்ள இயேசுவின் ஜெபத்தை வாசிப்போம் : "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்."*

*தம்முடைய சீடர்கள் காலங்காலமாக ஒன்றாயிருக்க வேண்டும் என இயேசு ஜெபித்தார். அப்படியானால், அவர் உங்களுக்காகவும் எனக்காகவும் ஜெபித்தார் என்று அர்த்தம். இயேசு நம்முடைய ஒற்றுமைக்காக மட்டுமல்லாமல், நம்முடைய ஐக்கியத்தில் நாம் ஒன்றாக உணரவும், ஒருவருக்கொருவர் உதவி செய்யவும் ஜெபித்தார், அதனால், சீடர்களின் ஒற்றுமை உலகில் உள்ள மக்களைக் கவர்ந்திழுக்கும் என்றும் அவர் கூறினார் : "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் ; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்." (யோவான் 13 :34,35) சீடர்களின் ஒற்றுமையின் காரணமாக, இந்த மூன்று முக்கியமான விஷயங்களை உலகம் நம்பும் மற்றும் அங்கீகரித்துக் கொள்ளும் என்கிறார்.*

## உலகம் நம்மில் எதை அடையாளம் காண்கிறது

1. *விசுவாசிகள் வட்டத்துக்குள்ளும் சபைக்குள்ளும் வெளிப்படும் அன்பைப் பார்த்து, இம்மக்கள் இயேசுவின் சீடர்கள் என்பதை உலகம் அறியும். இதன் பொருள் உலகம் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதாகும். சீடர்கள் மத்தியில் இருக்கும் அன்பான நடக்கைக்கு காரணம் இயேசுவோடு உள்ள உறவுதான் என்பதை உலகம் உணர்ந்துள்ளது. ("நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்.")*

2. *சீடர்கள் மத்தியில் உள்ள ஒற்றுமையின் காரணமாக, இயேசு கடவுளின் பிரதிநிதி என்று உலகம் நம்புகிறது. மேலும் இயேசு கடவுளால் அனுப்பப்பட்ட மீட்பர் என்பதையும் உலகில் உள்ள மக்கள் அறிந்துகொள்வார்கள். ("நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக … வேண்டிக்கொள்ளுகிறேன்.")*

3. *ஆச்சரியவிதமாக, உலகில் உள்ள மக்கள் கடவுள் அவர்களை நேசிக்கிறார் என்பதை அவரது சீடர்கள் மத்தியில் உள்ள அன்பான நடத்தை காரணமாக அங்கீகரிக்கின்றனர். ("நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும்…")*

*இறுதியாக, இயேசுவின் சீடர்கள் மத்தியில் உள்ள ஒற்றுமையின் மூலம், மக்கள் (1) இயேசுவுடனான அவர்களின் உறவை அங்கீகரிப்பார்கள், (2) இயேசு கடவுளால் அனுப்பப்பட்டவர்*

*என்பதை அங்கீகரிப்பார்கள், (3) கடவுள் அவர்களை நேசிக்கிறார் என்பதை அங்கீகரிப்பார்கள். ஆவியால் நிரப்பப்பட்ட சீடர்கள் ஒருவருக்கொருவர் நடந்துகொள்ளும் விதம்மூலம் இயேசு உலகத்தால் அங்கீகரிக்கப்படுவார். ஆன்மீக கிறிஸ்தவர்கள்மூலம் இயேசு இந்தக் கவர்ந்திழுக்கக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும். எழுப்புதலானது பணித்திட்டத்தை உருவாக்குகிறது.*

# *சீஷர்களின் அன்பான நடத்தைமூலம் மக்கள் ஏன் கடவுளைப் பற்றிக் கற்றுக்கொள்கிறார்கள்?*

*ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் ஒவ்வொரும் மிகவும் வித்தியாசமானவர்கள் ; எல்லாவற்றிற்கும் மேலாக நம்மிடம் வெவ்வேறு திறமைகள் மற்றும் ஆற்றல்கள் உள்ளன ; நாம் பெரும்பாலும் வெவ்வேறு கல்வி அல்லது கலாச்சார பின்னணிகளைக் கொண்டுள்ளோம் ; நமக்கு வெவ்வேறு குணங்கள், கருத்துகள் மற்றும் அனுபவங்கள் உள்ளன. உலகில் இந்த வேறுபாடுகள் பெரும்பாலும் மக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்துகின்றன. அவை போட்டி மற்றும் சச்சரவுகளுக்கு வழிவகுக்கின்றன. அதனால்தான் அன்பு, நல்லிணக்கம் மற்றும் உதவி செய்யும் குணம் உள்ள குழுக்களிடம் மக்கள் ஆச்சரியத்தால் ஈர்க்கப்படுகிறார்கள்.*

*ஜெர்மனியில் உள்ள முனிச்சில் நான் போதகராக இருந்தபோது, அருகில் உள்ள ஒரு சிறிய நகரத்தில் ஒரு முன்னாள் வணிக நண்பரைச் சந்தித்தேன். அங்கு அவர் வசித்த தெருவில், ஒரு பெரிய அட்வெந்து கூட்டுக் குடும்பம், ஒரு வீட்டில் ஒன்றாக வாழ்ந்தனர். நான் ஒரு அட்வென்டிஸ்ட் என்பதை அறிந்த அவர் என்னிடம், "இந்தப் பதினைந்து அல்லது இருபது பேரும் ஒரு வீட்டில் ஒற்றுமையாகவும், எந்த முரண்பாடுகளுமின்றி ஒன்றாக வாழ்வதைக் கண்டு முழுத் தெருவும் வியப்படைகிறது. அக்கம்பக்கத்தினர் இதைப் புரிந்துகொண்டனர் : இது கவர்ந்திழுக்கக்கூடிய விசுவாசம்."*

*ஜெர்மனியில் உள்ள ஒரு சிறிய ஆலயத்தில் இப்போது உறுப்பினராக இருக்கும் வால்டர் ஸ்க்லண்ட், அத்தகைய மற்றொரு உதாரணத்தையும் நமக்குச் சொல்கிறார் : "நான் கிறிஸ்தவனாக மாறுவதற்கு முன்பு இது நடந்தது. நாங்கள் ருமேனியாவுக்குச் செல்ல விரும்பினோம், இறுதியில் நாங்கள் ஒரு வெள்ளப் பகுதியில் சிக்கிக்கொண்டோம். எங்கள் இலக்கை அடைய இன்னும் 75 மைல்கள் இருந்தன, ஆனால் எங்களால் அதற்கு மேல் செல்ல முடியவில்லை, அதனால் வழி கேட்டோம். தற்செயலாக, அட்வென்டிஸ்ட் ஆலயத்தைச் சேர்ந்த ஒருவருடன் நாங்கள் பேசினோம், அவர் எங்களைப் பாஸ்டர் பீரோவிடம் அழைத்துச் சென்றார். குடும்பத்தினர் எங்களைத் தங்களுடைய வீட்டில் இரவைக் கழிக்க அழைத்தனர், அதை நாங்கள் நன்றியுடன் ஏற்றுக்கொண்டோம். இந்தக் குடும்பத்துடன் இருந்த சமயத்தில்தான், கிறிஸ்துவிடம் என் வாழ்க்கையை ஒப்படைத்துவிட்டு, அட்வென்டிஸ்ட் ஆக வேண்டும் என்ற முடிவை எடுத்தேன். இந்தக் குடும்பம் ஒருவருக்கொருவர் நடந்துகொண்ட விதம் - இணக்கமான குடும்ப வாழ்க்கை, நிலவும் அமைதி, நட்புச் சூழ்நிலை, குடும்ப பிரார்த்தனை, அவர்களின் வாழ்க்கைத் தரம், அவை அனைத்தும் என்னை மிகவும் கவர்ந்தது. நான் இதைப் பெற விரும்பினேன்."* [129] *இதுதான் கவர்ந்திழுக்கும் விசுவாசம்.*

*ஜெர்மனியில் ரீஜென்பர்க்கில் நான் இருந்த காலத்தில், ஒரு குறிப்பிட்ட குடியிருப்புப் பகுதியில் சிலரைச் சந்தித்தேன், அவர்களின் வீடுகள் எப்போதும் பதற்றம் மற்றும் மோதல்களால் நிறைந்திருப்பதை நான் கவனித்தேன். மாறாக, அன்பினால் நிரம்பிய இதயங்களைக் கொண்டவர்களைச் சந்திக்கும் பாக்கியம் உங்களுக்குக் கிடைத்தால் அது ஒரு இனிமையான அனுபவமாக இருக்கும்.*

---

[129] BWgung, news magazine from the Seventh-day Adventists in Baden-Württemberg (Germany), Nr. 6/2012, S. 24.

# ஏன் கவர்ந்திழுக்கும் விசுவாசம் தேவனுடைய வார்த்தையிலிருந்து மட்டுமே வருகிறது?

*கவர்ந்திழுக்கும் விசுவாசம் என்பது கடவுளின் வார்த்தையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது - அதாவது பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் மட்டுமே உள்ளது. இயேசு இதைச் சொன்னபோது, "வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனோ..." (யோவான் 7 :38), அவர் பழைய ஏற்பாட்டைக் குறிக்கிறார், ஏனெனில் அது மட்டுமே அப்போது இருந்தது. யோவான் 17 :14 ல், அவர் தனது பிதாவைப் பற்றிச் சொன்னபோது அதை மேலும் தெளிவுபடுத்தினார் : "நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்." மேலும் வசனம் 17ல், அவர் சுட்டிக்காட்டுகிறார் : "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் ; உம்முடைய வசனமே சத்தியம்."*

*கடவுள் அல்லது கடவுள்களை அடைவதற்கான ஒரு வழியாக, உலகில் உள்ள ஒவ்வொரு மதமும் மனிதனால் உருவாக்கப்பட்டது. மனிதர்களால் உருவாக்கப்படாமல், கடவுளால் வெளிப்படுத்தப்பட்டது வேதாகம போதனைகள் மட்டுமே. கடவுள் அன்பாக இருப்பதாலும், அவருக்கு எல்லையற்ற ஞானமும் திறனும் உள்ளதாலும், அவர் எல்லாவற்றையும் நம்முடைய மிகப் பெரிய நன்மைக்காகவே நிறுவியுள்ளார். எனவே, வேதாகம விசுவாசம் என்பது மிகவும் கவர்ந்திழுக்கும் விசுவாசம் ஆகும். உண்மையில், உலகின் ஒரே கவர்ந்திழுக்கும் விசுவாசம் இதுதான். விவிலியக் கோட்பாடுகளை நாம் சரியாகப் புரிந்துகொண்டு, ஆவியின் மூலம் அவற்றின்படி வாழ வேண்டும். பத்து கன்னிகைகளின் உவமையின்படி, பாதி சபை விசுவாசிகளுக்கு அத்தகைய விசுவாசம் இல்லை.*

*இயேசுவின் மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கையின் மூலம், நாம் மகிழ்ச்சியும் சமாதானமும் அனுபவிப்பதோடு, நமது ஆத்தும தாகம் திருப்தியடைவதையும் அனுபவிக்க முடியும். அவருடைய அன்பு நம் வாழ்வின் மூலம் மற்றவர்களுக்குக் காணப்பட வேண்டும் என்று நம் கடவுள் விரும்புகிறார். அதாவது நம்முடைய விசுவாசம் அவர்களை ஈர்க்கிறது.*

# சீடர்களிடையே ஒற்றுமை எப்படி சாத்தியமாகும்?

*இது திருமணத்திலும் குடும்பத்திலும், தேவாலயத்திலும், ஊழியங்களிலும் ஒன்றாக இருப்பதைப் பற்றியது. இயேசு கூறுகிறார் : "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல : அவர்களும் ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்." (யோவான் 17 :22)*

*இயேசு நமக்கு என்ன கொடுத்தார் ? மகிமை ! இதன் பொருள் என்ன ? வேதாகமத்தில் மகிமை என்ற சொல் வெவ்வேறு முறைகளில் பயன்படுத்தப்படுகிறது. முதலாவதாக, அது கடவுளின் மகத்துவத்திற்கும் மேன்மைக்கும் பயன்படுத்தப்படுகிறது ; இரண்டாவது, படைப்பின் மகிமைக்காக, மூன்றாவது, கடவுளின் அற்புதமான அன்பின் தன்மைக்காக. இந்தக் கட்டத்தில் நாம் யாத்திராகமம் 33 :18,19 ஐப் பார்க்க வேண்டும், அங்கு மோசே கடவுளிடம் கூறுகிறார், "உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்." மேலும் கர்த்தர் பதிலளிக்கிறார், "என்னுடைய தயையை எல்லாம் நான் உனக்கு முன்பாகக் கடந்துபோகப்பண்ணுவேன்."*

*கடவுளின் மகிமை அவரது குணம், இது அன்பு மற்றும் நற்குணம் என வகைப்படுத்தப்படுகிறது. நற்குணம் என்பது செயலில் காட்டப்படும் அன்பு. நாம் அவருடன் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதற்காகக் கடவுளுடைய மகிமையை நமக்குக் கொடுத்திருக்கிறார் என்று இயேசு கூறியதை புரிந்துகொள்ள இது உதவுகிறது. ஒற்றுமைக்கான மிக முக்கியமான முன்நிபந்தனை : மரியாதை மற்றும் நம்பிக்கையுடன் இணைந்த பரஸ்பர அன்பு. கடவுளின் ஊழிய*

*வழிமுறை என்னவென்றால், நம் மூலம் மனிதகுலத்தை அகபே அன்புடன் நேசிப்பதாகும். இப்படிப்பட்ட அன்பைத்தான் தேவன் நம் மூலம் பகிர்ந்துகொள்ள விரும்புகிறார்.*

*பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டப் பிறகு, ஆரம்பகால சபையைப் பற்றிக் குறிப்பிடத் தக்க விஷயங்கள் கூறப்படுகின்றன : "அவர்கள் ஜெபம்பண்ணினபோது... அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரிமாய்ச் சொன்னார்கள். விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்… அப்போஸ்தலர் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்… அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது." (அப்போஸ்தலர் 4 :31-33)*

# ஒற்றுமை என்பது ஒரே இனமாக இருத்தல் அல்ல

*ஒற்றுமை என்பது சிந்தை, நோக்கம் மற்றும் உள்ளியல்பு ஒற்றுமையைப் பொறுத்தது. அதே நேரத்தில், ஒவ்வொரு நபரின் தனித்தன்மையும் தக்கவைக்கப்படுகிறது. இது நமது தனித்தன்மையை ஒழிக்காது. இது வெவ்வேறான குணாதிசயங்களைக் கொண்ட வித்தியாசமான நபர்களின் ஒற்றுமை ஆகும். மேலும், இதுவே பெரும் வியப்பைத் தூண்டுகிறது : வித்தியாசமான மனிதர்களின் ஒற்றுமை.*

*எலன் உவைட் கூறுகிறார் : " கடவுள் தம்முடைய குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பினார் என்பதற்கு வலுவான சாட்சி, சபையில் பல்வேறு குணாதிசயங்களைக் கொண்ட மனிதர்களிடையே நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை இருப்பதேயாகும்… விசுவாசக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்பவர்களின் வாழ்க்கையில் பரிசுத்தம் செல்வாக்கை செலுத்துகிறதா என்று அவிசுவாசிகள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்."* [130] *வேறொரு இடத்தில் அவர் எழுதுகிறார் : "கிறிஸ்து நம்மில் வாசம் செய்கிறார் [சீடர்களில்] என்பதற்கு குணமாற்றமே உலகிற்கு சாட்சி."* [131]

# ஒற்றுமையை எவ்வாறு அடைய முடியும்?

*கிறிஸ்து பரிசுத்த ஆவியின் மூலம் சீடர்களுக்குள் வாழ்வதால் ஒற்றுமை அவர்களிடையே எய்தப் பெறுகிறது. இயேசு கூறினார் :*
*"அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும்...வேண்டிக்கொள்ளுகிறேன்." (யோவான் 17 :21)*
*"நான் அவர்களிலும் நீர் என்னிலும்… வேண்டிக்கொள்ளுகிறேன்." (யோவான் 17 :23)*
*"என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்." (யோவான் 15 :4)*

*அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வாறு கூறுகிறார் :*
*"கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக இருப்பதே அந்த இரகசியம்." (கொலோசெயர் 1 :27)*
*"ஆயினும், பிழைத்திருக்கிறேன் ; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்." (கலாத்தியர் 2 :20)*

*ஆகவே, கிறிஸ்து உங்களிலும் என்னிலும் இருக்கும்போது ஒற்றுமை சாத்தியமாகும். நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படாமல் அது சாத்தியமில்லை. அப்போதுதான் நாம் ஒருவருக்கொருவர் "அன்பானவர்களாக" இருக்க முடியும். எலன் உவைட் எழுதுகிறார் : "நாம் ஒரே மனதாக, ஒரே நோக்கத்துடன் இருக்க மிகவும் ஆர்வத்துடன் முயல வேண்டும். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் மட்டுமே நம்மை இந்த இடத்திற்கு கொண்டு வர முடியும். ஒரு பெரிய வேலை நம்மில் செய்யப்பட வேண்டும் என்பதற்காக, தியாகத்தினால், பரிசுத்த ஆவியைப் பெற நம் இதயங்களைத் தயார் செய்வோம்."* [132]

---

[130] Ellen G. White, The Acts of the Apostles, pp. 549, 550.
[131] Ellen G. White, Prophets and Kings, p. 233.
[132] Ellen G. White, Ye Shall Receive Power, November 5; p. 318.

*வேறொரு இடத்தில் அவர் எழுதுகிறார் : "கடவுளின் மக்கள் ஆவியில் ஒற்றுமையாக இருக்கும்போது, யூத தேசத்தின் பாவங்களான அனைத்து கடுமையான பரிசேய ஆசாரங்களும், சுய-நீதிகளும், எல்லா இதயங்களிலிருந்தும் வெளியேற்றப்படும். கிறிஸ்துவின் சாயல் அவரது சபையின் ஒவ்வொரு தனிநபர்மீதும் இருக்கும், மேலும் அவருடைய மக்கள் புதிய துருத்திகளாக இருப்பார்கள், அதில் அவர் தனது புதிய திராட்சரசத்தை ஊற்றுவார், மேலும் புதிய திராட்சரசம் துருத்திகளை உடைக்காது. காலங்காலமாக மறைந்து கிடக்கும் இரகசியத்தை தேவன் வெளிப்படுத்துவார். 'புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்தில் உள்ள மகிமையின் ஐசுவரியம்… கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்." (கொலோ 1 :27)* [133]

# ஒற்றுமையைக் கண்டார்கள்

*எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மற்றொரு சபையாருடன், நாங்கள் இந்த இரண்டாவது அனுபவத்தைப் பெற வாய்ப்பு கிடைத்தது. எனக்கு முன்பு பதவி வகித்தவர் அப்பொழுது என்னிடம், "இந்தச் சபையை வழிநடத்த உங்களுக்கு அதிக தைரியம் வேண்டும், ஏனென்றால் நீங்கள் உண்மையான ஒரு இருண்ட சுரங்க வயல் வழியாகப் பயணிக்கப் போகிறீர்கள் !" என்று கூறினார். அது போலவே பதட்டங்கள் மிக அதிகமாக இருப்பதை நாங்கள் விரைவில் உணர்ந்தோம். சண்டைகள், பிரிவுகள், காயங்கள் மற்றும் மன்னிக்க முடியாத தன்மையும் இருந்தன. கட்டுப்பாடற்ற உணர்ச்சி கொந்தளிப்புகள் மற்றும் தனிப்பட்ட தாக்குதல்கள் முழு சமூகத்தையும் ஒரு இருண்ட மேகம்போல மூடி இருந்தது. சபை உறுப்பினர்கள் மன்னிக்க முடியாத நிலையில் எவ்வளவாக வலையில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்ப்பது வருத்தமாக இருந்தது, மேலும் அதைத் தாங்களே செய்ய முடியாது என்பதை அவர்கள் உணரவில்லை. வீட்டுக் குழுக்கள் நிறுவப்பட்ட பிறகு, இந்தக் குழுக்களில் படிப்பதற்காகத் தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள் என்ற சிறுநூல் விநியோகிக்கப்பட்டது. நல்ல விளைவுகள் விசுவாசிகள் மத்தியில் காணப்பட்டன மற்றும் இந்தச் சிற்றேட்டிற்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக இருந்தனர்.*

*அதன் பிறகு விசுவாசிகள் 10 நாட்கள் ஜெபம் மற்றும் உபவாசம் ஆகியவற்றை தனித்தனியாகச் செய்யத் தொடங்கினர். இங்கே டென்னிஸ் ஸ்மித் எழுதிய 10 நாட்கள் - பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை அனுபவிக்க ஜெபம் மற்றும் தியானம், புத்தகத்தைப் பயன்படுத்தினர். இறுதியாக, அதை ஒன்றாகச் சேர்ந்து சபையாகச் செய்ய விருப்பம் தெரிவிக்கப்பட்டது. கூட்டங்கள் மீண்டும் காலை நான்கு மணிக்கு நடந்தன. முதலில் அதிக பங்கேற்பாளர்கள் இல்லை, ஆனால் படிப்படியாக மேலும் பலர் இணைந்தனர் மற்றும் ஒரு அற்புதமான, அமைதியான, ஆன்மீக சூழ்நிலை உருவாகியது. கடவுள் கிரியை செய்வதை அவர்கள் உணர்ந்தனர். அவர்கள் விட்டுக்கொடுக்க மிகவும் கடினமாக இருந்த இறுதி படிக்குத் தேவன் சபையை அற்புதமாகத் தயார் செய்தார் : அதுதான் உண்மையான மன்னிப்புக்கான படி. இறுதியில், சுவர் இடிந்து விழுந்தது, ஒருவர் பின் ஒருவராகப் பகிரங்கமாக மன்னிப்பு கேட்டனர். மற்றவர்கள் தாங்கள் தர்க்கம் செய்த நபரிடம் நேரடியாகப் பேசி மன்னிப்புக் கேட்டனர். ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டனர். கண்ணீர் வழிந்தது. சோகமான முகங்கள் மீண்டும் மகிழ்ச்சியடைந்தன, அன்பு அவர்களின் இதயங்களுக்குத் திரும்பியது. இது பார்ப்பதற்கும் அனுபவிப்பதற்கும் ஒரு அற்புதமான அனுபவம். கடவுள் மட்டுமே தனது பரிசுத்த ஆவியின் மூலம் மக்களை வழிநடத்த முடியும். இருண்ட சுரங்கவயல்கள் வழியாகப் பயணிப்பவர்களுக்கு நம்பிக்கை உள்ளது ! (பாஸ்டர் F. H. மற்றும் அவரது மனைவி, #85b).*

[133] Ellen G. White, Selected Messages, book 1, p. 386.

# தனியொருவரின் எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. *“கவர்தல்” என்றால் என்ன ? கவர்ந்திழுக்கும் விசுவாசம் என்றால் என்ன ?*

2. *இந்தக் கவர்ந்திழுக்கும் விசுவாசம் பற்றி நாம் வேதகாமத்தில் எங்கே வாசிக்கலாம் ?*

3. *இந்த வகையான விசுவாசம் எவ்வாறு நடைமுறை வாழ்க்கையில் காட்டப்படுகிறது ?*

4. *விசுவாசிகளிடையே ஒற்றுமையைக் காணும்போது, மக்கள் என்ன புரிந்து கொள்கிறார்கள் ?*

# நம் ஜெப நேரம்

*உங்கள் ஜெப பங்காளரைத் தொடர்புக் கொண்டு தலைப்பைப் பற்றி விவாதிக்கவும்.*
*உங்கள் ஜெப பங்காளருடன் ஜெபியுங்கள் :*

1. *கவர்ந்திழுக்கும் விசுவாசம், நமக்கும் மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க ஜெபியுங்கள்.*
2. *தினசரி வாழ்க்கையில் கவர்ந்திழுக்கும் விசுவாசம் எங்கே குறைப்படுகின்றது என்பதைப் பார்ப்பதற்கான நுண்ணறிவுக்காக ஜெபியுங்கள்.*
3. *இந்த வெற்றிகரமான விசுவாசத்திற்கு உதவும்படி கடவுளின் வழிநடத்துதலுக்காகவும் பலத்திற்காகவும் ஜெபியுங்கள்.*
4. *உங்கள் விசுவாசம் மற்றவர்களைக் கடவுளுடைய வேலையைச் செய்ய ஊக்குவிக்க வேண்டும் என ஜெபியுங்கள்.*
5. *கிறிஸ்து நம்மில் வாழவும், தொடர்ந்து அதிகமாக வெளிப்படவும் ஜெபியுங்கள்.*

# *அத்தியாயம் 5 - பகுதி 2*

- ***நம்மில் என்ன மாற்றங்கள் நம்மைச் சாட்சிகளாக்குகின்றன?***
- ***எழுப்புதல் எவ்வாறு தேவப்பணியை தோற்றுவிக்கிறது?***

## கிறிஸ்து என்னில் எப்படி வாழ்கிறார்?

***ஒரு விளக்கத்தை எபேசியர் 3 :16,17ல் காணலாம் : "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி..." நாம் முன்பு பார்த்தது போல, கிறிஸ்து பரிசுத்த ஆவியின் மூலம் நம்மில் வாழ்கிறார். ஏனெனில் நமது உள்ளான மனுஷனானது "நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது" (2கொரிந்தியர் 4 :16), ஒவ்வொரு காலையிலும் இயேசுவிடம் நமது ஒப்புகொடுத்தலைப் புதுப்பித்து, விசுவாசத்தின் மூலம் முக்கியமாக அவரிடம் - லூக்கா 11 :13-ஐப் போன்ற ஒரு வாக்குறுதியைக் கோருவதன் மூலம் - நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவோம்.[134] கிறிஸ்துவுடன் தனிநபர்கள் கொண்டிருக்கும் ஐக்கியமே, சீடர்கள் ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருக்க வழிவகுக்கிறது. எனவே, நாம் "கிறிஸ்துவில் இருப்பதுவே" ஒற்றுமைக்கு அடித்தளம்.***

***"இது [ஐக்கியம், ஒற்றுமை] ஒரு பரிசு, இது விசுவாசிகளுக்குள் கிறிஸ்து வாழும்போது அவர்களுக்கு அருளப்படுகிறது. (யோவான் 17 :22,23) ஆகவே, ஒற்றுமை ஒவ்வொரு தனிநபரிடமிருந்து தொடங்குகிறது."[135]***

## *இயேசு நம்மில் வாழும்போது அது நம்மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்துகிறது?*

***இயேசு நம்மில் வாழும்போது மூன்று முக்கிய விளைவுகள் ஏற்படுகின்றன : ஆவியின் கனி, ஆவியின் வரங்கள் மற்றும் சாட்சி கொடுக்கும் திறன். வெற்றிகரமான ஒற்றுமைக்கு ஆவியின் கனிகளும் வரங்களும் அவசியம். இந்த இரண்டு பகுதிகளும் குறிப்பிடத் தக்க தாக்கத்தை மூன்றாவது பகுதியில் ஏற்படுத்துகின்றன : இது இயேசுவைப் பற்றி நாம் கொடுக்கும் சாட்சியாகும். இயேசுவின் சீடர்களாக, சாட்சி கொடுப்பதற்கும் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கும் தனிப்பட்ட மாற்றம் ஒரு முன்நிபந்தனையாகும். இரட்சிக்கப்படாத மக்களை ஈர்க்கவும் அவர்களுக்குச் சாட்சியாக இருக்கவும் நம் நற்குணம் கர்த்தரால் பயன்படுத்தப்படுகிறது. நம்முடைய சாட்சியின் மூலம் நாம் இயேசுவின் உடன் வேலையாட்களாக மாறுகிறோம், ஏனென்றால் அவர் "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே வந்தார்." (லூக்கா 19 :10)***

---

[134] Luke 11 :13: « If ye then, being evil, know how to give good gifts unto your children; how much more shall your heavenly Father give the Holy Spirit to them that ask him? » (KJV).
[135] Adult Bible Study Guide, November 21, 2012.

# *இந்த மூன்று பகுதிகளையும் நாம் கூர்ந்து கவனிப்போம்*

## *1. ஆவியின் கனி*

***"ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்." (கலா 5 :22) இந்தக் குணாதிசயங்கள் அனைத்தும் அன்றாட வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சீடர்கள் மத்தியில், ஆலயங்களில், ஊழியங்களில், திருமணத்தியில் மற்றும் குடும்பத்தின் ஒற்றுமைக்கும் ஆவியின் கனி ஒரு முக்கியமான முன்நிபந்தனையாகும். அன்பு என்ற கனியின் ஒட்டுமொத்த முக்கியத்துவத்தைப் பற்றிப் பவுல் பேசுகிறார், இது கடவுளின் இயல்பை நம்மில் புலப்படச் செய்கிறது. எபேசியர் 3 :17ல், நாம் வாசிக்கிறோம் : "விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி…" இங்கே அன்பு என்ற கனியைப் பற்றிப் பேசுகிறார். கிரேக்க மொழியில் அகாபே என்று அழைக்கப்படுகிறது. இந்த அன்பு கடவுளின் இயல்பு. இது கடவுளுக்கும் மனிதனுக்கும் சிறந்ததைத் தேடும் சுயநலமற்ற அன்பு.***

***கடவுளின் அன்பின் விளைவைப் பற்றிப் பின்வருமாறு விளக்குகிறார்- Eva von Tiele- Winckler***

***1. சந்தோஷம் - களிகூரச் செய்யும் அன்பு.***
***2. சமாதானம் - இளைப்பாறப் பண்ணும் அன்பு.***
***3. நீடிய பொறுமை – தாங்கி நிலைநிறுத்தும் அன்பு.***
***4. தயவு - கருணை காட்டும் அன்பு.***
***5. நற்குணம் - உதவும் அன்பு.***
***6. விசுவாசம்- நம்பும் அன்பு.***
***7. சாந்தம்- தற்பாதுகாப்பு பற்றிக் கருதாத அன்பு.***
***8. இச்சையடக்கம்- தூய அன்பு.***

***ஆவியால் வெளிப்படையாகக் கொடுக்கப்பட்ட இந்தக் குணங்களின் விளைவு அன்பு என்று நான் நினைக்கிறேன். அதனால்தான் இது கனியைப் பற்றி ஒருமை வடிவத்தில் பேசுகிறது, பன்மை வடிவத்தில் அல்ல. இந்தக் குணாதிசயங்களைப் பற்றி எலன் வைட் கூறுகிறார் : "குண மாற்றம், கிறிஸ்து நம்மில் வாழ்கிறார் என்பதற்கு உலகிற்கு ஒரு சாட்சியாகும்."[136]***

## *2. ஆவியின் வரங்கள்*

***இயேசு நம்மோடு இருக்கும்போது ஏற்படும் மற்றொரு முக்கியமான விளைவு என்னவென்றால், நாம் ஆவியின் வரங்களைப் பெறுகிறோம். கடவுள் நமக்குப் பலதரப்பட்ட தாலந்துகளைக் கொடுத்திருக்கிறார். இதைப் பவுல் 1 கொரிந்தியர் 12ல், சபையுடன் ஒப்பிடுகிறார், இது சரீரத்துடன் உள்ள மக்கள் என்று பொருள். சரீரம் பல வேறுபட்ட உறுப்புகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு உறுப்பும் நன்றாகச் செயல்பட வேண்டும், ஏனென்றால் அது வாழ்க்கை மற்றும் ஆரோக்கியத்திற்கு முக்கியமானது. நமது பல்வேறு தாலந்துகளைக் கொண்டு ஒருவருக்கொருவர் சேவை செய்து குடும்பம், குழு மற்றும் சபையின் ஒட்டுமொத்த வெற்றிக்குப் பங்களிப்பது நமது கடமை என்பதை இது காட்டுகிறது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பணி ஒதுக்கப்பட்டுள்ளது. கடவுள் நமக்குப் பல்வேறு தாலந்துகளைக் கொடுத்துள்ளார்.***

***புதிய ஏற்பாட்டில் உள்ள வரங்களின் பட்டியல்கள் முழுமையானவை அல்ல. ஆரம்ப கால சபையில் இன்னும் பல வரங்கள் இருந்தன ; நமது நவீன யுகத்தில், கூடுதல் வரங்கள் உள்ளன.***

---

[136] Ellen G. White, Prophets and Kings, p. 233.

| வசனிக்கும் வரங்கள் | அற்புத வரங்கள் | சேவை வரங்கள் |
|---|---|---|
| ஞானத்தைப் போதிக்கும் வரம் 1 கொரிந்தியர் 12 :8 | (அற்புத) விசுவாசம் 1 கொரிந்தியர் 12 :9 | ஆளுகை வரங்கள் ரோமர் 12 :8. 1கொரிந்தியர் 12 :28 |
| அறிவை உணர்த்தும் வரம் 1 கொரிந்தியர் 12 :8 | குணமாக்கும் வரங்கள் 1 கொரிந்தியர் 12 :9,28 | பொதுவான வரங்கள் ரோமர் 12 :7 |
| தீர்க்கதரிசனம் உரைக்கும் வரம் 1 கொரிந்தியர் 12 :10, 28 ; ரோமர் 12 :7 | மொழிகள் (அந்நியபாஷைகள்) 1 கொரிந்தியர் 12 :10,28 | ஊழிய வரம் 1 கொரிந்தியர் 12 :28 |
| போதிக்கும் வரம் 1 கொரிந்தியர் 12 :28, ரோமர் 12 :7 ; எபேசியர் 4 :11 | பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதல் 1 கொரிந்தியர் 12 : 10,30 | பகிர்ந்து கொடுக்கிற வரம் ரோமர் 12 :8 |
| சுவிசேஷக வரம் எபேசியர் 4 :11 | ஆவிகளைப் பகுத்தறிதல் 1 கொரிந்தியர் 12 :10 | இரக்கஞ்செய்கிற வரம் ரோமர் 12 :8 |
| அப்போஸ்தல வரம் 1 கொரிந்தியர் 12 :28 ; எபேசியர் 4 :11 | அற்புதங்களைச் செய்யும் வல்லமை 1 கொரிந்தியர் 12 :10,28 | உபசரிக்கும் வரம் 1 பேதுரு 4 :9 |
| புத்திசொல்லுகிற வரம் ரோமர் 12 :8 | | மேய்ப்பராக வரம் எபேசியர் 4 :11 |

Johannes Mager, Auf den Spuren des Heiligen Geistes (Lüneburg : Advent – Verlag, 1999), S. 121.

***இந்த இரண்டு முக்கிய அம்சங்களும் - ஆவியின் கனி மற்றும் ஆவியின் வரங்கள் - நமது இயல்பிலும், நமது பேச்சு, உணர்வுகள், எண்ணங்கள் மற்றும் செயல்கள் மூலமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன. இது நடக்க ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட வேண்டும்.***

***பரிசுத்த ஆவியில் வாழ்வதற்கான முக்கிய அம்சங்கள், தினமும் கடவுளிடம் முழுமையாக ஒப்புவிப்பதற்கு ஜெபிப்பதும், பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட வேண்டும் என்று விசுவாசத்தில் கேட்பதும் ஆகும். அத்தகைய ஜெபத்தின் மாதிரியை "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" என்ற சிறு புத்தகத்தில் அத்தியாயம் 4ல் காணலாம், இந்த வகையான ஜெபத்தின் விளைவை விளக்கும் அனுபவங்களை வாசகர்கள் என்னிடம் கூறியுள்ளனர். இது ஜெர்மனியின் ரைன்லேண்டிலிருந்து வந்தது : "எங்களுக்கு அற்புதமான அனுபவங்கள் கிடைத்துள்ளன. பல சகோதர சகோதரிகள் ஒவ்வொரு நாளும் [தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்] புத்தகத்தில் உள்ள மாதிரி ஜெபத்தை ஜெபமாக ஒவ்வொரு நாளும் ஒன்றாகச் செய்கிறார்கள், ஐந்து மாதங்களாக அந்த ஜெபத்தை ஒரு நண்பருடன் சேர்ந்து ஜெபித்து வருகிறேன். தனிப்பட்ட முறையில் மட்டுமல்ல, எங்கள் வீடுகளிலும், உறவுகளிலும், திருமணங்களிலும், ஆன்மீகப் பகுதிகளிலும், ஆலயத்திலும் கூட எங்கள் காரியங்கள் பெரிய மோதல்களை உருவாக்கும் வகையில் அல்ல, மாறாக, அமைதியான, இயற்கையான***

*முறையில் முன்னேற்றம் நடக்கிறது. அங்குக் கடவுளின் சுத்திகரிப்பு செயல்முறையைக் கண்டு வியப்படைகிறோம், இது ஒரு விதத்தில் வாழ்க்கையை எளிதாக்குகிறது, அதுமுதற்கொண்டு கடவுளின் பிரசன்னத்தை மேலும் மேலும் உணர்கிறோம்."*

*பரிசுத்த ஆவியின் மூலம் "நம்மில் வாழும் கிறிஸ்து" நமது ஒற்றுமையில் நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகிறார் என்பதை இந்தச் சாட்சி எவ்வாறு நமக்குக் காட்டுகிறது என்று பார்த்தீர்களா ? அந்த அறிக்கை தொடர்கிறது : "சமீபத்தில் ஒரு சகோதரி என்னிடம் கூறினார் : « நான் கடவுளுக்குப் பிரியமான நல்ல வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று கற்பனை செய்து கொண்டிருந்தேன், ஆனால் வழியில் பல சிரமங்கள் இருந்தன. இறுதியாக, எனது கனவு நனவாகியுள்ளது. மேலும் இது ஆரம்பம் மட்டுமே ! »* [137] *இந்தச் சகோதரி கவர்ந்திழுக்கும் விசுவாசத்தைக் கண்டுகொண்டார்.*

## *3.* இயேசுவுக்காகச் சாட்சி கொடுக்க

*"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்." (அப்போஸ்தலர் 1 :8)* **சீடர்கள் அவருடைய சாட்சிகளாக இருக்க பரிசுத்த ஆவியானவரால் பலப்படுத்தப்படுவார்கள் என்று இயேசு கூறினார்.**

*நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும்போது, ஆன்மீக எழுப்புதல் மற்றும் சீர்திருத்தத்தை அனுபவிப்போம். எழுப்புதல் என்றால் என்ன ? டென்னிஸ் ஸ்மித் விளக்குகிறார் : "ஒரு கிறிஸ்தவரின் வாழ்க்கை கிறிஸ்துவுக்குள் புதுப்பிக்கப்படும் நேரம் அது. இரட்சிப்பைப் பற்றிய மகிழ்ச்சி அவர் இதயத்தை நிரப்புகிறது ; மற்றவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற ஆசை அவருக்குள் கொழுந்து விட்டு எரியத் தொடங்குகிறது. புத்துயிர் பெற்ற கிறிஸ்தவர்களாகிய மற்றவர்களின் இரட்சிப்புக்காக நாம் ஏங்குவோம் என்பதே இதன் பொருள்."* [138]

*எலன் உவைட் கூறுகிறார் : "தேவனுடைய ஆவியின் பிரசன்னம் இல்லாமல், எந்த இதயமும் தொடப்படாது, எந்தப் பாவியையும் கிறிஸ்துவிடம் கொண்டு வர முடியாது. அவருடைய சீடர்கள் ஏழ்மையானவர்களும் அறியாதவர்களாகவும் இருந்தாலும் கூட, கிறிஸ்துவுடன் இணைந்திருக்கும்போதும் மற்றும் அவர்கள் பரிசுத்த ஆவியின் வரங்களைப் பெற்ற மக்களாக இருக்கும்போதும், மற்றவர்களின் இதயங்களைத் தொடும் ஆற்றல் உடையவர்களாக இருப்பார்கள். கடவுள் அவர்களைப் இப்பிரபஞ்சத்தில் மிக உயர்ந்த மாற்றங்களை உண்டுபண்ணும் வாய்க்காலாக உருவாக்குகிறார்."* [139]

*நன்கு அறியப்பட்ட சுவிசேஷகரும் மற்றும் எழுப்புதல் போதகருமான R. A. டோரே (Torrey) ஒரு குறிப்பிடத் தக்க அனுபவத்தைக் கூறுகிறார். மிகவும் திறமையான உதவி போதகப் பெண் ஒருமுறை, ஒரு மனிதனிடம் இரண்டு மணிநேரம் அவனுடைய இரட்சிப்பைப் பற்றிப் பேசியபிறகும், எதையும் சாதிக்க இயலவில்லை. அதனால் அந்த மனிதனிடம் பேசுமாறு போதகரிடம் கேட்டாள். பத்து நிமிடங்களுக்குப் பிறகு, அந்த நபர் ஒரு நேர்மறையான முடிவை எடுத்தார். அந்தப் பெண் வாயடைத்துப் போனாள், ஏனெனில் அந்தப் பெண் போதகர் ஏற்கனவே பயன்படுத்திய அதே வேத வசனங்களையே டோரியும் பயன்படுத்தியுள்ளார். டோரே பின்வருமாறு கருத்துரைத்தார் : "அவள் எதையும் சாதிக்காததால், தனக்கும் அது நடக்குமோ என்று அவர் /டாக்டர் டோரே/ பயந்தார். எனவே அவர் தனது உதவியற்ற நிலையில் கடவுளிடம், பரிசுத்த ஆவியானவர் இந்த வேலையைச் செய்யும்படி கேட்டார் - அவர் அதைச் செய்தார்."* [140]

---

[137] E- mail message sent to H. Haubeil on December 18, 2012.
[138] Dennis Smith, *40 Days: Prayers and Devotions to Revive your Experience with God*, book2, Day 6; p.24.
[139] Ellen G. White, Ye Shall Receive Power, October 25; p. 307.
[140] R. A. Torrey, Der Heilige Geist (Frankfurt/ Main: 1966), S. 37, 38; a short summary.

# எழுப்புதல் தேவப்பணியை தோற்றுவிக்கிறது

*“அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறும் வரை, அவர்களால் இந்தச் செய்தியை வல்லமையுடன் பரப்ப முடியாது. அவர்கள் ஆவியைப் பெறும் வரை, கடவுள் அவர்கள்மூலம் என்ன செய்ய முடியும் என்பதை அவர்களால் உணர முடியாது.”* [141] *நம்முடைய தனிப்பட்ட நடத்தை மற்றும் அன்பான ஒற்றுமை ஆகியவற்றால் மக்கள் கவர்ந்திழுக்கப்பட வேண்டும் என்று கடவுள் திட்டமிட்டுள்ளார். இது குறிப்பாக நம் பிள்ளைகள், இளைஞர்கள், குடும்ப உறுப்பினர்கள் மட்டுமல்ல நம் உறவினர்கள், தெரிந்தவர்கள், அயலவர்கள், சக ஊழியர்கள், நண்பர்கள் மற்றும் நாம் சந்திக்கும் அந்நியர்களுக்கும் உண்மையாக இது பொருந்தும். இதன் காரணமாக மக்கள் நம் நம்பிக்கையை ஏற்றுக்கொள்கிறார்கள், மேலும் கடவுள் நம்மிடம் மக்களை வழிநடத்த முடியும்.*

*நமது நடத்தை எவ்வளவு வலுவான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை பின்வரும் வார்த்தைகள் நமக்குக் காட்டுகின்றன : “கடவுளுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி, அன்பாகவும், கண்ணியமாகவும், கனிவான இதயத்துடனும், இரக்கத்துடனும் இருந்தால், உண்மையாகவே சத்தியத்திற்காக நூறு மனமாற்றங்கள் இருக்கும், இப்போது ஒன்று மட்டுமே உள்ளது.”* [142]

*ஆனால் பரிசுத்த ஆவியானவர் இதற்கு இன்றியமையாதவர். எலன் உவைட் போதகர்களின் கவனத்தை இவ்வாறு ஈர்க்கிறார் : “அவர்களால் [சபை உறுப்பினர்கள்] மகத்துவமும், மகிமையும், பரிசுத்தமும், உண்மையும் நிறைந்த கடவுளின் வார்த்தைகளை மற்றவர்கள் முன்வைக்க முடியவில்லை, இது பரிசுத்த ஆவியின் மூலமே ஆன்மாக்களை உணர்த்தி மாற்றக்கூடியது. கடவுளின் வல்லமை அவர்கள் ஆவியானவரைக் கோருவதற்கும் மற்றும் அவர்கள் ஏற்றுக்கொள்வதற்காகவும் காத்திருக்கிறது.”* [143]

# ஆன்மீக விழிப்புணர்வை எவ்வாறு நிலையாய் தக்க வைத்துக் கொள்வது?

*1893 ஆம் ஆண்டில், மிச்சிகன், பேட்டில் கிரேக்கில் (Battle Creek) உள்ள அட்வென்டிஸ்ட் நிறுவனங்களில் எழுப்புதல் ஏற்பட்டது, ஆனால் எழுப்புதல் விரைவில் அழிந்து ஒன்றுமில்லாது போனது. கடவுள் காரணத்தை எலன் உவைட்டிற்குக் காட்டினார். அம்மையார் கூறினார் : “கடவுள் தங்களுக்குக் கொடுத்ததை மற்றவர்களுக்கு வழங்குவதற்காக எல்லா மக்களும் ஞானத்துடன் ஒரே நேரத்தில் வேலைக்குச் சென்றிருந்தால், அதிக வெளிச்சம் கொடுக்கப்பட்டிருக்கும், அதிக வல்லமை வழங்கப்பட்டிருக்கும்.”* [144]

*சுவிசேஷத்தைப் பரப்புவதன் மூலம் அதிக வெளிச்சத்தையும் அதிக பலத்தையும் நாம் பெறுகிறோம். நாம் மற்றவர்கள்மீது அக்கறைக் கொள்ளும்போது, அது நம் சொந்த வாழ்க்கையில் விலையேறப்பெற்ற விளைவுகளை ஏற்படுத்துகிறது. அதனால்தான் 40 நாட்கள் ஜெபத்தில் சந்திக்கப்படாத நபர்களுக்காக ஜெபிக்க மக்களை ஊக்குவிப்பது மிகவும் முக்கியமானது.*[145]

---

[141] Ellen G. White, Ye Shall Receive Power, October 4; p. 286.
[142] Ellen G. White, Testimonies for the Church (Nampa, ID: Pacific Press Publishing Association, 2002), 9 :189.
[143] Ellen G. White, Testimonies to Ministers and Gospel Workers, p. 175.
[144] Ellen G. White, Selected Messages, book 1; p. 129.
[145] See Dennis Smith, 40 Days, books 1 and 2, Introduction.

## நமது பணி எங்கிருந்து தொடங்க வேண்டும்?

*இயேசு தம்முடைய சீஷர்களிடம் அவர்கள் ஊழியத்தை எங்கிருந்துத் தொடங்க வேண்டும் என்று கூறினார் : அவர்கள் இருக்கும் இடத்திலிருந்து தொடங்க வேண்டும். அதாவது நம் வீட்டிலிருந்து தொடங்க வேண்டும், நம்மை அறிந்த மக்கள் இருக்கும் இடத்திலிருந்து என்பதாகும். இயேசு ஏன் இப்படி திட்டமிட்டார்? நமது சாட்சி அன்பான நடத்தையுடன் இணைந்து இருந்தால், நாம் வாசிக்கும் இடத்தில் இருக்கும் நம்மை அறிந்தவர்கள் நம் சாட்சியை ஏற்றுக் கொள்வார்கள். நம் வாழ்வின் சாட்சி நம் வாய் வார்த்தைகளின் சாட்சியுடன் ஒத்துப்போக வேண்டும். நாம் உண்மையிலேயே பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருந்தால் அதை வீட்டில் காணலாம்.*

## இயேசுவின் புதிய கட்டளையின் முக்கியத்துவம் என்ன?

*“நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் ; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.” இவ்வாறு இயேசு யோவான் 13 :34,35ல் கூறியுள்ளார்.*

*ஆவியில் நிறைந்த வாழ்க்கை மேலும் மற்றொரு முக்கியமான ஆவியின் கனிக்கு வழிவகுக்கிறது : சாந்தம். சாந்தம் என்பது இயேசுவின் குணம் மற்றும் நல்ல ஒற்றுமைக்கும் அவசியமானது. இயேசு தம் சீடர்களின் பாதங்களைக் கழுவிய உடனேயே புதிய கட்டளையைக் கொடுத்ததற்கு இதுவே காரணம். பாதங்களைக் கழுவுவது சாந்த குணத்தைக் சுட்டிக்காட்டுகிறது. சாந்தம் என்பது மனிதனின் இயற்கை பண்பல்ல. இருப்பினும், மீகா 6 :8 போன்ற வாக்குத்தத்தங்களைக் கூறி நாம் தினமும் கடவுளிடம் சாந்த குணத்தைக் கேட்கலாம்.*

*ஆவியால் நிரப்பப்பட்ட நபருக்குச் சாந்தம் ஒரு மிக முக்கியமான பண்பு, ஆனால் பொதுவாக முற்றிலும் தவறாக அது மதிப்பிடப்படுகிறது. ஒருவரையொருவர் நேசிப்பதைப் பற்றிய புதிய கட்டளையில் இயேசு சொல்லுகிறார், “நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல.” இயேசு நம்மைத் தெய்வீக அன்புடன் நேசிக்கிறார். இந்த வகையான அன்பை அகாபே என்று அழைக்கிறோம், இது தெய்வீக அன்பைக் குறிக்கும் கிரேக்க வார்த்தையாகும். நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டால் மட்டுமே இந்த அன்பைப் பெற முடியும். பவுல் எழுதுகிறார், “மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால்.” (ரோமர் 5 :5) “கடவுள்மீது உன்னதமான அன்பும், ஒருவர் மீது ஒருவர் தன்னலமற்ற அன்பும்- இதுவே நமது பரலோகத் தந்தை அளிக்கும் சிறந்த பரிசு. இந்த அன்பு ஒரு உந்துதல் அல்ல, ஒரு தெய்வீக கோட்பாடு, நிரந்தர வல்லமை. அர்ப்பணிக்கப்படாத இதயம் அதை உருவாக்கவோ உண்டுபண்ணவோ முடியாது. இயேசு இதயத்தில் ஆளும் போதுமட்டுமே அது காணப்படுகிறது.”[146]*

*ஆகவே சாந்தம் என்பது இயேசு நம் இதயத்தின் “சிம்மாசனத்தில்” இருக்கிறாரா இல்லையா என்பதே கேள்வி. நம் வாழ்வில் உள்ள அனைத்தையும் ஆள நாம் அவரை அனுமதிக்கிறோமா ? நம் வாழ்க்கையை முழுவதுமாக அவரிடம் ஒப்படைத்துவிட்டோமா ? இதை நாம் தினமும் உறுதிப்படுத்துகிறோமா ?*

[146] Ellen G. White, The Acts of the Apostles, p. 551.

# *எனது நிலை என்ன?*

***எனக்குக் கவர்ந்திழுக்கும் விசுவாசம் இருக்கிறதா ? பரிசுத்த ஆவியின் மூலம் இயேசு என் இருதயத்தில் வாழ்கிறாரா ? ஆம் எனில், இந்தக் கவர்ந்திழுக்கும் விசுவாசத்தை நான் பராமரித்து வளர்க்க வேண்டும். ஆனால் எனக்கு இன்னும் கவர்ந்திழுக்கும் விசுவாசம் இல்லை என்பதை நான் உணர்ந்தால், இந்த முக்கியமான கேள்வியை நான் நிச்சயமாக எதிர்கொள்ள வேண்டும்.***

***இந்தக் கவர்ந்திழுக்கும் விசுவாசத்தை இதுவரை இல்லாதவர்களும் கண்டுபிடிப்பதற்கும், இந்த விசுவாசத்தை ஏற்கனவே வைத்திருப்பவர்களுக்கும் எனது தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள் என்ற சிறு புத்தகமும், ஆண்டவரின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகத் தியானங்கள் மற்றும் ஜெபங்கள் - 40 நாட்கள் என்ற டென்னிஸ் ஸ்மித்தின் புத்தகமும் உதவிகரமாக இருக்கும். இந்த இரண்டு புத்தகங்களும் விலைமதிப்பற்ற வகையில் ஒன்றையொன்று பூர்த்தி செய்கின்றன. ஆம் இந்தப் புத்தகங்களை நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட முறை படிக்க வேண்டும் என்று நான் முழு மனதுடன் மட்டுமே பரிந்துரைக்க முடியும்.***

# *நம் தனிப்பட்ட வாழ்வில் இருக்கும் பரிசுத்த ஆவியின் குறைவு மற்றவர்களிடம் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தும்?*

***பரிசுத்த ஆவியின் மூலம் இயேசு நம்மில் இல்லாமல் இருந்தால், நாம் இம்மை வாழ்விற்குரிய கிறிஸ்தவர்கள் மட்டுமே. (பார்க்க 1 கொரிந்தியர் 3 : 1-3 ; ரோமர் 8 : 1-17 ; கலாத்தியர் 5 :16) இந்த நிலையில் நாம் இரட்சிக்கப்பட முடியாது. (ரோமர் 8 :9) நாம் நமது சொந்த மனித திறன்கள் மற்றும் சக்திகளுடன் நாம் வாழும்போது, அதன் முடிவு, நம் குடும்பம் மற்றும் பிள்ளைகளும் இம்மை வாழ்விற்குரிய கிறிஸ்தவர்களாக இருப்பார்கள், எல்லா வருந்தத் தக்க விளைவுகளும் இருக்கும்.[147] கடவுளின் அன்பு பரிசுத்த ஆவியின் மூலம் மட்டுமே நம் இதயங்களில் இருக்க முடியும் என்பதை நினைவில் கொள்வோம். எலன் உவையிட் கூறுகிறார், "கிறிஸ்துவின் மென்மையான, வெல்லும் அன்பை ஒருபோதும் அனுபவிக்காதவர்கள் மற்றவர்களை ஜீவ நீரூற்றுக்கு அழைத்துச் செல்ல முடியாது. அவரது அன்பு இதயத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு வல்லமையாகும், இது அவர்களுடன் தொடர்புகொள்ளும் மனிதர்களின் வாழ்க்கையை கட்டியெழுப்பி, உரையாடலில் மென்மையோடும், இரக்கமுள்ள ஆவியோடும் அவரை வெளிப்படுத்தி, அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும் வழிவகுக்கிறது." [148]***

***பரிசுத்த ஆவியானவர் மூலம் இயேசு நம்மில் வாழும்போது, முற்றிலும் எளிதான முறையில் கடவுளுக்குச் சாட்சி கொடுக்க அவர் நமக்கு உதவுவார். "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்." (மத்தேயு 12 :34)***

[147] See Helmut Haubeil, Steps to Personal Revival, pp. 36, 74, 76.
[148] Ellen G. White, The Acts of the Apostles, pp. 550, 551.

# கவர்ந்திழுக்கும் விசுவாசம் எவ்வளவு மதிப்புமிக்கது?

*இந்தக் கவர்ந்திழுக்கும் விசுவாசத்தைக் கைவிடுவதற்குப் பதிலாகக் கிறிஸ்தவர்கள் நஷ்டங்களையும், துன்புறுத்தல்களையும், உடைமை இழப்புகளையும் ஏற்று, இரத்த சாட்சிகளாக உயிர்துறந்ததைப் பார்க்கும்போது இந்தக் கவர்ந்திழுக்கும் விசுவாசம் எவ்வளவு மதிப்புமிக்கது என்பதை நாம் காணலாம். இந்தக் கசப்பான கஷ்டங்களின் மத்தியிலும் அவர்களை மிகவும் நெகிழ்ச்சியடையச் செய்தது எது ? இரத்த சாட்சிகள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டார்கள் என்பதற்கான ஆதாரத்தை நாம் காணும்போது, அவர்கள் தங்கள் மரண வேதனையை எப்படி உணர்ந்தார்கள் என்பதை சொல்ல முடியாது. எவ்வாறாயினும், கான்ஸ்டன்ஸில் நடந்த ஹஸ் மற்றும் ஜெரோமின் மரணம்பற்றிய போப்பாண்டவர் அறிக்கை நமக்கு ஒரு முக்கியமான குறிப்பை அளிக்கிறது. யாராவது எரிந்தால், அவர் அலற மட்டுமே முடியும். ஆனால் இந்த இரண்டு பேரும் துதிப் பாடல்களைப் பாடினர், கடவுளின் உதவியால் மட்டுமே இது சாத்தியமாகும். அவர்கள் தங்கள் வலியின் மத்தியிலும் உண்மையான மகிழ்ச்சியைக் கொண்டிருந்தனர். "அவருடைய ஆவி எங்கு இராசரீகம்பண்ணுகிறதோ, அங்கே சமாதானம் இருக்கும் ; அங்கே மகிழ்ச்சியும் இருக்கும்."[149]*

*பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்சில் வாழ்ந்த ஹுகினோட் (Huguenot) குடும்பத்தில், டுரான்ட் (Durant) குடும்பம் மனதை ஈர்க்கக்கூடிய ஒரு எடுத்துக்காட்டாகும். டுரன்ட்ஸ் அவர்களின் குடும்பம் வேத நம்பிக்கையின் காரணமாகச் சபையால் துன்புறுத்தப்பட்டது. தந்தையார் விடுதலை பெறுவதற்கு முன் பதினான்கு ஆண்டுகள் சிறையில் கழித்தார். தாயார் சிறையில் இறந்தார். அவர்களின் மகன் பியர்- ஒரு வல்லமையான பிரசங்கியார்- தூக்கிலிடப்பட்டார். அவர்களின் மகள் மேரி மற்ற பெண்களுடன் ஒரு காவல் கோபுரத்தில் சிறைவைக்கப்பட்டாள். அவளுடைய விசுவாசத்திலிருந்து பின்வாங்கியிருந்தால் அவள் விடுவிக்கப்பட்டிருப்பாள், ஆனால் அவள் அதைச் செய்யவில்லை. 1768 ல், முப்பது வருட சிறைவாசத்திற்குப் பிறகு அவள் விடுவிக்கப்பட்டாள். மேரி டுரன்டிற்கு, வேத நம்பிக்கை என்பது அவளால் கைவிட முடியாத ஒரு கவர்ந்திழுக்கும் விசுவாச நம்பிக்கையாக இருந்தது.[150]*

# மிஷனரி பணி ஏற்படுத்திய தாக்கம் - சிறந்த எடுத்துக்காட்டுகள்.

*தானியேலும் அவரது நண்பர்களும் வித்தியாசமான உணவைக் கேட்டதன் மூலம் ஏற்படுப்போகும் விளைவுகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தனர். கடவுள் என்ன செய்தார் ? அவர்களுடைய கீழ்ப்படிதலை ஆசீர்வதித்தார். அவர்கள் மற்றவர்களைவிட அழகாகவும், ஆரோக்கியமாகவும், புத்திசாலியாகவும் இருந்தனர், உயர் பதவிகளைப் பெற்றனர். நெருப்புச் சூளையில் தானியேலின் நண்பர்களைப் பற்றிய செய்தியும், சிங்கக் குகையில் தானியேலின் இரவுபற்றிய செய்தியும் நமக்குத் தெரியும். அவர்களின் உயிர்களைவிட அவர்களின் நம்பிக்கை அவர்களுக்கு முக்கியமானதாக இருந்தது. அதன் விளைவு என்ன ? இரண்டு உலக சாம்ராஜ்ஜியங்கள் உண்மையான கடவுளைப் பற்றிய அவர்களின் சாட்சியை வார்த்தைகள் மற்றும் செயல்கள்மூலம் கேட்க முடிந்தது. மிஷனரி பணியில் அவர்களின் எடுத்துக்காட்டு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.*

*எகிப்தில் இருந்த யோசேப்புக்கும் உண்மையில் இதே நிலைதான். அவர் விபச்சாரம் செய்ய மறுத்துவிட்டார், அதனால் போத்திபரின் மனைவியின் பொய்க்குற்றச்சாட்டு நிமித்தம் அவர் சிறைக்கு அனுப்பப்பட்டார். ஆனால் கடவுள் யோசேப்பின் நேர்மையைப் பயன்படுத்தி முழு உலகப் பேரரசுக்கும் உண்மையான கடவுளைப் பற்றித் தெரியப்படுத்தினார்.*

[149] Ellen G. White, The Desire of Ages, p. 153.
[150] Taken from Wikipedia, « Marie Durant. »

*நாகமானின் வீட்டில் அடிமையாக வேலை செய்த இளம் பெண்ணைப் பற்றி உங்களுக்கு நினைவிருக்கிறதா ? வார்த்தையிலும் செயலிலும் அவள் அளித்த சாட்சி இறுதியில் அந்தத் தளபதியின் மனமாற்றத்திற்கு வழிவகுத்தது. அவர் உயிருள்ள கடவுளை மிகுந்த மகிழ்ச்சியுடன் பின்பற்றியது மட்டுமல்லாமல், அவர் இந்த இளம் பெண்ணுக்குச் சுதந்திரம் அளித்தும் மற்றும் தனிப்பட்ட முறையில் பல பரிசுகளுடன் அவளை வீட்டிற்கு அழைத்துச் சென்றார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.*

*மத்தேயு 13 :44-46 ல், ஒரு வயல்வெளியில் ஒரு புதையலைக் கண்டெடுத்த ஒரு மனிதனைப் பற்றி இயேசு கூறுகிறார். இந்தப் பொக்கிஷம் அவருக்கு மிகவும் மதிப்புமிக்கதாகத் தோன்றியதால், அவர் தன்னிடம் இருந்த அனைத்தையும் விற்று வயலை வாங்கினார். அவர் பரலோக ராஜ்யத்திற்காக எல்லாவற்றையும் விட்டுவிட்டார் - அல்லது நான் விவரித்தது போல் இது கவர்ந்திழுக்கும் விசுவாசம். இந்த விசுவாசம் எவ்வளவு மதிப்புமிக்கது என்பதை உங்களால் பார்க்க முடிகிறதா ?*

# இறுதிச் சிந்தனைத்துளிகள்

*எலன் உவையிட் கூறுகிறார், "இயேசுவில் நிலைத்திருப்பவர்கள் கடவுளில் மகிழ்ச்சியாகவும், குதூகலமாகவும், இன்முகத்துடனும் இருப்பார்கள்."* [151] *ஏற்கனவே கவர்ந்திழுக்கும் விசுவாசம் நமக்கு மகிழ்ச்சியான, துடிப்பு நிறைந்த, ஒரு குதூகலமான வெற்றி வாழ்க்கையை தருகிறது மற்றும் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய அடிப்படை நம்பிக்கையையும் கொடுக்கிறது. கடினமான காலங்களில், நாம் ஒரு இருண்ட பள்ளத்தாக்கு வழியாகச் செல்லும்போது, நம் விசுவாசம் கடவுளின் பிரசன்னத்தின் மூலம் இன்னும் கவர்ந்திழுக்கக்கூடியதாக இருக்கும். கவர்ந்திழுக்கக்கூடிய விசுவாசத்தின் மூலம் நாம் ஒரு நல்ல ஒற்றுமைக்குப் பங்களிக்க முடியும், இதனால் மற்றவர்களின் ஆர்வம் நமது விசுவாசத்தின் மூலம் தூண்டப்படும்.*

*ஒருமையின் முக்கியத்துவத்தை முழுமையாகப் புரிந்துக்கொள்ள கடவுள் நமக்கு உதவுவாராக ! நம்முடைய சொந்த மகிழ்ச்சிக்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் கிறிஸ்துவைப் போல வளரவும், நம் அன்புக்குரியவர்களையும் சக மனிதர்களையும் ஈர்க்கவும், நமக்குள் இருக்கும் கிறிஸ்து, பரிசுத்த ஆவியின் வல்லமையின் மூலம் நமக்கு உதவுவாராக. "கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்." (நெகேமியா 8 :10) "நாம் கிறிஸ்துவைப் பிரதிநிதித்துவப்படுத்தும்போது, அவருடைய சேவை உண்மையில் கவர்ந்திழுக்கக்கூடியது என்பதைக் காட்டுவோம்."* [152]

# ஜெபம்

*"பரலோகப் பிதாவே, இயேசுவை உண்மையாகப் பின்பற்றுவது மிகவும் உற்சாகமான வாழ்க்கையைத் தருகிறது என்பதனால் நான் முழு மனதுடன் நன்றி கூறுகிறேன். என் வாழ்நாள் முழுவதும் இயேசுவோடு நெருங்கிய உறவில் இருக்க எனக்கு உதவி செய்யும். என் அன்புக்குரியவர்களையும் மற்றவர்களையும் உம்மிடம் வழிநடத்த என் வாழ்க்கையைப் பயன்படுத்தும்." ஆமென்.*

[151] Ellen G. White, Testimonies for the Church (Nampa, ID: Pacific Press Publishing Association, 2002), 4: 626.
[152] Ellen G. White, Steps to Christ, p. 116.

# தனியொருவரின் எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. *கிறிஸ்து நம்மில் வாழும்போது ஏற்படும் விளைவுகள் என்ன ?*

2. *ஆவியின் கனிகள் யாவை ?*

3. *ஆவியின் வரங்கள் யாவை ?*

4. *எழுப்புதல் தனிப்பட்ட வாழ்க்கையில் என்ன விளைவுகளை ஏற்படுத்துகிறது ? அது நமது சுற்றுப்புறத்தை எவ்வாறு பாதிக்கிறது ? அது நம்மை எப்படி ஊக்குவிக்கிறது ?*

5. *கடவுள் மீதுள்ள எளிய நம்பிக்கையின் மூலம், மகா பெரிய காரியங்கள் நிகழலாம் என்பதைக் காட்டும் வேத உதாரணங்கள் என்ன ?*

# நம் ஜெப நேரம்

*உங்கள் ஜெப பங்காளரைத் தொடர்புக் கொண்டு தலைப்பைப் பற்றி விவாதிக்கவும்.*
*உங்கள் ஜெப பங்காளருடன் ஜெபியுங்கள் :*

1. *ஆவியின் கனி உங்களில் தொடர்ந்து வளர ஜெபியுங்கள்.*
2. *ஆவியின் வரங்களை அடையாளம் கண்டு அவற்றைச் சரியாகப் பயன்படுத்தும் திறனுக்காக ஜெபியுங்கள்.*
3. *உங்கள் வாழ்க்கை மற்றும் உங்கள் வார்த்தைகள், செயல்கள் ஆகியவை மூலம் உங்களில் வாழும் கிறிஸ்துவுக்குச் சாட்சியாக இருப்பதற்கு தேவையான தைரியம் மற்றும் மகிழ்ச்சிக்காக ஜெபியுங்கள் –இது உங்கள் சொந்த பலத்தில் நடக்காது, மாறாக ஒரு கவர்ச்சியான நம்பிக்கையிலிருந்து எழுகிறது.*
4. *கடவுளுடைய வார்த்தையை மகிழ்ச்சியுடன் படிப்பதற்கும், நிதானமான மனநிலை மற்றும் ஞானத்திற்காகவும் ஜெபியுங்கள்*

## *சாட்சி- 1*

# ஒப்புக்கொடுத்தப் பின் நடந்த மாற்றங்களைக் குறிப்பிடும் நினைவேட்டிலிருந்து

*2014 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், என்னை நானே கேட்டுக் கொண்டேன், "ஒரு நாள் இயேசு என்னைப் பார்த்து : 'நான் உன்னை அறியேன் என்று என்னிடம் சொல்வாரா' ? நான் புத்தியில்லாத கன்னிகைகளில் ஒருத்தியா ?" ஆனால் நான் கடவுளிடமிருந்து நித்திய ஜீவனைப் பெற விரும்பியதால் இதைப் பற்றிய எண்ணம் தாங்க முடியாததாக இருந்தது. மேலும் வாழ்க்கையில் பல்வேறு காரணங்களால் எப்போதும் சரியான பாதையில் செல்லவில்லை, அதனால் நான் எப்போதும் குற்ற உணர்ச்சியுடன் இருந்தேன்.*

*அதிர்ஷ்டவசமாக, தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள் மற்றும் இயேசுவில் நிலைத்திருங்கள் என்ற இரண்டு புத்தகங்களைப் பார்க்க நேர்ந்தது. முதன்முறையாக அவற்றைப் படித்தபிறகு, என் வாழ்க்கையில் ஏதோ ஒன்று மாற்றப்பட வேண்டும் என்பதை உணர்ந்தேன். எல்லாவற்றையும் புரிந்துகொள்வதற்காக நான் இந்தச் சிறுப் புத்தகங்களைப் பலமுறை படித்தேன். இது தவிர, சில மாதங்களுக்கு முன்பு ஆன்மீக கிறிஸ்தவராக மாறிய ஒரு பக்தியுள்ள சகோதரியிடமிருந்து நான் ஒரு சாட்சியைக் கேட்டேன். ஆண்டின் தொடக்கத்தில் நான் என் சிந்தனையில் "இம்மை வாழ்விற்குரியவராக" இருந்தேன் என்பதையும் இறந்திருந்தால், "நான் உன்னை அறியேன்" என்று இயேசு சொல்ல வேண்டியிருக்கும் என்பதையும் இப்போது நான் உறுதியாக அறிவேன்.*

*இயேசுவிடம் நான் முழுவதுமாக ஒப்புக்கொடுத்ததின் மூலம், ஒரே மாதத்தில் என் வாழ்க்கையை முழுவதுமாக மாற்றக் கடவுளால் முடிந்தது. எனக்குத் தூக்கம் மிகவும் முக்கியமாக இருந்தது - ஆனால் இப்போது நான் கடவுளுடைய வார்த்தையைப் படிக்க அதிகாலை 4 :30 மணிக்கு எழுந்திருக்கிறேன். என் சொந்த பலத்தில், இது நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்திருக்கும். ஆவியால் நிரப்பப்பட்ட ஒருவராக - நான் வித்தியாசமாக ஜெபிக்கிறேன். இன்று நான் என்ன செய்ய வேண்டும் என்று இறைவனிடம் தினமும் கேட்கிறேன், அதற்குக் கடவுள் பதிலளிக்கிறார். பரிசுத்த ஆவியானவரை என் இதயத்தில் வாழவும் வேலை செய்யவும் தினமும் அழைக்கிறேன். எனக்குத் தெளிவான எண்ணங்கள் உள்ளன, மேலும் "பெண்களுக்கேயுரிய" உடை உடுத்துகிறேன்.*

*மேலும், நான் இப்போது அடிக்கடி சாப்பிடுவதில்லை. என் சொந்த பலத்தில் அதை என்னால் நிறுத்த முடியவில்லை. என்னால் தினசரி தேவைகளை மிகவும் அமைதியான முறையில் சந்திக்க முடிகிறது, மற்றும் இப்போது என் வயிறு மன அழுத்தத்தால் பாதிக்கப்படவில்லை. என் கணவர் மூன்று வாரங்களுக்குப் பிறகு என்னில் மாற்றங்களைக் கவனித்தார். அவர் சொன்னார் ? "நீ இப்போதெல்லாம் கடுமையாகப் பேசுவதில்லை."*

*திடீரென்று பல கேள்விகள் வேதத்தைப் படிக்கும்போது எனக்குள் எழுந்தன, நான் இதற்கு முன்பு இது போன்ற அனுபவத்தைப் பார்த்ததில்லை. இப்போது நான் ஆழமாகக் கற்றுக்கொள்ள விரும்புகிறேன், இதற்கு முன் பரிசுத்த ஆவியானவர் எப்போதாவது ஒரு சாட்சி கொடுக்க என்னை வழிநடத்தினார், இப்போது அது தினமும் நடக்கிறது. நான் பேச்சைத் தயார் செய்ய வேண்டியதில்லை, கடவுள் எனக்குச் சரியான வார்த்தைகளைத் தருகிறார், ஏனென்றால் நான் யாருடன் பேசுகிறேன் என்பதை அவர் மட்டுமே அறிவார். நான் சில சமயங்களில் பாவம் செய்தாலும், பாவங்களை உணர கடவுள் எனக்குத் தெளிவான விழிப்புணர்வை தருகிறார். நான் மனந்திரும்பி என் வழிகளை மாற்ற முடியும்.*

*இயேசு இல்லாமல் என்னால் எதையும் சாதிக்க முடியாது என்பதையும், ஒவ்வொரு*

*அடியிலும் கிறிஸ்துவின் பிரசன்னம் எனக்குத் தேவை என்பதையும் நான் உணர்ந்து கொண்டேன். இந்த வகையான பெருமைக்கு (நான் எவ்வளவு நல்லவள், எவ்வளவு சிறப்பாக என்னால் காரியங்களைச் செய்ய முடியும்) நேர்மாறானது மனத்தாழ்மை என்பதையும் நான் உணர்ந்தேன். இயேசு இல்லாமல் நம்மால் எந்த நன்மையும் செய்ய முடியாது என்பதை இது காட்டுகிறது.*

*காபி குடிப்பதை நிறுத்தும் சக்தியையும் கடவுள் எனக்குக் கொடுத்தார். முன்பு இது நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்திருக்கும், ஏனென்றால் நான் காபி குடிப்பதை நிறுத்த முயற்சித்தபோது எனக்கு ஐந்து நாட்களுக்குப் பயங்கரமான தலைவலி இருந்தது. பழக்கத்தைக் கைவிட முயற்சிக்கும்போது ஏற்படும் கடுமையான அறிகுறிகள் இவை. இந்த முறை எனக்கு என்ன விளைவுகள் ஏற்படும் என்று யோசிக்கவே இல்லை, இனி அதைச் செய்ய விரும்பவில்லை என்பது மட்டும் எனக்குத் தெரியும். இன்று எனக்கு அதில் ஆர்வம் இல்லை.*

*இறைச்சி விஷயத்தில் எனக்கு இதே அனுபவம் இருந்தது. நானும் எனது குடும்பத்தினரும் ஒருபோதும் இறைச்சி சாப்பிடுவதைத் தவிர்க்க விரும்பவில்லை. இன்று அது எனக்கு எளிதானது, அதன் மேல் எனக்கு விருப்பம் இல்லை. நித்திய வாழ்வுக்கான மிகப்பெரிய ஆசை எனக்கு ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. விளைவுகள் என்னவாக இருந்தாலும் சரி, என் மீட்பர் கிறிஸ்து இயேசுவை விட வேறு எதுவும் முக்கியமில்லை என்பதை உணர்ந்தேன்.*

*எசேக்கியேல் 36 :26,27 உண்மையை விளம்புகிறது : இயேசு நமக்கு ஒரு நவமான இதயத்தையும் புதிய ஆவியையும் தருவார். அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்கும் மக்களாக நம்மை உருவாக்க விரும்புகிறார். பல தசாப்தங்களாக, நான் வெவ்வேறு பிரச்சினைகளுடன் பயன் இல்லாமல் போராடி, எனது முயற்சியால் அவற்றை எப்போதும் வெல்ல முடியாமல் தோல்வியைச் சந்தித்தேன். இயேசு தம்முடைய சித்தத்தை என்னில் நிறைவேற்ற விரும்பினார், அவருக்கு என் விருப்பம் மட்டுமே தேவைப்பட்டது.*

*கட்டளைகளைக் கடைப்பிடித்து தனது சொந்த செயல்களால் பரலோகத்தை அடைய முயற்சிப்பது சாத்தியமற்ற முயற்சியாகும் என்று எலன் உவையிட் கூறுகிறார். முப்பத்தைந்து வருடங்களாக என்னுடைய அனுபவம் இதுதான், அறிவுப்பூர்வமாக நான் கட்டளைகளை ஏற்றுக்கொண்டேன், ஆனால் என்னால் அவற்றைக் கடைப்பிடிக்க முடியவில்லை. இயேசுவால் மட்டுமே அந்த நன்மையை என்னில் நிறைவேற்ற முடியும். அவர் நல்ல மற்றும் ஆரோக்கியமான விஷயங்களுக்கான விருப்பத்தை நமக்குத் தருகிறார், மேலும் அவர் தீங்கான விஷயங்களுக்கான நமது ஆர்வத்தை நீக்குகிறார்.*

*இன்று நான் ரோமர் 8 :14 ஐ உறுதிப்படுத்த முடியும் : "மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்." இந்த வசனத்தின்படி, பரிசுத்த ஆவியானவர் என்னில் வாழவும், கிரியை செய்யவும், நான் தினமும், ஒவ்வொரு மணி நேரமும், தொடர்ந்து கேட்க வேண்டும் - ஏனெனில் பிசாசு விழித்திருக்கிறான்.*

*இயேசு மத்தேயு 10 :37 ல் கூறினார் : "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல." இந்த வசனத்தை என்னால் பின்பற்ற முடியாது என்று நான் எப்போதும் நினைத்தேன். ஆனால் இயேசு என் இதயத்தில் வாழும்போது, முழு பிரபஞ்சத்தின் மகா பெரிய கடவுள் என்னிலும் என் மூலமாகவும் செயல்படுகிறார், மேலும் என் பிள்ளைகளையும் குடும்பத்தையும் என்னைவிடச் சிறப்பாக அவர் கவனித்துக் கொள்ள முடியும் என்பதை இப்போது நான் அறிவேன். கடவுள் மட்டுமே எல்லாம் வல்லவர், எல்லாம் அறிந்தவர். நம்பிக்கையுடன் என் வாழ்க்கையை தினமும் அவருடைய கைகளில் ஒப்படைக்க முடியும், அவருடைய ஞானம் மற்றும் அவருடைய திட்டத்தின்படி அவர் எல்லாவற்றையும் சரியாகச் செய்வார். M. M.*

# *சாட்சி- 2*

# ஒரு மொழிபெயர்ப்பாளர் கடவுளின் உதவியை நாடுகிறார்

*நான் "இயேசுவில் நிலைத்திருங்கள்" என்ற புத்தகத்தை மொழிபெயர்க்க அமர்ந்தேன். இரண்டாவது பக்கத்தை அடைந்தவுடன் தொடர முடியாமல் திணறினேன். இதுவரை இப்படி நடந்ததில்லை, நான் மிகவும் குழப்பமடைந்து வேலையை நிறுத்திவிட்டு என்ன செய்வது என்று அறியாமல் அப்படியே விட்டுவிட்டேன். மீண்டும் ஒரு மாதத்திற்குப் பிறகு நான் தொடர முயற்சித்தேன், ஆனால் என் முயற்சிகள் பலனளிக்கவில்லை.*

*நான் புத்தகத்தைத் தொடர்ந்து படித்தப்போது, இந்த வாக்கியம் என் கவனத்தை ஈர்த்தது : "தினமும் பரிசுத்த ஆவியைக் கேட்க வேண்டும்." பரிசுத்த ஆவியைக் கேட்காமல், அவருடைய உதவியின்றி நான் அவருக்குப் பணி செய்ய முயற்சிக்கிறேன் என்பதை கடவுள் எனக்கு உணர்த்தினார். மேலும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய சத்தியத்தைப் புரிந்துகொள்ள நான் பரிசுத்த ஆவியின் வல்லமை மற்றும் செயல்களைப் பற்றித் தொடர்ந்து படிக்க ஆரம்பித்தேன்.*
*Power of Holy Spirit ; Work of the Holy Spirit by E. G. White*

*நான் வாசித்ததிலிருந்து சில :*
*"தேவ பலத்தின் ரகசியத்தை அறியும் வரை கிறிஸ்தவ ஊழியர்கள் உயர்ந்த வெற்றியை அடைய முடியாது." (HP 83) ; "ஒருவர் திறம்பட தேவ ஊழியம் செய்ய விரும்பினால், பரிசுத்த ஆவியால் பிறக்க வேண்டும்." (9T 156) இது என் கிறிஸ்தவ வாழ்க்கைப் பாதையைத் தடம் மாற்றியது என்று என்னால் சொல்ல முடியும். தாக்கத்தை ஏற்படுத்தி மற்றும் எளிமையான நம்பிக்கையுடன் முன் செல்ல எனக்கு உதவியது. நான் முழங்கால்படியிட்டு, தேவனிடம் அவருடைய ஆவியைக் கேட்டேன்.*

*இந்த ஒப்புக்கொடுத்தலுக்குப் பிறகு, மற்றொரு அதிசயம் நடந்தது. சபை எழுப்புதலுக்காகவும், பின் மாரிமழைக்காகவும் தினமும் ஒன்றுகூடி ஜெபிக்கும் ஜெபக் குழுவை வழிநடத்த எனக்கு வாய்ப்பு வந்தது. நான் அனுதினமும் பரிசுத்த ஆவியைக் கேட்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை, அதற்காக நான் வருந்தினேன். ஆனால் இதை உணர கடவுள் எனக்கு இந்த வாய்ப்பை அளித்துள்ளார், இதற்காக நான் நன்றியுள்ளவளாக இருக்கிறேன். J.L*

*« உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன். » எசேக்கியேல் 36 : 27*

# பிற்சேர்க்கை

## மேலதிக ஆய்வுக்கான பரிந்துரை

*ஒரு முக்கியமான பரிந்துரை : இந்தச் சிறு புத்தகத்தைப் பலமுறை படிக்கவும். நமது வாழ்க்கைக்கு தேவையான ஒரு முக்கியமான தலைப்பை நாம் முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு முன் அதை ஆறு முதல் பத்து முறை படிக்க வேண்டும் அல்லது கேட்க வேண்டும் என்று கல்வி ஆய்வுகள் காட்டுகிறது, எனவே முயற்சி செய்து பாருங்கள், முடிவுகள் உங்களை உறுதியூட்டி நம்ப வைக்கும். நான் ஒரு குறிப்பிட்ட சிறு புத்தகத்தைப் பலமுறை படித்தபோது, பரிசுத்த ஆவியின் நிறைவை என் வாழ்வில் முதல்முறையாக அனுபவித்தேன். இயேசுவோடு, ஆவியால் நிரப்பப்பட்ட வாழ்வில் வளர்வதைப் பற்றிப் பல மகத்தான மற்றும் உற்சாகமான சாட்சிகள் என்னிடம் உள்ளன. ஏறக்குறைய அனைத்து சாட்சிகளும் புத்தகத்தைப் பலமுறை தீவிரமாகப் படித்த வாசகர்களிடமிருந்து வந்தவை.*

## ஆவியில் நிறைந்த புதிய வாழ்க்கையின் அனுபவங்கள்

*நம்முடைய அன்பான கர்த்தராகிய இயேசு கூறினார், "வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச்சொன்னார்." (யோவான் 7 :38,39)*


## உங்களிடம் ஒரு வேண்டுகோள்:

*இயேசுவிடம் ஒப்புக்கொடுத்து பின் நீங்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட வாழ்க்கை வாழ்வதன் மூலம் உங்களுக்கு அனுபவங்கள் இருந்தால், எனது பெயருக்கு (Helmut Haubeil) ஒரு சிறிய அறிக்கையை அனுப்பினால் அதை நான் மிகவும் பாராட்டுவேன். [www.steps-to-personal-revival.info–testimonies](www.steps-to-personal-revival.info–testimonies) ; மற்றும் செய்தி மடல்கள் ஊடாக அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடிந்தால் அது மிகவும் விலையேறப்பெற்றதாக இருக்கும். பொதுவாக, பெயர்களின் முதலெழுத்துக்களை மட்டுமே குறிப்பிடுகிறோம். உங்கள் அனுபவம் மற்றவர்களை ஆவி நிரம்பிய வாழ்க்கையைத் தொடங்க பலப்படுத்தும் அல்லது விரைவில் வரவிருக்கும் நமது அற்புதமான இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அர்ப்பணிப்புடன் ஆவியில் நிறைந்த வாழ்க்கை பயணத்தைத் தொடர உதவும்.*

## தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

*Helmut Haubeil*
*Rosenheimerstraβe 49*
*D- 83043 Bad Aibling / Upper Bavaria*
*மின்னஞ்சல்: **helmut@haubeil.net***
*தொலைபேசி: + 49- (0) 8061 -4900 712*
*மொழிகள் : ஜெர்மன் அல்லது ஆங்கிலம்*

# குறிப்புகள்




## சிற்றேடு 1

## தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**

**நம்முடைய கர்த்தர் தாமே கட்டளையிட்டிருக்கிறார் : [1] நீங்கள் தொடர்ந்து மீண்டும் மீண்டும் ஆவியால் நிரப்பப்படுவதற்கு உங்களை விட்டுக்கொடுங்கள் ! [2]**

*1. E.G. White, Mount of Blessing, MB 20.3 (egwwritings.org)*

*2. Johannes Mager, Auf den Spur en des Heiligen Geistes (Lüneburg, 1999), p. 101*

**புத்தகங்கள் வாங்க : தகவல் - பக்கம் 2**

## முடிவுகளைப் பெருக்குதல்

### அத்தியாயம் - 1 இயேசுவின் மிகச் சிறந்த பரிசு !

*பரிசுத்த ஆவியைப் பற்றி இயேசு என்ன கற்பித்தார் ?*
*இயேசுவின் வல்லமை நிறைந்த செய்தியை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா ?*

### அத்தியாயம் - 2 நமது பிரச்சனையின் மையம் எது ?

*நமது பிரச்சனைக்கு ஆவிக்குரிய காரணம் இருக்கிறதா ?*
*பரிசுத்த ஆவியானவர் இல்லாததுதான் காரணமா ?*
*மாம்ச கிறிஸ்தவனின் முக்கிய பிரச்சனை என்ன ?*

### அத்தியாயம் - 3 நமது பிரச்சினைகள் தீர்க்கப்படக்கூடியதே

*நமது பிரச்சனைகளுக்குத் தேவனின் தீர்வு என்ன ?*
*நாம் எப்படி மகிழ்ச்சியாகவும் வலிமையான கிறிஸ்தவர்களாகவும் வளர முடியும் ?*
*ஞானஸ்நானத்திற்கும் பரிசுத்த ஆவிக்குமுள்ள தொடர்பு என்ன ?*

### அத்தியாயம் - 4 என்ன வித்தியாசங்களை நாம் எதிர்பார்க்கலாம் ?

*பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட வாழ்வில் கிடைக்கும் நன்மை என்ன?*
*பரிசுத்த ஆவிக்காக நாம் ஜெபிக்காதபோது எதை இழக்கிறோம்?*

### அத்தியாயம் - 5 நடைமுறை அனுபவத்திற்கான திறவுகோல்

*தேவனின் தீர்வை நான் என்னில் செயல்படுத்தி அனுபவிப்பது எப்படி?*
*பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவதை உறுதிசெய்ய நான் எப்படி ஜெபிக்க வேண்டும்?*

### அத்தியாயம் - 6 நமக்கு முன்னுள்ள அனுபவங்கள் என்ன ?

*தனிப்பட்ட அனுபவங்கள், அதேபோல் சபை, கான்பரன்ஸ் மற்றும் யூனியனிலிருந்து வரும் அனுபவங்கள்*

### அத்தியாயம் - 7 ஆர்வமும் பகிர்வும்

*நாம் கொடுக்கும் மகிழ்ச்சி நம் இதயங்களுக்கே திரும்புகிறது.*
*பிறர் « பரிபூரண ஜீவனை » அனுபவிக்க நான் எப்படி உதவ முடியும் ?*
*செய்திகளை நாம் எப்படி எந்த வழிகளில் அனுப்புகிறோம் ?*

***நான் தற்போது கலிபோர்னியாவில் உள்ள இரண்டு சபைகளில் போதக பணிபுரிகிறேன். பாஸ்டர் டுவைட் நெல்சன் [கீழே காண்க] அவருடைய வாராந்திர வலையொளி (podcast) கேட்டதன் மூலம் உங்கள் சிறு புத்தகத்தைப் பற்றி நான் முதலில் அறிந்தேன். என் ஆத்துமாவில் பெரிய ஒரு தாக்கத்தை இது முதலில் ஏற்படுத்தியது. பரிசுத்த ஆவியானவர் பற்றிய பிறப் புத்தகங்களைக் குறித்து நான் இதற்கு முன்பு கேள்விப்பட்டிருக்கிறேன், ஆனால் நான் அதைப் பற்றி அதிகம் கவலைப்படவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். கடவுள் சில காரணங்களால், அதிகமான மக்கள் பரிசுத்த ஆவியின் நிரப்புதலை பெறுவதற்காக, இந்த நேரத்தைத் தேர்ந்தெடுத்துள்ளார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். உங்கள் முயற்சிமூலம் அதைக் கண்டுபிடித்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.***

***ஒன்றை நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்ல முடியும். முதல் அத்தியாயமே, மிக வலிய உண்மைகளை எளிய முறையில் புலப்படுத்துகிறது, இது நம் மனதை தடுத்து நிறுத்தி மீண்டும் சிந்திக்க வைக்கிறது. மற்றும் பல முறை படிக்கும் செயல்முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. புத்தகத்தைப் பற்றி நான் பேசும்போதும், விவாதிக்கும்போதும் அல்லது பிரசங்கிக்கும்போதும், பரிசுத்த ஆவியைப் பற்றிய செய்தி அவர்களை மேலும் மேலும் ஈர்க்கிறது. முதல்முறையாகக் கேட்பது போல் இருக்கிறது. அதை என்னால் பார்க்க முடிகிறது. அதில் கூறப்பட்டுள்ள விஷயத்தைப் பற்றிக் குறைந்தபட்சம் 3 பிரசங்கங்களை செய்தபிறகும், என்னால் முதல் அத்தியாயத்தை விட்டு நகர முடியவில்லை. எப்படி சிறப்பாக விளக்குவது என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் புத்தகத்தைப் படிப்பதை நிறுத்த முடியவில்லை, அதன் முடிவுகள் என் ஆலய உறுப்பினர்கள் மத்தியில் காணப்பட்டது. கடந்த ஆண்டு நான் இதைப் பற்றிப் பேசினேன், அதனால் எனது மாவட்டம் குறிப்பிடத் தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது. இந்த மகிமை அனைத்தும் கடவுளுக்கும் நமது திருச்சபை உறுப்பினர்களை ஆட்கொண்ட பரிசுத்த ஆவியானவருக்கும் உரியது. இந்தப் புத்தாண்டில் நிறைய பேர் வருவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம் ! D.R. Jan ; 2018 Excerpt***

***தலைமை போதகர் டுவைட் நெல்சன், (Andrews University- Pioneer Memorial Church) சொன்னார்: « இந்தச் சிறிய புத்தகம் [தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்] என்னுடைய உள்ளத்தை மாற்றியது. உங்களுக்கும் அவ்வாறே நடக்க விரும்புகிறேன். »***

***அவர் தொடர்ச்சியாக மூன்று பிரசங்கங்களை செய்தார்:***
***"Ground Zero and the New Reformation: எப்படி பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவது?" அப்பொழுது அவர் "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்டினார் மற்றும் அதைப் பரிந்துரைத்தார். இதனால் ஆயிரக்கணக்கானோர் இந்தப் புத்தகத்தைப் பதிவிறக்கம் செய்யவும், புத்தகங்களை வாங்குவதற்கான ஆர்டரை கொடுக்கவும் வழிவகுத்தது.***

***அவரது தனிப்பட்ட சாட்சி மற்றும் மூன்று பிரசங்கங்கள்***
www.steps-to-personal-revival.info ***ல் உள்ளன.***

# இயேசுவில் நிலைத்திருங்கள்

## அவரில் நிலைத்திருக்க என்ன செய்வீர்கள்?

ஹெல்முத் ஹோபாயில் ஒரு தொழிலதிபராகவும் பின்னர் போதகராகவும் இருந்தார். ஒரு கப்பல் நிறுவனத்தின் வணிக மேலாளராக வெற்றிகரமாகப் பணிபுரிந்தபிறகு, அவர் தனது **37** வயதில் கடவுளின் அழைப்பை ஏற்று **16** ஆண்டுகள் சபை போதகராகப் பணியாற்றினார். ஜெர்மனியின் மியூனிச் நகருக்கு அருகில் உள்ள பேட் ஐப்லிங்கில் **(Bad Aibling)** உள்ள பணி ஓய்வுபெற்றவர் சமூகத்தை (அட்வென்டிஸ்ட்) அவர் நிர்வகித்தார், மற்றும் அவரது ஓய்வுக்குப் பிறகு பேட் ஐப்லிங் சபையின் உலகளாவிய மிஷன் குழுமத்தை **('Förderkreis Mission')** தொடர்ந்து வழிநடத்துகிறார். உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பல பணிதிட்டங்களை மேற்பார்வையிடுகிறார் - முன்னாள் தலைவர்களின் உதவியுடன் மத்திய ஆசியா, இந்தியா மற்றும் ஜெர்மனியிலும் ஆலயத்தை நிறுவுகிறார், ஒரு மிஷன் பத்திரிகையை **('Missonsbrief')** தொகுப்பாக்கம் செய்து வெளியிடுகிறார், மேலும் எழுப்புதல் உண்டுபண்ணும் புத்தகங்களைப் பரப்புகிறார். அவர் தன்னை "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" என்ற புத்தகத்தின் ஆசிரியராகக் கருதவில்லை, மாறாகக் கடவுளின் கைகளில் தன்னை ஒரு கருவியாகக் கருதுகிறார். **www.steps-to-personal-revival.info** இன் விரிவாக்க அட்டவணையில் கிளிக் செய்வதன் மூலம், இந்த இதயம் கவரும் அனுபவங்களை நீங்கள் தெளிவாகக் காணலாம்.

"ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது."

## உங்களை ஊக்குவிக்க

இந்த விலைமதிப்பற்ற உண்மைகள் தனிப்பட்ட முறையில் அல்லது இரண்டு நபர்களால் படிக்கப்படும்போது அவர்கள் குறிப்பாக ஆசீர்வதிக்கப்படுகிறார்கள் என்பதை அனுபவம் காட்டுகிறது. தம்பதிகளுக்கு இதில் இரட்டை பங்கு ஆசீர்வாதம் இருக்கிறது ! (மற்றவர்களுடன் தொலைபேசி அல்லது ஸ்கைப்பில் கூடச் சேர்ந்து படிக்கலாம்) ஒரு குழுவாக ஒன்று கூடி தினசரி அல்லது வாரந்தோறும் உரையாடல் மற்றும் ஜெபம் ஆகியவற்றிற்காக நேரத்தைச் செலவிடுவது மிகவும் ஊக்கமளிக்கும்.